இறக்கை: 9 இறகு: 9

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

செப்டம்பர் 2020 | விலை ₹25

## ராஜீவ் அன்று சிங்களவரால் கொல்லப்பட்டிருந்தால்...

● என்.சரவணன்

## தேர்தலுக்குப் பின்னரான ஈழத் தமிழ்த்தேச அரசியல்

● நிலாந்தன்



இரங்கல்

## காக்கைச் சிறகினிலே இதழின் **அச்சிட்டாளர் காலமாகிவிட்டார்**

காக்கைச் சிறகினிலே இதழின் அச்சிட்டாளராக இருந்து, இதழுக்குப் பெருமை சேர்த்துவந்த சேகர் ஆப்செட் அச்சகத்தின் உரிமையாளர் நண்பர் திரு எச்.தனசேகர் அவர்கள் காலமாகிவிட்டார். அவரது இழப்பு காக்கைக்கு பேரிழப்பாகும்.

தொடக்க காலத்திலிருந்து இதழின் அச்சுப் பணியில் மிகுந்த அக்கறையோடும் ஈடுபாட்டோடும் துணை நின்றவர்; காக்கை இதழுக்கு தாமே அச்சிட்டாளராக நின்று செயல்பட விரும்பி, தாமாகவே முன்வந்து பொறுப்பை எடுத்துக் கொண்டவர். கடந்த 10 ஆண்டுக் காலத்தில் காக்கையின் வளர்ச்சியோடு சேர்ந்து பயணித்த நண்பர்களில் ஒருவர். சிற்சில மாதங்களில் அச்சுக்கட்டணம் செலுத்துவதில் தவிர்க்க இயலாத தாமதங்கள் ஏற்பட்டபோது, நிலைமையைப் புரிந்துகொண்டு பொறுத்துக்கொண்டதோடு, “பரவாயில்லை, சிறுபத்திரிகை நடத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது நமக்குத் தெரியாததா? பணம் வரும்போது கொடுங்கள்” என்று பெருந்தன்மை காட்டியவர்; உறவு, நட்பு, பணியாளர்கள் என அனைவரிடத்திலும் கனிவும் நெகிழ்வும் காட்டியவர்.



“உங்களாலதான் நான் வளர்ந்தேன் என்று அவரிடம் நான் சொல்வேன். உடனே, உன்னால தான் சரவணா நான் வளர்ந்தேன்” எனப் பெருமிதமும் மகிழ்வும் பொங்கச் சொல்வார் என்று நண்பர் தனசேகருடைய பெருந்தன்மையை நெகிழ்வோடு நினைவு கூர்கிறார் துர்கா பைண்டிங் நிறுவனர் திரு.எஸ்.சரவணன். “உதவி என்று போய் நின்றால், எவ்வளவு வேண்டும்? என்றுதான் கேட்பார். ஒருநாள்கூட இல்லை என்று சொன்னதில்லை. எனக்கு மட்டுமல்ல, அவர் நம்புகிற தொழிலாளர்களிடம்கூட அந்த பெருந்தன்மையை வெளிப்படுத்துவார்” என்று நினைவுகூர்கிறார் சரவணன்.

காக்கைக்குக் கிடைத்த பெருமைமிக்க ஒரு நண்பரை இழந்து நிற்கிறோம். நண்பரை இழந்துவாடும் அவர்தம் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் காக்கையின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-ஆசிரியர் குழு**

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

இறக்கை: 9 இறகு: 9

திருவள்ளுவராண்டு 2051
புரட்டாசி
செப்டம்பர் 2020

ஆசிரியர்
வி.முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க.சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா.எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி.பி.அரவிந்தன்
வீர.சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க.பஞ்சாங்கம்
கே.எம்.வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
வி.மகேந்திரன்
V.Mahenthiran
Mahenthiran_v@hotmail.com

ஐரோப்பா:
க.முகுந்தன்
K.Mukunthan
kmukunthan@gmail.com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# வாழ்க தனிநாயகம் அடிகள்



**கொ**ரோனா என்கிற தீநுண்மி அரவமில்லாமல் நாட்டுக்குள் நுழைந்து ஊர்ந்து, நடந்து, ஓட்டம்காட்டி, இப்போது பாய்ச்சல் வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

அரசாங்கங்களாலும் அரசுக்கு வெளியே இருக்கிற அமைப்புகளாலும் வெளியிடப்படுகின்ற தகவல்கள், புள்ளி விவரங்கள் அச்சமூட்டுகின்றன.

கொரோனா யாருக்கெல்லாம் வரும்? எப்படி வரும்? எங்கிருந்து வரும்? என்பதெல்லாம் இன்னும் புரியாத புதிராகவே இருந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் எவ்விதத் தடுப்பு மருந்துகளோ, ஊசி மருந்துகளோ, மாத்திரைகளோ கண்டறிந்து பயன்பாட்டுக்குக் கொண்டு வராத நிலையில் மத்திய மாநில அரசுகள் ஆண்டவன் பக்கம் கையைக் காட்டிவிட்டு பின்வாங்கிவிட்டன; அல்லது ஒதுங்கிக் கொண்டன. இனிமேல் அவரவர் உயிர் அவரவர் கையில்!

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்வா? சாவா? என்கிற துயரமான வாழ்நிலையை மக்கள் எதிர்கொண்டிருக்கிற இந்தநேரத்தில் மாநில அரசுகளின் அதிகாரங்களை அல்லது மக்கள் அனுபவித்துவந்த உரிமைகளைப் பறித்துக் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறது; அல்லது சிதைத்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு.

நீட் தேர்வு நடத்தியே தீருவோம்! இன்னும் எவ்வளவு காலத்துக்கு இடஒதுக்கீடு? இந்தியாவில் இந்தியே ஆட்சிமொழி; புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மீண்டும் குலக்கல்வி; தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்ற போலி முழக்கத்தை முன்வைத்து பறிகொடுக்கப் போகும் இயற்கை வளம்; மருத்துவக் கல்விக்கு உள்ள தகுதித் தேர்வைப் போலவே இனி பொறியியல் மற்றும் கலை அறிவியல் படிப்புகளுக்கும் கொண்டுவரப்படும் என்றும் வேலை வாய்ப்புகளுக்கும் நாடு முழுவதும் ஒரே தகுதித் தேர்வு வரும் என்றும் தகவல்கள் கசியவிடப்படுகின்றன.

இடஒதுக்கீட்டு வரம்பே இல்லாமல் ஏற்கனவே தமிழரல்லாதோர் தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுப் பணியிடங்களில் கூட்டம் கூட்டமாகப் பணியமர்த்தம் செய்யப்பட்டு வருகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டுக்குப் பிழைக்க வந்து, காலூன்றிவிட்ட தமிழரல்லாதோர் தமிழ்மொழியில் நல்ல தேர்ச்சியை வைத்துக் கொண்டு தமிழக அரசுப் பணிகளிலும் ஊடுருவி விட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள தமிழ்க் குடும்பத்துப் பிள்ளைகள் தமிழையும் ஒழுங்காகப் படிக்காமல் ஆங்கிலத்திலும் முறையான பயிற்சி இல்லாமல் ரெண்டுங்கெட்டான் நிலையில் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

காக்கைச் சிறகினிலே
காக்கை கரவா கரைந்துண்ணும்

**ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி உங்கள் கைகளில்**

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
‘காக்கைச் சிறகினிலே’
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: **98414 57503**

**உறுப்பினர் கட்டணம்**

தனி இதழ் விலை........................... ரூ. 25
ஆண்டுக் கட்டணம்........................ ரூ. 275
இரண்டு ஆண்டுக் கட்டணம்....... ரூ. 500
ஐந்தாண்டுக் கட்டணம்.................. ரூ. 1250
மாணவர் சந்தா ................................ ரூ. 200

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

காசோலைகள்,
வங்கி வரைவோலைகள் அனைத்தும்
KAAKKAI,
A/c No. **60111010005660**
SYNDICATE BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: **Synb0006011**
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.
பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

ஆண்டுக் கட்டணம்........................ $ 30

உறுப்பினர் கட்டணத்தை
KAAKKAI,
A/c No. **60111010005660**
SYNDICATE BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
Shift Code : **SYNBINBB031**
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

**தொடர்பு முகவரி:**

காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

முகநூல்:
**www.facebook.com/kaakkai.cirakinile**

‘தமிழ் படிக்காமலே தமிழ்நாட்டில் பட்டம் வாங்கிவிட முடியும்; தமிழ் எழுதவும் படிக்கவும் தெரியாமலே தமிழ்நாட்டு அரசுப் பணிகளில்கூட சேர்ந்துவிட முடியும் என்கிற நிலை இருக்கும்போது எதற்காக நான் தமிழ் தெரிந்திருக்க வேண்டும்’ என்கிற கேள்வியை தமிழாசிரியர் பிள்ளைகளே காட்சி ஊடகங்களில் வந்து கூச்சமே இல்லாமல் பேசமுடிகிறதென்றால் இப்போது தமிழரும் தமிழ்நாடும் எந்தத் திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே கொடுமையாக இருக்கிறது.

ஆனால், சுமார் எண்பது, தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே, தமிழின் உயரத்தையும் அதன் தேவையையும் திசையையும் கண்டறிந்து உலகம் முழுவதும் பயணித்து தனது வாழ்நாளை தமிழ் வளர்ச்சிக்கென்றே செலவிட்ட யாழ்ப்பாணத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகளின் பங்கையும் பணியையும் நினைத்துப் பார்த்தால் கண்கள் பனிக்கின்றன. 1913 ஆகஸ்டு 2 தனிநாயகம் பிறந்த நாள்; 1980 செப்டம்பர் 1 அவரது நினைவுநாள். இந்த மண்ணைவிட்டு அவர் மறைந்து 40 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

பள்ளிப் பருவத்திலும் கல்லூரிப் பருவத்திலும் ஆங்கில மொழியையும் இதர ஐரோப்பிய மொழிகளையும் கற்றுத்தேர்வதில் கவனம் கொண்டிருந்த தனிநாயகம் அடிகள் தமது 32ஆவது வயதில் தமிழ் கற்பதற்காக சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு வந்தவர். தமிழின் தொன்மையையும் அதன் சிறப்பையும் உலகம் முழுவதும் தேடித்தேடிக் கண்டடைந்து தமிழ் உலகுக்குச் சொன்னவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் என்கிற உலகளாவிய அமைப்பை நிறுவி தமிழின்மீது உலகத்தின் பார்வையைத் திருப்பியவர். அதன்வழியாக முதல் உலகத் தமிழ் மாநாட்டை மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் நடத்திக் காட்டியவர். சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் பிரான்சின் தலைநகரம் பாரீசில் நடைபெற்ற மூன்றாவது மாநாட்டிலும இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழ் மாநாட்டிலும் பங்குபெற்று சிறப்பித்தவர். தமிழ், ஆங்கிலம், லத்தீன், இத்தாலி, ஜெர்மன், பிரெஞ்சு, போர்த்துக்கீசியம், ஸ்பானிஷ், ரஷ்யன் உள்ளிட்ட பன்மொழி கற்ற பேரறிஞர். ஆனால் தமிழிலேயே சிந்தித்தவர்; எழுதியவர்; மட்டுமல்ல, இந்திய மொழிகளிலேயே முதன்முதலாய் அச்சுவாகனம் ஏறிய மொழி தமிழ்தான் என்பதை முதன்முதலில் உலகுக்குச் சொன்னவர். அதை மெய்ப்பித்தும் காட்டியவர்.

அவர்தம் 40ஆவது நினைவு நாளைப் போற்றுகின்ற வகையிலும் அவர்தம் பெருமையும் புகழையும் நினைவுகூர்கின்ற வகையிலும் தமிழறிஞர்கள் சிலரிடம் அரிய பதிவுகளைப் பெற்று இவ்விதழில் அலங்கரித்திருக்கிறோம். அவர்தம் பெருமையும் புகழும் நினைக்கப்பட வேண்டியதும் போற்றப்பட வேண்டியதும் மட்டுமின்றி பயணப்பட வேண்டிய அவசியமும் எழுந்திருக்கிறது. தனிநாயகம் அடிகள் போன்ற முன்னோடிகளின் வழியில் பயணப்படத் தவறினால், தமிழினம் சிதறும்; தமிழ்மொழி அழியும்; தமிழ்ப் பண்பாடும், நாகரிகமும் சிதையும்; தமிழர்கள் அடையாளம் இல்லாமல் போவார்கள்; அவர்தம் கைகளைக் கொண்டே அவரவர் கண்களைக் குத்திக் குருடாக்கிக் கொள்வார்கள். அதுதான் இப்போது தோற்றம்பெற்று எழுந்து ஆடிக்கொண்டிருக்கிறது. இது தொடர்ந்தால் இந்தியா இருக்கும்; இந்தியர்கள் இருப்பார்கள்; ஆனால், அங்கே தமிழர்கள் இருக்கமாட்டார்கள். ●

**அட்டைப்படம்:**
**கூலித்தொழில் செய்வதற்காக உலகம் முழுவதும் புலம்பெயர்ந்த எமது மூதாதையர்களைக் குறிக்கும் சித்திரம்.**



**தனிநாயகம் அடிகளார்**
02.08.1913 - 01.09.1980

மலரஞ்சலி

# தனிநாயகம் அடிகளாரின் ஆய்விதழ்ப் பணி

● ஆ.சிவசுப்பிரமணியன்

உலகெலாம் சுற்றிவந்து ‘தமிழ்த்தூதர்’ என்ற பட்டம் பெற்றவர் தனிநாயகம் அடிகளார். அவர் ஆற்றிய உரைகள். எழுதிய நூல்கள்,கட்டுரைகள் என்பனவற்றுடன் அவரது தமிழ்ப் பணியின் தனித்துவமான அடையாளமாக அமைவது அவர் தோற்றுவித்து நடத்திய ‘Tamil Culture’ (தமிழ்ப் பண்பாடு) என்ற காலாண்டு ஆய்விதழாகும். ஆங்கிலம்,தமிழ் என்ற இருமொழிகளிலும் தமிழர்தம் இலக்கியம், பண்பாடு, தொல்லியல்,வரலாறு, மொழியியல் ஆகிய துறைசார்ந்த கட்டுரைகளைத் தாங்கிவரும் ஒரு சர்வதேச ஆய்விதழாக இதை உருவாக்கி நடத்தினார். 1952 இல் தொடங்கி 1966 வரை வெளிவந்த இந்த இதழ் தமிழில் ஒரு முன்னோடியான ஆய்விதழாக அமைந்தது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் ஆய்விதழ் வெளியிட்டாலும் அவை பல்துறை சார்ந்தனவாகவே இருந்தன. இதனால் தமிழுக்கான இடம் குறுகிய அளவுக்கு உட்பட்டதாகவே இருந்தது

> இந்திய மொழிகளில் சமஸ்கிருதம் தொடர்பான ஆய்வுகளும் அறிமுகமும் ஆங்கிலம் வழியாகச் சென்றதால் அது மட்டுமே இந்திய நாட்டின் பாரம்பரிய மொழி என்ற தவறான புரிதல் ஆங்கிலம் கற்றோரிடம் மேலோங்கியிருந்தது. இவ்விதழில் வெளியான ஆங்கிலக் கட்டுரைகள் தமிழ். தமிழர், குறித்த அறிமுகத்தை,தமிழ் அறியாதோரிடம் கொண்டு சேர்த்தன.

தமிழ் வாசகர்களுக்குத் தமிழ் இலக்கியத்தையும் தமிழக வரலாற்றையும் அறிமுகம் செய்யவும் தமிழ் அறிஞர்கள் தமக்குள் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தவும் ஒரு பொதுவான களத்தை பத்திரிகை வடிவத்தில் உருவாக்கலாம் என்ற சிந்தனை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றிவிட்டது. நான்காம் தமிழ்ச்சங்கம் என்று கூறப்படும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை பாண்டித்துரைத்தேவர் மதுரை நகரில் நிறுவிய பின்னர் இது செயல்வடிவம் பெற்றது. இச் சங்கம் 1902ஆவது ஆண்டில் முற்றிலும் தமிழின் தொன்மையான இலக்கண இலக்கியங்களை வெளிப்படுத்தும் கட்டுரைகளைக் கொண்ட ‘செந்தமிழ் ‘என்னும் ஆய்விதழை வெளியிடத் தொடங்கியது. மூத்த தமிழறிஞர்களான இரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார் ஆகிய இருவரும் இதன் ஆசிரியர் பொறுப்பில் இருந்துள்ளனர்.

நவீன ஆங்கிலக் கல்வியறிவும் தமிழ்ப்புலமையும் ஒரு சேரப்பெற்றோர், மரபுவழியாகத் தமிழ் கற்றோர், தேசிய இயக்கத்தில் பங்கேற்றோர் என, சமூக வாழ்வில் பல்வேறு

படிநிலைகளில் இருந்தோர் இதில் பங்களிப்புச் செய்தனர். அறிவார்ந்த கருத்துப்பரிமாற்றங்கள் மென்மையாகவும் சில போழ்து சற்று வன்மையாகவும் கட்டுரைகளில் வெளிப்பட்டன. மொழி என்ற அடிப்படையில் இலங்கையின் தமிழ் அறிஞர்களும் இதில் பங்காற்றினர்.

அடுத்து 1907இல் ‘Tamilian Antiquary’ என்ற பெயரில் ஆய்விதழ் ஒன்று தொடங்கப்பட்டு 1914வரை வெளிவந்தது. இது தமிழ் ஆங்கிலம் என்ற இரு மொழிகளில் கட்டுரைகளை வெளியிட்டாலும் ஆங்கிலக் கட்டுரைகளே அதிகமாக இருந்தன. இது இதன் தனிச் சிறப்பாக அமைந்தது. ஏனெனில் இந்திய மொழிகளில் சமஸ்கிருதம் தொடர்பான ஆய்வுகளும் அறிமுகமும் ஆங்கிலம் வழியாகச் சென்றதால் அது மட்டுமே இந்திய நாட்டின் பாரம்பரிய மொழி என்ற தவறான புரிதல் ஆங்கிலம் கற்றோரிடம் மேலோங்கியிருந்தது. இவ்விதழில் வெளியான ஆங்கிலக் கட்டுரைகள் தமிழ். தமிழர், குறித்த அறிமுகத்தை,தமிழ் அறியாதோரிடம் கொண்டு சேர்த்தன.

1925 இல் தொடங்கப்பட்ட ‘செந்தமிழ்ச்செல்வி’ 1928இல் தொடங்கப்பட ‘தமிழ்ப் பொழில்’ என்ற இரு இதழ்களும் செந்தமிழ் இதழ் தோற்றுவித்த பாதையிலேயே பயணித்தன.

இப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே தனிநாயகம் அடிகளாரின் ‘Tamil Culture’ இதழ் 1952 தொடங்கி 1966 வரை காலாண்டு ஆய்விதழாக வெளிவந்தது. ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழிகளிலும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தாலும் இதில் ஆங்கில மொழிக் கட்டுரைகளே பெரும்பாலும் இடம் பெற்றன.இவ்வகையில் இது Tamilian Antiquity இதழைப் பின்பற்றியது. இருப்பினும் அதன் நகலாக இவ் இதழை அடிகளார் உருவாக்கவில்லை. தான் வாழும் காலத்தில் அறிவுப்புலத்தில் நிகழ்ந்த மாறுதல்கள், புதிய சிந்தனைப் போக்குகள், என்பனவற்றை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். ’எங்கள் தமிழ் உயர்வென்று நாள்பல கழித்திருந்தோம் குறை களைந்தோமில்லை’ என்ற பாரதிதாசனின் கவிதை வரியின் உண்மையை உணர்ந்தவராய் இருந்தார். ’சங்கே முழங்கு’ என்று முழங்கிக் கொண்டிருக்கவில்லை. தொடக்கத்தில் நாம் அறிந்து கொண்ட தமிழ் ஆய்விதழ்கள் உருவான காலத்தைய தமிழ் ஆய்வு இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மாறுதலுக்கு ஆட்பட்டிருந்தது.தமிழ் இலக்கியத்தை பிற அறிவுத் துறைகளுடன் இணைத்துப் பார்க்கும் ஆய்வுப்பார்வை அழுத்தம் பெறலாயிற்று. மொழியியல். தொல்லியல். என்பன வளர்ச்சிப் பாதையில் காலூன்றியிருந்தன. வரலாறு என்ற அறிவுத்துறையானது சமூகவரலாறு, கடல்சார் வரலாறு எனக் கிளை பரப்பி நிற்கலாயிற்று. நாட்டார் வழக்காற்றியல், மானுடவியல் போன்ற அறிவுத்துறைகளின் தேவை தமிழ் ஆய்வில் உணரப்பட்டது. இவற்றையெல்லாம் உள்வாங்கி வழிநடத்தும் கடப்பாடு தமக்கிருந்ததாக அவர் உணர்ந்ததன் வெளிப்பாடாக இவ் இதழின் தோற்றம் அமைந்தது.




மேலும் தமிழ் மொழியின் சிறப்பு தமிழரின் தொன்மையான நாகரிகம் பண்பாடு என்பனவற்றை, இம்மொழி அறியாதாரும் அறியும்படிச் செய்ய ஆங்கிலத்தின் துணை அவசியமானதென்பதையும் அவர் அறிந்திருந்தார்.

உலக அளவில் இலக்கியம், பண்பாடு, மொழியியல் போன்ற அறிவுத்துறைகளில் புலமை பெற்றோருடன் அவர் கொண்டிருந்த அறிவார்ந்த நட்புணர்வு இவ் இதழை வெளிக்கொணர்தலில் அவருக்குத் துணை நின்றுள்ளது. இம்முயற்சியில் தாய்மொழி, இனம், சமயம், சாதி, பதவி, உயர் கல்விப்புலம் சார்ந்தோர், சாராதோர் என்ற பாகுபாடு இன்றி தக்கவரிடம் கட்டுரைகளைப் பெற்று வெளியிட்டார். அவர் வெளிட்ட இதழ்களை ஒருசேரப்படித்துப் பார்க்கும்போது இது புலனாகும்.

### சில முக்கியப் பதிவுகள்

1952 தொடங்கி 1966 வரை மொத்தம் பதினைந்து ஆண்டுகள் அடிகளாரின் ஆய்விதழ் வெளிவந்தாலும் இடையிடையே சில இதழ்கள் வெளிவரவில்லை. மொத்தம் பன்னிரண்டு தொகுப்புகளே வெளிவந்துள்ளன. இவற்றுள் இடம் பெற்றுள்ள கட்டுரைகளை அவை வெளிவந்த காலச்சூழலுடன் இணைத்து நோக்கும் போது பல

புதிய ஆய்வுக் களங்களை அவை அறிமுகம் செய்துள்ளமை புலப்படும். அவை அனைத்தையும் ஓர் அறிமுகக் கட்டுரையில் குறிப்பிட முடியாத நிலையில் தொடக்க காலக் காலனியத்தின் செயல்பாடு தமிழ்நாட்டில் எவ்வாறு இருந்தது என்பதை வெளிப்படுத்தும் செய்திகள் அடங்கிய சில கட்டுரைகளை மட்டும் காண்போம்

### தொடக்ககாலக் காலனியம்

கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தமிழகத்தின் முக்கிய கடற்கரை நகரங்களில் போர்ச்சுகல் நாட்டின் வாணிப நிறுவனமும் பதினேழாம் நூற்றாண்டில் டச் நாட்டினரின் வாணிப நிறுவனமும் செயல்பட்டன. ஒரு சில இடங்களில் அரசியல் ஆதிக்கத்தையும் மேற்கொண்டனர். இவர்களுள் கத்தோலிக்கக் கிறித்தவப் பரப்புதலில் போர்ச்சுகல் நாட்டினரும் சீர்திருத்தக் கிறித்தவப் பரப்புதலில் டச் நாட்டினரும் ஈடுபட்டு அதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர். இவ்விரு நாட்டினரும் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் முன்னதாகவே தமிழ்நாட்டில் நிலை கொண்டமையால் தொடக்க காலக் காலனியவாதிகள் என்று குறிப்பிடலாம். இவர்களை மையமாகக் கொண்டு உருவான ஆவணங்கள் ஆங்கில மொழியில் இல்லாமையால் இவர்களைபற்றிய விரிவான பதிவுகள் நம் கல்விப்புல வரலாற்றுப் பாடத்தில் இடம் பெறவில்லை. இக்குறையை இவ்விதழில் வெளியான சில கட்டுரைகள் போக்கியுள்ளன.

ஓலைச்சுவடிகளுக்கு மாற்றாக, அச்சிடப்பட்ட நூல் போர்ச்சுக்கீயர்களால் முதல் முறையாக தமிழ்மொழியில் அச்சிடப்பட்ட வரலாற்றுண்மையை The first Books printed in Tamil என்ற கட்டுரையில் (Tamil Culture.volume VII 1958) குறிப்பிட்டுள்ளார். அவரது கட்டுரையில் 'தம்பிரான் வணக்கம்' என்ற நூல் கி.பி.1578இல் அச்சாகியது என்றும், 'கிரிசித்தியானி வணக்கம்' என்ற நூல் 1579இல் அச்சாகியுள்ளது என்றும் குறிப்பிட்டதுடன் முக்கியமான உலக நாடுகளில் அச்சாக்கம் நிகழ்ந்த ஆண்டுடன் ஒப்பிட்டும் காட்டியுள்ளார். அது வருமாறு:

*1)சீனா:1584 (2)ஜப்பான்:1590 (3) பிலிப்பைன்ஸ்:1593 (4)ருஷ்யா:1563 (5) கான்ஸ்டன்டைன்: 1727 (6) கிரீஸ்: 1821*

டச்சுக்காரர்கள் தமிழ்நாட்டில் தூத்துக்குடி கடற் கரைப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திய போது அவர்களை எதிர்த்து இராமேஸ்வரம் சேதுபதிமன்னரின் ஆதரவுடன் பெரியதம்பி. மரைக்காயர் என்பவர் செயல்பட்டுள்ளார். டச் நாட்டினரின் வாணிப நடவடிக்கைகளுக்கு எதிரான இவரது செயல்பாடுகள் குறித்து இலங்கையின் கடல்சார் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சின்னப்ப அரசரத்தினம் எழுதிய A Note on periathamby Marikkayar 17th century Commercial Magnate என்ற கட்டுரை இவ் ஆய்விதழில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு பல அரிய கட்டுரைகளுடன் அடிகளார் வெளியிட்ட ஆய்விதழ் இன்று மறுதோன்றி அச்சாக்கம் பெற்றுள்ளமை வரவேற்க வேண்டிய நன்முயற்சி.



க்ரீச்..... க்ரீச்......
வெட்டிக் கொண்டிருந்தது
பல ஜாதி மயிர்களை
அந்தக் கடையில் கத்தரிக்கோல்....
மீசைக்காரன் ஒருவன்
மீசை திருத்துகையில்...
“ரொம்பக் குறைச்சிடாத
என் சாதிக் கௌரவம்
குறைஞ்சிடும் என்க .....
மீண்டும் அதே ஒலியுடன்
வெட்டத் தொடங்கியது
கத்தரிக்கோல்...
க்ரீச்.... க்ரீச்....
கத்தரிக்கோலிடம் கேட்டேன்
“பயமில்லையா உனக்கு..
ஆண்ட சாதியின்
மீசை வெட்டும் போது ?”
“எனக்கு எல்லா
மயிரும் ஒன்னுதான்...”
சொல்லிவிட்டு மீண்டும்
வெட்டத் தொடங்கியது
கத்தரிக்கோல்!
க்ரீச் ..... க்ரீச் .....

**–முகநூலில் உலா வந்த**
**சீனிவாசன் நாராயணன் பதிவு**



மலரஞ்சலி

# தனிநாயகம் அடிகளின் தமிழாய்வுப் பணிகள்

● அமுதன் அடிகள்

**இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையை மாற்றி, உலக அரங்கில் பல நாடுகளில் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கு உரியது. இந்திய நாகரிகத்தின் முழுமையையும் இலக்கியச் செழுமையையும் உரிய முறையில் ஆராய்ந்து அறிய, வடமொழி அறிவு மட்டுமே போதாது, தமிழறிவும் இன்றியமையாதது என்பதை அறிஞர் உலகத்துக்கு அடிகளார் தெளிவாக உணர்த்தினார்.**

உலகச் செம்மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. தமிழின் வளமையும் செழுமையும் தொன்மையுமே அதற்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. தமிழின் மிகத் தொன்மையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் தனக்கு முன்னரே தமிழில் அரிய நூல்கள் பல இயற்றப்பட்டன என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றது. செல்வர்-வறியோர், ஆண்-பெண் என்னும் வேறுபாடுகளின்றி அனைவரும் பயின்று புலமை பெறத்தக்க மொழியாகத் தமிழ் விளங்கியது என்பதைச் சங்கத் தமிழ் வரலாறு நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. எனினும் இடைக்காலத்தில் தோன்றிய பண்பாட்டுக் குழப்பங்களின் விளைவாகக் கல்வி மேற்குலத்தாருக்கே உரியது என்னும் கருத்துப் பரவிய காரணத்தால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி தடைப்பட்டது. இத்தடைகளைத் தாண்டித் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி காணத் தொடங்கிய காலம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம். கல்வி முறைப்படுத்தப்பட்டுப் பல கல்வி நிலையங்கள் தோன்றிய காலம் அது. அதன் விளைவாகத் தமிழ் ஆராய்ச்சி தளிர்விடத் தொடங்கிய காலமும் அதுவே. உ.வே. சாமிநாத ஐயர், சி.வை. தாமோதரம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, மறைமலை அடிகள் போன்றோர் தமிழ் நூல்களை ஆராய்ச்சி நோக்குடன் பதிப்பித்த காலம் அது. ஆகவே, கல்வி வளர்ச்சியோடு ஆராய்ச்சியும் முளைவிடத் தொடங்கியது.

**புதிய கண்ணோட்டம்**

ஆயினும் அது தமிழ் ஆராய்ச்சி ஒரு வரையறைக்குள் அடங்கியிருந்த காலமாகவே இருந்தது. இலக்கியமும் இலக்கணமுமே தமிழ் ஆராய்ச்சிக்குத் தகுந்த துறைகள் என அக்காலத்து அறிஞர்கள் எண்ணியிருந்தது போலத் தோன்றுகிறது. இந்நிலையை மாற்றி, தமிழ் இலக்கிய இலக்கணங்களோடு, தமிழரின் கலைகள், வாணிகத் தொடர்புகள், வாழ்க்கை நிலை, உளவியல், அயல்நாட்டுத் தொடர்புகள் போன்றவையும் ஆராயப்பட வேண்டும் எனப் புதிய சிந்தனைகளைப் புகுத்தித் தமிழ் ஆராய்ச்சியில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த பெருமை சேவியர் தனிநாயகம் அடிகளாருக்கு உரியது. தமிழ் ஆராய்ச்சி தமிழ்மொழியில் மட்டுமில்லாமல் பிறமொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் பதிவாக வேண்டும் என உறுதியாக நம்பிய அவர் Tamil Culture என்னும் ஆங்கில முத்திங்கள் ஆய்விதழை 1952ஆம் ஆண்டில் தொடங்கினார். உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களையும் சென்றடைந்த அவ்விதழ் உலகளாவிய தமிழாராய்ச்சிக்கு வழிவகுப்பதாயிற்று. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிற நாட்டு அறிஞர்களும் தமிழ் ஆய்வில் ஈடுபட்டு, தங்கள் ஆங்கிலக் கட்டுரைகளை Tamil Culture இதழில் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதினர்.

இத்தகைய ஆய்வுகளை ஒருங்குபடுத்திட உலகத் தமிழறிஞர்களைக் கொண்ட அமைப்பு ஒன்றினை நிறுவவும் அடிகளார் திட்டமிட்டு அதில் வெற்றியும் கண்டார். அவரது அரிய

முயற்சியின் விளைவாக உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் 1964ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

அடிகளார் நிறுவிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பெரும் முயற்சியால் பத்து உலகத் தமிழ் மாநாடுகள் இதுவரை நடந்திருக்கின்றன. அவை பல்வேறு நாடுகளில் நடந்திருக்கின்றன. உலகின் பல்வேறு நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இன்று கற்பிக்கப்படுகிறது. தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத எத்தனையோ பிற நாட்டு அறிஞர்கள் இன்று தமிழியல் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கெல்லாம் காரணகர்த்தா இலங்கை யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள நெடுந்தீவினைப் பிறப்பிடமாகக் கொண்ட தவத்திரு சேவியர் தனிநாயகம் அடிகளாரே ஆவார்.

### உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்குகள்

மலேசியப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் 1961ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வந்த அடிகளார் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உறுப்பினராகவும் இருந்தார். 26.07.1963 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது, இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் தமிழ்ப் பேராசிரியர் களை ஒன்றுகூட்டி, ஆண்டு தோறும் உலக அளவில் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடத்தத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்னும் கருத்தை அடிகளார் முன்வைத்தார். தமிழ் வளர்ச்சிக் கழகமும் தமிழக அரசும் அக்கருத்தை ஏற்றுக் கொண்டன. 1964ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற உலகக் கீழ்த்திசை அறிஞர்கள் மாநாட்டிற்குப் பின்பு அதனை நடத்தலாம் என்று தமிழக அரசு திட்ட மிட்டது. ஆயினும், அக்கருத்தரங்கம் நடைபெற வில்லை.

### உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்

1964ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஆறாம் நாள் முதல் 10ஆம் நாள் வரை டெல்லியில் உலகக் கீழ்த்திசை அறிஞர்கள் மாநாடு நடை பெற்றபோது அதில் கலந்துகொண்ட தமிழறி ஞர்களை ஒன்றுகூட்டி உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தினை நிறுவ அடிகளார் திட்டமிட்டார். அவ்வாறே பல நாடுகளிலிருந்து வந்திருந்த தமிழ் அறிஞர்களும் இந்தியவியல் அறிஞர்களும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தை அடிகளாரும் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் (தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தர்)அவர்களும் ஏற்பாடு செய்தனர். அக் கூட்டத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சிமன்றம் அமைத்துப் பணிபுரிய வேண்டியதன் இன்றியமை யாமையைப் பற்றி அடிகளாரும் கமில் சுவலபிலும் வலியுறுத்திப் பேசியபின், மன்றம் அமைக்கப் பட்டது. பேராசிரியர் ஜான் ஃபீலியோசா உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராகவும், பேராசிரியர்கள் தாமஸ் பர்ரோ, எம்.பி.எமனோ, எஃப்.பி.ஜே. கியூப்பர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், மு.வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர் களாகவும், பேராசிரியர்கள் கமில் சுவலபில், சேவியர் தனிநாயகம் அடிகள் ஆகிய இருவரும் பொதுச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இம்மன்றமே கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாடு தொடங்கி, எல்லா மாநாடுகளையும் நடத்தி வருகிறது.

### தமிழ் ஆர்வம்

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரே ஆயினும், யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் உரோமையிலும் கல்வி பயின்றபோதெல்லாம் தமிழைக் கற்றுக் கொள்வதில் ஆர்வமே இல்லாதிருந்தார் தனிநாயகம். ஐரோப்பிய மொழிகளைக் கற்றுத் தேர்வதில், அதிலும் ஆங்கிலத்தில் தனிப்புலமை பெறுவதில்தான் அவ்வமயம் தனிக் கவனம் செலுத்தினார். எனினும் 1945ஆம் ஆண்டு தம் 32ஆம் வயதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் பயில அவர் முன் வந்தது விந்தையிலும் விந்தை என்றே கூறவேண்டும். நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கன்குளத்தில் 1941 முதல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்த காலத்தில் அவர் தமிழரிடையே தமது பணியைச் செவ்வனே ஆற்றுவதற்காகத் தமிழ் கற்க முற்பட்டார். அவ்வமயம் சங்க இலக்கியத்தின் சிறப்பு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. ஆகவே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் பயில முடிவு செய்தார். பல்கலைக் கழகத்தில் அன்று தமிழ்ப் பேராசிரியர்களாகப் பணிபுரிந்த தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும், சிதம்பரநாதன் செட்டி யாரும் தமிழ் ஆய்வில் ஈடுபட அடிகளாரைப் பெரிதும் ஊக்குவித்தனர்.

### அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடி களார் நான்கு ஆண்டுக் காலம் பயின்று தமிழ் முதுகலை, இலக்கிய முதுகலை ஆகிய இரு பட்டங்களையும் பெற்றார். இலக்கிய முதுகலைப் பட்டத்துக்காகப் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் தலைப்பில் அவர் ஆய்வு செய்து எழுதிய நூல், பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் பலவகையிலும் விஞ்சி நிற்கின்றது என்று ஐரோப்பியத் திராவிடவியல் பேரறிஞராகிய முனைவர் கமில் சுவலபில் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது.

### உலகத் தமிழ்த் தூதுப் பயணம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற போது தமிழை நிறைவாகப் பயின்று தமிழின் சிறப்பை ஆய்ந்தறிந்த அடிகளார், அதை உலக

அரங்கில் எடுத்தோதுவதைத் தமது தலையாய கடமை என்று உணர்ந்தார். ஆகவே, 1949-50ஆம் ஆண்டுகளில் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணத்தை மேற்கொண்டு தமிழ்த் தூது நிகழ்த்தினார். அவ்வமயம் ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரேசில், எக்குவதோர், பெரு, மெக்சிக்கோ, இத்தாலி முதலிய பல நாடுகளுக்குச் சென்று உரை நிகழ்த்திய அடிகளார், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் தமிழின் சிறப்பைப் பற்றி ஒரே ஆண்டில் 200 விரிவுரைகள் ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்தம் அற்புதமான ஆய்வுரைகள், ஏற்கெனவே இந்தியவியல் ஆய்வில் ஈடுபட்டிருந்த ஆனால் தமிழ் பற்றி மிகுதியும் அறிந்திராத பல மேனாட்டு அறிஞர் களின் கண்களைத் திறந்தன. அவர்களுள் பலரைத் தமிழாய்வில் ஈடுபட ஊக்குவித்த அடிகளார், பல்வேறு மேனாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை அமைந்திடவும் வழி வகுத்தார்.

இவ்வாறு இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையை மாற்றி, உலக அரங்கில் பல நாடுகளில் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கு உரியது. இந்திய நாகரிகத்தின் முழுமையையும் இலக்கியச் செழுமையையும் உரிய முறையில் ஆராய்ந்து அறிய, வடமொழி அறிவு மட்டுமே போதாது, தமிழறிவும் இன்றியமையாதது என்பதை அறிஞர் உலகத்துக்கு அடிகளார் தெளிவாக உணர்த்தினார்.

### ஆங்கில இதழ்

தமிழாய்வுக் கட்டுரைகளைத் தமிழில் மட்டும் படைத்தால் போதாது, அவை ஆங்கிலத்திலும் வடிக்கப்பட்டால்தான் உலக அரங்கினைச் சென்றடைய முடியும் என்பதால் தமிழாய்வுக்காக ஆங்கில இதழ் ஒன்று வெளியிடப்படுவது அவசியம் என்பதைத் தம் உலகத் தமிழ்த் தூதுப் பயணத்தின்போது அடிகளார் உணர்ந்தார். இத்தேவையை நிறைவுசெய்ய 1952ஆம் ஆண்டில் 'Tamil Culture' என்னும் ஆங்கில முத்திங்கள் இதழை அடிகளார் வெளியிடத் தொடங்கினார். இது தனியொருவர் மேற்கொண்ட தனிப்பெரும் முயற்சி என்பது மட்டுமல்ல, 12 ஆண்டுகளுக்குப் பின்பு உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் தோன்ற வழிவகுத்ததும் ஆகும். மேனாடுகளைச் சார்ந்த தமிழ் அறிஞர்களாகிய கமில் சுவலபில், ஜான் ஃபீலியோசா, எ.ஆந்திரனோவ், எம்.பி.எமனோ, அர்னோ லேமன், எஃப். பி.ஜே.கியூப்பர், ஜெ. ஆர்.மார், எட்கர் நோல்ட்டன், சி.ஆர்.பாக்ஸர், தாமஸ் பர்ரோ போன்ற மேனாட்டு அறிஞர்களும், இந்திய இலங்கைத் தமிழறிஞர்களும் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வந்த இவ்விதழ் பல மேனாட்டுப் பல்கலைக்கழகங்களின் நூலகங்களில் இடம்பெற்ற சிறப்புக்குரியதாகும்.

### ஆய்வு இதழ்கள்

பல்வேறு காரணங்களால் Tamil Culture இதழினைத் தொடர்ந்து நடத்த அடிகளால் இயலாமல் போயிற்று. ஆகவே 1966ஆம் ஆண்டில் அவ்விதழ் நிறுத்தப்பட்டது. எனினும் அத்தகைய ஓர் ஆய்விதழின் இன்றியமையாத் தேவை தமிழறிஞர்களால் உணரப்பட்டதால், புதிய ஆய்விதழ் ஒன்றினை வெளிக்கொணரும் முயற்சியில் அடிகளாரே ஈடுபட வேண்டிய தாயிற்று. எனவே அடிகளாரையே தலைமை இதழாசிரியராகக் கொண்டு Journal of Tamil Studies வெளியிடப்பட்டது. சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், இவ்விதழ் அந்நிறுவனத்தின் சார்பில் வெளிவரத் தொடங்கியது, இன்றும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

### பல்துறை ஆய்வுகள்

தமிழ் சார்ந்த எல்லாத் துறைகளுமே தமிழ் ஆய்வுக்கு உட்பட்டவைதாம் என்பதைத் தம் இதழ் மூலம் அடிகளார் வலியுறுத்தி வந்தார். தென்னிந்திய, இந்திய மொழி இலக்கியங்களோடு மட்டுமல்லாமல், பிற நாட்டு இலக்கியங்களோடும் தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வது தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்று அவர் உறுதியாக நம்பினார். அவரது எம்.லிட்., முனைவர் பட்ட ஆய்வேடுகளும் திருவள்ளுவர் பற்றி அவர் நிகழ்த்திய அறக் கட்டளைச் சொற்பொழிவுகளும் இத்துறையில் அடிகளாரின் ஈடுபாட்டைத் தெளிவாக விளக்குகின்றன.

### அச்சேறிய முதல் தமிழ் நூல்கள்

தமிழில் முதன் முதலாக வெளியிடப் பெற்ற கார்தில்யா, தம்பிரான் வணக்கம், கிரிசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு போன்ற பல நூல்களை ஐரோப்பிய நூலகங்களில் ஆய்வு செய்து கண்டுபிடித்துத் தமிழ் உலகுக்கு அவர் வெளிப்படுத்தினார். அவ்வாறே 1679ஆம் ஆண்டு அச்சிடப் பெற்ற தமிழ் போர்த்துக்கேய அகராதியைக் கண்டுபிடித்து அதனை மறு பதிப்பாக 1966ஆம் ஆண்டு கோலாலம்பூரில் உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிட்டார். அடிகளாரின் முயற்சி இல்லையெனில், முதலில் அச்சேறிய இவ்வரிய தமிழ் நூல்கள் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கும். இதனால் 16ஆம் நூற்றாண்டிலேயே கத்தோலிக்கக் குருக்களால் தமிழ் அச்சகம் நிறுவப்பட்டது என்னும் உண்மையும் இந்திய மொழிகளுள் தமிழிலேயே முதன் முதலாக நூல்கள் அச்சிடப்பெற்றன என்னும் உண்மையும் அடிகளாரால் நிறுவப் பட்டது.

### புதிய கண்டுபிடிப்புகள்

உரோம், கிரேக்கப் பேரரசுகளுடன் பழந்

தமிழகம் கொண்டிருந்த வணிக உறவுகளை நாம் அறிவோம். ஆனால், கிழக்காசிய நாடுகளுடன் அன்றைய தமிழகம் கொண்டிருந்த அரசியல் உறவு காரணமாகப் பண்பாட்டு உறவும் ஏற்பட்டது என்பதை அடிகளார்தாம் முதன்முதலில் ஆராய்ந்து வெளிப்படுத்தினார். தாய்லாந்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின்போது திருவாசகம் ஓதப்படுவதையும், கம்போடியக் கோவில்களில் திராவிடக் கலைத் தாக்கம் காணப்படுவதையும் அடிகளார் கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கிறார். அவ்வாறே கம்போடியா, தாய்லாந்து நாடுகளின் மொழிகளில் பல தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றிருப்பதையும் அடிகளார் சுட்டிக்காட்டியுள்ளார். இத்துறையில் முதன்முதலாக ஆய்வு செய்தது அடிகளாரே என்பது பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் போன்ற பேரறிஞர்கள் ஏற்றுப் போற்றும் உண்மையாகும்.

**பன்மொழிப் புலமை**

தமிழ், ஆங்கிலம், இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்ச், ஜெர்மன், போர்த்துக்கேயம், ஸ்பானிஷ், ரஷ்யன் ஆகிய பல மொழிகளைக் கற்றிருந்தார் அடிகளார். ஆகவே அம்மொழிகளிலெல்லாம் தமிழ் மொழிபற்றி ஆய்வுரை நிகழ்த்தவும், ஆய்வுக் கட்டுரை வடிக்கவும் வல்லவராகத் திகழ்ந்தார். இதனாலேயே மேலை நாடுகளில் தமிழின் சிறப்பை எளிதாகப் பரப்பிட அடிகளாரால் இயன்றது எனலாம். தங்கள் பல்கலைக் கழகத்தில் தமிழ்பற்றிய ஆய்வுரை நிகழ்த்துமாறு பல ஐரோப்பிய அறிஞர்கள் அடிகளாரை அழைத்துப் பயன்பெற்றனர். மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராக எட்டு ஆண்டுக்காலம் பணிபுரிந்த அடிகளார், பல புதிய பொருள் பற்றியும் துறைகள் பற்றியும் அப்பல்கலைக்கழகத்தில் தமிழாய்வு நடைபெற வழிகோலினார். அந்த்தாம் தெ ப்ரோயென்சா அடிகள் இயற்றிய தமிழ் போர்த்துக்கேய அகராதியின் மறுபதிப்புக்குத் தனிநாயக அடிகளார் எழுதியுள்ள அரிய ஆய்வுரை அறிஞருலகத்தின் பாராட்டினைப் பெற்றதாகும்.

பேராசிரியப் பணி, ஆய்வுப் பணி, உலக அரங்கில் தமிழ்த் தூதுப்பணி, கள ஆய்வுப் பணி, ஆய்விதழ் ஆசிரியப் பணி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவி உலகத் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடைபெற வழிகோலிய பணி, மறைந்த தமிழ் நூல்களைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்த பணி, கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருத்தலைக் கண்டு உணர்த்திய பணி போன்ற பல பணிகள் மூலம் தனிநாயகம் அடிகளார் தமிழ்வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். ●



கவிதை

## காற்றுண்ணி

● யாழன் ஆதி

வழிந்தோடும் இந்தச் சாலையைப் பிடித்து
ஒரு பாத்திரத்திற்குள் வைத்துக்கொள் தேவி
உன் பார்வையைச் சாலையாய்த் தட்டி தட்டிச் செய்ய
நீள்கிறது அந்த நகையின் ஒளி
கற்கள் பதிக்கப்பட்ட அதுவும் மினுக்கும் கற்கள்
சாலை விளக்குகளாய் ஜொலிக்கின்றன
நான் தான் வருகிறேன் அச்சாலையில்
ஒரு ராட்சத உருவமெடுத்து வித்தியாசமாய் வடிவமைக்கப்பட்ட
விலங்காய்
உன்னகையைப் பத்திரப்படுத்த எத்தனித்த நீ
சாலையை சுருட்டிக்கொண்டு ஓடுகிறாய்
சாலையற்று நான் மட்டும் தனியாய் நிற்க
உன் ஒளிச்சுடரின் துளியொன்று என் கண்ணில் விழுந்து
உறுத்துகிறது
வா அன்பே நீதான் ஊதி அத்துகளை நீக்க வேண்டும்
குவிந்த உன் உதடுகளிலிருந்து காற்றுண்டு
பிழைத்துக் கொள்கிறேன்.



இலங்கைக்கும் தமிழுக்குமான உறவு மிகப் பழமையானது என்பதையும் அது நிலையானது என்பதையும் எடுத்துக் கூறினார். சட்டத்தின் மூலம் அந்த உறவினை அழிக்க முயலுவது தவறு மட்டுமல்லாமல் பேராபத்தில் முடியும் என்பதையும் விளக்கினார். பல இடங்களில் இப்பிரச்சினை குறித்து உரையாற்றினார். இதன் மூலம் இலங்கைத் தமிழர்களிடம் தனிநாயகம் அடிகளார் நீங்காத இடத்தினைப் பெற்றார்.

மலரஞ்சலி

# தமிழும் தனிநாயகம் அடிகளும்

● நா. இராமச்சந்திரன்

“தமிழ்மொழி பழமையானது, அதன் இலக்கியம் ஏற்றமுடையது, அதன் பக்தி இலக்கியம் மனதை உருக்கும் இயல்புடையது, சிலப்பதிகாரக் காவியம் உலக இலக்கியங்களில் சிறப்பிடம் பெறத்தக்கது என்று பிற நாட்டார் அறிந்திடச் செய்தவர் அடிகளாவார். உலக மாநாடு மலேசியாவில் நடத்தியதும், அதன்பின்னர் சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நடத்துவதற்கு வழி காட்டியாக நின்றவரும் அடிகளாவார். அதன் பின்னர் தான் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி முதலிய மொழிகள் உலக மாநாடுகளை நடத்த முயன்றன. அவர் செய்த பெருந்தொண்டைத் தமிழகம் முழுமையாக உணர்ந்திடவில்லை. அவரால் உலக அரங்கில் தமிழுக்கு ஏற்பட்ட சிறப்பை, இதுவரை மதித்திட வில்லை. தமிழ்நாட்டில் நல்ல தொண்டுகளைச் சீர்தூக்கிப் பாராட்டப் பலவாண்டுகளாகும். வளராத மனநிலை உடையவர்கள் பலராகையால் அந்த மனநிலை மாறப் பல்லாண்டு நீடித்திடும். ஆனால் விரைவில் அந்த நிலை மாறாமல் இருக்காது. அன்று தனிநாயகம் அடிகளைச் சிரமேற்கொண்டு தமிழர் போற்றுவர்” என்று அமுதன் அடிகள் எழுதிய ‘தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம்’ என்ற நூலுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர், முனைவர் வ.அய். சுப்பிரமணியம் வழங்கிய அறிமுகத்தில் குறிப்பிடுவார்.

செப்டம்பர் மாதம் முதல் நாள் தனிநாயகம் அடிகளாரின் நாற்பதாவது நினைவு நாள். சமயவியலில் பட்டம் பெற்றிருந்தாலும் தமிழ் இலக்கியத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.லிட். பட்டம் பெற்றவர். கல்வியியலிலும் பட்டம் பெற்றுள்ளார். இருப்பினும் பல்துறை வல்லுநராக அவர் விளங்கினார். அதனால் தான் தமிழியல் ஆய்வுகளில் பல துறைகளை இணைத்து அவரால் ஆய்வு செய்ய முடிந்தது. “கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைத்தும் ஒப்பிட்டும் நோக்க அவரால் இயன்றது. தமிழர் வாணிகம், மேலை நாட்டு நிலவியல் நூல்களும் தமிழ்நாட்டு இடப் பெயர்களும், கடாரம் எங்கே?, தமிழாய்வு: அன்றும் இன்றும், தெற்காசிய - தென்கிழக்காசியக் கலை, சமயமும் கலையும், சமயமும் பண்பாடும், மனித நேயக் குறிக்கோள்கள், தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும், குவாடலூப்பே மார்த்தினிக் நாடுகளில் தமிழர் குடியேற்றம், சங்க இலக்கியத்தில் கல்விச் சிந்தனை, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, தமிழர்தம் கவின்கலைகள், பழந்தமிழ் இலக்கியம், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உயர்நிலைக் கல்வி, தமிழ்ப் பால பாடங்களில் சொல்லாட்சியும் உள்ளடக்கமும், தமிழ் இலக்கியத்தில் கத்தோலிக்கர் பணி, இலங்கையில் மொழியுரிமைகள், மலரும் மாலையும், தமிழில் அச்சேறிய முதல் நூல்கள், ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துச் சுவடிகள் என அவரது எழுத்துப் படைப்புகளின் தலைப்பை நோக்கும்போதே அடிகளாரின் பல்துறை அறிவு நமக்கு எளிதில் புலப்படும்” என்று அமுதன் அடிகள் குறிபிடுவார்.

தமிழ் மொழியிலுள்ள ஒப்பற்ற இலக்கியங்களை உலகறியச் செய்ய வேண்டுமென்ற பேரவா தனிநாயகம் அடிகளாரிடம் இருந்தது. அமெரிக்க

ஐக்கிய நாடு, தென் அமெரிக்க நாடுகள், சீனா, ஜப்பான், மலேயா, மேற்கிந்தியத் தீவுகள், ஆப்பிரிக்க நாடுகள், இத்தாலி, எகிப்து, பாலஸ்தீனம் போன்ற நாடுகளுக்குச் சென்று தமிழ் மொழி பற்றியும் தமிழின் கலைகள் குறித்தும் தமிழக வரலாறு பற்றியும் பல்வேறு உரைகளை நிகழ்த்தினார். அமெரிக்க ஐய்க்கிய நாட்டில் மட்டும் இருநூற்றுக்கும் மேற்பட்ட உரைகள் நிகழ்த்தியுள்ளார் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர்.

இந்தியப் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு வடமொழி இலக்கியப் பயிற்சி மட்டுமே துணை செய்யுமென்று மேலை நாட்டு மொழியியலா ளர்களும் இலக்கிய ஆய்வாளர்களும் கருதிய காலம் இருந்தது. இதற்கு மாக்ஸ் முல்லர் போன்றோருடைய தாக்கம் காரணமாக இருக்கலாம். தமிழ் இலக்கியம் குறித்த கருத்துக்கள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லாம். எமனோ போன்ற ஒருசில மேலை நாட்டு அறிஞர்கள் இதற்கு விதி விலக்கு. அமெரிக்கா விலுள்ள கொலம்பியா, ஹார்வர்டு, கலி போர்னியா பல்கலைக் கழகங்களில் கீழைத் தேயங்கள் பற்றி பல்வேறு ஆய்வுகள் நடை பெற்றுள்ளன; தற்போதும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும் தமிழ் மொழி, தமிழ் நாடு, தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகள் எண்ணிக்கையில் மிகச் சிலவே. திராவிட மொழிகளின் சிறப்புக் கூறுகளை மொழியியலர் சிலர் அறிந்திருந்தனர். எனினும் வட நாட்டுக் கலைகளையே இந்தியக் கலைகள் என்று கருதி வந்துள்ளனர். சிந்து, கங்கைப் பெருவெளிகளையே இந்திய நாடு என்று கருதும் போக்கும் நிலவியது. ஜப்பானியர்கள் தாய்மொழிக்கே சிறப்பிடம் தந்ததால் ஆங்கிலத்தில் வெளிவரும் தென்னிந்தியா குறித்த செய்திகளை அறியாமலே இருந்தனர். இந்தச் சூழ்நிலையைக் கண்ட தனிநாயகம் அடிகளார் தமிழ் மொழியின் பெருமைகளையும் தமிழிலக்கியம் இலக்கணம் ஆகியவற்றின் தொன்மையையும் தமிழக வர லாறு, நிலவியல் தன்மைகளையும் மேலை நாட்டினர் அறியச் செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டார். வானொலி, தொலைக்காட்சி செய்தித் தாள்கள் ஆகியவற்றின் மூலமும் பேட்டிகள் மூலமும் உரைகள் மூலமும் அடி களார் தமிழின் பெருமையைத் தொடர்ந்து விளக்கினார். உலக அரங்கில் தமிழ் சிறப்பிடம் பிடிப்பதற்கு அடிகளார் அயராது உழைத்தார். தமிழைப் பற்றிய ஆய்வுகள் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் நடைபெற வேண்டும் என்பதை அவர் சென்ற இடங்களிலெல்லாம் வலியுறுத் தினார்.

இலங்கையில் வாழும் தமிழர்கள், சிங்களருக்கு இணையான ஒத்த உரிமை வேண்டும் என்று போர்க்குரல் எழுப்பியபோது, அது நியாயம்தான் என்று அடிகளார் பெரிதும் நம்பினார். இலங்கையில் சிங்களரும் தமிழரும் மட்டுமே வாழ்கின்றனர். இவ்விரு பிரிவினரும் ஒத்த உரிமையுடன் வாழ வேண்டும் என்று தனிநாயகம் அடிகளார் வலியுறுத்தினார். “பல இலங்கைத் தமிழர்கள் பௌத்த சமயத்தினராக இருந்தது, தமிழ்ப் பௌத்தத் துறவிகள் பாலி இலக்கியத்தை வளர்த்தது, இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தமிழ்ப் பகுதிகளில் பௌத்த விகாரைகள் எழுப்பப்பட்டது, தமிழ்த் துறவிகள் சிங்கள அரசுகளில் கற்கவும் கற்பிக்கவும் வந்தது எனப் பல ஆதாரங்களை அடுக்கடுக்காகக் கூறிய அடிகளார் பழங்காலத்தில் சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர் என்பதைக் கோடிட்டுக் காட்டினார் (அமுதன் அடிகள்: தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம்).

1956ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு, சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; சிங்களருக்கே இலங்கையில் உரிமை வேண்டும் என்பது இயக்கரீதியாகத் தீவிர மடைந்தது. பிரதமர் சாலமன் பண்டாரநாய காவைச் சந்தித்துச் சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழிகளாக்கினால் இனச் சிக்கலைத் தீர்க்கலாம் என்று அடிகளார் விளக்கினார். கனடா, பெல்ஜியம் போன்ற நாடுகளைச் சான்று காட்டி எடுத்துக் கூறினார். ஆனால் பண்டாரநாயகா அதனை ஏற்றுக் கொள்ளாத தோடு, வாள்முனையில் இச்சிக்கலுக்குத் திர்வு காண்பதையே தாம் விரும்புவதாகக் கூறினார். அடிகளாருக்குப் பேரதிர்ச்சி. ‘இலங்கையில் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி‘ என்று 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் நாள் இலங்கைப் பாராளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. அடிகளார், ‘இலங்கையில் மொழி உரிமைகள்’ எனும் கட்டுரையை எழுதினார். பெரும்பான்மை என்பதை அரசாங்கம் தவறாகப் புரிந்துகொண்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டினார். அது கொடுங் கோன்மைக்கு இட்டுச் செல்லும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் தமிழுக்குமான உறவு மிகப் பழமையானது என்பதையும் அது நிலையானது என்பதையும் எடுத்துக் கூறினார். சட்டத்தின் மூலம் அந்த உறவினை அழிக்க முயலுவது தவறு மட்டுமல்லாமல் பேராபத்தில் முடியும் என்பதையும் விளக்கினார். பல இடங்களில் இப்பிரச்சினை குறித்து உரையாற்றினார். இதன் மூலம் இலங்கைத் தமிழர்களிடம் தனிநாயகம் அடிகளார் நீங்காத இடத்தினைப் பெற்றார்.

“1956ஆம் ஆண்டில் சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்துத் தமிழ் அரசியல் கட்சிகள் கொழும்பு காலிமுகத் திடலில் அறப்போர் நடத்தியபோது அவ்வறப்போரில் அடிகளார் கலந்து கொண்டாரா இல்லையா என்பதைப் பற்றி வேறுபட்ட கருத்துகள் உண்டு” என்று அமுதன் அடிகள் தமது நூலில் குறிப்பிடுகிறார். ஆனால், அவர் கலந்து கொண்டார் என்பதை அந்தனி ஜான் அழகரசன், ராஜன் பிலிப்புப்

பிள்ளை, புலவர் இளமுருகனார், நீக்கிலஸ் அடிகள், அருட்செல்வி பெனடிக்ரா வஸ்தியாம் பிள்ளை, நாவண்ணன், அ.ச. அப்துல் சமது, அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கூறியவற்றை அமுதன் அடிகள் மேற்கோள்களாகத் தருகிறார். காலிமுகத் திடலில் அடிகளார் கலந்து கொண்டார் என்பதற்கு அக்கூற்றுகளே சான்று களாம். 1961ஆம் ஆண்டு நடைபெற்ற அறப் போரிலும் அடிகளார் கலந்து கொண்டார். கைது செய்யப்பட்டவர்களைக் கச்சேரிக்குப்போய் நேரடியாகச் சந்தித்து ஆதரவு வழங்கினார். 1980ஆம் ஆண்டு சனவரி மாதம் 10ஆம் நாள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் அரங்கில் கூட்ட மொன்றை ஏற்பாடு செய்து தமிழ் மக்கள் படும் துயரத்தை விளக்கிப் பேசினார். யாழ்ப்பாணம் உலகத் தமிழ் மாநாட்டின் போது போராட் டத்தில் ஈடுபட்டு உயிர்விட்ட தமிழர்களின் நினைவு நாள் என்பதால் அந்நாளை அடிகளார் தேர்ந்தெடுத்தார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியதும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளைத் திட்ட மிட்டு நடத்தியதும் தமிழ் மொழிக்காக ஆங்கி லத்தில் வெளிக் கொண்டு வந்த இதழ்களும் தனிநாயகம் அடிகளாரின் நிலைத்த புகழுக்குக் காரணமாயின.

1964ஆம் ஆண்டு டில்லியில் கீழ்த் திசை நாட்டறிஞர்களின் உலக மாநாடு நடைபெற்றது. அப்போதுதான் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடங்கப்பட்டது. அதற்கு முன்னர் சில அடித்தள முயற்சிகளை அடிகளார் மேற் கொண்டார். “தமிழ் ஆய்வாளர்களும் ஆராய்ச்சி யாளர்களும் ஆர்வலர்களும் தமிழ் ஆராய்ச்சி இதழ் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட வேண்டும் என்னும் தேவையைத் தமது உலகப் பயணத்தின்போது தம்மிடம் பலமுறை வலியுறுதியதாலும், இது உடனடியாக நிறைவு செய்யப்படுவதன் மூலம் உலக அரங்கில் தமிழுக் குரிய இடத்தை ஆய்வு செய்திட இயலும் என்ப தாலுமே TAMIL CULTURE என்னும் ஆங்கில முத்திங்கள் இதழைத் தொடங்கியதாக அடிகளார் எழுதியுள்ளார். இவ்விதழே உலகில் பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழரும் தமிழரல்லாதோரு மாகிய தமிழ் அறிஞர்களை இணைக்கவும் தமிழ் மொழி, வரலாறு, கலை, மொழியியல், மெய்யியல், சமயம் தொன்மையியல் எனத் தமிழோடு தொடர்புடைய எல்லாத் துறைகளிலும் அறி வியல் முறையில் ஆய்வு நிகழவும் வழிகோலியது என்பது மிகையன்று” (அமுதன் அடிகள்: தனி நாயகம் என்னும் தமிழ் நாயகம்).

முதல் உலகத் தமிழ் மாநாடு அடிகளாரின் பெருமுயற்சியால் கோலாலம்பூரில் நடைபெற்றது. 1966ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 முதல் 23 முடிய மாநாடு நடைபெற்றது. இலக்கியக் கொள்கைகள், சமூக வரலாறு, தென்கிழக்கு ஆசியப் பண்பாடு, மொழியியல் , மொழிபெயர்ப்பு, தமிழ் இலக்கியத் திறனாய்வு, சங்க காலச் சமுதாயம், மேனாட்டறிஞர்களின் தமிழ் ஆய்வுகள், இலக்கியமும் சமுதாயமும், தற்காலத் தமிழ் இலக்கியம், கலைகள், தொல்லியல், திராவிட மொழி ஒப்பாய்வுகள், தற்காலத் தமிழ்ச் சமூகம் ஆகியன குறித்து கட்டுரைகள் வழங்கப்பட்டன. மாநாடு முடிந்தபின் அடிகளாரு டைய தலைமையில் பேராசிரியர்கள் வ.அய். சுப்பிரமணியம், லெ.ப.கரு.இராமநாதன், அரச ரத்தினம், இராம.சுப்பையா. எஸ்.சிங்காரவேலு ஆகியோர் குழுவாக இணைந்து மாநாட்டு உரைகளையும் கட்டுரைகளையும் தொகுத்து வெளியிட்டனர்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு 1968 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருக்கும்போது சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசால் பெரிய விழாவாக அது நடத்தப்பட்டது. இருப்பினும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர்களின் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கோலாலம்பூர் மாநாட்டைப் பின்பற்றியே அறிஞர்களின் அரங்குகளில் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த மாநாட்டில் அடிகளார் கட்டுரைகள் வழங்கினார்; விவாதங்களில் பங்கேற்றார்; பொது அமர்வுக்குத் தலைமையேற்றார். கோலாலம்பூர் மாநாட்டுத் தொகுப்பு நூல் சென்னை மாநாட்டில் வெளி யிடப்பட்டது. முனைவர் ஆர்.இ.ஆஷர், முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் இருவரும் இணைந்து மாநாட்டுக் கட்டுரைகளையும் உரைகளையும் தொகுத்து வெளியிட்டனர்.

மூன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1970ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 முதல் 18ஆம் தேதி முடிய பிரான்சு நாட்டின் தலைநகராகிய பாரிசில் நடைபெற்றது. இருபத்தாறு நாடுகளி லிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டனர். அன்றைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

1974ஆம் ஆண்டு சனவரி மாதம் 3 முதல் 7 முடிய யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. பல் வேறு எதிர்ப்புகளுக்கிடையே இம்மாநாட்டைத் திறம்பட நடத்துவதற்கு அடிகளார் பெரிதும் துணைநின்றார். இந்த மாநாட்டில் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் கொள்கையைக் கூறுமிடத்து, ‘யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனும் கொள்கையையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் கூறிய திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் எனும் கோட்பாட்டையும் அடிப் படைக் கோட்பாடுகளாக் கொண்டிருப்பது இந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்’ என்று குறிப்பிட்டார்.

அவருடைய அரும்பணி தமிழ் கூறும் நல்லுலகில் - தமிழ் ஆராய்ச்சி உலகில் - என்றும் நிலைத்திருக்கும்.



மலரஞ்சலி

# தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பண்பாடு

● ஜோசப் குமார்

*1961ல், இலங்கை தந்தை செல்வநாயகம் அவர்கள் சிங்கள மொழி ஆதிக்கத்தை எதிர்த்து, சத்தியாக்கிரகம் மேற்கொண்டு போராடினார். அவ்வமயம், அடிகளார், இப்போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். கொழும்பு நகரின் தெருமுனைகளில் நின்று தமிழுக்கு ஆதரவாகத் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். இதனால், காவல் துறையால் இவர் சில காலம் கண்காணிக்கப்பட்டார் என்ற வரலாறும் இவருக்கு உண்டு.*

“யான் ஒரு சொற்பொழிவாளனோ அன்றி ஒரு எழுத்தாளனோ அல்லன். ஆர்வமிக்கத் தமிழ் மாணாக்கனே ஆவன். எனவே தமிழ் அறிவிற்சிறந்த பெரியோர் பலர் கூடிய இப்பேரவையில் உரை நிகழ்த்துவதற்கு, அதுவும் சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் பற்றி உரை நிகழ்த்துவதற்கு, அஞ்சுகிறேன்” என்று ஓர் யாழ்ப்பாணத் தமிழ்த் திருநாளின்போது நடந்த கூட்டத்தில் பேசினார் அறிஞர் சேவியர் தனி நாயகம் அடிகளார்.

எவ்வளவு அவையடக்கம்! அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை, கோலாலம்பூர், சென்னை, பாரீஸ், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடத்தினார்; சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில, தமிழ் அகரமுதலிக் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றினார்; “தமிழ்ப் பண்பாடு” (Tamil Culture), “தமிழியல்” (“Journal of Tamil Studies”) என்ற ஆய்வு இதழ்களைத் துவக்கி, பதினைந்து ஆண்டுகட்கும் மேலாக ஆசிரியராகப் பணியாற்றினார்; இசுலாமியக் கல்வி வளர்ச்சிக் குழுவில் உறுப்பினராய்ப் பணியாற்றினார்; தமிழ் மொழியில் அச்சேறிய முதல் சுவடிகள், ஐரோப்பிய நூலகங்களில் இருந்ததைக் கண்டு பிடித்து, அவற்றை வெளிஉலகிற்கு அறிவித்து சாதனை புரிந்தார். இவ்வளவு பேராற்றலைக் கொண்டிருந்தும், “எல்லார்க்கும் நன்றாம் பணிதல்” (குறள் 125) என்ற வள்ளுவ வாக்கின் தன்மையுணர்ந்து அவையடக்கம் பேணினார் என்றால் அவர் எவ்வளவு பெரிய மாமனிதராய் இருந்திருக்கவேண்டும்! ஒரு படைப்பாளியைப் போற்றிய பின்னரே, அவன் சமைத்த இலக்கியங் களைப் பற்றிப் பேச வேண்டும் என்பதுதான் மரபு.

தனிநாயக அடிகளார், 02.08.1913 அன்று இலங்கையில் உள்ள காவற்றுறை என்ற ஊரில் பிறந்தார். தந்தை நாகநாதன் கணபதி பிள்ளை சைவ நெறியை ஒழுகியவர். “தலைமைகாரர்” என்று அறியப்பட்டிருந்தவர். தாயார், கிறித்துவ நெறியில் ஒழுகிய இராசம்மா என்பவர். அடிகளார் பள்ளிக் கல்வியை மேற்கொண்ட காலையிலேயே, பள்ளி இதழில், தனது ஊரைப் பற்றிக் கவிதை எழுதிய வித்தகர். சொந்த ஊரில் பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், யாழ் நகரில் கல்லூரிப் படிப்பைத் துவங்கிய போதும், கல்லூரி இதழ்களுக்குக் கவிதை எழுதினார். கல்லூரி மன்ற நிகழ்வுகளிலும் தனது பேச்சுத் திறமையை வெளிப்படுத்தினார். ஆறே மாதங்களில், லத்தீன் மொழியைக் கற்றார்.

அதன் பின்னர் துறவறத்திலும் தொண்டறத்திலும் நாட்டம் கொண்ட அடிகளார் மறைக்கல்வி பயில வேண்டி ரோம் நகருக்குச் சென்றார். உலக இன்பங்களைத் துறந்த அம் மேதையால், தமிழ்க் காதலைத் துறக்க முடிய வில்லை. தமிழ்மொழியின் சிறப்புக்களைப் பரப்ப வேண்டி, “வீரமாமுனிவர் இலக்கியக் கழகம்” என்ற அமைப்பைத் துவங்கி நடத்தினார்.

1940ல் அவர், மறைக்கல்வியை முடித்து, ரோம் நகரை நீங்கிய பின்னர், தமிழகத்தின் முத்து நகரான தூத்துக்குடிக்கு அனுப்பப்பட்டார். அங்கு, ஒரு பள்ளியில், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிப்பவராக தனது ஆசிரியப் பணியைத் துவங்கினார். இந்த நாட்களில்தான். அவர், பண்டிதர் குருசுவாமி சுப்பிரமணிய ஐயர் என்ற தமிழ் அறிஞரிடமிருந்து முறையான தமிழ் பயின்றார். தமிழ் இலக்கண நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இலக்கிய நூல்களையும் பயின்று, அவற்றின் சுவையையும், நயங்களையும் தெளிந்து வியந்தார்.

தமது முப்பத்தி இரண்டாவது அகவை வரை, பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய தனிநாயகம் அடிகளார், தமிழில் மேற்படிப்புப் பயிலுவதற்காக சிதம்பரம் அண்ணாமலை நகர் வந்தார். அவ்வமயம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதுவதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவில் உறுப்பினராய் இருந்த பேரா. ரத்தினசாமி அவர்கள் அண்ணாமலைப் பல்கலையின் துணைவேந்தராய் இருந்தார். அடிகளாரின் சிறப்பியல்புகளால் ஈர்க்கப்பட்ட அவர், அடிகளாரை பல்கலையின் விருந்தினர் இல்லத்தில் தங்கிக் கொள்ள அனுமதி அளித்தார். அப்போது அங்கு பணியாற்றிய பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களின் அன்புக்கும், அடிகளார் ஆட்பட்டார்.

அடிகளார், ஏற்கனவே தத்துவ இயலிலும், மறை இயலிலும் ரோம் பல்கலையில் முனைவர் பட்டங்கள் பெற்றிருந்ததால், “இண்டர் ஆர்ட்ஸ்” என்ற இடைப்படிப்பு தேவைப்படாமல், நேரடியாக, “பி.ஏ. ஹானர்ஸ்” வகுப்பிற்கு அனுமதிக்கப்பட்டார். இது அண்ணாமலை பல்கலை மாணவரிடையே முதலில் சிறிது சலசலப்பை ஏற்படுத்திய போதும், சின்னாட்களில் மறைந்து போயிற்று, தமது முனைவர் பட்டத்திற்காக, இவர், “பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை” என்ற தலைப்பில் செய்த ஆய்வு பலராலும் பாராட்டப்பட்டது. வாழ்நாள் முழுமையும், இயற்கை பால் அவர் கொண்டிருந்த காதலையும் வெளிப்படுத்தியது.

வரலாற்றுப் பேராசிரியர் ஹீராஸ் அடிகளார், “யாழ் நூல்” என்ற புத்தகத்தைச் சமைத்த விபுலானந்த அடிகள் போன்றோர், அண்ணாமலை பல்கலைக்கு வருகை தந்து, நிகழ்த்திய உரைகளையெல்லாம் கேட்ட அடிகளார், தனது சிந்தனையின் எல்லைகளை வெகுவாக விரித்துக் கொண்டு, தனது ஆற்றலையும் செழுமைப்படுத்திக் கொண்டார். திராவிட இயக்கத்தின் அரசியல் தலைவர்களான அன்பழகன், நெடுஞ்செழியன் போன்றோர் இவரது சமகாலத்து மாணவராயிருந்தனர்.

அண்ணாமலை பல்கலையில் தமிழ்ப் படிப்பை முடித்த அடிகளார், 1948இல் மீண்டும் தூத்துக்குடிக்கு வந்து “தமிழ் இலக்கியக் கழகம்” என்ற அமைப்பைத் துவங்கினார். இவ்வமைப்பின் மூலமாக, 1952இல் “தமிழ்த் தூது” என்ற இலக்கிய நூலை வெளியிட்டார். இந்த அமைப்பு இற்றை நாளில், திருச்சிராப்பள்ளியில், தமிழ் அறிஞர் அமுதன் அடிகளார் அவரது மேற்பார்வையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும், அமுதன் அடிகளார், தனிநாயகம் அடிகளாரது நினைவைப் போற்றும் முகத்தான், “தனிநாயகம் அடிகளார் இதழியல் கல்லூரி” என்ற பெயரில் ஒரு கல்லூரியையும் நடத்தி வருகிறார்.

மேலும் 1952லேயே, “தமிழ்ப் பண்பாடு” (“Tamil Culture”) என்ற பெயரில் காலாண்டிதழ் ஒன்றைத் துவங்கினார். 1967 வரை தொடர்ந்து வெளிவந்து பிறகு நின்றுவிட்ட இவ்விதழில், தமிழ்நாட்டு அறிஞர் பெருமக்கள் மட்டுமல்ல, பிற நாடுகளின் பல்கலைகளில், இந்தியத் துறையிலும், தமிழ் மொழித் துறையிலும் பணியாற்றிய பல பேராசிரியர்கள் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

தனிநாயகம் அடிகளாரைப் போன்று, உலகில் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட தமிழறிஞரைப் பார்த்தல் அரிது. இவர் ஐரோப்பாவில் 5 ஆண்டுகளும், இங்கிலாந்தில் இரு ஆண்டுகளும் இருந்துள்ளார். இஃதன்றி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு, தமிழ் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். பழந்தமிழர், பிற பல நாடுகளுக்கும் கடல்வழிப் பயணம் மேற்கொண்டு, வணிகம் மேற்கொண்டிருந்தனர். ஆகவே இவருக்கும், பிற நாட்டு மக்களுக்குமிடையே நிகழ்ந்த நல்லுறவின் ஊடாக, மொழி, பண்பாடு, கலை மரபு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் பரிமாற்றம் நிகழ்ந்தது. இவற்றையெல்லாம் ஆராய்ந்தது தான் அடிகளாரின் இலக்கியப் பணியில் தலையாயது எனலாம். “யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற தொன்மைக் கோட்பாட்டின் வழி நின்று வாழ்ந்த தமிழ்க்குடியின் பழஞ்சிறப்புக்களை வெளிக்கொணர்ந்து, அடிகளார் ஏராளமாகக் கட்டுரைகள் வடித்தார். இதழ்களிலும் எழுதினார்.

1965இல், கோலாலம்பூரில் நடைபெற்ற கீழைத்தேச அறிஞர்களின் மாநாட்டில் “இந்தியாவுக்கும், தென் கிழக்காசியாவுக்கும் இடையேயுள்ள பொதுப் பண்பாட்டுக் கூறுகள்” என்ற தலைப்பிலும், 1967இல், அமெரிக்க நாட்டுக் கருத்தரங்கம் ஒன்றில், “பொற்காலத்தில் தமிழக-உரோமை வாணிபம்” என்ற தலைப்பிலும், 1970இல் பாரீஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ்மாநாட்டில் “தமிழ் சமூகம்” என்ற தலைப்பிலும் இவர் வாசித்த கட்டுரைகள், இவரது படைப்புக்களின் ஒரு சிறு துளியே.

உலகின் அனைத்துத் திக்குகளிலும் பயணித்து மொழிப்பெருமை பரப்பிய பழந்தமிழ்க் குடியினரைப் போன்றே அடிகளாரும் நாடுகள் பலவற்றிற்குச் சென்று பண்பாட்டு வழி, கலை வழி, தமிழ் உறவுகளைத் தேடினார். தாய்லாந்து

நாட்டு அரசர்கள் முடிசூட்டு விழாவில் மணிவாசகர் செய்த திருவெம்பாவையின் முதலிரு பாடல்கள் ("ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டேயும்") பாடப்படுவதை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தார். சுமித்திரா தீவில், காரோ பட்டக்கு என்ற இனத்தினர் சேர, சோழ, பாண்டியர் என்ற பெயர்களால் அழைக்கப்படு வதைக் கண்டுபிடித்தார். பாலி, கம்போடியா ஆகிய பகுதிகளில் காணப்படும் நடனங்கள் சிறிதளவு பரத நாட்டியத்தை ஒத்து இருந்ததை உலகுக்கு உணர்த்தினார்.

தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணியாற்றிய அடிகளார் யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்த போது, ஒரு கிறித்துவ அடிகளாருக்கு தமிழ் பற்றி என்ன தெரியும்" என்று கேலி செய்தவரும் உண்டு. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, "தான் ஒரு தமிழ் மாணாக்கன்" என்ற அடையாளத்துடன், வாழ்ந்த பெருமகனார் அவர். இந்த காலகட்டத்தில் அவர் எழுதிய, "தமிழ்மக்கள் கவின்கலைகள்" என்ற கட்டுரையும், "இலங்கையில் தமிழ்ப் பண்பாடு அன்றும் இன்றும்" என்ற ஆங்கிலக் கட்டுரையும் இவரது ஆய்வுத் திறனைப் பறைசாற்றின. 1957இல் லண்டன் பல்கலைக்கு, "கல்வி பற்றிய ஓர் ஒப்பாய்வு" என்ற நெடுங்கட்டுரையைச் சமர்ப்பித்து, கல்வித் துறையிலும் முனைவர் பட்டம் பெற்றார்.

1961ல், இலங்கை தந்தை செல்வநாயகம் அவர்கள் சிங்கள மொழி ஆதிக்கத்தை எதிர்த்து, சத்தியாக்கிரகம் மேற்கொண்டு போராடினார். அவ்வமயம், அடிகளார், இப்போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டார். கொழும்பு நகரின் தெருமுனைகளில் நின்று தமிழுக்கு ஆதரவாகத் துண்டுப் பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார். இதனால், காவல் துறை யால் இவர் சில காலம் கண்காணிக்கப்பட்டார் என்ற வரலாறும் இவருக்கு உண்டு.

1961இல், தனிநாயகம் அடிகளார், மலேசியப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைப் பேராசிரியராகப் பணி ஏற்றுக் கொண்டார். அந்த நாட்களில், மலேசிய சிங்கப்பூர் தமிழ் மக்களின் தன்னிகரற்ற தலைவராக விளங்கிய அறிஞர் கோ. சாரங்கபாணி அவர்கள் ஏற்பாடு செய்த பல கூட்டங்களில் அடிகளார் பேசினார். ஒரு முறை சென்னையிலிருந்து மலேசியாவிற்கு வந்த நீலகண்ட சாத்திரியார் என்ற ஆய்வறிஞர், இந்தியத் துறையில் வடமொழிக்கே முதன்மை இடம் அளிக்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தினார். இதற்கு உடன்படாத கோ. சாரங்கபாணி அவர்களும், அடிகளாரும், "தமிழ் எங்கள் உயிர் நிதி" என்ற அமைப்பின் கீழ் தமிழ்மொழிக்கே முதன்மை இடம் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் போராடினர். இறுதியில் இந்தப் போராட்டம் வென்றது; தமிழ்மொழி முதன்மை நிலை பெற்றது. இதனாலன்றோ தனிநாயகம் அடி களாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஜான் ஆண்டனி அழகரசன் அடிகளார் அவரை "இருபதாம் நூற்றாண்டுக் கபிலர்" என்று குறிப்பிடுகின்றார்! விரைவிலேயே, அடிகளார் இந்தியத் துறையின் தலைவராகவும் நியமனம் பெற்றார். தனது பதவிக் காலத்தில், அடிகளார் இந்தியத் துறைக்குரிய நூலகத்திற்கு, உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல்கலை களிலிருந்தும், தமிழ்மொழி, பண்பாடு தொடர் பான ஆயிரக்கணக்கான புத்தகங்களை வரவழைத்து, மிகப்பெரிய அளவில் நூலகத்தை விரிவாக்கம் செய்தார். இதனால் தமிழில் ஆய்வுப் பணிகள் பலவாறாக மேற்கொள்ளப் பட்டன. அடிகளாரது வழிகாட்டலில், மாணவர் கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் ஏராளம். அக்காலை, மலேசியப் பல்கலையில் இவரது மாணவியாய் தமிழ் பயின்ற தேவபூபதி நடராஜா என்ற அம்மையார், தமது பல படைப்புக்களில் ஒன்றான "சமக்கிருதம், தமிழ் மொழிகளில் காதல் என்ற புத்தகத்தை அடிகளாருக்கு அர்ப்பணித் திருப்பது, அடிகளார் தமது மாணாக்கர்பால் கொண்டிருந்த அக்கறைக்கு எடுத்துக்காட்டு.

சிலப்பதிகாரம், அகநானூறு, குறுந்தொகை போன்ற இலக்கிய நூல்களை, உணர்வோடு விளக்கிப் பாடம் நடத்தும் முறையை, அவரது மாணாக்கர் பலர் பின்னாளில் நினைவு கூர்ந் திருக்கின்றனர்.

குறுந்தொகையின் 18வது பாடலை ("இவள் உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே" கபிலர்) ஆங்கிலக் கவிஞர் எலிசபெத் பேரட் பிரௌனிங் எழுதிய "How do I love thee" (சானட் 43) என்ற கவிதையோடு ஒப்பிட்டுப் பாடம் சொன்னமுறை தனது நெஞ்சில் பசுமையாக இருப்பதாக பேரா. தே. நடராஜா அவர்கள் கூறியிருப்பதை, அழகரசன் அடிகள் தமது நூலில் பதிவு செய்துள்ளார்.

1965இல், அடிகளாரின் பெருமுயற்சியால், தமிழ் மறையாம் திருக்குறள், மலாய், சீன மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டது. இசுமாயில் உசேன் என்பவரால் மலாய மொழியில் மாற்றம் செய்யப்பட்ட நூலுக்கு, அடிகளார் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்தார். பல்கலைக் கழகப் பொதுமண்டபத்தில், திருவாசகம் தேவாரம் ஆகிய நூற்பாடல்களை, மாணவர்களைக் கொண்டு பாடச் செய்தார். அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கல்கி, டாக்டர் மு. வரதராசனார் போன்ற தமிழகத்து அறிஞர் பெரு மக்களையெல்லாம் மலேசியப் பல்கலைக்கு வரவழைத்து, அவர்களைப் பேருரை நிகழ்த்தச் செய்து, அதன் மூலம், மாணாக்கரின் அறிவுத்திறனை ஆற்றுப்படுத்தி மேம்படுத்தினார். பல்கலையில், இந்தியத் தமிழ்ப் பேரவையால், "தமிழ் ஒளி" என்ற இதழ் துவங்கப்பட்டது. இவ்விதழில் மாணாக்கரை எழுதச் சொல்லி ஊக்கப்படுத்தினார். "நமது மாணவர் வெவ்வேறு

தமிழ் அறிவு படைத்த நிலைகளிலிருந்து வந்து, பல்கலைக் கழகத்தில் தமிழ் பயில்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் ஒரே நிலையில் பாடம் நடத்துவது எளிதன்று. ஒவ்வொரு மாணாக் கனுக்கும் ஏற்றவாறு நம் விரிவுரையாளர் தமிழறிவை ஊட்டி வருவது, அவர்களிடம் இருந்து வரும் முயற்சிக்கும், கடமை உணர்ச்சிக்கும் சான்றாகும்" என்ற அவரது கூற்று இன்றைய கல்வியாளர் அனைவராலும் உற்று நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் எழுத்தாளர் சங்கம், கோலாலம்பூர் பிலால் உணவகத்தில் ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் அடிகளார், "மலேசியாவில் தமிழ் எழுத்தாளரும் அவர்களின் பணியும்" என்ற தலைப்பில் பேசினார். இவ்வுரையை மலேசிய வானொலி ஒலி பரப்பியது. அடுத்தநாள் 'தமிழ் நேசன்" இதழில் வெளியிடப்பட்ட இவ்வுரையின் சில சிறப்பான கருத்துக்கள், "சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும் கடந்த நூற்றாண்டுகளின் உலக இலக்கியங்களுடன் நிகராக அமைவதுபோல, இந்நடு நூற்றாண்டின் தமிழ் இலக்கியமும், இதர உலக இலக்கியங்களுடன் நிகராக இருத்தல் வேண்டும் என்பதே என் விண்ணப்பம். அத்தகைய உயர்ந்த நிலையை இலக்கியத்தில் எதிர்பார்க்கும் உரிமை தமிழ் நூல்களைப் படிப்போருக்கு உண்டு. பிற நாட்டு நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதுபோலத் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால், ஆங்கிலத்தில் இருந்து சீனத்திலும் மலாயிலும், வேறுமொழிகளிலும் பெயர்ப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும்....!"

கல்கியின் வரலாற்றுப் புதினங்களால் மிகவும் ஈர்க்கப்பட்ட அடிகளார், மலேசியப் பல்கலைக் கழக மண்டபத்தில், கல்கியின் எழுத்தோவியங்கள் குறித்த ஒரு மாபெரும் கருத்தரங்கை நடத்தினார். பல்கலையின் இந்தியத் துறையும், தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணைந்து மேற்கொண்ட இந்நிகழ்வு தமிழருக்கு ஒரு விருந்தாய் அமைந்தது.

1964, சனவரி 6ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரை புதுதில்லியில், "கீழ்த்திசைக் கலைகளின் மாநாடு" நடந்தது. இம்மாநாட்டில்தான் அடி களாரின் தளர்வற்ற முயற்சிகளின் விளைவாக, "அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக்குழு" தோற்று விக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சிக்குழுவின் செயலாளர்களாக, அடிகளாரும், அவரது அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவப் பருவநாட்களிலிருந்தே, அவருடன் நெருங்கிய தோழமை பாராட்டிய அறிஞர் வி.ஐ. சுப்ர மணியம் அவர்களும் பணி ஏற்றனர். இப்பணியை ஏற்றவுடன், அடிகளார் கொண்டு வந்த தீர்மானம், விரைவில், ஒரு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதாகும்.

1966ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் முதல், 23ஆம் நாள் வரை, உலகின் 22 நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்ட முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, கோலாலம்பூரில் நடந்தது. "திறமையான புலமையெனில், வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற கருத்துடைய அடிகளார், இக்கருத்தவையை, மலேய முதல் அமைச்சர் துங்கு அப்துல் ரகுமான் அவர்களைக் கொண்டு தொடங்கச் செய்தார். முதல் அமைச்சர், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று வரிகளைத் தமிழில் பேசித் தனது உரையைத் துவங்கியபோது, அடிகளாரின் இலட்சியம் நிறைவேறியது. இக்கருத்தவையில், அற்றை நாள் தமிழக முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கலந்து கொண்டு, "தனிநாயக அடிகளின் விடாமுயற்சியும், பெரும் உழைப்புமே, இன்றைய தினத்தை நனவாக்கியதொன்றாகும்" என்று புகழாரம் சூட்டினார். மாநாட்டின் ஆய்வுக் கட்டுரைகள் இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

இரண்டாவது உலகத் தமிழ்நாடு சென்னையில் 1968, சனவரி 3-10ஆகிய நாட்களில் நடைபெற்றது. அடிகளார் இம்மாநாட்டின் இரண்டாவது நாள் கருத்தரங்கு அமர்விற்குத் தலைமை தாங்கி, "மேல்நாட்டு நிலஇயல் நூல்களும், சங்ககால ஆராய்ச்சியும்" என்ற தமிழ்க் கட்டுரையைப் படித்தார். சனவரி திங்கள் 8ஆம் நாள் அமர்வில், புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்து, ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையும் படித்தார்.

சென்னை தமிழ்மாநாட்டின் வெற்றியினால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட அடிகளார், மூன்றாவது, நான்காவது மாநாடுகளை முறையே பாரீஸ், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடத்தினார். நான்காவது மாநாட்டை, யாழ்நகரில் துவக்கி வைத்துப் பேசிய அடிகளார், தனது பேச்சின் ஊடாக, "இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு திராவிடப் பண்பாடு என்று சுநித்குமார் சாட்டர்ஜி கூறியிருக்கின்றார். இந்த உண்மையைத் தமிழ்த் துறைகளில் ஆராய்ச்சி நடத்துவோர் உணர்ந்து கொண்டே வருகின்றனர். சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகமே என்று எண்ணுகின்றவர்க்குத் தமிழ் மக்களின் தொன்மையும், தமிழ்க் கலைகளின் தொன்மையும் நன்கு புலனாகும். சிந்துவெளி நாகரிகத்தைச் சங்க காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அங்குள்ள தொடர்புகள் தெளிவாகின்றன" என்ற கருத்தை ஆழமாகப் பதிவு செய்தார்.

தனிநாயக அடிகளார், மலேசியப் பல்கலைக் கழகப் பணியிலிருந்து 1969இல் ஓய்வு பெற்று தாயகம் திரும்பினார். ஆயினும் தமிழ்ப் பணியையும் தமிழ்த் தொண்டையும் விடமுடியாத அவர், பாரீஸ் பல்கலைக்கழகம், நேபிள்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு வருகை தரு பேராசிரியராகப் பணியாற்றினார். மாயூரம் வேதநாயகம் பிள்ளையைப் பற்றி பாதுகாவலன்

என்ற இதழில் கட்டுரை எழுதினார். ஆண் பெண் இருபால் கிறித்துவ மறையாளர்கட்கும் தமிழ் பயிற்றுவித்தார்.

“செந்தமிழ் நாடெனும் போதினிலே”, “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்ற பாடல் களையெல்லாம் அவருக்கு விளக்கிச் சொல்லி, இலக்கிய வகுப்புக்கள் நடத்தியபோது, மிகவும் மனநிறைவு கொண்டார். அவர் கலந்து கொண்ட இறுதி நிகழ்வு ஒரு திருக்குறள் மாநாடு ஆகும். 1980இல் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் அறிஞர் கா.பொ. இரத்தினம் எழுதிய “தமிழ் மறை விருந்து” என்ற நூலை வெளியிட்டு பேருவகை அடைந்தார். அந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள், தமிழையே தம் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த அப்பெருமகனார் இவ்வுலகைவிட்டு நீங்கினார்.

தமிழ்ப் பணியையும், தமிழ்த் தொண்டையும் மட்டுமே ஓர் அடர்த்தியான வகையில் கொண்டி ருந்த தனிநாயக அடிகளாரது வாழ்வைப் பற்றி ஒரு குறுங்கட்டுரையில் எழுதி விடுவது என்பது கடினமான செயலாகும். அழகரசன் அடிகளா ரன்றி, திருச்சியில் உறையும் அமுதன் அடிகளாரும் “தனிநாயகம் அடிகளார்” என்ற தலைப்பில் ஒரு நிறைவான புத்தகம் சமைத்துள்ளார்.

மொழி வரலாற்று ஆய்வு, தத்துவ இயல், கல்வி -ஆசிரியப் பயிற்சி இயல், பயண இலக்கியம் போன்ற பல துறைகளிலும் தமது தனித்துவ முத்திரையைப் பதித்து சென்றிருக்கும் தனிநாயகம் அடிகளார், பூக்களின் காதலராய்த் திகழ்ந்தார். இது அவருடைய மென்மையான மனப் பண்புகளைச் சுட்டிக்காட்டும் கூறாகும். அவர் ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டபோது, அங்குள்ள மக்கள் தமது இல்லங்களில் மலர்களைச் செப்புகளில் அழகாக ஒழுங்கு படுத்துவதை ஒரு கலையாகப் பேணுவதைக் கண்டார். சில இடங்களில், தனி மலரையே மூங்கிற் செப்பொன்றில் வைத்துத் தம் கவின்கலை நுகர்ச்சித் திறனைக் காட்டுவதைக் கண்டு வியந்திருக்கின்றார். ஆங்காங்கே, இத்தகு கலைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கழகங்கள் (Schools of Flower Arrangement), இருப் பதையும் அவற்றில் திறம்மிகு மலராசிரியர்கள் பணிபுரிந்து வருவதையும் கண்டு, அவற்றைத் தம் பயணக் கட்டுரையில் பதிவு செய்துள்ளார். அடிகளார் பர்மாவிற்குச் சென்றபோது, பர்மிய மக்கள் மலர்களைத் தம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளும் முறையினால் மனம் கவரப்பட்டார். புத்த வழிபாட்டில் மலர்களுக்குச் சிறந்ததோர் இடம் உண்டு. அங்காடி உணவுச் சாலைகளில், சிலவகை உணவுப் பொருட்களுக்கு மேல் பூ மாலை சாற்றப்பட்டிருப்பதை வியப்புடன் கண்டார். பர்மிய மக்கள் முல்லை மலரைப் பெரிதும் விரும்புவதாகத் தனது இன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் வாழ்வியல் குறித்து, உலக நாட்டினர் அனைவரும் உணரவேண்டும் என்ற பேரவாவின் காரணமாக அடிகளார், ஆங்கிலத்தில் “Nature in Tamil Poetry” என்ற தலைப்பில் எழுதிய எம்.லிட். பட்ட ஆய்வேடு, பின்னாளில், பேரா. க. பூரணச் சந்திரன் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, “நில அமைப்பும், தமிழ்க் கவிதையும்” என்ற தலைப்பில், அடிகளாரது பிறப்பு நூற்றாண்டு விழாவின்போது வெளியிடப் பட்டது.

“தமிழர் இயற்கையுடன் நெருங்கிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். இயற்கை நெருக்கத்திலிருந்தே கவிஞர்கள் உருவாயினர். நற்றிணையில், பெயர் தெரியா புலவர் ஒருவர் எழுதிய, 172வது பாடல், தலைவி நீருற்றி வளர்த்த புன்னை மரம், அவளுக்குத் தங்கையாகக் கருதப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது.

“தலைவி தன் தோழியருடன் வேங்கை மலர்களைக் கொய்யச் செல்லும்போது, தலைவன் தலைவியைச் சந்திப்பதாக வருணிப்பது மரபாக இருக்கின்றது. வேங்கை மரங்கள் மலர்வது ஒரு மங்கல நிகழ்ச்சியாகவும், திருமணங்களுக்கு அது ஏற்ற காலம் என்றும் அக்காலத்தில் கருதப்பட்டது. திருமணம் உறுதி செய்யப்பட்ட காதலர்கள் வேங்கை பூக்கும் காலத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். குறிஞ்சி நிலத்தின் மிகப்பெரிய நிழல் வாய்ந்த மரம் வேங்கை என்பதால், திருமணங்கள் வேங்கை மர நிழலிலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் கொள்ள இடமிருக்கிறது.

தமிழ் மண்ணில் பூத்த மலர்களின் பெயர்களே, நிலப் பகுப்புக்கும் பயன்படுத்தப்பட்டன. குறிஞ்சி, மருதம், முல்லை, பாலை, நெய்தல் ஆகிய மலர்களின் பெயர்களாலேயே தமிழ்க் கவிதையின் திணை இலக்கணமும் செய்யப் பட்டது. அடிகளார் தான் இறப்பதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாக ஒரு ரோசா செடியை நட்டார் என்ற செய்தியை அழகரசன் அடிகளார் பதிவு செய்திருப்பது, நம் மனங்களை நெகிழ வைக்கிறது.

இவ்வளவு ஆழமாக, தமிழருக்கும் மலர்களுக்கு மிடையேயான உறவு பற்றி ஆராய்ந்த தனிநாயகம் அடிகளார், “The Tamils have said it with flowers” (பூக்களைக் கொண்டு தமிழர்கள் எல்லாம் சொல்லி விட்டார்கள்) என்ற தலைப்பில், ஓர் ஆங்கில வானொலி உரை நிகழ்த்தினார். இவ்வுரை, பின்னர் “தமிழ்ப் பண்பாடு” (ஏப்ரல் ஜூன், 1953, பக். 164-175) இதழிலும் வெளியானது.

அடிகளாரது இக்கட்டுரையை இன்று நினைவு கூர்வதும் படிப்பதுவும்தான், நாம் அவருக்குச் செய்யும் உண்மையான மலரஞ்சலி ஆகும்.



மலரஞ்சலி

# தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த் தூது

● முனைவர் பொ. திராவிடமணி

**அடிகளார், தமிழ் ஆய்வு என்பது தமிழ்த்துறை சார்ந்த அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியது என்றும். தமிழ் இலக்கியங்களைப் பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதன் மூலம் தமிழ்மொழி செழுமையுறும் என்றும் கருதினார். இதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.**

**"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
**தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே"**

*(புறம் 165)*

எனும் பேறு பெற்றோர் வெகுசிலரே. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தனிநாயகம் அடிகள். இவர் ஆகஸ்டு 2ஆம் நாள் 1913 இல் இலங்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்க்காவற்துறையில் கரம்பன் எனுமிடத்தில் ஹென்றி ஸ்தனிஸ்லாஸ் கணபதி பிள்ளைக்கும், செசில் ராசம்மா வஸ்தியாம் பிள்ளைக்கும் முதல் மகவாகப் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை ஊர்க்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்பில், புனித பெர்நார்து கிறித்துவக் கல்லூரியில் தத்துவவியலில் கலைமாமணிப் பட்டத்தையும் பெற்றார்.

இவர் தமது ஆறாம் வயதில் ஊர்க்காவற் துறையிலிருந்து தன் தாயுடன் மக்கவா என்னும் படகில் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். இதுதான் அடிகளாரின் முதல் கடல் பயணம். தமது 12ஆவது வயதில் தனது தந்தை, தம்பியுடன் தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் மேற் கொண்டார். இயல்பாகவே பல நாடுகளையும் மக்களையும் காண்பதில் ஆர்வமுடைய அடிகளார் தனது 21ஆவது வயதில் 1934இல் இறையியல் கல்வி கற்பதற்காக ஐரோப்பாவில் உள்ள ரோம் நகருக்குச் சென்றார். அதில் அவர் இறையியல் பேறறிஞர் பட்டமும் பெற்றார். ஐரோப்பாவில் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்த அவர் பின்னர் இலங்கை வந்து கத்தோலிக்கத் துறவியாக இறைப்பணியாற்றினார்.

1941ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில், வடக்கன் குளம் எனும் ஊரில் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரிய ராகப் பணியில் சேர்ந்தார். அங்கு அவர் ஆசிரியப்பணியுடன் இறைப்பணியையும் ஆற்றி வந்தார். அவ்வமயம் புலவர் குமாரசாமி என்பவரிடம் தமிழ் மொழியையும், இலக்கியங் களையும் கற்றார். அப்பொழுது சங்க இலக்கி யங்களின் சிறப்பு அவரைக் கவர்ந்திழுக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1945இல் முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலச் சேர்ந்து முதுகலைமாணிப் பட்டத்தையும் (M.A.) இலக்கிய முதுகலைமாணிப் பட்டத்தையும் (M.Lit.) பெற்றர். அங்குப் பேராசிரியர்களாக இருந்த சிதம்பரம் செட்டியார், தெ.பொ. மீனாட்சி சுந்தரம் போன்றோர் அடிகளாரின் தமிழாய்வு முயற்சிக்கு உரமிட்டனர். 1951 முதல் உலகப் பயணத்தை மேற்கொண்டு தமிழ் இலக்கியத்தின் சிறப்பைத் தமது உரைகளின் வாயிலாக எடுத் துரைத்தார்.

1952 இல் இவர் 'தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) என்னும் பெயரில் முத்திங்கள் ஆங்கில இதழைத் தொடங்கினார். இவ்விதழே 12 ஆண்டு களுக்குப் பின்னர் 'உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகம்' தோன்ற வகைசெய்தது எனலாம். இவ் ஆய்வு இதழ் வெளியீடு சில காரணங்களால் தடைப்பட்டபோது அடிகளாரின் பெரு முயற்சியால் மீண்டும் 'Journal of Tamil Studies'

எனும் பெயரில் வெளிவந்தது. இவ்விதழின் தலைமையாசிரியராக அடிகளார் செயல்பட்டார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்விதழ் களில் கமில்சுவலபில், ழான் பீலியோசா, ஆந்த்ரனோவ், எமனோ ஆர்னோலேமென், தாமஸ் பர்ரோ போன்ற பல்வேறு நாடுகளைச் சார்ந்த அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன. அடிகளார், தமிழ் ஆய்வு என்பது தமிழ்த்துறை சார்ந்த அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியது என்றும். தமிழ் இலக்கியங்களைப் பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதன் மூலம் தமிழ்மொழி செழுமையுறும் என்றும் கருதினார். இதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.

1961ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை மலேசியப் பல்கலைக் கழகத்தில் இந்தியவியல் துறைத்தலைவராகவும், பேராசிரிய ராகவும் பணியாற்றினார். இங்குப் பணிபுரிந்த காலத்தில் பல புதிய பொருண்மைகளில் தமிழ் ஆய்வுகள் நடைபெற வழிவகுத்தார். பாரீஸ் நகரில் உள்ள கீழ்த்திசை ஆய்வு நிறுவனத்திலும் நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்திலும் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பல மாதங்கள் பணி யாற்றியுள்ளார்.

1963இல் தமிழக அரசால் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட அடிகளார், 26.07.1963 இல் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் அவர், பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் உலக அளவில் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கம் நடத்தத் தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என வலியுறுத்தினார்.

புதுதில்லியில் 1964ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் ஆறாம் நாள் முதல் பத்தாம் நாள் வரை கீழ்த்திசை அறிஞர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் அடிகளார் உட்பட 26 அறிஞர் கள் கலந்துகொண்டனர். “அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்” தொடங்க இம்மாநாடு வழிவகுத்தது. மு.வரதராசனார், வ.ஐ.சுப்பிரமணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், தனிநாயகம் அடிகள், கமில்சுவலபில், ழான் பீலியோசா, தாமஸ் பர்ரோ, எம்.பி. எமனோ போன்றோர் இம்மாநாட்டில் பங் கேற்றனர். அடிகளாரும், கமில்சுவலபிலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தேவையை வலியுறுத்திப் பேசினர். அன்றே அம்மன்றம் அமைக்கப்பட்டதுடன் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத்தமிழ் மாநாடு நடத்தப்படும் எனத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

அதன்படி முதல் மாநாடு 16.04.1966 முதல் 23.04.1966 வரை மலேசியா கோலாலம்பூரிலும், இரண்டாவது மாநாடு 03.01.1968 முதல் 10.01.1968 வரை தமிழகத்தில் சென்னையிலும், மூன்றாவது மாநாடு 15.01.1970 முதல் 18.01.1970 வரை பாரீசிலும், நான்காவது மாநாடு 03.01.1974 முதல் 09.01.1974 வரை இலங்கை யாழ்ப்பாணத்திலும் அடிகளாரின் பெருமுயற்சியால் நடைபெற்றன.

இலங்கையில் அரசியல் சிக்கலின் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற மாநாட்டின் நிறைவு நாளில் ஏற்பட்ட கலவரத்தில் 9 பேர் கொல்லப்பட்டனர். அதன் பிறகு 7 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐந்தாவது மாநாடு 04.01.1981 முதல் 10.01.1981 வரை தமிழகத்தில் மதுரையிலும், ஆறாவது மாநாடு 15.11.1987 முதல் 20.11.1987 வரை மலேசியாவில் கோலாலம்பூரிலும், 7வது மாநாடு 01.12.1989 முதல் 08.12.1989 வரை மொரீசியஸிலும் 8 வது உலகத்தமிழ் மாநாடு தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் 01.01.1995 முதல் 05.01.1995 வரையிலும் நடைபெற்றன என்பதும் இங்கு சுட்டத்தக்கது.

அடிகளார் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ்த் தூது எனும் நூல் உட்பட 137 நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்திய மூன்று தொகை நூல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

1. ‘தமிழாய்வு வழிகாட்டி’ எனும் தொகைநூல் 14 இயல்களையுடையது. மொழிபெயர்ப்புகளும், சுருக்கங்களும், முதல் நூற்பட்டியலும், நூல் அட்டவணைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இத்தொகைநூல் 1966 இல் மலேசியப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

2. ‘அயல்நாடுகளில் தமிழாய்வு’ எனும் இத்தொகைநூல் 15 இயல்களையுடையது. ஹாலந்து, பிரிட்டன், ஜெர்மன் போன்ற நாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் பற்றியும், அமெரிக்கா, ரஷ்யா, மலேசியா போன்ற நாடுகளில் பல்கலைக் கழகங்களில் நிகழ்ந்த தமிழியல் ஆய்வு பற்றியும் செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1968இல் சென்னையில் நடைபெற்ற 2வது உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிடப்பட்டது.

3.‘தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்’ எனும் இத்தொகை நூல் 8 இயல்களையுடையது. இதில் தமிழ் மொழியின் தொன்மை, நாகரிகம், பண்பாடு, கலை, அரசியல், சமயம் கல்வி, வணிகம் சமுதாய வாழ்வு பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இந்நூலும் மலேசியப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிகளார் ஆற்றிய தொடர் திருக்குறள் சொற் பொழிவுகள் ‘திருவள்ளுவர்’ எனும் பெயரில் 1967 இல் நூலாக்கம் பெற்று வெளிவந்தது. இப் பொழிவில், அடிகளார் மூன்று தலைப்புகளில் ஒப்பாய்வு செய்து திருக்குறளின் உயர்வை நிறுவியுள்ளார். 1. வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க



# விளிம்பு

● சுகதேவ்

அவர்
விளிம்புநிலை மனிதர்
புகழின் விளிம்பில் நிற்கிறார்

சற்றே நழுவினாலும்...
இப்போதெல்லாம்
எதுவும் சொல்ல முடியாது
யாரேனும் பின்னழைத்து
பாதுகாப்பான இடத்திற்கு நகர்த்தலாம்
யாருமில்லை
அவருக்கு நிகராக
புகழில்

நமக்கெல்லாம்
குற்றாலம் போகும் வழியில்
கீழே பார்த்தாலே
தலை சுற்றும்
உச்சியில்
தனித்திருப்பதைப் போல
கொடுமை வேறில்லை

அவர்
புகழின் விளிம்பில் நிற்கிறார்
விளிம்புநிலை பிரமுகர்
கீழிருந்து பார்த்துவிட்டு
பீதியில் அலறினால்
கம்பெனி பொறுப்பல்ல

ஒரு "மேஜிக்கல் ரியலிச"
காட்சியைப் படமாக்குவதற்குள்
படாதபாடு படவேண்டியிருக்கிறது.

ஓவியம்: மாரி ஆனந்த்

இயலும். 2. வள்ளுவரும் ரோமிய ஒழுக்க இயலும்.3 வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும் என்பன அவை.

கிரேக்கத் தத்துவ ஞானிகளான பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோருடன் திருவள்ளுவரை ஒப்பிட்டு அவர்களுடைய தத்துவங்களைக் காட்டிலும் திருவள்ளுவரின் கொள்கைகள் உயர்ந்து நிற்பதைத் தக்கச் சான்றுகளுடன் நிறுவினார். பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழி சார்ந்த இலக்கியங்கள் சமயத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கப் பழந்தமிழ் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்கள் சமய சார்பற்று தனித்துவத்துடன் மிளிர்வதை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், முதன் முதலில் சங்கக் கவிதைகளில் நிலக்காட்சியையும் கவிதையையும் இணைத்து ஆய்வுசெய்தவர் அடிகளார்தான் என்பதையும் அறியமுடிகிறது.

தமிழர் பண்பாடு பற்றிய அடிகளாரின் கருத்து சிந்திக்கத்தக்கது "வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும், ஐரோப்பியர் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பிய கிறித்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம்பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன." என்று கூறும் அடிகளார் "சுநீதிகுமார் சட்டர்ஜி, இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு 'திராவிட பண்பாடு' என்று குறிப்பிட்டுள்ளர்." என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

நவீன தமிழாய்விற்கும், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்கும் காரணமாக இருந்த அடிகளாரது தமிழ்த்தொண்டைச் சிறப்பிக்கும் வகையில் 1981இல் மதுரையில் நடைபெற்ற 5வது உலகத்தமிழ் மாநாட்டில் இவர் இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, இவரது சிலை ஒன்றும் அங்கு நிறுவப்பட்டது. அதே ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. சென்னையில் 16.02.2013 அன்று தனிநாயக அடிகளாரின் நினைவைப் போற்றும் வகையில் நூற்றாண்டு தொடக்கவிழா நடைபெற்றது. 2017இல் சாகித்திய அகாடமியும், திருச்சி. தனிநாயக அடிகள் ஆராய்ச்சி நிலையமும், புனித வளனார் கல்லூரியும் அடிகளாரைப் பற்றி பல்வேறு பொருண்மைகளில் இரண்டுநாள் கருத்தரங்கை நடத்தின. அக்கட்டுரைகளைத் தொகுத்து சாகித்திய அகாடமி நூலாக வெளியிட்டுள்ளது.


**பார்வை**

- தனிநாயக அடிகள், தமிழர் பண்பாடும் அதன் வகைகளும்
- தனிநாயக அடிகள், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்
- இரா.காமராசு (தொகு.ஆ),தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு



நினைவஞ்சலி

● சு.வேணுகோபால்

# எளிய மொழியில் புதிய உலகங்களைக் காட்டியவர்
# சா.கந்தசாமி

எழுத்தாளராக வேண்டும் என்ற கனவுடன் எண்பதுகளின் இறுதியில் தீவிரமாக நல்ல நூல்களைத் தேடித்தேடி வாசித்துக் கொண்டிருந்தேன். சின்னமரத்துப்பட்டி நூலகத்திலிருந்து மாதம் 100 நூல்களை எங்கள் ஊருக்கு அனுப்பிவைப்பார்கள். எங்கள் ஊரில் ஒரு நூலகத்தைத் தொடங்குவதற்கான முன்னேற்பாடாக இதைச் செய்தார்கள். கொடுத்த 100 நூற்களை எடுத்துக்கொண்டு அடுத்தமாதம் வேறு 100 நூல்கள் வரும். அப்படிவந்த நூல்களில் ஒன்று சிறந்த தமிழ்ச் சிறுகதைகள். தொகுத்தவர் சா.கந்தசாமி என்று இருந்தது. நான் ஒரு இலக்கிய மாணவன் என்பதால் சா.கந்தசாமி பெயரைக் கேள்விப்பட்டிருந்தேன். 'கசடதபற' சிற்றிதழ் நடத்தியவர்களில் முக்கியமானவர் என்பதெல்லாம் தெரிந்தே இருந்தது. அந்தத் தொகுப்பை எடுத்து வந்து படித்தேன். நான் படித்த முதல் தொகுப்புக் கதை நூலும் அதுதான்.

இந்தத் தொகுப்பு நூல் எனக்கு மிகப்பெரிய திறப்பை ஏற்படுத்தியது. ஒரு கதை தன் கோபதாபங்களை, குமுறல்களை, பிரச்சாரம் சிறுதுளி கூட இல்லாத தன்மையில் எப்படி வெளிப்படுத்த வேண்டும். வெளிப்படுத்திக் கொள்கின்றன என்பதை நான் இந்தத் தொகுப்பின் வழியாக உணர்ந்து கொண்டேன். நான் சிறுகதையின் வடிவங்களை, கூறுமுறைகளை, விசயத்தேர்வுகளை, பார்வைக் கோணங்களை கதைகளைப் படிப்பதின் வழி உருவாக்கிக் கொண்டேனே தவிர சிறுகதை பற்றிய கட்டுரைகளின் வழிஅல்ல. படைப்பில் நுட்பங்களை சா.கந்தசாமி தொகுத்த இந்த 'சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்' தொகுப்பு பெரியளவில் என்னுள் உணர்ந்து கொள்ளும்படி செய்திருக்கிறது.

அத்தொகுப்பில் இருந்த பா.செயப்பிரகாசத்தின் 'அம்பலக்காரர் வீடு', ஜி.நாகராஜனின் 'தீராக்குறை', கி.ராஜநாராயணனின் 'வேலை வேலையே வாழ்க்கை', அசோகமித்திரனின் 'புலிக்கலைஞன்', அம்பையின் 'அம்மா ஒரு கொலை செய்தாள்', கு.ப.ரா.வின் 'ஆற்றாமை', கு.அழகிரிசாமியின் 'ராஜா வந்திருக்கிறார்', வண்ணநிலவனின் 'அயோத்தி' இந்தக் கதைகளை இத்தொகுப்பின் வழியாகத்தான் முதன்முதல் படிக்கிறேன். வாழ்வின் உக்கிரம் என்பது என்ன என்று சட்டென எனக்கு இக்கதைகள் புலப்படுத்தின.

புதுமைப்பித்தனின் 'மனிதயந்திரம்', ஆ.மாதவனின் 'ஈடு', தி.ஜானகிராமனின் 'வீடும் வெளியும்', மௌனியின் 'அத்துவான வெளி', சி.சு.செல்லப்பாவின் 'மூடி இருந்தது' இந்தக் கதைகள் இன்னும் ஆழமாகச் சொல்லப்பட்டதாக இருந்தன. அதிலும் 'அத்துவான வெளி', 'மூடி இருந்தது' போல ஒரு கதையாவது எழுதிவிட வேண்டும் என்று மனதில் குறித்து வைத்தேன். இவ்விரு கதைகளின் வடிவமும், சொல்முறையும் என்னை ரொம்பவும் பாதித்தது. இத்தொகுப்பில் 30 கதைகள் இருந்ததாக எண்ணம். பூமாரியின் 'தொலைவு', க.நா. சுப்பிரமணியத்தின் 'அழகி', நாஞ்சில் நாடனின் 'கிழிசல்' போன்று நினைவில் நிற்கும் கதைகளும் இருந்தன. சிலஆண்டுகளிலேயே வாசித்த நினைவிலிருந்து நகர்ந்து போய்விடக்கூடிய

ஒன்றிரண்டு கதைகளும் இருந்தன. இந்தக் கலவை தரத்தில் சில வேறுபாடுகளை நான் பார்த்துக்கொள்ள உதவின.

சா.கந்தசாமியின் இந்தத் தொகுப்பு நூல் என் கைக்கு வந்தது எதேச்சையான நிகழ்வுதான். (இதன் முதல் வெளியீடு 1988 ஆக இருக்கலாம் என்பது என் நினைவு). ஆனால், ஒரு தனித்த எழுத்தாளரின் கதைகளைப் படிப்பதைவிடநவீனத் தமிழ் இலக்கிய முன்னோடிகள் தொகுத்த சிறுகதைத் தொகுப்பு நூல் களைப் பெருவிருப்போடு தேடித்தேடிப் படிக்க வைத்த காரியத்தைச் செய்தவர் சா.கந்தசாமிதான். நான் என் நூல்களில் ஒன்றை 'தொகுப்பு நூல்கள் தந்த சா.கந்த சாமிக்கு' என்று சமர்ப்பணம் செய்ய எண்ணியிருந்தேன். அது தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறது.

சா.கந்தசாமி தொகுத்த பிற தொகுப்புக்களான 'நவீனத் தமிழ்ச் சிறுகதைகள்', 'ஐம்பதாண்டு தமிழ்ச் சிறுகதைகள்' – இரண்டு தொகுப்புகள், 'அயலகத் தமிழ் இலக்கியம்', 'சர்வதேசக் கதைகள்', '20 ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சிறுகதையாசிரியர்கள்' தொகுப்பு நூல்களைத் தேடி சேகரித்துப்படித்தேன். ஓரளவு 2000க்குள் இத்தொகுப்பு நூல்கள் சிலவற்றையும் 2004க்குள் சிலவற்றையும் படித்து முடித்தேன். சா.கந்தசாமி வழியாக தமிழில் எழுதப்பட்ட நல்ல கதைகளை (150 கதைகளுக்கு மேல்) நான் படிக்கப் பெற்றேன். என் படைப்பாற்றலுக்கு இவை ஏதோ ஒரு வகையில் எனக்கு உரமாகி இருக்கின்றன.

இத்தொகுப்பு நூல்களின் வழியாக சா.கந்தசாமியின் ரசனைசார்ந்த விசயத்தைப் புரிந்து கொண்டேன். தீவிரத்தன்மையோடு சற்றே வெளிப்படையாகக் குரல் எழும்பப் பேசும் நல்ல படைப்புகளைத் தள்ளிவைத்துவிட்டு அடங்கியதொனியில், வாசகன் யூகித்து அறிந்து கொள்ளும்படியான இடைவெளிகொண்ட கதைகளைத் தேர்ந்தெடுத்திருப்பது தெரிந்தது. ஜெயகாந்தனின் 'அக்கினிப் பிரவேச'த்தைத் தொகுப்பில் வைக்காமல் அவரின் 'அக்கிரகாரத்தில் பூனை' அல்லது 'சீசர்' கதைகளை வைப்பதிலிருந்து சா.கந்தசாமியின் இலக்கிய நோக்கையும் புரிந்து கொள்ளலாம்.

அவரே பல இடங்களில் சொல்லியிருக்கிறார். 'சொல்லப்பட்டிருப்பதைவிட சொல்லாமல் விடப்பட்ட கலை முக்கியமானது' என்றிருக்கிறார். ஒரு கதை வாசகப் பங்கேற்பிற்கு அதிக இடம் தருவதாக இருக்கும்போது அக்கதையின் பரிமாணங்கள் கூடுகின்றன. புதிய புதிய அனுபவங்கள் கிட்டுகின்றன. ஒவ்வொரு வாசகருக்கும் ஒவ்வொருவிதமான அனுபவத்தைத் தரும் ஆற்றலைப் பெறுகின்றன என்றெல்லாம் பேசி இருக்கிறார்.

அவருடைய கதைகளில் எனக்கு 'உயிர்கள்', 'காணாமல் போன ஏற்றம்', 'வாள்', 'பாய்ச்சல்', 'சாந்தகுமாரி', 'பிற்பகல்', 'தக்கையின் மீது நான்கு கண்கள்' போன்ற கதைகள் பிடிக்கும். பழைய தலைமுறையினரைவிட புதிய தலைமுறை புத்திக் கூர்மையுடன் இருப்பதையும் அதனை மூத்தத் தலைமுறையினர் கசப்புணர்வுடன் பார்ப்பதையும் பல கதைகளில் சொல்கிறார். 'வாள்', 'நிழல்', 'தக்கையின் மீது நான்கு கண்கள்' கிட்டத்தட்ட ஒரே உணர்வை வெளிப்படுத்தும் கதைகள்தான்.

சா.கந்தசாமி ஜனரஞ்சக இதழ் கதைகளின் சொல்முறை களுக்கு மாற்றான கூறுமுறையில் கதைகளை வெளிப் படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டார். 'கதையிலிருந்து கதையை வெளியே எடுப்பதுதான் நல்ல கதையின் தன்மை' என்று பேசினார், எழுதவும் செய்தார். பெரும்பாலும் சா.கந்தசாமியின் கதைகள் வாசகனை நோக்கிச் சொல்லப்படுவதில்லை. தமிழ்ச் சிற்றிதழ் இயக்கத்தில் புதிய சொல்முறையிலான கதைகள் எழுதப்பட்டதற்கு சா.கந்தசாமியும் ஒரு காரணமாக இருந்தார். அவரது 'கிழக்குப் பார்த்த வீடு' இவ்வகையில் முக்கியமானத் தொகுப்பு.

சா.கந்தசாமியின் நாவல்களில் 'சாயாவனம்', 'அவன் ஆனது', 'தொலைந்து போனவர்கள்' மிகவும் பிடித்த மானவை. மூன்று நாவல்களும் வெவ்வேறு வகை யானவை. ஒரு காலத்தில் சமதளப் பரப்பில் நிறையகாடுகள் இருந்திருக்கின்றன. ஒரு காட்டை நம்பி வாழ்ந்த எத்தனையோ உயிரினங்கள் நவீனமனிதனின் நவீன வேளாண்மை என்ற முன்னெடுப்பில் காட்டைத் தீயிட்டு அழித்ததில் நேர்ந்த பேரவலத்தை சாயாவனம் என்ற நாவலில் காட்டியிருப்பார். சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றியெல்லாம் பேசப்படாத காலத்திலேயே தன்னியல்பாக இந்த நாவலை எழுதியிருப்பார். காட்டெருமைகள், பாம்புகள் கருகிக்கிடக்கும் காட்சிகள் இன்னும் மனசை வதைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. எழுந்த நெருப்புப் புகையில் சிக்கிக் கொண்ட பறவைக் குஞ்சுகள் உருகி வீழ்ந்ததும் நினைவில் இருக்கின்றன. நவீன மனித மனம் எவ்வித குற்றவுணர்ச்சியும் இல்லாமல் காட்டை அழிப்பதைச் சொல்லும்போது ஏன் மனிதர்கள் இப்படியான செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை ஒவ்வொரு வாசகனும் கேள்விகளை எழுப்பும் தார்மீகத்தோடு படைத்திருந்தார்.

பத்மனாபன் என்ற நண்பனைத் தேடிச் செல்வதுதான் 'அவன் ஆனது' நாவல். நான்கைந்து நெருங்கிய சகாக்களுடன் இருந்த நண்பன், மாற்றான் மனைவியுடன் கேரளாவில் போய் மறைந்து கொள்கிறான். அவனை சில காலம் கழித்து தேடிச்சென்று பார்த்துவர விரும்பும் நண்பர்கள் எதிர்கொள்ளும் வெடிப்புத்தான் நாவல். நண்பர்களின் கணிப்பு தவுடுபொடியாகி அவன் வேறொரு மனிதனாக, வேறொரு சந்தேகப்பிராணியாக மாறி நட்பு என்ற அம்சத்தையே வெறுக்கிறவனாக மாறிப்போய் விட்டிருப்பதைக் காண்கின்றனர். நண்பர்களை தன்னை வேவு பார்க்க வந்திருக்கும் துரோகிகளாகப் பார்க்கிறான். பார்வைகள் தலைகீழாய்ப் போன ஒரு சம்பவத்தை இந்நாவல் காட்டியது. நண்பனைப் பற்றிச் சொல்லிச் சென்ற விதத்தில் ஒரு ஆர்வத்தையும் (நண்பர்களில் ஒருவன் போக வேண்டாம் என்று தனது அலுப்பான மனநிலையைச் சொல்வான். அதுவும் ஒருவித ஆர்வத்தைக் கொண்டிருக்கும்) கண்டடைந்தபின் அவன் வெளிப்படுத்தும் வெறுப்பையும் படித்தபோது மானிட அகத்தின் மர்மங்கள் பற்றிய திறப்பு புதிதாக இருந்தது. ஒரு படைப்பு என்பது கண்டடைதல் என்ற தெளிவைத்தந்தது சா.கந்தசாமியின் 'அவன் ஆனது' நாவல். நான் எழுத வருவதற்கு முன்பே இவரது படைப்புகளைப் படித்திருந்தது எனது பார்வையை விசாலமாக்கியது. 'தொலைந்து போனவர்கள்' நாவல் நண்பர்களின் இளம் வயது கனவுகள், லட்சியங்கள், வாழ்க்கை பற்றிய ஆசைகள், நண்பர்களைப் பற்றிய கணிப்புகள் எல்லாம் வாழ்க்கை ஓட்டத்தில் மாறிப்போய்க் கிடப்பதை படிக்கப் படிக்க மனதிற்கு பெரும் கவலையாக மாறியது. இந்நாவலின் வடிவம் எனக்கு மிகமிகப் பிடித்தது. ஒவ்வொரு வாசகனுக்குள்ளும் 'தொலைந்து போனவர்கள்' கதை இருந்தது. அவர்கள் தேடிப்போனால் இதே போன்ற உலகத்தைத்தான் காண்பார்கள். வேறு வேறு பெயர்களில், வேறு வேறு பின்னணிகளில்,

சா.கந்தசாமியை நான் தேடிச் சென்று பார்த்ததில்லை. ஆனால் இலக்கிய சந்திப்புகளில் சந்தித்திருக்கிறேன். திருப்பூர் தமிழ்ச் சங்க பரிசளிப்பு விழாவில் ஜெயகாந்தனோடு சந்தித்துப் பேசியிருக்கிறேன். திருப்பூர் யுனிசெப் அமைப்பினர் அஸோசிஸ் கூட்டிய எழுத்தாளர் சந்திப்பில், 1995ல் ஊட்டியில் பசுமை இயக்கம் கூட்டிய எழுத்தாளர் சந்திப்பில் எனப் பல இடங்களில் சந்தித்திருக்கிறேன். 2000த்தில் தி.ஜானகிராமனுக்கு சென்னையில் நடந்த கருத்தரங்கில், சாகித்திய அகாதமி நிகழ்வுகளில் சந்திக்க நேர்ந்திருக்கிறது.

யுனிசெப் நிகழ்வில் அவருக்குத் தந்த குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள் பற்றிய குறிப்புகள் என்னிடம் இருந்தது. இரண்டு நாள் கருத்தரங்கம் முடிந்து பிரிந்து செல்லும்போது அந்த கோப்பை அவருக்குத் தர மறந்துவிட்டேன், நீண்ட நாட்களாக என்னிடமே இருந்தது, அதை அவருக்குத் தராமலே விட்டுவிட்டேன்.

சுபமங்களா நேர்காணலில் எனக்குக் கதைகள் எழுத 200 வார்த்தைகள் போதுமானவை என்றுகூடச் சொன்னார். கதையை எவ்வளவு எளிமையான நடையில் எழுத முடியுமோ அவ்வளவு சாதாரண நடையில் எழுதினார். ஒருவகையில் அலங்காரங்களை முற்றாகத் துறந்த நடை எனலாம். எந்த அழகியலையும் அள்ளிக்கொள்ளாத நடை அவருடையது. அதனாலே கதையின் முக்கியமான கட்டத்தை எட்டும்வரை ஒருவித அலுப்பைத் தரக்கூடிய தாகவும் இருக்கும், கதை முக்கிய இடத்தைத் தொட்டு மேலேறும்போது அதற்குமுன் கடந்துவந்த வாசிப்பின் சோர்வு முற்றாக மாறி மனம் ஈர்ப்பின் பாதைக்குள் புகுந்துவிடும். இவரது எழுத்து நடை மீது விமர்சனங்களும் உண்டு. பிரமிள், கந்தசாமிக்கு 200 வார்த்தைகளே அதிகம். அவர் எழுதும் கதைகளுக்கு 100 வார்த்தைகளே போதும் என்பதுபோல கிண்டல்கூட செய்திருக்கிறார். சா.க. நம்பியது எளிமை. அதே சமயம் சொல்லப்படாத இடங்களில் வாசகன் கண்டு அனுபவிக்கும் இடங்கள்.

நண்பர்களைப் பாய்ந்து கைபிடித்து அளவளாவ மாட்டார். அவர் தன் முன்னோடியான ஜெயகாந்தன், அசோகமித்திரன் மீது மதிப்பு வைத்திருந்தார். கி.சு.சச்சிதானந்தம், கிருஷ்ணமூர்த்தி, க்ரியா ராம கிருஷ்ணன் போன்ற சக வயதினருடன் பழகுவதையே விரும்பினார். புதிதாக எழுதவந்த இளைஞர்களுடன் சற்று எட்ட நின்று பழகினார் என்றே சொல்லத் தோன்றுகிறது. அதே சமயம் க.நா.சு. போன்ற முன்னோடிகள் மீது பெரும் மதிப்பு வைத்திருந்தார். சிறுகதை வகைமையில் அதிகமாகக் குறிப்பிடாத பெயராக இருந்தபோதும் க. நா.சு.வின் சில கதைகளைப் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டார். அந்த நல்ல கதைகளை சா.கந்தசாமி வழியே தேடிப்படித்தேன். தி.ஜானகிராமனுக்கு 2000த்தில் அவர் முன்னின்று விழா எடுத்தது மறக்க முடியாதது.

சா.கந்தசாமி தொண்ணூறு வரைக்குமான எழுத்துக் களை ஓரளவு படித்திருக்கிறார். தொண்ணூறுகளுக்குப்பின் அவருக்கு ஏதோ ஒருவகையில் பழகிய இளம் எழுத்தாளர்களைப் படித்திருக்கிறார். பின் நாட்களில் ஆவணப்படங்கள் எடுப்பதிலும், தொலைக்காட்சி தொடர் எடுப்பதிலும் ஆர்வம் காட்டினார். சென்னை சாகித்திய அலுவலகத்துடன் அவர் வைத்திருந்த நெருக்கமான உறவு வழி சில காரியங்கள் செய்தார். சென்ற ஆண்டு சாகித்திய அகாதமி வழியாக வந்த தமிழ் ஆளுமைகளின் சுய வரலாறு சார்ந்த நூல் வெளிவர தடைகள் போடப்பட்டன. அந்நூல் வெளிவர உதவினேன், அது பற்றி சா.கந்தசாமியிடம் சொல்லிக் கொண்டதில்லை. அறுபதுகளின் பிற்பகுதிகளில் எழுதவந்த நல்ல எழுத்தாளர்களில் ஒருவர் சா.கந்தசாமி.


### சந்தா விவரம்

தனி இதழ் விலை ............................... ரூ. 25
ஆண்டுக் கட்டணம் ............................. ரூ. 275
இரண்டு ஆண்டுக் கட்டணம்.............. ரூ. 500
ஐந்தாண்டுக் கட்டணம்........................ ரூ. 1250
மாணவர் சந்தா...................................... ரூ. 200
(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றுபெற்று விண்ணப்பிக்க வேண்டும்)

**வெளிநாட்டு சந்தா**

ஆண்டுக் கட்டணம் (வெளிநாடு) ....... $ 30

காக்கைச் சிறகினிலே

### விளம்பரக் கட்டண விவரம்

**அட்டை (வண்ணப் பக்கம்)**

பின் அட்டை (வண்ணம்)..................... ரூ. 10,000
உள் அட்டை (வண்ணம்)..................... ரூ. 7,500

**உள் பக்கம் (கருப்பு வெள்ளை)**

முழுப் பக்கம்......................................... ரூ. 2,000

காசோலைகள், வங்கி வரைவோலைகள் அனைத்தும் KAAKKAI, A/c No. 60111010005660 SYNDICATE BANK,TRIPLICANE, CHENNAI - 5. IFSC: Synb0006011 என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

**தொடர்பு முகவரி:** காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503, தொலைபேசி : 04428471890
மின்னஞ்சல்: kaakkaicirakinile@gmail.com




# தேர்தலுக்குப் பின்னரான ஈழத் தமிழ்த்தேச அரசியல்

● நிலாந்தன்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் சிதறி வாக்களித்தார்கள். ஆனால் ஒப்பீட்டளவில் சிங்கள வாக்காளர்கள் திரண்டு வாக்களித்தார்கள்

தென்னிலங்கையில் உள்ள இரண்டு பாரம்பரிய கட்சிகளும் ஏற்கனவே சிதைந்து விட்டன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு தலைமைகளாகப் பிளந்து கிடக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேய்ந்து போய்விட்டது. எனினும் இந்த இரண்டு கட்சிகளினதும் சிதைவின் மீது ராஜபக்சக்களின் புதிய கட்சியான பொதுஜன பெரமுன அசுர வெற்றி பெற்றிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முதலில் மஹிந்த சிதைத்தார். பின்னர் மைத்திரி சிதைத்தார். மஹிந்த ராஜபக்சவின் தாய்க் கட்சியும் அதுதான். ஆனால் அந்தக் கட்சியை விழுங்கி ஒரு புதிய கட்சியை அவர் உருவாக்கினார். அதுதான் பொதுஜன பெரமுன என்றழைக்கப்படுகின்ற தாமரை மொட்டு கட்சி. அக்கட்சியானது யுத்தத்தின் குழந்தை. யுத்த வெற்றியை நிறுவனமயப்படுத்தி குறிப்பாக அதை ஒரு குடும்பத்தின் சொத்தாக மாற்றிக் கட்டியெழுப்பப்பட்டதே பொது ஜன பெரமுன.

யுத்த வெற்றி வாதம் எனப்படுவது 2009க்கு பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் புதிய வளர்ச்சியாகும். யுத்த வெற்றி வாதத்திற்கு தலைமை தாங்கிய ராஜபக்சக்கள் ஈஸ்டர் குண்டு வெடிப்பை அடுத்து யுத்த வெற்றிவாதத்தை 2019 க்குப் புதுப்பித்தார்கள். அதன் விளைவாக அந்த ஆண்டின் இறுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபய வெற்றி பெற்றார்.அதன்பின் 2020இல் கோவிட் 19 சூழலுக்குள் ஒரு வைரசுக்கு எதிரான வெற்றி என்ற அடிப்படையில் யுத்த வெற்றிவாதத்தை அவர்கள் 2020 க்குப் புதுப்பித்தார்கள். அதன் விளைவே கடந்த ஐந்தாம் தேதி நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தாமரை மொட்டு கட்சி பெற்ற பெரு வெற்றியாகும்.

அவர்கள் எதிர்பார்த்த பெரும்பான்மைக்கு கிட்டவாக அவர்கள் வந்திருக்கிறார்கள். மொத்தம் 145 ஆசனங்களை வென்றிருக்கிறார்கள். மேலும் 5 ஆசனங்கள் கிடைத்தால் அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று விடுவார்கள். ஐந்து ஆசனங்களையும் வடக்கு கிழக்கில் உள்ள அவர்களுடைய முகவர்கள் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ராஜபக்சக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிட்டார்கள்.இப்படி ஒரு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறவேண்டும் என்று திட்டமிட்டு அவர்கள் உழைத்தார்கள். ஏன் அப்படித் திட்டமிட்டார்கள்?

ஏனென்றால் 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன யாப்புச்சதி ஒன்றைச் செய்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை கவிழ்த்தார்.அதன் மூலம் மகிந்த ராஜபக்சவை பிரதமராக்க முயற்சித்தார். ஆனால் அது நடக்கவில்லை. தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் மஹிந்தவுக்கு எதிராக வாக்களித்தார்கள். அதன்மூலம் தென்னிலங்கையில் யார் ஆட்சி செய்வது என்பதனை தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளால் தீர்மானிக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது.

அந்த தோல்வியின் பின் அவ்வாறு தமிழ் முஸ்லிம் மக்களால் தீர்மானிக்கப்படும் ஒரு

நாடாளுமன்றம் இனிமேலும் உருவாகக் கூடாது என்று ராஜபக்சக்கள் முடிவெடுத்தார்கள். எனவே தனிச்சிங்கள மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஒன்றை உருவாக்குவது என்று முடிவெடுத்து அதை நோக்கி யுத்த வெற்றி வாதத்தை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு புதுப்பித்தார்கள். வாக்களிப்பு அலைகளை அதாவது இனவாத அலைகளை உற்பத்தி செய்தார்கள். அவ்வாறு யுத்த வெற்றி வாதத்தை புதுப்பிப்பதற்கு அவர்களுக்கு ஈஸ்டர் குண்டுவெடிப்பும் கோவிட் 19 உம் உதவின. இப்பொழுது பெருமளவுக்கு தனிச் சிங்கள வாக்குகளால் உருவாக்கப்பட்ட மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அவர்கள் பெற்று விட்டார்கள். ஆனால் தமிழ் தரப்பிலோ நிலைமை எவ்வாறு உள்ளது?

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்தேசிய நிலைப் பாட்டைக் கொண்ட கட்சிகள் மூன்றாகப் பிளந்து நிற்கின்றன. இதனால் தென்னிலங்கை கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் கிழக்கை மையப்படுத்தி வடக்கின் முதன்மையை எதிர்க்கும் கட்சிகளும் சிதறிய வாக்குகளை அள்ளிக் கொண்டு போயின. இதன் விளைவாக கூட்டமைப்புக்கு 10 ஆசனங்களும் மாற்று அணியை சேர்ந்த இரண்டு கட்சிகளுக்கு மொத்தம் மூன்று ஆசனங்களும் கிடைத்தன. இம்முறை தேர்தல் களத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சாதியை மையப்படுத்தி சமயத்தை மையப் படுத்தி சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டன. இவை எவையும் வெற்றி பெறவில்லை. ஆனால் வாக்குகளைச் சிதறடித்தன. கிழக்கில் பிரதேச உணர்வுகளை முதன்மைப் படுத்தும் அரசியல்வாதிகள் வென்றிருக் கிறார்கள். அம்பாறை மாவட் டத்தில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தளபதியான கருணா அரசாங்கத்தின் முகவராகப் போட்டியிட்டார். அவர் வெற்றி பெறவில்லை. ஆனால் வாக்குளைச் சிதறடித்து கூட்டமைப்பின் வெற்றியைத் தட்டிப் பறித்தார். இப்பொழுது கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்துவிட்டது. அதே சமயம் மாற்று அணியும் முழு வெற்றி பெறவில்லை. மாற்று அணி முதன் முதலாக நாடாளுமன்றத்துக்கு செல்கிறது.

**ஒருபுறம் யுத்த வெற்றி வாதம் மிகப்பெரிய பலத்தோடு நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கிறது. இன்னொருபுறம் தமிழ் தரப்பு சிதறிப்போய் நாடாளுமன்றத்துக்கு செல்கிறது.**

ஒருபுறம் யுத்த வெற்றி வாதம் மிகப்பெரிய பலத்தோடு நாடாளுமன்றத்துக்கு வந்திருக்கிறது. இன்னொருபுறம் தமிழ் தரப்பு சிதறிப்போய் நாடாளுமன்றத்துக்கு செல்கிறது.இம்முறை நாடாளு மன்றத்தில் ராஜபக்சக்கள் திட்டமிட்டபடியே தமிழ் தரப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக இருக்காது. எனவே தமிழ் தரப்புக்கு அங்கேயே பேரம் எதுவும் கிடையாது. ஆயின் தமிழ்த்தரப்பு தனக்குப் பேரம் இல்லாத ஒரு நாடாளுமன்றத்துக்கு போய் என்ன செய்யப்போகிறது?

இதுதொடர்பாக கொழும்பு மைய அரசியல்வாதியான மனோ கனேசன் பிபிசி நியூஸ் தமிழ் ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் ஒரு அழகான பதிலைச் சொன்னார். "அவர்களிடம் 150 பேர் இருக்கிறார்கள் என்பதற்காக நாங்கள் 75 பேரும் வீட்டுக்கா போவது? நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற தகமையை வைத்துக்கொண்டு நாங்கள் எதிர்ப்பைக் காட்டுவோம். வீதியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்வதை விடவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நாங்கள் சொல்லப்போகும் கருத்துக்கு ஏற்புடைமை அதிகமாக இருக்கும். நாங்கள் நமது எதிர்ப்பை காட்டி கருத்துக்களை தெரிவிப்போம். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அவர்களைத் தாண்டி உலகத்திடம் செல்வோம். ஐநாவிடம் முறையிடுவோம்; அமெரிக்காவிடம் முறையிடுவோம் ; இந்தியாவிடம் முறையிடுவோம். அவ்வாறு நாம் செல்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவர்கள்தான் " என்ற தொனிப்பட மனோகணேசன் பதில் கூறுகிறார்.

அவருடைய பதிலில் ஒரு நடைமுறை உண்மை இருக்கிறது. ராஜபக்சக்கள் அசுர பலத்தோடு தாம் விரும்பியவற்றை செய்வதற்கான ஒரு மேடையாக நாடாளுமன்றத்தை பயன்படுத்தும் பொழுது பேர பலமின்றி சிதறிப்போய்க் காணப்படும் தமிழ் தரப்பு என்ன செய்யலாம்?

வீரமான உரைகள் அடுத்த நாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வரலாம். ஆனால் அவை தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரப் போதுமானவையாக இருக்காது. மனோ கணேசன் கூறியது போல நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் தமிழ் மக்கள் செயற்பட வேண்டியிருக்கும். நாடாளுமன்றத்தை ஒரு மேடை யாகப் பயன்படுத்தலாம். ஆனால் அதற்கும் அப்பால் பெரும் பான்மையினரின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு நாடாளு மன்றத்துக்குள் தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய நீதியைப் பெற்றுக் கொள்ள முடியாது.ஆயின் தமிழ் மக்கள் நீதியை எப்படிப் பெற்றுகொள்வது?

தமிழ் மக்கள் தங்களுக்கு வேண்டிய நீதியைப் பெற்றுக் கொள்வது என்று சொன்னால் முதலும் முக்கியமாகச் செய்ய வேண்டியது ஒற்றுமைப்படுவது. ஏனெனில் தமிழ் தரப்பில் எப்படிப்பட்ட நீதியைப் பெறுவது என்பது தொடர்பில் இரண்டு விதமான நிலைபாடுகள் உண்டு.கடந்த பதினொரு ஆண்டுகள் வரை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகக் காணப்பட்ட கூட்டமைப்பு நிலைமாறுகால நீதியை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் மாற்று அணி நிலைமாறுகால நீதியை ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது பரிகார நீதியைக் கோரி நிற்கின்றது. முதலில் இந்த இரண்டு நீதிகளையும் விளங்கிக் கொள்வோம்.

பரிகார நீதி என்பது இனப்படுகொலைக்கு எதிரான நீதிதான். இனப்பிரச்சினைக்கான பரிகாரம் அதுவே என்ற அடிப்படையில் அது பரிகார நீதி என்றழைக்கப்படுகிறது. நிலைமாறுகால நீதி எனப்படுவது ஐ.நாவால் இலங்கைத் தீவிற்கு



பரிந்துரைக்கப்பட்ட நீதியாகும் .

தமிழ் மக்கள் கேட்கும் பரிகார நீதியை உலக சமூகம் வழங்கத் தயாரில்லை. ஏனெனில் பரிகார நீதியை வழங்குவதாக இருந்தால் இலங்கையைப் பொறுத்தவரை வென்றவர்களை விசாரிக்க வேண்டும். ஆனால் உலகில் இதுவரையிலும் வென்றவர்களை விசாரிக்கும் பொறிமுறை பலவீனமாகவே காணப்படுகிறது. தோற்றவர்களை விசாரிக்கும் போக்கே பலமாகக் காணப்படுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னிருந்து அதுதான் நிலைமை.நிலைமாறுகால நீதி எனப்படுவது தொடக்கத்திலிருந்தே தோற்றவர்களை விசாரிக்கும் ஒரு பொறிமுறை தான்.இதை இன்னும் கூராகச் சொன்னால் இலங்கைத்தீவில் யுத்தத்தில் வெற்றி பெற்றவர்களை விசாரிக்க முடியாத ஐநா மன்றம் இலங்கைத் தீவுக்கு பரிந்துரைத்த நீதிப் பொறிமுறைதான் அது. வென்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் நீதி ?

நிலைமாறுகால நீதி என்பது சாராம்சத்தில் பொறுப்புக்கூறல்தான். ராஜபக்சவின் முதலாவது ஆட்சிக்காலத்தில் அவர்கள் நிலைமாறுகால நீதியை ஐ.நா விரும்பிய வடிவத்தில் அமுல்படுத்தத் தயாராக இருக்கவில்லை. கண்துடைப்புக்காக சில விசாரணைக் குழுக்களை நியமித்ததோடு சரி. ஆனால் ராஜபக்சவைக் கவிழ்த்து 2015 இல் உருவாக்கப்பட்ட ரணில்மைத்திரி அரசாங்கம் 2015 செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிலைமாறுகால நீதியை ஏற்றுக் கொண்டு அதற்கு இணை அனுசரணை வழங்கியது. அதன் பிரகாரம் ஐநாவின் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் நிலைமாறுகால நீதியை இலங்கைத் தீவில் ஸ்தாபிப்பதற்குரியது. நிலைமாறு கால நீதியின் கீழ் உருவாக்கப்படும் புதிய யாப்பில் இனப்பிரச்சினைகான தீர்வும் உள்ளடக்கப்பட்டிருக்கும். நிலைமாறுகால நீதியை கூட்டமைப்பு ஏற்றுக் கொள்கிறது. அதை உலக யதார்த்தம் என்றும் ஐநாவின் யதார்த்தம் என்றும் கூட்டமைப்பு நம்புகின்றது.

ஆனால் மாற்று அணி நிலைமாறுகால நீதியை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஒன்றில் பரிகார நீதியை கேட்கின்றார்கள் அல்லது நிலைமாறுகால நீதியை விட அடர்த்தியான நீதியைக் கேட்கின்றார்கள். இப்படியாகத் தமிழ்த் தரப்பு தமக்கு வேண்டிய நீதி எது என்பது தொடர்பில் இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது. இது தமிழர்களை பலவீனப்படுத்துகிறது. இனிமேலும் பலவீனப்படுத்தும்.

ராஜபக்சக்கள் நிலைமாறுகால நீதிக்குரிய ஐநா தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சிலசமயம் பொறுப்புக்கூறலுக்கான ராஜபக்சவின் பாணியிலான ஒரு புதிய பொறிமுறையை அவர்கள் கண்டுபிடிக்கக் கூடும். பொறுப்புக்கூறல் எனப்படுவது இறந்த காலத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்கு நிகழ் காலத்தில் பொறுப்புக் கூறுவதுதான். ஆனால் ராஜபக்சக்கள் அவ்வாறு பொறுப்புக்கூறும் நிலையில் இல்லை. குற்ற விசாரணைகளுக்கு அவர்கள் தயாரில்லை. குறிப்பாக கோவிட்19 சூழலுக்குள் அவர்கள் படைத் தரப்பை வைரசுக்கு எதிராக முன்னிறுத்தி அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அதன்மூலம்

படைத் தரப்பை புனிதப்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல வைரஸ் தொற்று காலத்தில் நாட்டின் சிவில் கட்டமைப்புகள் பலவற்றை ராணுவ மயப்படுத்தியும் இருக்கிறார்கள். புதிய வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தமது போர் வெற்றிகளைப் பாதுகாப்போம் என்று கூறுகிறார். எனவே போர்க்குற்ற விசாரணைகளுக்கு ராஜபக்சக்கள் ஒத்துக் கொள்ளப் போவதில்லை.அப்படி என்றால் போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து வேறாக்கப்பட்ட ஒரு தீர்வைத்தான் அவர்களிடம் எதிர்பார்க்கலாம்.

**இந்த நாடாளுமன்றத்துக்குள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் நீதிக்கான போராட்டத்தின் பெரும் பகுதியிருக்கிறது. அதை மூன்று தளங்களில் ஒருங்கிணைத்து முன்னெடுக்க வேண்டும்.**

இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். போர்க்குற்ற விசாரணையின் மூலம் கிடைக்கும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியையும் தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வையும் ஒன்றை மற்றதிலிருந்து பிரிக்கும் ஒரு சூழ்ச்சி எனப்படுவது ராஜபக்சக்களின் காலத்தில் தான் முன்னெடுக்கப்படுகிறது என்பதல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் நிலைமை அதுதான். இனப்பிரச்சினைக்கான தீர்வை இனப்படுகொலைக்கு எதிரான நீதியிலிருந்து வேறாக்கி அதை வெறும் யாப்பு மாற்றமாகச் சுருக்கியது ரணில்தான். அவருடைய நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ச ஒருமுறை பின்வரும் தொனிப்படச் சொன்னார் “போர்க்குற்ற விசாரணைகளைக் கேட்டால் இறுதித் தீர்வு கிடைக்காது. போர்க் குற்ற விசாரணைகளும் இறுதித் தீர்வும் இரண்டு தண்டவாளங்களைப் போன்றவை” என்று. விஜயதாச ராஜபக்ச மட்டுமல்ல ஜெகான் பெரேரா போன்ற தாராளவாதிகளும் அப்படித்தான் கூறுகிறார்கள். தீர்வு வேண்டும் என்றால் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் தமிழ்த்தரப்பு அடக்கி வாசிக்க வேண்டும் என்று.

இதுதான் இலங்கைத் தீவில் பொறுப்புக்கூறலுக்கான கள யதார்த்தம். இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் இப்பொழுது ராஜபக்சக்கள் அசுர பலத்தோடு மேலெழுந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்த் தரப்போ பிரதிநிதித்துவதிலும் சிறுத்து நீதிக்கான கோரிக்கை தொடர்பிலும் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது.எனவே முதலில் அவர்கள் ஐக்கியப்பட வேண்டும். பொதுக் கோரிக்கைகள் தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அதன்பின்னர்தான் எல்லா நடவடிக்கைகளும்.

இந்த நாடாளுமன்றத்துக்குள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. நாடாளுமன்றத்துக்கு வெளியேதான் நீதிக்கான போராட்டத்தின் பெரும் பகுதியிருக்கிறது. அதை மூன்று தளங்களில் ஒருங்கிணைத்து முன்னெடுக்க வேண்டும்.

தாயகத்தில் வெகுஜனப் போராட்டங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். அரசாங்கத்தையும் உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைக்கும் புதிய படைப்புத் திறன் மிக்க வெகுசனப் போராட்ட வடிவங்களை தமிழ் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும். தகவல் யுகத்துக்கும் கோவிட் 19க்குப் பின்னரான உலகச் சூழலுக்கும் பொருத்தமான போராட்ட வடிவங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அதேசமயம் தமிழகத்தை கொதிக்கச் செய்ய வேண்டும். தமிழகத்தை எவ்வாறு கொதிக்கச் செய்வது என்பது தொடர்பில் ஒரு பொருத்தமான பொறிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டும். யுத்தம் முடிந்த கையோடு தமிழகம் கொதித்தது. அனால் கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தின் கொதிப்பு அடங்கி வருகிறது. நீதிக்கான போராட்டத்தில் தமிழகத்தை ஒன்றிணைக்கும் பொருத்தமான பொறிமுறை ஈழத் தமிழ்க் கட்சிகளிடம் இல்லை. தமிழகத்தின் கட்சி அரசியலுக்குள் சிக்காத ஒரு பொறிமுறை அவசியம். தமிழகம் கொதிக்கத் தொடங்கினால் அது புதுடில்லியை அசைக்கும்.

அடுத்தது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம். ஏற்கனவே பரிகார நீதிக்கான முன்னெடுப்புக்களை புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் கடந்த 11 ஆண்டுகளாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறார்கள். அதை மேலும் வேகப்படுத்த வேண்டும். ஜெனிவாவில் பெட்டி கட்டப்பட்டிருக்கும் நீதிக்கான போராட்டத்தை அந்தப் பெட்டிக்கு வெளியே கொண்டு போக வேண்டும். அதற்கு உலகத் தலை நகரங்களை நோக்கி லொபி செய்ய வேண்டும். அதற்குரிய பொருத்தமான ஒன்றிணைந்த பொறிமுறை ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில் தாயகம், தமிழகம், புலம் பெயர்ந்த சமூகம் என்ற மூன்றையும் ஒன்றாக இணைக்கும் பொருத்தமான ஒரு பொறிமுறையைக் கண்டுபிடிக்க வேண்டும். தாயகமே மையம். அங்கிருந்துதான் அந்தப் பொறிமுறை இயக்கப்பட வேண்டும்.

கோவிட்19க்குப் பின்னரான உலகச் சூழல் முன்னரை விட அதிகமாக துருவ மயப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவுக்கும் மேற்கு மற்றும் இந்திய கூட்டிற்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்து ஒரு புதிய பனிப் போர்ச் சூழலை உருவாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு பூகோள மற்றும் பிராந்திய அரசியல் துருவ நிலைப்படுமாக இருந்தால் அதற்குள் ஈழத்தமிழர்களுக்கு புதிய சாத்திய வெளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் முதலில் தமிழ்த் தரப்பு ஐக்கியப்பட வேண்டும். அது தந்திரோபாய ஐக்கியமாகவும் இருக்கலாம் அல்லது கொள்கை வழி ஐக்கியமாகவும் இருக்கலாம். எதுவாயிருந்தாலும் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவது என்பது இனத் திரட்சியை ஆகக்கூடியபட்சம் பலப்படுத்துவதுதான்.

கட்டுரை



பொருளாதாரப் போராயுதங்கள்:

# அரிய நிலத் தனிமங்கள்

## (REE - Rare Earth Elements)

● சு.இராமசுப்பிரமணியன்

"As a general rule, the most successful man in life is the man who has the best information" -*Benjamin Disraeli*

**இந்தியாவிலேயே, வேளாண்மை காரணமாக செழிப்பான மாநிலமாகத் தமிழகம் முன்னேறியிருந்தது. அப்படி இருந்த தமிழகத்தில், கடந்த சில பத்தாண்டுகளில், ஒருங்கிணைந்த தஞ்சையில் எரிவாயு, பெட்ரோலியம் எடுத்தல், கொங்கு மண்டலத்தில் கெயில்வாயு குழாய்கள் பதித்தலோடு, அங்கு நிறைந்திருக்கும் மலைகளில் செறிந்திருக்கும் தாதுவளங்களைக் கொள்ளையடிப்பதற்காக சேலம் முதல் சென்னை வரை எட்டுவழிச் சாலை அமைத்தல், தேனியில் நியூட்ரினோ திட்டம், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட், கூடங்குளத்தில் ஒரே இடத்தில் ஆறு அணு உலைகள் மற்றும் அணுக்கழிவுகளை அதே வளாகத்தில் புதைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களால் தமிழகத்தின் வேளாண்மை பாதிப்படைந்து, தமிழக மக்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக மறுக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

தனித்திருப்பது, 'தனிமம்' (element). ஹைட்ரஜனில் ஆரம்பித்து யுரேனியம் வரையிலும், பூமியில் 92 இயற்கைத்தனிமங்கள் (natural elements) உள்ளன. பூமிக்கு அடியில் படிந்திருக்கும் தாதுக்களை வெட்டி எடுத்து, பிரிப்பதால் கிடைக்கும் இரும்பு, தங்கம், பாதரசம், கரி, யுரேனியம், போன்ற தனிமங்கள், 'நிலத் தனிமங்கள்' (earth elemets).

நிலத் தனிமங்களில், ஸ்காண்டியம் (scandium), யெட்ரியம் (yettrium), லேந்தனம் (lanthanum ) மற்றும் 14 லேந்தனம்ஆக்சைடு (lanthanum oxide) தனிமங்களும் சேர்ந்து, 17 தனிமங்கள், கூட்டாக 'அரிய நிலத் தனிமங்கள்' (Rare Earth Elements) என்று அழைக்கப்படுகின்றன.

நிறையின் அடிப்படையில், இரண்டு தொகுதியாக அவை பிரிக்கப்படுகின்றன. 1 லேந்தனம் (lanthanum), சிரியம் (cerium). பிரசியோடைமியம் (preseodymium), நியோடைமியம் (neodymium), புரோமிதியம் (promethium), சமாரியம் (samarium) ஆகியவை இலகுவான அரிய நிலத்தனிமங்கள் (light REE). 2 ஈரோப்பியம் (europium), கடோலினியம் (godolinium), டெர்பியம் (terbium), டைஸ்ப்ரோசியம் (dysprosium), ஹோல்மியம் (holmium), எர்பியம் (erbium), துலியம் (thulium), எட்டர்பியம் (ytterbium), லுடிட்டியம் (lutetium), ஸ்காண்டியம் (scandium), எட்ரியம் (yttrium) ஆகியவை கனமான அரிய நிலத்தனிமங்கள் (heavy REE)

இவற்றில், புரமோதியம் (promethium) தனிமத்தின் அனைத்து ஐசடோப்புகளும் கதிர்வீசும் தன்மைகொண்டது என்பது கவனிக்கத்தக்கது. இத்தனிமம் மிகமிக அரிதாகவே கிடைக்கக்கூடியது. எந்த ஒரு இடத்திலும் 500 முதல் 600 கிராம் அளவிலேயே கிடைக்கிறது ! ஒளிவீசும் வண்ணங்களிலும் (luminous paint), அணுக்கரு மின்கலங்களிலும் (nuclear batteries), பின்தொடரும் ஏவுகணைகளிலும் (guided missiles), இதயத் துடிப்பான்களிலும் (pace-makers), ஒளிமூலங்களாகப் (light source) 'புரமோதியம்' பயன்படுகின்றது.

அரிய நிலத் தனிமங்கள் அனைத்துமே உலோகங்கள். அதனால், அரிய நிலத்து உலோகங்கள் (Rare Earth Metals) என்றும் அழைப்பதுண்டு. இவற்றின் பல பண்புகள் பொதுவானவை. பூமிக்கு அடியில் படிந்திருக்கும் தாதுக்களில் (geological deposits) சேர்ந்தே கிடைக்கின்றன.

அரிதாகக் கிடைப்பவை என்னும் பொருளில் ஆரம்பத்தில் அப்படி அழைக்கப்பட்டாலும், உண்மையில் அரிய நிலத் தனிமங்களுக்கானத் தாதுக்கள், பூமியின் மேலடுக்கில் (Earth's Crust) தாராளமாகக் கிடைக்கிறது. ஆனாலும், சுரங்கம் தோண்டுவதற்காக அறியப்பட்ட இடங்களில் உள்ள தாதுச்செறிவு, மற்ற தாதுக்களை ஒப்பிட மிகமிக குறைவு.

பாஸ்ட்னசைட் (Bastnasite) என்பது அரிய நிலத் தனிமங்களுக்கான முதன்மை தாதுப்பொருளாகும். உலகில் பயன்படுத்தப்படும் அரிய நிலத் தனிமங்களில் 94 விழுக்காடு அமெரிக்காவிலிலுள்ள கலிபோர்னியாவின் மலைத்தொண்டிலிருந்தும் (Mountain Pass, California), பேயன் ஒபோ (Bayan Obo), ஷேண்டாங் (Shandong) மற்றும் சிச்சுவான் (Sichuan) ஆகிய சீனப் பகுதிகளிலிருந்தும், கிடைக்கிறது.

சீனாவின் சியாங்க்சி (Jiangxi) பகுதியில் கிடைக்கும் லேட்டரைட் களிமண் (laterite clays), ஆஸ்திரேலியாவில் கிடைக்கும் மோனசைட் (Monazite), ரஷ்யாவில் கிடைக்கும் லோபரைட் (Loparite), மலேசியாவில் கிடைக்கும் செனோடைம் (Xenotime) போன்றவையும் அரிய நிலத் தனிமங்களுக்கான பிறத் தாதுப்பொருட்களாகும்.

உலகளவில் அரிய நிலத் தனிமங்களுக்கானத் தாதுக்கள் இருப்பில் முதலிடத்தில் சீனாவும், அடுத்த நிலையில் அமெரிக்காவும் இருக்கின்றன. அதற்கடுத்த நிலையில் ஆஸ்திரேலியா, பிரேசில், இந்தியா, மலேசியா, இலங்கை, தென்ஆப்பிரிக்கா, தாய்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

1787 இல் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இராணுவ லெஃப்டினெண்ட் கார்ல் ஏக்செல் அரினியஸ் (lieutenant Carl Axel Arrhenius) ஸ்டாக்ஹோம் அருகில் உள்ள எட்டர்பி (Ytterby) என்னும் சிற்றூரில் அரிய நிலத்தாதுக்களின் கலவையாக இருந்த கருப்பு நிறத்தாதுவைக் கண்டெடுத்தது முதல் அரிய நிலத் தனிமங்கள் வரலாறு துவங்குகிறது. 1803இல் பிரித்தெடுக்கப்பட்ட முதல் அரிய நிலத்தனிமம் சிரியம் (Ceriumஅணுஎண்58 ). அரிய நிலத்தனிமம் லுடிட்டியம் (lutetium- அணுஎண் 71)) கடைசியாக, 1907இல் கண்டுபிடிக்கப்பட்டது.

### அரிய நிலத் தனிமங்களின் பயன்பாடு:

நம் அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் பல சாதனங்களில் இந்த அரிய நிலத் தனிமங்கள், நாம் அறிந்திராத வகையில் ஏராளமாகக் கலந்திருக்கின்றன. அரிய நிலத் தனிமம்' பயன்படுத்தப்படாத எந்த ஒரு நவீன சாதனமும் இல்லை என்றே சொல்லலாம்.

அரிய நிலத் தனிமங்கள் மிக அதிக அளவில் வாகனங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மின்மோட்டார்கள், ஒலிபெருக்கிகள், மின் உணர்விகள் (electric sensors), ஒளிகாட்டிகள் (phosphors in optical displays), மீள்மின்னேற்றம் செய்யும் மின்கலங்கள் (re-chargable batteries) போன்று வாகனங்களில் பயன்படுத்தப்படும் அத்தனை உறுப்புகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. கார் கண்ணாடிகள், பின்புறம் பார்க்கும் கண்ணாடி ஆகியவற்றைப் பளபளப்பாக்க (polish) அரிய நிலத் தனிமங்கள் பயன்படுகின்றன.

இன்று நாம் பயன்படுத்தும் அனைத்துத் தகவல்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப சாதனங்களிலும், கைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கணினிகள், ஒலிபெருக்கிகள் மற்றும் வன்வட்டுகளில் (hard-drives) காந்தமாகவும், இரவுநேரத்தின் கண்காணிப்புக் கண்ணாடிகள், துல்லியமாகப் பின்தொடரும் ஏவுகணைகள், பொருளின் திசைவேகம், காலம், ஒருங்கிணைவு ஆகியவற்றைத் துல்லியமாகத் தரும் துணைக்கோள் அமைப்பு (GPS - Global Positioning System) , மின்கலங்கள் மற்றும் பல முதன்மையான இராணுவத்தளவாடங்களில், பெரிய அளவில் அரிய நிலத் தனிமங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக, சாதனங்களில் பயன்படுத்தப்படும் அரிய நிலத் தனிமங்களின் அளவு மிகமிகக் குறைவு. பொருளின் மொத்த எடையில் 0.1 லிருந்து 5 விழுக்காடு மட்டுமே. ஆனால் அவை இல்லாமல், பல சாதனங்கள் வேலைசெய்யாது. சில சாதனங்களில் அவற்றைப் பதிலீடு செய்தால், சாதனங்களின் எடை பலமடங்கு கூடிவிடும்.

ஒவ்வொரு அரிய நிலத் தனிமத்திற்கும் தனித்தனியே ஏராளமான பயன்பாடுகள் உள்ளன.

### அரிய நிலத் தனிமங்களின் வணிக வரலாறு :

1965ஆம் ஆண்டுக்கு முன்பு, அரிய நிலத் தனிமங்களுக்கான தேவை மிகவும் குறைவாகவே இருந்தது. 1950களில், தென்ஆப்பிரிக்கா மட்டுமே அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுத்து, சாதனங்கள் செய்வதில் முதலிடத்தில் இருந்தது.

1965ஆம் ஆண்டுவாக்கில், வண்ணத்தொலைக் காட்சிப் பெட்டிகள், மக்கள் பயன்பாட்டிற்கு வந்தன. வண்ணக்காட்சிகளை உருவாக்குவதற்கு ஈரோப்பியம் (europium) என்னும் அரிய நிலத் தனிமம் தேவைப்பட்டது. கலிபோர்னியாவின் 'மலைத்தொண்டு' நிறுவனம் பாஸ்ட்ன சைட்டிலிருந்து, ஈரோப்பியத்தைப் பிரித்தெடுத்து சந்தைப்படுத்தியது. பாஸ்ட்னசைட்டில் 0.1 % மட்டுமே ஈரோப்பியம் இருந்தது. அதாவது, 1000 கி.கி. பாஸ்ட்னசைட்டில் 1 கி.கி. ஈரோப்பியமே கிடைக்கும். அதன்மூலம் அமெரிக்கா, அரிய நிலத் தனிமங்கள் வணிகத்தில் முதலிடத்தைப் பிடித்தது.

1980களில் சீனா அரிய நிலத் தனிமங்கள்' வணிகத்தில் ஈடுபட ஆரம்பித்த பிறகு, சூழல் முற்றிலும் மாறியது. 1990இல் இருந்து சீராக முன்னேறி, அரிய நிலத் தனிமங்கள் வணிகத்தில், 2000த்தில் சீனா முதலிடத்தைப் பிடித்தது. மிகக்குறைந்த விலைக்கு அரிய நிலத் தனிமங்களை சீனா விற்பனை செய்தது. அந்த சந்தைப்போட்டியில் தாக்குப்பிடிக்க முடியாமல் 'மலைத்தொண்டு' (Mountain pass) உள்ளிட்ட பல உலகநாடுகளின் அரிய நிலத் தனிமங்களுக்கான சுரங்கங்கள் மூடப்பட்டன.

அதேவேளையில், இராணுவம் மற்றும் விமானத்துறை, தொழிற்சாலைகள், மக்கள் பயன்படுத்தும் எலக்ட்ரானிக் சாதனங்கள் ஆகியவற்றிற்கான அரிய நிலத் தனிமங்களின். தேவைகள் வானத்தைத் தொடும் அளவில் உயர்ந்தது. சீனா அதனை மிகச்சரியாகப் பயன்படுத்திக்கொண்டது. ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடுகளை விதித்தது. விலையைக் கூட்டியது.

சீனா அரிய நிலத் தனிமங்களாலானப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடு மட்டுமல்ல, அதிக அளவில் அவற்றைப் பயன்படுத்தும் நாடாகவும் இருக்கிறது. சீனாவில் அதிக அளவில் அரிய நிலத் தனிமங்களுக்கான தாதுக்கள்

இருந்தபோதிலும், அந்த நாடு வெளி நாடுகளிலிருந்தும், குறிப்பாக ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது.

சில பத்தாண்டுகளிலேயே, சீனா எப்படி இத்தனை விரைவாக முதலிடத்தைப் பிடித்தது என்பதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, அதிக அளவிலான சீனப்பொருட்களை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இறக்குமதி செய்தது. இரண்டாவதாக, சீனாவின் தொழில் நுட்பமும், அறிவு முதலீடும் (intellectual property) , உலக நாடுகளை சீனாவை நோக்கி தங்களது தொழில்நுட்பத்தைத் திருப்பவைத்தது, மூன்றவதாக சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட பண்டங்களுமாகும் (commodity purchases).

2010ஆம் ஆண்டிலேயே, உலக அளவில் 95 விழுக்காடு அரிய நிலத் தனிமங்கள்' உற்பத்தியை சீனா மேற்கொண்டது. ஒரு சில ஆண்டுகளிலேயே, விலையை 500 விழுக்காடு (500%) அளவிற்கு உயர்த்தித் தனது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டது.

இது உலக அளவில் மூன்றுவிதமான நகர்வுகளை நோக்கி, மற்ற நாடுகளைத் தள்ளியது. 1 அரிய நிலத் தனிமங்களின் பயன்பாட்டைக் குறைப்பது. 2 அரிய நிலத் தனிமங்களுக்குப் பதிலாக, மாற்றுப் பருப் பொருட்களைக் (materials) கண்டடைவது. 3 அரிய நிலத் தனிமங்கள்' தேவைப்படாத மாற்று சாதனங்களையும், உதிரிப்பாகங்களையும், உறுப்புகளையும் கண்டுபிடிப்பது.

அமெரிக்காவின் நிலவியல்துறை நடத்திய ஆய்விலிருந்து (geological survey), குறிப்பிடும்படியான அரிய நிலத் தனிமங்களைக்கொண்ட தாதுவளம் சீனாவுக்கு வெளியிலும் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. சீனாதான், அரிய நிலத் தனிமங்கள் உற்பத்தியில் முதலிடத்தில் இருக்கிறது. என்றாலும் அது உலக அளவிலான தாதுவள இருப்பில் 36 விழுக்காடு மட்டுமே கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. சீனா, இன்றைய நிலையில், அரிய நிலத் தனிமங்களை உற்பத்தி விலைக்குக் குறைவாக விற்பதில்லை.

சர்வதேச சந்தையில், எந்த ஒரு பொருளின் விலையையும், 'வழங்கலும், தேவையும்' (supplies and demands) தான் உறுதிசெய்கின்றன. தேவை அதிகமாக இருந்து, வழங்கல் குறையும்போது, விலை கூடுகிறது. ஒரு நிறுவனம் அரிய நிலத் தனிமங்களின் தாது இருக்கும் இடத்தை வாங்குவது என்று எடுக்கும் முடிவிற்கும், தாது தோண்டி எடுக்கும் நாளுக்கும் இடையில் பல ஆண்டுகள் இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. இந்த நீண்ட காலதாமதமும் விலையேற்றத்திற்கு இன்னொரு காரணம் எனலாம்..

2010இல் சீனா, அரிய நிலத் தனிமங்கள் ஏற்றுமதியைக் கணிசமாகக் குறைத்தது. உள்நாட்டு உற்பத்திக்காகவும், சுற்றுச்சூழல் காரணமாகவும் சீனா அப்படி ஒரு முடிவெடுத்ததாகச் சொல்லப் படுகிறது. இது உலக அளவில் ஒரு பதட்டத்தை ஏற்படுத்தியது.. ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனாவின் இந்த ஏற்றுமதிக்குறைப்பு தொடர்பாக 'உலக வர்த்தகக் கழகத்தில்' (World Trade Organization) முறையீடு செய்யும் அளவிற்கு அது கொண்டுசென்றது. .

### அரிய நிலத் தனிமங்களின் எதிர்காலத் தேவைகளும், அவைசார்ந்த வணிகப்போரும்: (REE & Trade War)

அரிய நிலத் தனிமங்களின் தேவை, உலகநாடுகளிடையே வணிகத்தில் ஒரு பேரம்பேசும் பொருளாக விரைவில் மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தில் ஐந்தாம் தலைமுறை மின்னணுத் தொழில்நுட்பம் (5-G) அடுத்து வர இருக்கிறது. ஆளில்லாமல் இயங்கும் வாகனங்கள், ரோபோக்கள், விண்வெளியில் ஏவப்படும் ஏவுகணைகள், இராக்கெட்டுகள், துணைக்கோள்கள் என்று அனைத்திற்கும் 5-G மின்னணுத் தொழில்நுட்பம் தவிர்க்க இயலாதது. அந்த 5-G மின்னணுத் தொழில் நுட்பத்திற்கு எர்பியம் (Erbium) என்னும் அரிய நிலத் தனிமம் இன்றியமையாததாகிறது.

ஆரம்ப நிலையில், சீனா அதிக அளவிலான அரிய நிலத் தனிமங்களை ஏற்றுமதி செய்தது. ஆனால், இன்று உலக அளவில் சீனாவும் தொழில்நுட்பத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் கண்டிருக்கிறது. எனவே அதன் சுயதேவையை முன்னிட்டு, சீனா திடீரென அரிய நிலத் தனிமங்களின் ஏற்றுமதியை குறைத்துக் கொள்ளுமானால், அல்லது நிறுத்துமானால், அப்போது மற்ற நாடுகள் குறிப்பாக வல்லரசு நாடுகளும், வளர்ந்துவரும் நாடுகளும் ஒரு சிக்கலில் மாட்ட வேண்டிய சூழல் ஏற்படும்.

அமெரிக்காவின் இராணுவத்தளவாடங்களை உற்பத்தி செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்குத் தேவையான அரிய நிலத் தனிமங்கள், உலோகக் கலவைகள் மற்றும் காந்தங்கள் அகியவற்றில் 90 விழுக்காடு சீனாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. திடீரென, ஏதோ ஒரு காரணம் சொல்லி, அரிய நிலத் தனிமங்கள் ஏற்றுமதியை சீனா நிறுத்துமானால், அது அமெரிக்கப் பொருளாதாரத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள்.

அமெரிக்காவில், மின்னாற்றலால் இயங்கும் வாகனங்கள் (electric vehicles) மற்றும் காற்று உருளிகளுக்குத் (wind turbines) தேவையான நிலைக்காந்தங்கள் (permanent magnets) ஆகியவற்றிற்கு அரிய நிலத் தனிமங்களின் தேவை இருப்பதால் அந்த இரண்டு துறைகளும் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகும். ஆப்பிள் (Apple), டெஸ்லா (Tesla), ஜெனரல் எலக்ட்ரிக் (General Electric), வெஸ்டன் டிஜிட்டல் (western Digital), சீகேட் (Seagate), க்ரீ(Cree) போன்ற அமெரிக்க நிறுவனங்கள் உடனடி பாதிப்புக்குள்ளாகும்.

அமெரிக்காவிற்கும், சீனாவிற்குமிடையே தொழில்நுட்பம் சார்ந்தும், பொருளாதாரம் சார்ந்தும் நேரடி மோதல்கள் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது. ஹுவாய் 5-G (Huawei 5-G) மற்றும் ZTE ஆகிய சீனாவின் வலைத்தளங்கள் (networks), தங்களை உளவுபார்க்கும் வாய்ப்பு

இருப்பதாக அமெரிக்கா கருது வதால், அவற்றிற்கு ‘சில்லுகள்’ (Chips) விற்பனை செய்வதை ட்ரம்ப் (Donald John Trumph) அரசு தடைவிதித்திருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, கூகுளின் தாய் நிறுவனமான அல்ஃபபெட், (Alphabet) ஹுவாய் (Huawei) நிறுவனத் திற்கு வழங்கிவந்த வன்பொருள் (hardware), மென்பொருள் (software) மற்றும் தொழில்நுட்ப சேவைகள் அனைத்தையும் நிறுத்தி யிருக்கிறது. அதன் காரணமாக, கூகுள் புதுப்பித்தல்கள் (Google updates) இனி ஹுவாய் திறன்பேசிகளுக்குக் (Smart- phones) கிடைக்காமல் போகும். இவை எல்லாம் சேர்ந்து, ஹுவாயின் 5-G வெளியீடு தள்ளிப்போவதற்குக் காரணமாகலாம்.

ட்ரம்ப் நிர்வாகம் ஹுவாய் நிறுவனத்தை ‘கருப்புப்பட்டியலில்’ (black list) சேர்த்த சில மணி நேரங்களில், சீனப்பிரதமர் ஜி ஜின்பிங் (Xi Jinping), அரிய நிலத் தனிமங்கள் உற்பத்தி நிலையம் அமைந்திருக்கும் ஜியாங்சி பகுதிக்கு (Jiangxi province) பார்வையிடச் சென்றது முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

அதன் உடனடி விளைவாக, சீனா, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட 10 நாடுகள் இணைந்திருக்கும் 20 அரிய நிலத் தனிமங்கள் உற்பத்தியாளர்களின் உலக அரிய நிலத் தனிமங்கள் தாதுக்குறியீடு (Global Rare Earth / Strategic Minerals Index) 6.4% திடீரென உயர்ந்திருக்கிறது. இது, அக்டோபர் 2011க்குப் பிறகு ஒரே நாளில் ஏற்பட்ட புள்ளி உயர்வாகும்.

ஜூன் 1 முதல் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் அரிய நிலத் தனிமங்கள் மீதான வரியை 10%லிருந்து 25% ஆக உயர்த்துவதாக அறிவித்து, அமெரிக்காவிற்குப் பதிலடி கொடுத்திருக்கிறது, சீனா.

2010இல் ஜப்பானிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அரிய நிலத் தனிமத்திற்கு முழுத்தடை விதித்தது போல, அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் அரிய நிலத் தனிமங்களுக்கு 100% தடை விதிப்ப தற்கான வாய்ப்பும் உள்ளது. அதன் தொடர்ச்சி யாக அரிய நிலத் தனிமங்களின் விலை பலமடங்கு உயர்வதற்கும் வாய்ப்பு உள்ளது..

இப்போது நடந்துகொண்டிருக்கும் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரப் பனிப்போர் என்பது, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு வல்லரசுகளுக்கிடையே யார் ‘பெரியண்ணன்’ (Big Brother) என்பதை முடிவுசெய்யும் போட்டியாகவே பார்க்க வேண்டியுள்ளது..

அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையே இப்படி ஆரம்பித்திருக்கும் பனிப்போர் உச்சத்தை அடையும்போது, உலகமயமாதல் (globalization) என்பதைக்கடந்து, இனிமேல் உலகம், அமெரிக்கா X சீனா என்னும் இருதுருவ தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அரசியலுக்குள் தள்ளப்பட்டுவிடும்.

**அமெரிக்காவிற்கும், சீனாவிற்கும் இடையே இப்படி ஆரம்பித்திருக்கும் பனிப்போர் உச்சத்தை அடையும்போது, உலகமயமாதல் (globalization) என்பதைக்கடந்து, இனிமேல் உலகம், அமெரிக்கா X சீனா என்னும் இருதுருவ தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அரசியலுக்குள் தள்ளப்பட்டுவிடும்.**

அதற்கான அறிகுறிகளும் தென்படத் துவங்கியுள்ளன. சீனாவைப் பொது எதிரியாக்கும் நோக்கில், மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகளுடனான வணிக முரண்களை அமெரிக்கா தவிர்த்துவருகிறது. சீனாவும், வடக்கில் முந்தைய சோவியத் ஒன்றியம் முதல் தெற்கில் பாகிஸ்தான், மற்றும் மத்தியக் கிழக்கு ஆசிய நாடுகளை நெடுஞ்சாலைகள், ரயில்வே மற்றும் குழாய்கள் (Pipe-lines) கொண்டு இணைக்கும் முப்பெரும் திட்டத்தை (BRI - Belt and Road initiative) நிறைவேற்றி வருகிறது.

உலக மக்கட்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு கொண்ட 60 நாடுகள் சீனாவின் இந்த இணைப்புத்திட்டத்தில் சேர்ந்துள்ளன. அமெரிக்கா, மெக்சிகோ, கனடா ஒருபுறமும், சீனாவும் அதனுடன் இணைந்துள்ள 60 நாடுகளும் எதிர்ப்புறத்திலும், முடிவெடுக்காத நிலையில் ஐரோப்பிய ஒன்றியமும் இருக்கும் சூழல், அமெரிக்கா X சீனா என்னும் இருதுருவ பொருளாதார அரசியலுக்கான முன்னோட்டம் எனலாம்.

சீனாவிற்கு அடுத்த நிலையில் அரிய நிலத் தனிமங்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனம், ஆஸ்திரேலியாவின் ‘லினாஸ்’ (Lynas) ஆகும். தற்போது, லினாஸ், மலேசியாவில் செயல்பட்டுவருகிறது. அதனை ஆஸ்திரேலியாவுக்கு இடமாற்றம் செய்யும் முயற்சியில் ஆஸ்திரேலியா ஈடுபட்டுள்ளது. லினாஸ், ப்ளூ லைன் கார்ப்பரேசனுடன் (Blue Line Corporation) இணைந்து, முதலாவது அரிய நிலத் தனிமங்கள் உற்பத்தித் தொழிற்சாலையை அமெரிக்காவில் நிறுவ திட்டமிட்டுள்ளன.

**இந்தியாவில் அரிய நிலத் தனிமங்கள் :**

உலக அளவில் உள்ள மொத்த அரிய நிலத் தனிமங்களின் வளத்தில் இந்தியாவானது 6% கொண்டு 5வது இடத்தில் இருக்கிறது.

‘மோனசைட்’, இந்தியாவின் அரிய நிலத் தனிமங்களுக்கான முதன்மைத் தாதுப்பொருளாகும். அகில இந்திய அளவில் 11.395 மில்லியன் டன் தாதுவளம் உள்ளது. மாநிலவாரியாகப் பார்த்தோமானால், மில்லியன் டன் அளவில் ஆந்திரா 3.72), குஜராத் 0.003, ஜார்கண்ட் 0.22, கேரளா 1.90, மகராஸ்டிரா 0.002, ஒடிஷா 2.41, தமிழ்நாடு 2.46, மேற்குவங்கம் 1.22. (Source : Department of Atomic Energy, Mumbai)

1950 ஆம் ஆண்டிலேயே அரிய நிலத் தனிமங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட இந்தியா, ‘இந்திய அரிய நிலத் தனிமங்கள் லிமிடெட்’ (IREL - Indian Rare Earth Ltd.) என்னும் நிறுவனத்தை உருவாக்கியது. என்றாலும், பல்வேறு காரணங்களால், இன்றுவரை அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணமுடியவில்லை.

1950இல் உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் 1963இல் நாட்டுடமை ஆக்கப்பட்டது (nationalised). அப்படி நாட்டுடமை ஆக்கப்பட்டப் பின்னர் அணு ஆற்றல் துறையுடன் ( Department of Atomic Energy ) இணைக்கப்பட்டது. அதன் பிறகு, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் பொதுத்துறை நிறுவனமாக மாறியது.

அரிய நிலத் தனிமங்களின் துறையில் ஆரம்பத்திலேயே முன்னுக்கு வந்த இந்தியா, அதன்பிறகு எவ்வித வளர்ச்சியும் காட்டவில்லை. அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் மிகவும் சிக்கலானது. அதனால், சுரங்கம் அமைத்து, தேவையான தாதுக்களைத் தோண்டி எடுப்பதை விடுத்து, எளிதில் பிரித்தெடுக்கக்கூடிய வகையிலான, கடற்கரை மணலில் (Placer Deposit) காணப்படும் இலிமினைட் (Ilemenite), ருடைல் (Rutile), சில்லிமனைட் (Sillimanite) போன்ற அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுப்பதில் மட்டும் இந்தியா முனைப்பு காட்ட ஆரம்பித்தது.

2011 மற்றும் 2012 காலகட்டத்தில், அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் மீண்டும் இந்தியா ஆர்வம் காட்ட ஆரம்பித்தது. 2010இல் சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே எல்லைப் பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து, சீனா ஜப்பானுக்கான அரிய நிலத் தனிமங்களின் ஏற்றுமதியை முற்றிலும் (100%) நிறுத்திவிட்டது. அதன் காரணமாக, ஜப்பான் நாட்டின் டொயொட்டா சுய்ஹோ ( Toyota Tsuiho) நிறுவனம், இந்தியாவின் பொதுத்துறை நிறுவனத்துடன் (IREL) ஒப்பந்தம் செய்து, ஆந்திர மாநிலத்தில் சுரங்கம் தோண்டுவதற்கு அனுமதி பெற்றது. ஆனாலும், சுற்றுச்சூழல் பிரச்சினையிலும், சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதி வழங்குவதிலும் இந்திய அரசு பெரும் சுணக்கம் கட்டியதன் காரணமாக அது செயல்படாமலேயே போயிற்று.

2014இல் நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமர் பொறுப்பேற்ற பிறகு, அவருக்கும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே (Shinzo Abe) ஆகியோருக்கிடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்போவதாகச் சொல்லப்பட்டது. இதன்மூலம் 2000 முதல் 2300 டன் வரையிலான அரிய நிலத் தனிமங்களின் தாது பிரித்தெடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. இந்தியா, ஜப்பான் இடையேயான ஒப்பந்தத்தில், ஆஃப்கானிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் போன்ற நாடுகளையும் இணைத்துக்கொள்ளும் திட்டமும் இருந்திருக்கிறது.

ஆனால், அத்திட்டம் என்ன ஆனது என்பது பற்றிய எந்தத் தகவலும் இதுவரை பொதுவெளியில் வைக்கப்படவில்லை. மற்றொன்று, சீனாவை நம்பியிருப்பதிலிருந்து விடுபடவேண்டும் என்னும் காரணத்தால், ஜப்பான்தான் முன்முயற்சி எடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கேரள மாநிலம், கொல்லம் மாவட்டத்தில் சவரா (Chavara) என்னும் இடத்தில், 1932இல் உருவாக்கப்பட்ட ரிவிலி, (Kerala Minerals & Metals Ltd) அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுப்பதற்கான பொதுத்துறை நிறுவனம் ஆகும். இங்கு டைடேனியம் டை ஆக்சைடு (Titaniyum dioxide) உற்பத்தி செய்யப்படுகிறது. என்றாலும், இலிமினைட் (illminite), சிர்கான் (zircon), ரூட்டில் (rutile) சில்லிமனைட் (sillimenite) ஆகிய அரிய நிலத் தனிமங்களும் பிரித்தெடுக்கப்படுகின்றன.

கேரள மாநிலம், எர்ணாகுளம் மாவட்டத்தில் உடையோகமண்டல் (Udyogamandal) என்னும் இடத்தில் 'மோனசைட்' தாதுவிலிருந்து, அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்கூடம் உள்ளது. அதற்குத்தேவையான தாதுப்பொருள், மணவாளக்குறிச்சியிலிருந்து வருகிறது. 'மோனசைட்' தாது பிரித்தெடுக்கும்போது, 'தோரியம்' தனிமமும் கணிசமாக கிடைக்கிறது. தோரியம், அணு ஆற்றலுக்கான தனிமம் என்பது குறிப்பிடத்தக்கது. பிரித்தெடுக்கப்படும் தோரியம், பாபா அணு ஆய்வுக்கழகத்திற்கும், பிற அணு உலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் அமைந்திருக்கும் அரிய நிலத் தனிமங்கள் ஆலை, ஏறத்தாழ 110 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. கன்னியாகுமரி கடற்கரை மணலில் அரிய நிலத் தனிமத் தாதுக்கள் இருப்பதை அறிந்த ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட 1177 ஹெக்டேர் (2907 ஏக்கர்) நிலம் மோனசைட் (Monazite) தாது மணல் இருக்கும் பகுதியாக, 2017இல் கண்டறியப்பட்டது. அதிலிருந்து இல்மனைட் (ilmenite), ரூடைல் (rutile), சிர்கான் (zircon), கார்னட் (garnet), சில்லிமனைட் (sillimanite), மற்றும் பேடிலைட் (baddeleyite) என்னும் அரிய நிலத் தனிமங்கள் கிடைக்கின்றன.

மணவாளக்குறிச்சி அரசு ஆலையில் (IREL) ஆண்டொன்றிற்கு 6000 டன் 'மோனசைட்' தாது பிரித்தெடுக்கப்படுவதாக, அரசு புள்ளிவிபரம் கூறுகிறது.

தனியார் நிறுவனம் ஒன்றும் இத்தாதுமணலை அள்ளி வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வந்தது. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக, மணவாளக்குறிச்சி அரசு ஆலைக்கும் சேர்த்து தடை விதிக்கப்பட்டது. அதன் காரணமாக சிலகாலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அரசு ஆலை மீண்டும் இயங்கத் துவங்கியிருக்கிறது.

நெய்வேலி லிக்னைட் சுரங்கத்தில் செயல்படும் அனல் மின் நிலையத்தில் (Thermal Power Plant) , எரிக்கப்பட்ட நிலக்கரியிலிருந்து இரண்டு விதமான சாம்பல்கள் கிடைக்கின்றன. ஒன்று அடியில் படியும் சாம்பல் (bottom ash). மற்றது. மேலெழுந்து பறக்கும் சாம்பல் (fly ash). அரிய நிலத் தனிமங்களைப் பிரித்தெடுக்கும் வேதியல் நிகழ்வுகளில், எரிக்கப்பட்ட நிலக்கரியிலிருந்து கிடைக்கும் 'பறக்கும் சாம்பலைப் பயன்படுத்துவதற்கான ஆய்வுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

2015இல், இந்தியப் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு, "இந்தியா அரிய நிலத் தனிமங்களின் உற்பத்தியை முன்னெடுப்பதில், குறிப்பிட்டுச் சொல்லும் விதத்திலான எந்த ஒரு

நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்பதை பிரதமர் உறுதி செய்ததாக சொல்லப்படுகிறது.

பண்டங்களின் உற்பத்தி முறையை நீரோடும் ஆறோடும் ஒப்பிடுகிறார்கள். ஒன்று 'மேலாறு உற்பத்திமுறை' (Upstream Process). உற்பத்திக்குத் தேவையான பருப்பொருள் உள்ளீட்டைக் குறிக்கிறது (material inputs needed to production). அதாவது, தாதுவளம் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து, சுரங்கம் அமைத்து, தாதுக்களைத் தோண்டிஎடுத்து, தரை நிலைக்குக் கொண்டுவருவது. மற்றொன்று, 'கீழாறு உற்பத்தி முறை' (downstream Process). தரை நிலைக்குக் கொண்டுவரப்படும் தாதுக்களில் இருந்து தனிமங்களைப் பிரித் தெடுப்பதும், பின் அவற்றை சந்தைப்படுத்துவதும் ஆகும்.

இந்தியாவில், அரிய நிலத் தனிமங்கள் கீழாறு உற்பத்தி முறையிலேயே (downstream production Process) செய்யப்படுகிறது. மாறாக மேலாறு உற்பத்தி முறையை (Upstream Process) மேற்கொண்டால்தான் அதிக அளவில் அரிய நிலத் தனிமங்களை உற்பத்திசெய்யமுடியும். ஆனால், மேலாறு உற்பத்தி முறை என்பது அதிக அளவிலான சுற்றுச்சூழல் சீர்கேடுகளை விளைவிக்கக்கூடியது என்பதோடு அதற்கான தொழில்நுட்பமும் சிக்கலானது.

அடுத்துவரும் காலம் என்பது, உலக அளவில், அரிய நிலத்தனிமங்களைப் பிரித்தெடுத்து, வணிகம் செய்து பொருளீட்டும் காலமாக இருக்கப்போகிறது என்பதை மறுப்பதற்கில்லை. இந்தியாவும், பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து, அரிய நிலத்தாதுக்களைப் பிரித்தெடுத்து, தனது பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பும் இருக்கத்தான் செய்கிறது.

இன்றைய நிலையில், அமெரிக்கா X சீனா என்னும் இருதுருவ வல்லரசுப் போட்டியரசியலுக்குள் உலகநாடுகள் தள்ளப்பட்டுள்ளன. அவரவர் நாட்டு நலனில் மட்டுமே குறியாக இருப்பதில் அமெரிக்கா விற்கும், சீனாவிற்கும் எவ்வித வேறுபாடும் இருப்பதில்லை

மத்தியில் ஆளும் மோடி அரசு ஏற்கனவே அமெரிக்கா பக்கமாக சாய்ந்துவருகிறது. இந்தியசீன எல்லையில் ஏற்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழப்பிற்குப் பிறகு, இந்தியா முற்றிலுமாக அமெரிக்கா பக்கம் சாய்ந்து வருவதையும், சீனப்பொருட்களுக்குத் தடை விதித்து வருவதையும் பார்க்கமுடிகிறது.

இந்தியாவின் தொழிற்கூடங்களுக்கும், மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் தேவையான மூலப்பொருட்கள் குறைந்த விலையில் சீனாவி லிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. சீனாவுடனான வணிகத்தை இந்தியா முற்றாக முறிக்கும்போது, இவற்றிற்கு அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய சூழல் ஏற்படும். அது மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என்னதான் இந்தியா, அமெரிக்காவிற்கு உற்ற நண்பனாக இருந்தாலும், அமெரிக்காவின் கடந்தகால வரலாறு நம்பிக்கை அளிப்பதாக இல்லை. இந்தோனேஷியா, பொலிவியா, பனாமா, மத்திய கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் என்று எண்ணை வளமும், கனிம வளமும் கொண்ட நாடுகளின் மீது கண்வைத்து, கால்பதித்து, இயற்கை வளங்களைக் கொள்ளையடித்ததன் மூலம் அந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளும், சுற்றுச்சூழல் கேடுகளும் மக்கள் படும் இன்னபிற துன்பங்களும் நம் கண்முன் ரத்தச்சாட்சியங்களாக நிற்கின்றன.

இந்தியா, அரிய நிலத்தனிமங்களை பிரித் தெடுக்கும் தொழில்நுட்பத்தில் அமெரிக்க நிறுவனங் களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டால், அது இந்தியாவைப் பொறுத்தவரையில், குறிப்பாக வேளாண்மைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும் என்பதை கவனம்கொள்ளவேண்டிய அவசியமும் உள்ளது.

சுற்றுச்சூழல் தொடர்பான அவசரச்சட்டம் (EIA 2020), இந்தியப் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேறுமானால், நம் மக்களைப்பற்றி, வேளாண்மையைப் பற்றி, சுற்றுச்சூழலைப் பற்றி யெல்லாம் கவலைகொள்ளாமல், அது அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார் நிறுவனங்களுக்கு, தாதுவளங்களைக் கொள்ளையடிப்பதற்கு பெரும் வாய்ப்பாக அமைந்துவிடும் என்பதையும் கவலையுடன் பதிவு செய்யவேண்டியுள்ளது.

இந்தியாவிலேயே, வேளாண்மை காரணமாக செழிப்பான மாநிலமாகத் தமிழகம் முன்னேறி யிருந்தது. அப்படி இருந்தத் தமிழகத்தில், கடந்த சில பத்தாண்டுகளில், ஒருங்கிணைந்த தஞ்சையில் எரிவாயு, பெட்ரோலியம் எடுத்தல், கொங்கு மண்டலத்தில் கெயில்வாயு குழாய்கள் பதித்தலோடு, அங்கு நிறைந்திருக்கும் மலைகளில் செறிந்திருக்கும் தாதுவளங்களைக் கொள்ளையடிப்பதற்காக சேலம் முதல் சென்னை வரை எட்டுவழி சாலை அமைத்தல், தேனியில் நியூட்ரினோ திட்டம், தூத்துக்குடியில் ஸ்டெர்லைட், கூடங்குளத்தில் ஒரே இடத்தில் ஆறு அணு உலைகள் மற்றும் அணுக்கழிவுகளை அதே வளாகத்தில் புதைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களால் தமிழகத்தின் வேளாண்மை பாதிப்படைந்து, தமிழக மக்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாக மறுக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட சூழலில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு அரிய நிலத்தனிமங்கள் பிரித்தெடுக்கும் ஒப்பந்தம் தாரைவார்க்கப்பட்டால், இந்தியப் பொருளாதாரம் உயரும் என்று கூறப்படும் அதே வேளையில், தமிழகத்தின் வேளாண்மை முற்றிலுமாக அழிக்கப்பட்டு, இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கும் நிறுவனங்களின் வேட்டைக் காடாகத் தமிழகம் மாறிவிடும் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.




# தமிழீழக் கோரிக்கைக்குத் திரும்பும் தமிழர்கள்

● ஜெகத் கஸ்பர்

ஒரு பொதுத் தேர்தல் ஒரு நாட்டினுடைய எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்பதை அய்யம் திரிபர தீர்க்கமாக, தெளிவாக திசையை வரையறுத்து முடிவு சொல்லுமென்றால் இப்பொழுது இலங்கையில் நடந்து முடிந்திருக்கிற பொதுத்தேர்தல்.

என்ன திசைகள் அவை? இனிமேல் சிங்களப் பேரினவாதம் மட்டும்தான் இலங்கையினுடைய தேசிய அரசியலையும், அதிகாரத்தையும் முடிவு செய்யும்.

**இரண்டு,** சிறுபான்மை மக்கள் அவர்கள் வடக்கு கிழக்கு தமிழர்கள் என்று மட்டுமல்ல மலையகத்தமிழர்கள், இசுலாமிய சமூகத்தவர்கள் எவர்களுடைய தயவும் பங்களிப்பும் இனிமேல் சிங்களப் பேரினவாதத்திற்கு தேசிய அரசு அமைக்கவோ, தேசிய அரசு அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவோ அவசியம் இல்லை என்கிற அளவுக்கு ஒரு சனநாயகம் என்ற போர்வையிலான தேர்தலை மேலாண்மை செய்கின்ற நிர்வகிக்கின்ற உத்திகளை பணம், அதிகாரம் பொய் என ஏனைய பல வழிமுறைகளின் மூலமாக சிங்களப் பேரினவாதம் தன் கைக்கொண்டிருக்கிறது.

**மூன்று,** வெளியுறவு கொள்கை என்பது சீனாவை மையப்படுத்தியதாகத்தான் இருக்கும் என்பது உறுதியாக்கப்பட்டிருக்கிறது.

**நான்கு,** ஒரு குடும்பம் தற்காலிகமாக, நிரந்தரமாக அல்ல, ஒரு குடும்பம்தான் ஆட்சி செலுத்தும். அதிபராக கோத்தபய ராஜபக்ச, பிரதமராக மகிந்தராஜபக்ச, நிச்சயமாக இந்தத் தேர்தலைத் திட்டமிட்டு கையாண்ட பசில் ராஜபக்சவுக்கு அமைச்சரவையில் இடம் இருக்கும்; அதுபோல ராஜபக்சவின் மகனான நிமால் ராஜபக்சவுக்கும் அமைச்சரவையில், அதிகாரத்தில் மிக முக்கியமான இடம் இருக்கும். இதுவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத்தவிரவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிற பல விசயங்கள் இந்தத் தேர்தலில் இருக்கின்றது. எதிர்க்கட்சி என்பது நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. அய்க்கிய தேசியக் கட்சி யு.என்.பி. ஒரு கட்சியின் இரண்டு பிரிவுகள், ஆளும் கட்சியாகவும்., எதிர்க்கட்சியாவும். வந்திருக்கின்றன.

எஸ்.எல்.பி.பி என்ற ராஜபக்சேக்களின் அந்தக் கட்சியும், இவர்கள் முன்னர் கட்டுப்படுத்திய இலங்கை சுதந்திராகட்சியும், எஸ்.எப்.பி உடைய சஜித் பிரேமதாசவும் இரண்டாம் இடத்தில் வந்திருக்கிறார்கள். எனவே ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் ஏறக்குறைய ஒரு கட்சிதான் என்பது இந்தத் தேர்தல் தந்திருக்கிற ஒரு முடிவு.

போருக்குப் பின் தமிழர்கள் நம்பிக்கையோடு தமிழர் தேசியக் கூட்டமைப்பிடம் தங்கள் அரசியல் எதிர்காலத்தை ஒப்படைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கைத் தகர்ந்து போயிருக்கிறது! பலவீனப்பட்டிருக்கிறது என்பது கூட ஒரு குறைந்த பட்ச வார்த்தைதான்; அதனால் தகர்ந்து போயிருக்கிறது. மரியாதைக்குரிய சம்பந்தன் அய்யா அவர்களும், மரியாதைக்குரிய சுமந்திரன் அவர்களும் வெற்றி பெற்றிருந்தாலும் கூட. குறிப்பாக கிழக்குப் பகுதிகளில் தமிழர் தேசியக் கூட்டணி என்பதும், அவர்கள் முன்வைத்த அரசியல் அணுகுமுறை என்பதும், தமிழர்களின் அவநம்பிக்கைக்கு உள்ளாகியிருக்கிறது. அதே வேளை மக்களோடு நின்று பணியாற்றுகின்ற சிலர் வென்றிருக்கிறார்கள்.

தமிழீழ மக்களுடைய அரசியல் பிரச்சனைக்குத் தனித்தமிழ் ஈழம்தான் தீர்வு என்பதை 2005 காலப்பகுதியிலிருந்து இன்று வரை ஒரு தொடர்ச்சியான நிலைப்பாடாகக் கொண்டிருக்கும் திரு கஜன் பொன்னம்பலம் போன்றவர்கள்

விடுதலைப் போராட்டத்தினுடைய நினைவுகளைக் கொச்சைப்படுத்தியவர்களிடம் அந்தக் கதையாடலை ஏன் நாம் விட்டோம்?! விடுதலைப் போராட்டத்தின் கடைசிக்கட்டத்தில் நமக்கு சில பிழைகள், சில சறுக்கல்கள் இருந்திருந்தாலும் கூட, எத்துணைப் பெரிய தியாகங்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த மாபெரும் பேராட்டத்தினுடைய நினைவுகளை எரிபொருளாக்கி, நினைவுகளை மாபெரும் அடித்தளக் கற்களாக்கி, அடித்தள மூளைக்கற்களாக மாற்றிக் கொண்டு ஏன் ஒரு அரசியல் அறப்போராட்டத்தைக் களத்திலும், புலத்திலும் கட்டியெழுப்பத் தவறினோம்?!



சம்பந்தன், சுமந்திரன்



கஜன் பொன்னம்பலம்

வென்றிருக்கிறார்கள் என்றால் போராட்ட மனநிலைக்கு மீண்டும் தமிழர்கள் வந்துவிட்டார்கள் என்று நாம் சொல்ல முடியவில்லை என்றாலும் கூட தமிழீழ மக்களுடைய அரசியல் தீர்வுக்கு இனிமேல் தனிப்பட்ட புதுதில்லி அதிகாரத்தையோ, தனிப்பட்ட அமெரிக்க அதிகாரத் தையோ அல்லது எப்படியாவது சிங்களத்துடன் ஒத்துப் போய் நாம் ஒரு தீர்வைப் பெற்றுவிடலாம் என்கிற அணுகுமுறையையோ, நாங்கள் நம்பவில்லை என்பதை தமிழ்தேசியக் கூட்டணிக்குத் தமிழ் மக்கள் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

எனில் எதிர்பார்த்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ராஜபக்ச குடும்பத்திற்கு அரசியல் சக்திகளுக்கு கிடைத்திருக்கிறது. அவர்கள் அரசியல் சட்டத்தில் மாற்றம் நிச்சயமாகக் கொண்டுவரத்தான் போகிறார்கள். இலங்கை என்பது ஒற்றை ஆட்சியாகத்தான் இருக்கும். சிங்கள பெரும்பான்மை பேரினவாதம்தான் ஒற்றை ஆட்சியின் மூலம் (யுனிட்டி கான்சிடியுசன்) இந்த நாட்டைக் கட்டுப்பாட்டில் வைத்து ஆளும் என்பது இனிமேல் ஆட்சி அதிகாரத்தில் ஒரு நிரந்தர ஒழுங்காக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்துச் செய்யப்படும்.

போரில் புலிகளை அழிப்பதற்கு உலக நாடுகள் ஆமோதிப்பதற்கு முன்னால், ராஜபக்சேக்களிடமிருந்தும் சிங்கள அதிகாரத்திடமிருந்தும் சில வாக்குறுதிகளை பெற்றிருந்தன. அந்த வாக்குறுதிகளில் மிக முக்கியமான ஒன்று, போருக்குப் பின், தமிழர்களுக்கு கவுரவமான ஒரு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது, உலக சமுதாயத்தின் குறிப்பாக அமெரிக்கா, இந்தியா நாடுகளின் ஒரு கோரிக்கையாக இருந்தது. ஆனால் அப்படி எந்தத் தீர்வும் தரப்படமாட்டாது; அரசியல் சட்டம் கூட ஒரு கூட்டாட்சி சட்டமாக மாற்றப்பட மாட்டாது, என்பதையும் இந்தத் தேர்தல் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது மட்டுமல்ல உலக சமுதாயம் போர் குற்றங்கள் என்கிற அந்த ஒரு கொக்கியை பயன்படுத்தி எப்படியேனும் குறைந்த பட்ச அரசியல் தீர்வையேனும் தமிழர்களுக்கு வாங்கித்தர முடியுமா என்று அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட சில நாடுகள் குறிப்பாக கனடா போன்ற நாடுகள் போர்க்குற்றங்கள் என்ற அந்த உபகரணத்தை, உத்தியைப் பயன்படுத்தி. முயற்சிகள் மேற்கொண்டன.

ஆனால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிற இந்த ஆட்சியில் இந்த அரசமைப்பில் சீனாவை மையப்படுத்திய வெளியுறவுக் கொள்கையைக் கொண்டிருக்கிற, கொண்டிருக்கப்போகிற ஒரு ஆட்சி அமைப்பில் இனிமேல் உலகளாவிய அந்த முயற்சிகளும் மிகவும் பின்னடைவைக் காணும் என்பதுதான் இன்றைய காலத்தின், களத்தினுடைய யதார்த்தம்.

இதைத் தமிழர்களாகிய நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? இது முக்கியமான கேள்வி. ஏனென்றால் தமிழர்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் விடப்பட்டுள்ள மிக முக்கிய சவால். எந்த அளவிற்கு இந்த ராஜபக்ச குடும்பம் அல்லது இப்போது எழுந்திருக்கிற இந்த அரசியல் அமைப்பு, தமிழர்களை ஒரு பொருட் டாகவே கருதமாட்டோம் என்ற செய்தியை சொல்லி யிருக்கிறார்கள் என்றால், பொது அட்டவணை என்ற ஒன்று உண்டு தேசிய பொது அட்டவணை என்று ஒன்று உண்டு; அதன் மூலமாக அவர்கள் பதினேழு பேரை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம். அந்த பதினேழு பேரில் உண்மையான தமிழ் பிரதிநிதி இல்லை. ஒரே ஒருவர் சுரேன்ராகவன் என்பவர். அவர், தமிழர்களை அரசியலில் விலைபேசி விற்று சிங்களத்த வரோடு கூடிவாழ்கிற ஒரு ஆள் என்று பார்க்கப்படுகிற முன்னாள் வடகிழக்கு மாகாண ஆளுநர். எனவே அவரைத் தமிழராக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. தமிழர்களை அரசியல் ரீதியாக வெறுக்கின்ற ஒரு ஆளாகத்தான் நாம் அவரைப் பார்க்க வேண்டியிருக்கும்.

அந்த அளவிற்கு நிச்சயமாக இவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஒன்று நீங்கள் பணிந்து வாழுங்கள்; நாங்கள் இடுகின்ற பிச்சையை பெற்றுக் கொண்டு வாழுங்கள்; இல்லை என்றால், உங்கள் தலையெழுத்து எப்படி யென்றாலும் இருந்து அழிந்து தொலையுங்கள் என்பதுதான் இனிவரும் காலத்தில் இவர்களுடைய அணுகுமுறையாக இருக்கும்.

இப்போது நாம் அடிப்படைகளுக்குச் செல்வோம். ஏன் நாம் தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்தோம் என்பதற் கான நியாயம் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப் பட்டிருக்கிறது. இலங்கை ஒன்றும் எப்போதும் ஒன்றாக இருந்த ஒரு நிலப்பரப்பல்ல. தமிழர்களுக்கு என்று தனி அரசு, அரசுகள் அங்கே இருந்திருக்கின்றன. சிங்களருக் கென்றும் தனி அரசுகள் இருந்திருக்கின்றன. வெள்ளையர் கள் வந்த பிறகுதான் குறிப்பாக பிரித்தானியர் வந்த பிறகுதான் அவர்களுடைய பொருண்மிய அரசியல் அதிகார நிர்வாக ஒழுங்கு நலன்களுக்காக அந்த ஒட்டு மொத்த நிலபரப்பும், தமிழர் தனித்துவ தேசிய நிலப்பரப்பும், அடையாளங்களும், ஆட்சி அலகுகளும் அழிக்கப்பட்டு ஒற்றை ஆட்சி அமைப்பு கொண்டுவரப் பட்டது. அல்லது ஒரு ஆட்சி நிலப்பரப்பாகக் கொண்டு வரப்பட்டது. அவர்கள் 1947-48 இல் இலங்கையை

விட்டுச் சென்றபோது, சனநாயகம் என்ற ஏற்பாட்டில் தமிழருக்கும் உரிய இடம் இருக்கும் என்ற ஒரு உறுதிப் பாட்டுடன் விட்டுச் சென்றனர்.

ஆனால் சனநாயகம் என்பது நான் சொன்னது போல பெரும்பான்மையினரின் ஒரு சர்வாதிகாரமாக ஆகிவிட்டு, அப்படித்தான் விடுதலைப்போராட்டம் எழுந்தது. அந்த விடுதலைப் போராட்டத்தினுடைய அடிப்படைத் தர்க்கமே தமிழ் மக்களினுடைய ஒரு வன்முறை கலந்த அல்லது ஆயுதம் ஏந்தியப் போராட்டம் என்பது தன்னில் ஒரு பிரச்சனைத்தன்மை வடிவமாக முகிழ்த்த ஒன்றல்ல. மாறாகத் தொடர்ந்த, திட்டமிடப்பட்ட, நிறுவனமயப் படுத்தப்பட்ட ஆட்சி அதிகார அலகுகள், மற்றும் ஒழுங்குகளில் உள்ளாக்கப்பட்ட சிங்கள பேரினவாதம்தான் அடிப்படை அரசியல் பிரச்சனை. அந்த அரசியல் பிரச்சனையை எதிர்கொள்வதற்குத்தான் தமிழர்கள் ஆயுதம் தரித்தார்கள்.

வட்டுக்கோட்டையில் தொடங்கி தந்தை செல்வநாயகம் வழியாக அறவழியில் அனைத்துப் போராட்டங்களும் தோற்றுப் போனபிறகு கொடுமையாக ஒடுக்கப்பட்டு விட்டப் பிறகு தொடர்ந்து புறக்கணிப்பு, வன்முறைகள், நிராகரிப்புகள் அரசியல் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல் என்கின்ற நிலையில்தான் தமிழர்கள் ஆயுதமேந்தி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமையில் தங்கள் தன்னாட்சி உரிமைக்காக ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

அந்தப் போராட்டத்திற்கு சிங்களபேரினவாதம்தான் அடிப்படைப் பிரச்சனை என்பதை உலகம், ஒத்துக்கொள்ளாத காரணத்தினால்தான் உலகச்சூழலும் இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்களும்தான், அந்த ஒசாமா பின்லாடன் நிகழ்வுக்குப்பின்னால் பயங்கரவாதம் என்ற ஒரு அரசியல் கருத்தாக்கமாக எழுந்த பிறகு அந்த பயங்கரவாதம் என்ற பரந்த பதாகைக்குள் எம்மையும் விட்டு சுழற்றி மூடி, நம் விடுதலைப் போராட்டத்தை நிர்மூலமாக்கினார்கள். அதிலிருந்து மீண்டுவருவதற்கான அந்த முயற்சியை உலக சமுதாயமும் உன்மத்தமாக எடுக்கவில்லை. தமிழர் அரசியலும் வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றால், ஏன் தமிழ்தேசியக் கூட்டணி இன்று மக்களால் நிராகரிக்கப்பட்டு நிற்கிறது என்றால், போருக்குப்பிறகு எத்தனையோ சமூகங்கள் எழுந்திருக்கின்றன. ஜப்பான் எழவில்லையா, போரில் நிர்மூலமாக்கப்பட்ட பிறகு ஏன் ஜெர்மனிய தேசம் எழவில்லையா? ஏன் 20, 30 ஆண்டுகள் சீனாவை எதிர் கொண்டு, அமெரிக்காவை எதிர்கொண்டு எத்தனை பெரிய எதிரிகளையெல்லாம் எதிர் கொண்டு வியத்நாமிய மக்களுடைய விடுதலைப்போராட்டம் வெல்லவில்லையா? அல்லது ஆப்பிரிக்க நாடுகளுடைய விடுதலைப் போராட்டங்கள் தலைவர்களை இழந்துவிட்டப் பிறகும் அல்லது தலைவர்கள் ஏன், இயக்கங்கள் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டப் பிறகும் கூட அந்த அரசியல் நியாயங்களும், கோரிக்கைகளும் வலுவாக கூர்மையாக முன்பிருந்ததைவிட வீச்சோடும், வேகத்தோடும் முன்னெடுக்கப்படவில்லையா? எடுக்கப்பட்டன அது தான் வரலாறு.

ஏன் தமிழர் அரசியலில் அது நடக்கவில்லை? போருக்குப்பின் நாம் அப்படி மங்கிப்போன, மழுங்கடிக்கப் பட்டுப்போன அவநம்பிக்கையுற்ற புதுதில்லிக்கு மட்டும் காவடி எடுப்பதும் ஏதோ ஒரு உலக நாடு நமக்குத் தீர்வு தந்துவிடும் என்று எண்ணிக் கொண்டு, நாட்டில், களத்தில் மக்களோடு மக்களுடன் நின்று மக்களரசியலைக் கட்டியெழுப்பத் தவறியதை இன்றேனும் கற்றுக்கொள்ளப் போகிறோமா? இல்லையா? ஆம் மக்கள் பலவீன முற்றுத்தான் இருக்கிறார்கள். மக்கள், போரில் களைப் புற்றுத்தானிருக்கிறார்கள். மக்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்றுதான் இருக்கிறார்கள். எனினும் நாம் ஒரு தேசிய இனம் என்று நம்புவோமானல் நமக்கு ஒரு நெடிய பாரம்பரியமும், ஒரு வரலாறும் நமக்கென்று ஆட்சிகளும், அரசுகளும் மாபெரும் பேரரசுகளும் ஒருகாலத்தில் இருந்தன என்று நம்புவோமானால் மீண்டும் ஆயுதம் தூக்குவோம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏன் அறவழியிலான காத்திரமான உள்ளீடுகள் வலுப்பட்ட ஒரு கள அரசியலைக் கட்டியெழுப்ப நாம் தவறினோம்?!

விடுதலைப்போராட்டத்தினுடைய நினைவுகளைக் கொச்சைப்படுத்தியவர்களிடம் அந்த கதையாடலை ஏன் நாம் விட்டோம்?! விடுதலைப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் நமக்கு சில பிழைகள், சில சறுக்கல்கள் இருந்திருந்தாலும் கூட, எத்துணைப் பெரிய தியாகங்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த மாபெரும் பேராட்டத்தினுடைய நினைவுகளை எரிபெருளாக்கி, நினைவுகளை மாபெரும் அடித்தளக் கற்களாக்கி, அடித்தள மூளைக்கற்களாக மாற்றிக் கொண்டு ஏன் ஒரு அரசியல் அறப்போராட்டத்தைக் களத்திலும், புலத்திலும் கட்டியெழுப்பத் தவறினோம்?! இந்த கேள்வியைத்தான் கேட்கவேண்டும். இந்த இடத்தில் தான் கஜன்பொன்னம்பலம் போன்றவர்களின் வெற்றியினூடாக தமிழ் நிலப்பரப்பின் மக்களின் ஒரு சிறு தொகுதியினர் ஒரு செய்தியினை சொல்லியிருக் கிறார்கள். நாங்கள் இனிமேலும் நிரந்தரமாக மவுனித்து இருக்கமாட்டோம்.

ஆயுதம் தூக்கப்போவது இல்லையாக இருக்கலாம். ஆனால் ஒரு உறுதியான அரசியலை நாங்கள் எதிர்பார்க்கிறோம். நாங்கள் மக்களோடு மக்களாக நின்று எங்கள் அபிலாசைகளை எடுத்துச்சொல்ல பாராளு மன்றத்திற்கு சிலர் செல்வதால் மட்டுமே தீர்வு வந்துவிடாது. உண்மையில் இலங்கையினுடைய எதிர்கட்சியாக இருக்கின்ற தகுதியை தமிழ்தேசியக் கூட்டணிக்கு உருவாக்கித் தந்த காலக்கட்டம் என்பது தனித்துவமான ஒரு அரசியல் இயக்கத்தைக் கூர்மையோடு, தெளிவோடு நீண்டகால இலக்கோடு கட்டமைக்க வேண்டிய ஒரு காலக்கட்டம்.

இப்பொழுது எழுந்திருக்கிற அச்சுறுத்தல் என்பது வெறும் வடகிழக்கு தமிழ்மக்களின் அவர்களுடைய அரசியல் எதிர்காலத்துக்கு மட்டுமானது அல்ல, இசுலாமிய மக்களுக்கும் ஏன் தென்னிலங்கையின் ஏனைய தமிழ் மக்களுக்கும் ஒரு மிகப்பெரிய சவாலாகத்தான் எழுந்திருக்கிறது. அவர்களையும் தேவைக்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. செந்தில் தொண்டைமான், மலையகத்தமிழர் ஆறுமுகம் தொன்டைமான் அவர் தீவிரமான ராஜபக்ச ஆதரவாளர்தான் இருந்தாலும் கூட அவரைக்கூட புதிய அரசியலமைப்பு அதிகார அமைப்பில் தோற்கடித்துவிட்டார்கள். விரும்பியிருந்தால் தேசிய அட்டவணையில் அவரைக் கொண்டுவந்திருக்க முடியும்; கொண்டுவரவில்லை. தேவையென்றால் உங்களைப் பயன்படுத்திக்கொள்வோம் உங்கள் இடத்தில் இருந்து கொண்டு நாங்கள் இடுகின்ற தருமத்தை, பிச்சையை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதாக இருக்கின்ற காலக்கட்டத்தில் தன்மதிப்பான ஒரு நீண்டகால அரசியல் பயணத்தை வடகிழக்குத்

தமிழர்களும், தென்னிலங்கைத் தமிழர்களும், இசுலாமியத் மக்களும் ஒரு தெளிவான அரசியல் நடைபாதை அமைத்து அதை அரசியல் நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும் என்பது முதல் கோரிக்கை.

அரசியல் பயிற்றுவியுங்கள். மக்களோடு இணைந்திருங்கள். வெளிநாடுகளுக்கு நீங்கள் பயணப்படலாம். வெளிநாடுகளுக்கு ஆயிரம் கவலைகள் இருக்கும். பல கவலைகள் இருக்கும். அவர்கள் அந்தந்த களத்தின் தேவைக்கு ஏற்றபடியான கவலைகள் இருக்கும். இன்று இந்தியாவுக்கு கவலை என்பது சீனாவினுடைய மீள் வருகையை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதாக இருக்கும். அதற்காக ராஜபக்சேக்களோடு சமரசம் செய்து கொள்கிற அணுகுமுறையைத்தான் அவர்கள் கடைபிடிப் பார்களே தவிர தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்வார்கள் என்று தயவுசெய்து எதிர்பார்க்காதீர்கள். புதுதில்லி என்ன செய்கிறதோ அதைத்தான் அமெரிக்காவும் ஆமோதிக்கும். இப்படிப்பட்ட ஒரு சூழலில், ஒரு மூன்றாம் உலக அரசியலில் மூன்றாம் உலகம் என்றில்லை, ஒரு பைபோலர், அமெரிக்கா சீனா என்கிற இரட்டை நிலையிலிருந்து ஒரு பொதுக் களத்தை நோக்கி உலக அரசியலை நகர்த்த வேண்டிய சக்திகள் அடுத்த பத்து ஆண்டுகளில் நிச்சயமாக உருவாகும்.

அய்ரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகள் இந்த கோவிட்19 ஒரு தொற்றுப் பேரிடரை மிக மிக அற்புதமாக கையாண்டிருக்கிறது. ஜப்பான் கையாண்டிருக்கிறது, தென்கொரியா கையாண்டிருக்கிறது. வியத்நாம் கையாண்டிருக்கிறது இப்படி புதிய நாடுகள் புதிய ஆற்றல் மையங்களாக உருவாகும் போது தமிழர்கள் தங்களுடைய வெளியுறவு உரையாடலையும், வெளியுறவு தொடர்புகளையும் பன்முகப்படுத்த வேண்டும். ஒரு கட்டத்தில் தமிழர்களுடைய முயற்சியினூடாக உலகெங்கும் உள்ள தேசிய இனங்களுக்கு பாதுகாக்கப்படும் உரிமை என்பது அடிப்படை உரிமை. ஏனென்றால் இது பெரும்பான்மை தேசிய இனங்களுடைய பேரெழுச்சியுனுடைய காலம் அது அமெரிக்காவாக இருக்கட்டும் ஏன் சீனாவாகக்கூட இருக்கட்டும். நீங்கள் சர்வாதிகாரங்களுடைய மீள் எழுச்சியும் பேரெழுச்சியும் நிகழ்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், உலகு தழுவிய சனநாயகசக்திகளோடு, ஒரு நீண்ட திறந்த, ஆழமான, காத்திரமான உரையாடலில், உறவு உருவாக்கலில் தமிழர்கள் ஈடுபடவேண்டியது என்பது மீண்டும் ஒரு முக்கியமானத் தேவையாக இருக்கிறது.

இன்னொன்று, தமிழகம் வலுவாக இயங்கினால் மட்டும்தான் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சனை மையத்திற்கு வரும். அந்த தமிழகம் வலுவாக இயங்குவது என்பதை நான் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கின்றேன். தமிழகத்தில், தமிழீழப் பிரச்சனையுடைய தோல்விக்கு முக்கிய காரணம். தமிழ்நாட்டினுடைய உள்நாட்டு அரசியலில், பிரச்சனையில் தமிழீழப் பிரச்சனையை விடுதலைப்பிரச்சனையை கொண்டு வந்து திணிக்கப் பட்டதுதான். இதை தயவு செய்து புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்குத் தமிழக அரசியல் தெரியாது. புரியாது. அதனுடைய பரிமாணங்களுடைய முழுத் தன்மையும் விளங்கிக் கொள்ள முடியாது.

இதைக் கெஞ்சிக் கேட்கின்றேன். பாதம் தொட்டுக் கேட்கின்றேன். தமிழக அரசியல் என்பது அது தனி யானது. அது ஏறக்குறைய ஏழுகோடி மக்களின் அரசியல். இந்த அரசியலினுடைய ஒட்டுமொத்தக் கருத்தை உருவாக்குகின்ற நிலையில் இன்று எந்த ஒரு இயக்கமோ எந்த ஒரு தனி அரசியல் கட்சிகளோ இல்லை. ஆனால் ஒரு பொதுவான ஒத்த கருத்தை உருவாக்கின்ற முயற்சியில் ஈடுபட்டால் மட்டும்தான் புதுதில்லிக்குத் தமிழகம் அழுத்தம் தர முடியும். இங்கிருந்து புறப்படுகின்ற தனிப்பட்டக் குழுக்களினுடைய வீரப்பேச்சுக்களால் நிச்சயமாக புதுதில்லி அதிகாரம் நகரப்போவதில்லை.

காரணம், களத்தில் மிகப்பெரிய ஒரு இடையூறை ஏற்படுத்துகின்ற அளவிற்கு எந்த ஒரு இயக்கமும் ஆற்றலோடு இல்லை. ஆற்றல் இருந்தாலும் துணிவு அந்த இயக்கங்களுடைய தலைமைகளுக்கு இல்லை. களத்தில் இடையூறு செய்து புதுதில்லியுடைய கவனத்தை ஈர்க்கிற மேடையிட்டு மிகப்பெரும் வீரவசனங்களைத்தான் பேச முடிகிறதே தவிர அல்லது ஊடகங்களுக்கு முன் நின்று கொண்டு உக்கிரக் குரலெடுத்துப் பேச முடிகிறதே தவிர, ஆட்சியாளர்கள் கண்டு அஞ்சுகிற அளவுக்கான ஒரு கள அரசியலை இடையூறு அரசியலை உருவாக்குகின்ற ஆற்றல் எந்த அமைப்பிற்கும் இல்லை.

ஒரு பொதுக்கருத்தை அனைத்து அரசியல் கட்சிகளிடத்திலும் ஏற்படுத்தி, அந்த ஒரு பொதுக்கருத்தை வலுப்படுத்தி, அந்த பொதுக்கருத்தினூடாக ஆளும் கட்சி, எதிர்கட்சி அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து இயக்கங்கள் என்கிற வகையில் ஈழத்தமிழர்கள் பிரச்சனைக்குறித்து பொது அரசியல் நிலைப்பாட்டை தமிழகத்தில் உருவாக்குவதும் இன்றைய காலக்கட்டத்திற்கு முக்கியம். அதற்கான பொதுத்தலைவர்கள் என்று நமக்கு இல்லாமல்போனதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற தலைவர்கள் இன்று இல்லாமல் போனதும் ஒரு பெரிய வெற்றிடமாகவும் இடைவெளியாகவும் இருக்கிறது. இல்லாத இடத்தை நிரப்புவதற்கு நாம்தான் தலைவர்களை கண்டுபிடிக்க வேண்டும். அந்த திசையில் முயற்சிகள் எழவேண்டும்.

இன்னொன்று, மக்கள் இன்று படிப்படியாக அணியமாக வேண்டிய ஒரு சூழல் இருந்தாலும் களத்தில் அந்த சூழலும் தேவையுமிருந்தாலும் புலத்தில் இருப்பவர்கள் பாதுகாப்போடு இருக்கின்றோம். கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல ஆளும் ஆட்சிகளுடனும், ஆளும் அதிகார அமைப்போடும் சமநிலையில் இருந்து உரையாடக் கூடிய தலைவர்கள் இன்று இந்த நாடுகளில் உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் நீண்ட இலக்கோடு தமிழீழ மக்களின் அரசியல் திட்டங்களை நிர்மாணிக்க வேண்டும். முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நமக்கு இன்று அவநம்பிக்கையாக இருக்கலாம் ஆனால், அவநம்பிக்கையினுடைய கடைசி புள்ளியிலிருந்து கொண்டுதான் எப்போதும் தமிழன் எதிர் நீச்சல் போட்டு வென்றிருக்கிறான். ஒருநாள் வெல்வான். இந்தப் பயணம் நீண்டதாக இருக்கலாம் ஆனால் நிச்சயம் அந்த போராளிகளின், மாவீரர்களின் நினைவில் நின்று கொண்டு செயல்படுவோம் அந்தத் தியாகங்கள் வீண்போகக்கூடாது தமிழருக்கான கவுரவமான ஒரு அரசியல் தீர்வு வந்தே ஆகவேண்டும் வருகின்றவரை அவநம்பிக்கை அடையமாட்டோம் நம்பிக்கை இழக்க மாட்டோம் என்கிற உணர்வோடு முன்செல்வோம்.

ஜெகத் கஸ்பரின் காணொளி உரையை
எழுத்துருவாக்கித் தந்து உதவியவர்:
தோழர் இரா. மோகன்ராஜன்

பத்தி

● வேணு மாதவன்
venumadhavan2020@gmail.com




“என்னிடமிருந்தாலும்
இது நம் முகம்
என் உதட்டில் பிறந்தாலும்
இது நம் மொழி”

– இன்குலாப்

*“நான் சாந்திலால் பேசறேன். அனேகமா இன்னைக்கு, நாளைக்குள்ளே நான் இறந்திடுவேன். போய்ட்டு வர்றேன், எல்லோருக்கும் ரொம்ப நன்றி! டிரீட்மெண்ட் எல்லாம் ஒண்ணுமில்லே, சரியில்லே. ஆனா, இரைப்பு இருக்கு. ‘ஆக்ஸிஜன்’ வெக்கிறாங்க, அரையும்குறையுமா. டிரீட்மெண்ட் சரியில்லே, அவ்வளவுதான். இது என் கடைசிக் கட்டம். நான் போய்ட்டு வர்றேன், நன்றி!”*



டாக்டர் சாந்திலால்

தொலைக்காட்சிகளிலும் சமூக வலைத்தளங்களிலும் ஒலித்த இந்த உருக்கமான குரல் எல்லோரையும்போல என்னையும் உலுக்கிப் போட்டுவிட்டது. தன் மரணத்தைக் கண்முன் காண நேர்வது எவ்வளவு பெரிய கொடுமை! அந்தக் கொடுமை விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் மருத்துவமனை நடத்திவந்த மருத்துவர் சாந்திலால் அவர்களுக்கு நேரிட்டிருக்கிறது. கொரோனா தொற்று உறுதியானதால், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட மருத்துவர், தமது மரணத்தை முன்னறிவித்த அன்றே ‘சிகிச்சை பலனின்றி’ உயிரிழந்திருக்கிறார்.

மறைந்த மருத்துவரை நான் நன்கறிவேன். இருபது ஆண்டுகளுக்கு முன் நான் ’உங்கள் ஆரோக்கியம்’ என்னும் மருத்துவ இதழுக்கு ஆசிரியராக இருந்தேன். அப்பொழுது மாதம் தவறாமல் மருத்துவர் சாந்திலால் அந்த இதழுக்குக் கட்டுரைகள் எழுதி அனுப்புவார். அவரது தாய்மொழி சௌராஷ்டிரம். அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட டி. எம். சௌந்தரராஜன் எவ்வாறு தமிழைத் தெள்ளத் தெளிவாக உச்சரித்துப் பாடினாரோ, அவ்வாறு எளிய தமிழில் முத்துமுத்தான கையெழுத்தில் மருத்துவர் சாந்திலால் எழுதுவார். அவரைப் போலவே மருத்துவர் கு. கணேசன் அவர்களும் எழுதுவார். மருத்துவர் கு. சிவராமன் அவர்களும் அந்த இதழில் பங்களிப்பு செய்துள்ளார். அவர்கள் எழுத்தில் கைவைக்க வேண்டிய அவசியமே இருக்காது, அப்படியே பிரசுரிக்கலாம்.

மருத்துவர் சாந்திலாலுடன் எனக்குக் கடிதத் தொடர்பு இருந்ததே தவிர, அவர் குரலை நான் கேட்டதில்லை. இப்பொழுதுதான் கேட்டேன், அதை நான் இப்படியா கேட்க வேண்டும் !

மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க அவர் பேசியதைக் கேட்கையில் மனம் பிசைந்தது.

மருத்துவர் சாந்திலால் ராஜபாளையத்தில் நாற்பது ஆண்டுகளாக மருத்துவம் பார்த்துவந்தவர். வைகோவின் தனிப்பட்ட மருத்துவராக நடைப்பயணத்தில் உடன்சென்றவர். திராவிட இயக்கங்களுடன் இணைந்து செயல்பட்ட அவர் எழுத்தாளர் பொன்னீலனால் இடதுசாரி இயக்கத்திற்கு அழைத்துவரப்பட்டவர். கலை இலக்கியப் பெருமன்றத்தில் பொறுப்பு வகித்தவர்.

கொரோனா காலத்திலும் தம் மருத்துவமனையைத் திறந்துவைத்து மக்களுக்குச் சேவை புரிந்த ’மக்கள் மருத்துவர்’ சாந்திலால், மருத்துவத்தின் பேரில் நோயாளர்கள் தேவையில்லாமல் பணம் செலவழிக்கக் கூடாது என்ற கொள்கை கொண்டவராக இருந்தார் என்கிறார்கள்.

கதைகள், கவிதைகள், கட்டுரைகள் வடித்த எழுத்தாளர். தமிழ் இலக்கியத்திலும் திரைப்படப்பாடல்களிலும் நெஞ்சைப் பறிகொடுத்தவர். எழுத்திலும் பேச்சிலும் நகைச்சுவை மிளிர வாழ்ந்தவர். ஐந்தாண்டுகளுக்கு முன்பு மறைந்த அவரது மனைவியின் நினைவாக சுந்தரி சாந்திலால் நினைவுநூலகம் அமைத்தவர். குழந்தைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்க, அவர்களுக்கு அன்பளிப்பாகப் புத்தகங்களை வழங்கிக்கொண்டிருந்தவர். இவ்வாறு நிறைவாழ்வு வாழ்ந்த பெருந்தகை மருத்துவர் சாந்திலால்.

ஆள் அழகாகவும் கம்பீரமாகவும் எப்போதும் சிரித்த முகத்துடனும் இருந்தார் என்கிறார்கள். என்ன இருந்து என்ன , கொரோனா அந்த இனிய மனிதனைக் காவு வாங்கிவிட்டதே!

■ ■

இன்குலாப் சிறுகதைகள் குறித்து எழுத்தாளர் தமிழ்ச் செல்வன் எழுதி, சென்ற 'காக்கைச் சிறகினிலே' இதழில் வெளிவந்துள்ள கட்டுரை, பண்பட்ட எழுத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று கருதுகிறேன். 'கடிதோச்சி மெல்ல எறிதலை' இளம் எழுத்தாளர்கள் அவரிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

கம்யூனிஸ்டுகளுக்கும் அழகியலுக்கும் காத தூரம் என்றொரு வசை உண்டு. அந்த வசை தமிழ்ச் செல்வன் போன்று விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய 'முற்போக்கு' எழுத்தாளர்களால் கழிகிறது என நான் உளமார நம்புகிறேன். அவரது எழுத்தைப்போலவே பேச்சும் ரசிக்கும்படியாக இருக்கும்.

இசைக்கவி ரமணனின் நூல் வெளியீட்டு விழா, ஆய்வறிஞர் ஆ. இரா. வேங்கடாசலபதியின் ஐம்பதாம் அகவை நிறைவு விழா ஆகிய நிகழ்ச்சிகளில் தமிழ்ச்செல்வனுடன் மேடைகளைப் பங்கிட்டுள்ளேன். இரண்டாவது நிகழ்ச்சியில், தமிழ்ச்செல்வனும் நானும் சம்பந்தப்பட்ட ஒரு சுவாரசியமான சங்கதியை அவையோரிடம் பகிர்ந்துகொண்டேன். அதை இங்குக் 'காக்கை'யிலும் நீங்கள் அறியத்தருகிறேன்:


ச. தமிழ்ச்செல்வன்

"தோழர் தமிழ்ச் செல்வன் எப்போது என்னைக் கண்டாலும் அருகிலிருக்கும் தோழர்களிடம் 'இவரால்தான் எனக்கு நான் பார்த்துவந்த வேலை போனது' என்று சொல்வது வழக்கம். அவர் சொல்வது உண்மைதான். அவசரநிலைக் காலத்தில் தமிழ்ச்செல்வன் ராணுவத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். நான் 'மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் சார்பு இதழ்' என்று மத்திய, மாநில அரசுகளால் முத்திரை குத்தப்பட்டிருந்த 'விடியல்' இதழுக்கு ஆசிரியர். என் இதழை அவருக்கு அனுப்பிவைக்கப்போய் வந்தது வினை; தமிழ்ச் செல்வனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

பின்னர், அவர் தமிழ்நாட்டுக்கு வந்து அஞ்சல் துறையில் மனச்சான்றுக்கு ஊறு நேராமல் பணியாற்றியதையும் என் மீதான குற்றச்சாட்டுடன் சேர்த்துச் சொன்னால் நல்லது."

மேடையிலிருந்த தமிழ்ச் செல்வன் ரசித்துச் சிரித்தார்.

■ ■

*"மிதிபடுவதியல்பான*
*தேடும்*
*தான் மிதிக்க ஒரு*
*தலை"*

இன்குலாபின் முழுக் கவிதைகள் திரட்டான 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' தொகுதியில் 655ஆம் பக்கத்தில் 19 ஆகஸ்ட் 2004 என்ற நாட்குறிப்போடு வெளியாகியிருக்கும் 'கவிதை' இது.

யாருக்காவது ஏதேனும் புரிகிறதா என்று பாருங்கள். 'பொருள் விளங்கா உருண்டை' போல ஏதோ ஒன்று என எண்ணாதீர்கள். இன்குலாப் சரியாக எழுதிக்கொடுத்த கவிதையைத்தான் இப்படிக் குதறி எடுத்திருக்கிறார்கள்.

இதைப் 'படித்த' வாசகர்கள் யாரும் இதன் இருண்மை குறித்துக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இதுநாள் வரைக்கும், புத்தகத்தைப் பதிப்பித்த இன்குலாப் அறக்கட்டளைக்கோ, பதிப்பாக்கம் செய்த அன்னம் கதிருக்கோ, 'இயல் பிரிவுகளில் அந்தந்தப் பொருண்மையோடு தொடர்புடைய புதிய கவிதைகளை இணைக்கும் பணியைச் செய்த தோழர் செ. சண்முகசுந்தரம் அவர்களுக்கோ' விளக்கம் கேட்டு எவரும் அழைக்கவோ அஞ்சல் விடுக்கவோ இல்லை என்பதுதான் வேடிக்கை. இந்த லட்சணத்தில் இருக்கிறதே வாசிப்பும் பதிப்பும் என்று வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.



குறைந்தபட்சம் இந்தக் கவிதை இடம்பெற்ற 'புலிநகச் சுவடுகள்' தொகுப்பைப் பதிப்பித்த என்னிடம் கதிரோ, சண்முகசுந்தரமோ கேட்டிருந்தால்கூட இன்குலாப் கவிதையை குற்றுயிரும் குறையுயிருமாக சாகடிக்காமல் தடுத்திருப்பேன். இத்தனைக்கும் நான் இன்குலாப் அறக்கட்டளை உறுப்பினன் வேறு.

இன்குலாப் கவிதைகளை அவற்றின் நிறுத்தல் குறிகளோடு நினைவில் வைத்திருக்கும் எனக்கு இந்த அலட்சியம் மனவேதனையை அளித்தது என்று பதிவு செய்ய விரும்புகிறேன்.

'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' முழுக் கவிதைத் திரட்டினைக் கைவசம் வைத்திருப்போர் கவிதையின் சரியான வடிவை அறிந்துகொள்ளும்முகமாக அதனைக் கீழே தருகிறேன்:

*"மிதிபடுவ தியல்பான தோருலகி*
*லூருமொரு புழுதான்மிதிக்கத்*
*தேடுமொரு தலை"*

'இக்கவிதையில் சொற்களைப் பிரித்து அச்சிடாதீர்கள், ஒரு புழு நெளிந்துசெல்வது போல இருக்கட்டும் என்றே சேர்த்து எழுதியிருக்கிறேன் என்று இன்குலாப் விளக்கமும் கொடுத்தார்.' எல்லோருக்கும் எளிதில் புரிய வேண்டும் என்று நினைப்பதால் மக்கள் கவிஞர் இன்குலாப் மிக அரிதாகவே வடிவ நுட்பங்களைக் கைகொள்வார். அந்த வகையில் ஒன்று இக்கவிதை.

தவறு எங்கு நடந்தது என்பதல்ல பிரச்சினை, எங்கு நடந்திருந்தாலும் எவர் அதற்குப் பொறுப்பு என்றாலும் (ஏதாவதொரு வகையில் அது நானே என்றாலும்) தவறு, தவறுதான். அடுத்துவரும் தொகுப்புகளிலாவது தொடர்புடையோர் திருத்திக்கொண்டால் அது பதிப்பறத்திற்கு நன்று.

சுற்றுச்சூழல்

சூழலியல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை 2020:

# இயற்கை வளக்கொள்ளைக்கு சட்டப்பூர்வ அனுமதி

● அருண் நெடுஞ்செழியன்

சூழலியல் தாக்க மதிப்பீடு வரைவு அறிக்கை 2020 ஆனது சூழலியல் செயல்பாட்டாளர்கள், எதிர்க்கட்சிகள் மற்றும் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டு வரும் நிலையில் இத்திருத்தம் மீது சுமார் இருபது லட்சம் கருத்துக்கள் வந்துள்ளதாகவும் மத்திய சூழலியல் அமைச்சகத்திடம் இவையாவற்றையும் பகிர்ந்துள்ளதாகவும் சூழலியல் தாக்க வரைவு அறிக்கைக்கு எதிரான பிரச்சார இயக்கத்தை முன்னெடுத்த "லெட் இந்தியா ப்ரீத்" அமைப்பு தெரிவித்துள்ளது. முன்னதாக கருத்துக் கேட்பிற்கான காலக் கெடுவை நீட்டிக்க மறுத்த மத்திய அரசானது, தற்போது தனது கட்டுப்பாட்டில் உள்ள நீரியை(NEERI) கொண்டு இதுவரை வந்துள்ள மக்கள் கருத்துக்களை திரட்டி தொகுக்கத் தொடங்கியுள்ளது.பின்னர், தொகுக்கப்பட்ட இக்கருத்துக்கள் நீரியின் முன்னாள் இயக்குனர் S.R வாட் தலைமையிலான கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அறிக்கை இறுதி செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது.

சூழலியல் தாக்க மதிப்பீடு வரைவு அறிக்கை 2020 ஆனது, ஏற்கனவே நடைமுறையில் உள்ள சூழலியல் தாக்க மதிப்பீடு சட்டம் 2006 ஐ நீர்த்துப்போகச் செய்ய முயல்கிற நிலையில் தற்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகிற நீரி அமைப்பைக் கொண்டு கருத்துக்களை இறுதி செய்கிற மத்திய அரசின் முடிவிற்கு கொஹ்லி போன்ற கொள்கை வகுப்பு ஆய்வாளர்கள் மற்றும் சூழலியல் செயல்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவித்து வருகிறனர்

## *1.சூழலியல் தாக்க மதிப்பீட்டு சட்டத்தின் உருவாக்கமும் நோக்கமும்*

சூழலியல் பாதுகாப்பு குறித்த அரசியல் சமூகத்தின் அக்கறையானது 70 களில் மைய விவாதமாக மாறத் தொடங்கிய நிலையில் 1972 ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோல்ம் நகரில் சூழலியல் பாதுகாப்பு மாநாட்டை ஐநா நடத்துகிறது.அதில் பங்கேற்றுப் பேசிய இந்தியாவின் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி,சூழலியல் பாதுகாப்பு குறித்த அக்கறையை தனது உரையில் வெளிப்படுத்தினார். (http://lasulawsenvironmental.blogspot.com/2012/07/indira-gandhis-speech-at-stockholm.html)

அதனைத் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டிலே இந்தியாவில் காட்டுயிர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப் பட்டது, பின்னர் நீர் பாதுகாப்பு சட்டத்தை 1974 ஆம் ஆண்டிலும் காற்று மாசை தடுக்கிற சட்டத்தை 1981 ஆம் ஆண்டிலும் மத்திய அரசு இயற்றியது.பிறகு 1984 இல் போபால் யூனியன் கார்பைடு விஷ வாயுக் கசிவு விபத்தில் 5000 க்கும் மேற்பட்ட மக்கள் பரிதாபமாக உயிரிழந்த பேரிடர் நிகழ்விற்கு பின்னர் சூழலியல் பாதுகாப்பு சட்டம் 1986 ஐ மத்திய அரசு கொண்டு வந்தது.

பின்னர் சூழலியல் பாதுகாப்பு சட்டம் 1986 இன் சட்டப்பிரிவு மூன்றின் கீழ் சூழலியல் தாக்க சட்டத்திற்கான வழிகாட்டுதல்களை 1994 இல் உருவாக்கியது.இதன்படி இயற்கை வளத்தை நுகர்கிற வகையிலோ, இயற்கைச் சூழல் அமைவின் மீது விளைவை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு வர்த்தகச் செயல்பாடுகளும் சூழலியல் தாக்க சட்டம் 1994 இன் வழிகாட்டுதலை ஏற்று சூழலியல் அனுமதி ஒப்புதல் வாங்கவேண்டும் என்ற கொள்கை உருவாக்கப்பட்டது.தொழில்நிறுவனங்கள் மீதான அரசின் கண்காணிப்பை உறுதி செய்வதும் இதனொரு நோக்கமாகும்.இதன் மூலமாக நாட்டின் நீர் மின் திட்டங்கள் அனல் மற்றும் அணுமின் திட்டங்கள், சுரங்கத் திட்டங்கள், சாலை மற்றும் கட்டுமானம் திட்டங்கள், சிமெண்ட் ஆலைகள், வேதியல் ஆலைகள் உள்ளிட்ட அனைத்துத் தொழில்களும் மத்திய அரசின் சூழலியல் பாதுகாப்பு கண்காணிப்பு வளையத்தில் கொண்டுவரப் பட்டது.

## *2.சூழலியல் தாக்க மதிப்பீடு சட்டத் திருத்தங்கள்*

சூழலியல் தாக்க மதிப்பீடு சட்டத்தின் வழிகாட்டுதல் கள் 2006 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டன.இந்த இடைப்பட்ட காலங்களில் பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் இணைப்புகள் யாவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டு EIA 2006இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்

பட்டதாக மத்திய அரசு விளக்கமளித்தது. ஆனால் நடைமுறையில் சூழலியல் பாதுகாப்பை EIA 2006 திருத்தம் மென்மேலும் நீர்த்துப் போகச் செய்தது.அதாவது பதினொரு ஆண்டுகளில் 12 முறை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.தொழில் நிறுவனங்கள் சூழலியல் தடையில்லா சான்றிதழை எளிதாக பெறுகிற வகையில் இந்த திருத்தங்கள் செய்யப்பட்டன.

ஜனவரி, 16, 2020 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தமானது, வேதாந்தா மற்றும் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, எண்ணெய் எரிவாயு திட்டங் களுக்கு தளர்வுகள் வழங்கப்பட்டன.

எண்ணெய் எரிவாயு கண்டறிகிற பணிகளை மேற் கொள்கிற அனைத்து நிறுவனங்களுக்கும் சூழலியல் முன் அனுமதி பெறுவதில் விலக்கு அளிக்கப்பட்டது. அதன்படி டெல்டா மாவட்டங்களில் ஹைட்ரோகார்பன் எடுப்பு பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 314 இடங்களில் இனி வேதாந்தாவும் ONGC யும் வேலையை தொடங்கலாம்.

மொத்தத்தில் இந்தியாவில் உலகமய தனியார்மயம் தீவிரம் பெற்ற 2000 ஆண்டுகளில் கார்ப்பரேட்களின் வேலையை சுலபமாக்குவதற்கு, சுரண்டலை சட்டப்பூர்வ மாக்குவதற்கு மக்கள் கருத்து கேட்பு நடைமுறைகளை குறைத்தும் திரித்தும் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

### *3.சூழலியல் பாதுகாப்பு சட்டங்களின் நடைமுறையாக்கம்*

சூழலியல் பாதுகாப்பு சட்டகத்தை இந்திய அரசியல் அமைப்பு பலமாக உருவாக்கியிருந்தாலும் அதன் நடைமுறையாக்கத்தில் பலவீனமாக இருந்தது.நிலச் சீர்திருத்த சட்டம் எவ்வாறு நடைமுறையாக்கத்தில் தோல்வியில் முடிந்ததோ அதுபோன்றே இந்தியாவில் சூழலியல் பாதுகாப்பு விதிகளும் பெரும்பாலும் தொய்வாகவே அமலாக்கப்படுகிறது. இந்தியாவில் பல நீர் மின் திட்டங்கள், சாலைக் கட்டமைப்புகள், அணு மின் நிலையங்கள், எண்ணெய் எரிவாயு எடுப்புத் திட்டங்கள், சிமெண்ட் ஆலைகள், சுரங்கப் பணிகள், வேதியல் நிறுவனங்கள் ஆகியவை பெரும்பாலும் விதிகளை மீறியே இயங்கி வருகின்றன.கண்காணிப்பும் தண்டனைகளும் பெயரளவிற்கே இருந்தன. கடந்த பத்தாண்டுகளாக சூழலியல் பாதுகாப்பில் உருவாகியுள்ள விழிப்புணர்வால், இந்த சூழலியல் பாதுகாப்பு விதிமீறல்கள் யாவும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அம்பலப்படுத்தப்பட்டன. அதுபோலவே கருத்து கேட்பு கூட்டங்களிலும் வெகுஜன மக்களின் பங்கேற்பு மற்றும் சூழலியல் தாக்க அறிக்கை குறித்த விழிப்புணர்வு அதிகரித்தது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

கடந்த மே 7 அன்று விசாகப்பட்டினம் எல்ஜி பாலிமர் தொழிற்சாலையில் ஏற்பட்ட விஷ வாயுக் கசிவு விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.பலரும் பாதிக்கப்பட்டனர்.இந்த பேரிடருக்கு பிந்தைய ஆய்வின்போது , இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்த தொழிற்சாலை சூழலியல் அனுமதி இன்றி இயங்கி வந்தது அம்பலமாகியுள்ளது.

கடந்த மே 27 அன்று கிழக்கு அசாமின் டின்சுகா மாவட்டத்தில் இயங்கிய ஆயில் இந்தியாவின் எரிவாயுக் கிணற்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. சுமார் 1300 குடும்பங்கள் பாதுகாப்பிற்காக வெளியேற்றப்பட்டனர். இவ்விபத்து குறித்து ஆய்வு செய்ததில் ஆயில் இந்தியா நிறுவனமானது போதிய சூழலியல் பாதுகாப்பு விதிகளை கடைபிடிக்காதது தெரியவந்தது. கடந்த 15 ஆண்டுகளாக அசாம் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் போதிய அனுமதி வாங்காமல் இயங்கி வந்ததும் கண்டறியப்பட்டது. இந்த விபத்தால் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த அப்பகுதி நாசமாகியது.

### *4. தற்போதைய திருத்தம் குறித்த விமர்சனம்*

கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் யாவுமே சூழலியல் தாக்க மதிப்பீடு அறிக்கையை வழங்குவது, கருத்து கேட்பு கூட்டத்தை நடத்துவது மற்றும் சூழலியல் தடையில்லா சான்றிதழை மத்திய மாநில அரசிடம் பெறுவது ஆகிய மூன்று முக்கிய சூழலியல் பாதுகாப்பு அம்சங்களை நடைமுறையில் இருந்து விலக்களிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தற்போதைய திருத்தமும் அதையே தொடர்கிறது. அதை மூன்று வழிகளில் செய்கிறது. முதலாவதாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்ற பெயரில் திட்டங்களை எதிர்ப்பில்லாமல் அமலாக்குவது, இரண் டாவது திட்ட வரையறைகளை மாற்றி விலக்களிப்பது, இறுதியாக கருத்து கேட்பு கூட்டம் மற்றும் புகார்கள் மூலமான மக்களின் பங்கேற்பை அகற்றுவது. இந்த வரைவு முழுவதுமே இந்த மூன்று நோக்கத்தை சாரமாகக் கொண்டுள்ளன.

### *தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம்?*

தற்போது மத்தியசுற்றுச்சூழல் அமைச்சகம் வெளி யிட்டுள்ள புதிய வரைவு அறிக்கையானது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் குறித்து மக்களுக்கு விளக்கவேண்டிய அவசியமில்லை என்கிறது. (Draft EIA-2020 பக்கம்-9)இந்த திருத்தமானது, திட்டம் குறித்த பொது மக்களின் கரிசனங்களை கவலைகளை அறவே ஒழித்துக்கட்டுகிறது. பொது மக்களின் கருத்து கேட்பு கூட்டங்கள் அவசியமில்லை என்கிறது.பொது மக்களை முற்றிலுமாக ஓரம் கட்டுகிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்ற பெயரில் மண்ணுக்கும் மனிதர்களுக்கும் கேடு விளைவிக்கக் கூடிய ஆபத்தான திட்டங்களை கேள்வி கேட்பாரின்றி கார்ப்பரேட் நிறுவனங்கள் மேற்கொள்ளலாம் என்றாகிவிடுகிறது. திட்டத்தின் "வெளிப்படைத்தன்மை" அம்சத்தை "தேசிய முக்கியத்துவத்தால் அரசு மாற்றீடு செய்கிறது.

இனி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என சேலம் – சென்னை எட்டு வழி பசுமைச் சாலை திட்டத்திற்கு பெயர் சூட்டப்பட்டு, விளை நிலங்களை பிளந்துகொண்டு சாலை போடலாம். ஏனெனில் இந்த திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே பசுமை வழி சாலைத் திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று, இதற்கு சூழலியல் முன் அனுமதியொன்றும் தேவையில்லை என மத்திய அரசின் தேசிய சாலைப் போக்குவரத்து துறை சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது. சுற்றுச்சூழல் அமைச்சகமும் இதை ஒத்தூதியது.இனி திருத்தச் சட்டம் வந்துவிட்டால் போதும் யாரையும் கேட்காமலே நமது வீட்டுக் கூரையின் மீதே சாலை போட்டுவிடுவார்கள். எதிர்த்துக் கேட்டால் தேசத் துரோகி பட்டம் கிடைக்கலாம் அல்லது குண்டர் சட்டம் போடப்படலாம்.

இதைப்போல, தேனியில் அமையவுள்ள நியூட்ரினோ ஆய்வுத் திட்டமும் கூட தேசிய முக்கியத்துவம் வாய்ந்து திட்டம் என்ற பெயரில், சூழலியல் தடையில்லா சான்றிதழ் தேவையில்லை என அறிவிப்பு வரலாம். முன்னதாக நியூட்ரினோ ஆய்வுக் கூடத் திட்டத்தை,

திட்ட வகையினம் A இல் கொண்டு வராமல், திட்ட வகையினம் B இல் கொண்டு வந்து தடையில்லா சான்றிதழ் அவசியமில்லை என மத்திய அரசு பசுமை தீர்ப்பாயத்தில் வாதிட்டது. ஆனால் இத்திட்டமானது (கேரள மாநிலம்) இடுக்கியில் உள்ள மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவில் இருந்து 4.9 கிமி தொலைவில் வருவதை சுட்டிக் காட்டி இத்திட்டத்தை வகையினம் A இல் கொண்டு வந்தது பசுமைத் தீர்ப்பாயம். மேலும் திட்டம் A வகையில் வந்ததால் சூழலியல் தடையில்லா சான்றிதழ் பெறுவது கட்டாயமாகிவிட்டது. தற்போது இந்த திட்டம், சூழலியல் அனுமதி பெறுகிற நடைமுறையால் முடங்கியுள்ளது. ஆக, இனி புதிய வரைவு சட்டமாகிவிட்டால், இத்திட்டம் நிச்சயமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக மாற்றப்பட்டு சூழலியல் தடை நீக்கப்பட்டுவிடும்.

### *திட்டத்தை வகைப்படுத்துவது எப்படி?*

தற்போதைய திருத்தத்தில் திட்டங்கள் A, B1 மற்றும் B2 என மூன்றாக வகைப்படுத்தப்பட்டு திட்டத்தின் அளவு மற்றும் பண்பைப் பொருத்து சூழலியல் முன் அனுமதியின் அவசியத்தன்மையை தீர்மானிக்கிற முறை நடைமுறையில் உள்ளது.இதில் B2 வகையினத்தில் உள்ள சில திட்டங் களுக்கு சூழலியல் முன் அனுமதி அவசியமில்லை என்கிறது.ஆக, திட்டங்களை A வகையில் இருந்து B2 விற்கு மாற்றி விட்டால் மேற்கூறிய எந்த தடையும் நிறுவனங்களுக்கு இல்லாமல் போகிறது.டெல்டா மாவட்டத்தில் ஹைட்ரோகார்பன் திட்டப் பணிகளில் (314 கிணறுகள்) ஈடுபடவுள்ள வேதாந்தாவும் ONGC யும் எரிவாவு கண்டறிகிற (Exploration) பணிகளுக்கு இவ்வாறுதான் மத்திய அரசு விலக்களித்து, உத்தரவிட்டது. தற்போதைய வரைவின்படி கீழ்வரும் திட்டங்கள் B2 வகையில் கொண்டு வரப்படுகிறது.(Draft_EIA_2020 பக்கம் 37)

- 25 MW கீழ் மின்சார உற்பத்தி செய்கிற நீர் மின் திட்டங்கள்.
- அனைத்து சூரிய மின் தகடு உற்பத்தி திட்டங்கள் மற்றும் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டங்கள்
- 1, 50, 000 சதுமீட்டர் பரப்பளவிலான கட்டுமானத் திட்டங்கள்
- 2, 000 ஹெக்டேர் பாசன பரப்பளவிற்கு உட்பட்ட நீர்ப் பாசனத் திட்டங்கள்
- பக்கவாட்டில் 70 மீ அளவிற்கான சாலை விரிவாக்க திட்டங்கள்
- சிமெண்ட் மற்றும் சுரங்கப் பணிகளில் ஈடுபடுகிற சிறு குறு நிறுவனங்கள்
- துறைமுகங்களை இணைக்கிற நீர்வழி சாலைகள்.

சிக்கல் என்னவென்றால் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் உற்பத்தி திறனை கணக்கில் கொள் ளாமல், அமைவிடத்தை கணக்கில் கொண்டால் மட்டுமே அத்திட்டத்தால் ஏற்படுகிற சூழலியல் விளைவுகளை அறியமுடியும்.உதாரணமாக நீர் மின்திட்டமானது எந்தவித அறிவியல் பூர்வ ஆய்வுமின்றி திடுமெனே ஆற்றின் குறுக்கே கட்டினால் என்னாவாகும் யோசித்துப் பாருங்கள்.

### *பொது மக்கள் பங்கேற்பிற்கு கட்டுப்பாடு:*

புதிய திருத்தத்தின்படி, இனி தொழிற்சாலைகளின் சூழலியல் விதி மீறல்கள் குறித்து மக்கள் புகார் தெரிவிக்க முடியாது.மாறாக தொழிற்சாலை பிரதிநிதிகளோ, அரசு பிரதிநிதிகளோ நிறுவன சூழலியல் விதி மீறல் குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் என்கிறது (Procedure of Public Consultation.(Draft-EIA-2020 பக்கம் - 46) அதாவது நிலக்கரி கனிமத்தை எடுக்கிற நிறுவனமானது, தாமாக முன்வந்து சுரங்கப் பணியால் பாதிப்பு வந்துவிட்டது எனக் கூறுமாம்.இவ்வாறு விதிமீறலை மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்டறிந்தால் நாளைக்கு இரண்டாயிரம் முதல் பத்தாயிரம் கட்டிவிட்டு செல்லலாம்.லாரி லாரியாக கனிம வளங்களை அள்ளிச் செல்வோர்களுக்கு ஆயிரம் பத்தாயிரம் ஒரு பணமே இல்லை என்பது இவர்களுக்கு தெரியாது போலும்!

இது ஒருபக்கம் என்றால் மற்றொருபுறம், பொதுமக்கள் கருத்து கேட்பிலிருந்து நிறைய திட்டங்கள் விலக்களிக்கப் பட்டுள்ளன.அவை வருமாறு

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள்
- B2 வகையில் வருகிற திட்டங்கள்
- கடலுக்கு 12 நாட்டிக்கல் மைல் தொலைவிற்கு அப்பாலுள்ள திட்டங்கள்
- எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து நூறு கி.மீட்டர் தொலைவில் வருகிற திட்டங்கள் போலவே, பொது மக்கள் கருத்துக் கேட்பு கால அவகாசமும்கூட 30 நாளில் இருந்து இருபது நாளாக குறைக்கப்பட்டுள்ளது. (Draft-EIA-2020 பக்கம் - 48)

முன்னதாக, திருவண்ணாமலை கவுத்தி வேடியப்பன் மலையயை வெட்டி இரும்புத்தாது எடுக்கிற திட்டமானது சூழலியல் தாக்க மதிப்பீட்டின் விளைவாலும் அதனது தொடர்ச்சியாக நடைபெற்ற கருத்துக் கேட்பு கூட்டத்தில் மக்களின் எதிர்ப்பின் காரணமாகவும் நிறுத்தப்பட்டது. இனி எதிர்காலத்தில் இத்திட்டமும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்ற பெயரில் சூழலியல் தடையில்லா சான்றிதழ் இன்றியும் மக்கள் கருத்துக் கேட்பு இன்றியும் மலையை வெட்டி எடுத்துக் கொள்ளலாம்.மொத்தத்தில் இந்த வரைவானது சூழலியல் பாதுகாப்பிற்கு எதிரானது, மக்களுக்கு எதிரானது.சூழலியல் மீறலுக்கு சட்டபூர்வ ஒப்புதல் வழங்குகிறது.

ஆதாரம்:

https://www.business-standard.com/article/current-affairs/eia-receives-200-000-comments-centre-directs-its-own-agency-to-vet-120081101351_1.html

https://www.livemint.com/mint-lounge/features/eia-draft-2020-weakening-an-important-environmental-safeguard-11593611958824.html

https://indianexpress.com/article/explained/draft-environment-impact-assessment-norms-explained-6482324/

https://economictimes.indiatimes.com/news/politics-and-nation/scientists-waiting-for-two-more-clearances-for-neutrino-project/articleshow/66551013.cms?from=mdr

https://www.cseindia.org/eia-legislation-402#:~:text=The%20major%20difference%20in%20the,power%20to%20the%20State%20Government.&text=However%2C%20as%20per%20the%20new, its%20size%2Fcapacity%2Farea.

கட்டுரை

# உள்ளூர் மருந்தை உச்சரிக்கப் பயப்படும் அரசியல்

வான்முகில்

ஆல்பா 2B இண்டர்ஃபெரான் என்ற ஊசி மருந்து "இடோலிசுமாப்" (Itolizumab) என்ற பெயரில் தற்போது கொரானாவிற்கான மருந்தாக இந்தியாவில் ஆய்வுக்கு வந்துள்ளது. இந்த மருந்து முதலில் கியூபாவில் 1980 இல் தயாரிக்கப் பட்டது. டெங்கு, சோரியாஸிஸ், எய்ட்ஸ் ஆகிய நோய்களை குணப்படுத்த இந்த மருந்து பயன்படுத்தப் பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு "கியூப விஞ்ஞானக் கழகம்" வழங்கும் தேசியப் பரிசை இந்த மருந்து வென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டின் "உலக அறிவுச் சொத்து நிறுவன தங்கப் பதக்கம்" இடோலிசுமாப் மருந்துக்காக கியூபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 2013 முதல் இந்த மருந்தை பெங்களூரிலுள்ள "பயோகான்" நிறுவனம் கியூப நாட்டு உயிரியல் தொழில்நுட்ப நிறுவனமான "பயோ கியூபா ஃபார்மா" (Bio Cuba Farma) விடமிருந்து அனுமதிபெற்று உற்பத்தி செய்து வருகிறது. இது ஏற்கெனவே தீவிர சோரியாஸிஸ் நோயை குணப்படுத்த பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கடந்த ஏழாண்டுகளாக பயன்பாட்டில் உள்ளதால் இந்த மருந்தின் பாதுகாப்பு குறித்த அச்சம் ஏதுமில்லை. கியூபா இந்த மருந்தை செயற்கை சுவாசம் தேவைப்படும் கொரானா நோயாளிகளுக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தி அவர்களைத் தொற்றிலிருந்து காப்பாற்றியுள்ளது.

**விதிமுறைகளை மீறி, தடுப்பூசியை அரசியல் நோக்கங்களுக்காக பயன் பாட்டிற்குக் கொண்டு வரத் துடிக்கிறது மைய அரசு. ஆனால் 7 வருடங்களாகப் பயன்பாட்டில் உள்ள, இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் பயோகானின் மருந்தை உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர மைய அரசு தயங்குவதேன்?**

***இடோலிசுமாப் மருந்து "சைட்டோகைன்" புயல்வேகப் பெருக்கத்தினால் உடல் உறுப்புகள் செயலிழப்பதைத் தடுக்கிறது.*** (Cytokine Storm).

ஏப்ரல் 2020 முதல் கியூபா இந்த ஊசி மருந்தை கோவிட் 19 தொற்று உள்ளோரை குணப்படுத்த பயன்படுத்தி வருகிறது. ஐரோப்பிய உலகின் எண்பது நாடுகள் இந்த மருந்தை வாங்க ஆர்வம் காட்டியுள்ளன.

கியூபாவின் ஆய்வைப் பின்பற்றி "பயோகான்" நிறுவனம் கொரோனா தொற்றினால் இறப்பு நேராமல் தடுக்க "இடோலிசுமாப்" மருந்தைப் பயன்படுத்தியுள்ளது. செயற்கை சுவாசம் (வெண்டிலேட்டர்) தேவைப்படும் நிலையிலிருந்த 30 கொரானா நோயாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் 20 பேருக்கு இடோலிசுமாப் மருந்து கொடுத்து சோதிக்கப் பட்டது. தில்லி, மும்பை நகரங்களில் இருந்த 20 கொரானா நோயாளிகளும் முற்றிலும் குணமடைந்துள்ளனர். இவர்களுக்கு செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டிய தேவையும் எழவில்லை. இந்த ஆய்வில் நுரையீரல் , மருந்தியல் வல்லுனர்களும், AIIMS இன் மருத்துவர்களும், மும்பை லோக்நாயக் மருத்துவமனை மருத்துவர்களும்




ஈடுபட்டனர். இம்மருந்து தரப்படாத 10 நோயாளிகளில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பரிசோதனையின் அடிப்படையில் தீவிர பாதிப்புள்ள கொரானா நோயாளிக்கு இந்த மருந்தைப் பயன்படுத்த, பயோகான் நிறுவனத்திற்கு இந்திய மருந்தியல் ஒழுங்காற்று ஆணையம் ஜூலை மாதம் 12 ஆம் தேதி அனுமதியளித்தது.

கேரளாவின் இடதுசாரி அரசும் இந்த மருந்தின் சிறப்பறிந்து, கொரானா நோய் தடுப்பிற்கு பயன்படுத்த தனது அமைச்சரவைக் கூட்டத்தில் மார்ச் மாதம் முடிவெடுத்தது. இந்த மருந்தை கியூபாவிலிருந்து இறக்குமதி செய்ய ஒழுங்காற்று ஆணையத்திடம் அனுமதி கேட்டிருந்தது. இந்த மருந்து ஏழு ஆண்டுகளாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதை பலரும் அறிந்திருக்கவில்லை என்பது வியப்பளிக்கிறது.

கியூபா மீதான அமெரிக்கத் தடையையும் மீறி, தென் கொரியா, செர்மனி ஆகிய நாடுகள் இந்த மருந்தை இறக்குமதி செய்து கொரானாத் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்புகளை வெகுவாகக் குறைத்துள்ளன. கியூபா, சீனா வெனிசுவேலா ஆகிய நாடுகளும் கொரானாவிற்கு மருந்தாகப் பயன் படுத்தி, சாவின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்துள்ளன. கியூபாவின் பேரிடர் மீட்பு மருத்துவக் குழுவும் கொரானாவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இத்தாலி உள்ளிட்ட பலநாடுகளில் இந்த மருந்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளது. கியூபாவுடன் இணைந்து சீனா ஆல்பா 2B இண்டெர்ஃபெரானை உற்பத்தி செய்கிறது. இந்த மருந்தை சீனா வுஹானில் சனவரி மாதம் முதலே பயன்படுத்தி கொரானாவால் இறப்போர் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது. உலகம் முழுதிலும் கியூபாவின் 'வியத்தகு மருந்தைப்' பயன்படுத்தி கொரோனா தடுப்பில் அதன் பயன் பாட்டை மெய்ப்பித்துள்ளனர். இத்தனை பரிசோதனைகளுக்குப் பின்னும். பயோகான் நிறுவனம் மேற்கொண்ட பரிசோதனைகள் போதுமானதல்ல என்று கூறி, கொரானா செயலாற்றும் குழு விரிவான ஆய்வினைச் செய்யுமாறு பரிந்துரைத்துள்ளது. இதனடிப்படையில் ஒழுங்காற்று ஆணையம் ஏற்கனவே அளித்த அனுமதியைத் திரும்பப் பெற்றுள்ளது. பயோகான் நிறுவனம் தற்போது 200 நோயாளிகளுக்கு மருந்தை அளித்து பரிசோதனை மேற்கொண்டுள்ளது. இந்தப் பரிசோதனை முடிந்தபின் அநேகமாக இம்மருந்து பயன்பாட்டுக்கு வர வாய்ப்புள்ளது.

இந்த உயிர்காப்பு மருத்துவத்திற்கான மொத்த செலவு 35,000/- மட்டுமே. இது ஒரு ஊசிக்கு ரூபாய் 8000/- வீதம் நான்கு ஊசிகளுக்கான செலவாகும். இந்த மருந்து உயிரைக் காப்பதுடன், மருத்துவ செலவையும் குறைத்துள்ளது. கட்டுக்கடங்காத கொரானா பரவலால் திணறும் தமிழக அரசு இந்த மருந்தினை மக்களுக்கு இலவசமாக அளித்து அவர்களின் உயிரைக் காக்க வேண்டும். எனவே தமிழ்நாட்டின் மக்கள் கொரானா எதிர்ப்புப் போரில் "இடோலிசுமாப்" ஊசி மருந்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து செயல்பட வேண்டும். மோடி அரசின் "மேக் இன் இண்டியா" திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ள பயோகானின் "இடோலிசுமாப்" மருந்தை உடனடியாக பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டியது மைய அரசின் கடமையாகும். தமிழக அரசும், நடுவணரசும் கியூபாவுடன் இணைந்து பொதுத் துறை நிறுவனங்களில் இந்த மருந்தை உற்பத்தி செய்தால், மருந்தின் விலையைக் குறைக்க முடியும். கியூபா உற்பத்தி செய்யும் பல நல்ல மருந்துகளையும் அரசு நிறுவனங்களே உற்பத்தி செய்து, மக்களுக்கு அளிக்க வேண்டும்.

இத்தகைய சிறந்த மருந்தை கையில் வைத்துக் கொண்டு இதை மைய அரசு மார்ச் மாதம் முதலே பயன்படுத்தாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது. அப்படிப் பயன்படுத்தியிருந்தால், பல உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். மருத்துவ செலவையும் குறைத்திருக்க முடியும். 'மேக் இன் இந்தியா' என்று ஓயாமல் முழங்கி வரும்

மோடியின் ‘தேச பக்தர்கள்’ இந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும் என்று குரல் கொடுக்காதது ஏன்? எந்த நோய்க்கும் தடுப்பூசி(vaccine) உருவாக்க குறைந்தது 5 லிருந்து 10 வருடங்கள் ஆகும் என்கின்றனர் மருத்துவ வல்லுநர்கள். தடுப்பூசியை விலங்குகளுக்குத் தந்து ஆய்வு செய்வது முதல் கட்டம். இந்த ஆய்வின் முடிவுகளை பொதுவெளியில் பலரும் அறிய ஆய்விதழ்களில் வெளியிட வேண்டும். அதன்பின்பு மனிதர்களுக்கு இந்த மருந்தைத் தருவதற்கு முன் பல கட்ட ஆய்வுகள் செய்யப் பட வேண்டும். இது உலகம் முழுதும் ஏற்றுக் கொண்ட நடைமுறை.. ஆனால் இந்தியா ஆறு மாதத்திற்குள் covaxine என்ற தடுப்பூசியைத் தயாரித்து 12 தேர்ந்தெடுக்கப் பட்ட மருத்துவமனைகளில் தடுப்பூசியை நோயாளிகளுக்கு மைய அரசு கொடுக்க ஆரம்பித்துவிட்டது. இந்த மருந்தை பாரத் ஃபயோடெக் என்ற தனியார் நிறுவனம் உற்பத்தி செய்கிறது. ஆனால் விலங்களுக்கு இந்தத் தடுப்பூசியை கொடுத்து செய்துள்ள ஆய்வின் முடிவுகளை இந்நிறுவனம் பொது வெளியில் வெளியிடவில்லை என்கிறார்கள் வல்லுநர்கள். இந்தத் தடுப்பு மருந்தை நோயாளிகளுக்கு கொடுக்க மருந்தியல் ஒழுங்காற்று ஆணையம் அனுமதியளித்துள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் 12 மருத்துவமனைகளைத் தேர்ந் தெடுத்து இந்தத் தடுப்பூசியை நோயாளிகளுக்குக் கொடுத்து கட்டாயமாகப் பரிசோதனைகள் செய்ய வேண்டும் என்று அறிக்கை அனுப்பியுள்ளது. இந்தியாவின் முதல் தொற்று ஊசியைக் கண்டுபிடித்த தொற்று நோய் வல்லுநர் ஜேக்கப் ஜான் கொரானாவிற்கான தடுப்பூசி தயாரிப்பதில் அதி வேகம் காட்டும் இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சிலின் அணுகுமுறை தவறானது என்கிறார். தடுப்பூசியை மனிதர்களுக்குப் பயன்படுத்த ஆகத்து 15 ஆம் தேதியை இறுதி இலக்காக வைத்தது அரசியல் லாபத்திற்குதான், இதில் நேர்மையான அறிவியல் அணுகுமுறை எதுவும் வெளிப்படவில்லை என்கிறார்.

விதிமுறைகளை மீறி, தடுப்பூசியை அரசியல் நோக்கங்களுக்காக பயன் பாட்டிற்குக் கொண்டு வரத் துடிக்கிறது மைய அரசு. ஆனால் 7 வருடங்களாகப் பயன்பாட்டில் உள்ள, இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் பயோகானின் மருந்தை உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர மைய அரசு தயங்குவதேன்? கேரள அரசு பயோகான் மருந்தின் சிறப்பை உணர்ந்து மார்ச் மாதத்திலேயே பயன்படுத்த மருந்தியல் ஒழுங்காற்று ஆணையத்திடம் அனுமதி கேட்டுள்ளது. ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசிடமே குவிந்துள்ளதால், மாநில அரசுகள் தங்கள் இறையாண்மையை இழந்து நிற்கின்றன. கொரானாவிலிருந்து தனது மக்களைக் காக்க இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனமும் இந்திய அரசிடம் இறைஞ்ச வேண்டிய அவல நிலை உள்ளது. அயல்நாட்டு உறவு, தொலை தொடர்பு, ஆகிய துறைகள் மட்டுமே மைய அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இறை யாண்மைமிக்க மாநில அரசுகளே கொரானா தடுப்பிலிருந்து, கல்விக் கொள்கை வரை அனைத்துத் துறைகளிலும் மக்கள் நலன் சார்ந்து செயல்படமுடியும் என்பது தெளிவு.

# புத்தனின் வெளியேற்றம்

● அபிமானி

ஆழத் தோண்டியக் குழியைத்
தொட்டிலாக்கி
உன் பிள்ளைத் தூங்குகிறது என்றாய்...
அங்குதான் குழந்தையும் பிறந்தது
என்பது உன் ஆரூடம்.
தூசியும் மண்ணுமாய் மூடிய
அந்தப் பூமிக் குகைக்குள்ளிருந்து
புத்தன் வெளிப்பட்டான்
மவுனச் சிரிப்புடன்.
பிறையை வணங்கியவனின்
ஏவல் கைகள்
ஆதிகாலத்தில்
அந்தக் குழிக்குமேல்
ஒரு கூடாரத்தைக் கட்டியிருந்ததை
நீ அவமானமாய் கருதினாய்
பிறைக்காரனுக்கு முன்னாலே
புத்தன்
வீடுகட்டி வாழ்ந்திருந்தது
இப்போது தெரிந்தப் பின்னும்.
கொஞ்சமும் குறையாத
உன் பிடிவாதம்
அதன்மீது
கோபுரமாய் எழும்பிவிடவேண்டும்.
நீ மட்டும் என்ன
பெரிய விநோதங்களையா நிகழ்த்திவிட்டாய்
புத்தனை வெளியே எடுத்தக் குழிக்குள்
உன் குழந்தையைப் புதைப்பதைத் தவிர?

நீ விரித்த ஒற்றை வலைக்குள்
எல்லோரும்
விழுந்துவிடுவார்கள்
என்ற தீர்மானம் உனக்கு.
அவர்கள் ஒருங்கிணைந்து உள்ளே விழுந்தால்
நீ வெளியேற்றப்படுவாய் என்பதே
நிதர்சனம்.
நீ நடத்துவது எதேச்சாதிகாரமென்று
யாரும் சொல்லிவிட முடியாது
கெடுபிடிச் சட்டங்களின் இரும்புக்
கூண்டுகளுக்குக்
கம்பிகளாக வேண்டும்
எதிர்ப்பவர்களின் சாட்டை விரல்கள்.
எல்லா நியாயங்களையும்
குழிக்குள் புதைத்து
இப்போது நீ எழுப்பும்
கோபுரத்தின் அடித்தளம்
உன் குழந்தைக்கானதல்ல என்று
உண்மையே வந்துநின்று சொன்னாலும்
உறைக்கப்போவதில்லை உனக்கு
ஏனெனில் நீ
பெரும்பான்மைப் போதையில் நிற்கிறாய்.

புகழஞ்சலி

# ஞானி இன்னும் சாகவில்லை?!

● இரா.மோகன்ராஜன்



தொலைவிலிருந்து வருகிறேன்
அதனால்தானோ
நான்
எதையும் கொண்டுவரவில்லை.
என்னால்
உங்களுக்குத் தொல்லையில்லை.
சத்தம் இல்லாமல்
நான் அப்புறம் கடந்து செல்ல விரும்பும்புவேனென்று
எதிர்பார்க்கிறீர்கள்.
எதையேனும் தரப்பார்க்கிறீர்கள்.
கொஞ்சம் வழிவிடுங்கள்,
காற்று சுத்தமாக இருக்கட்டும்.
நம் கால்களுக்கு அடியில் அகப்பட்ட
அந்த செடி
துன்புற வேண்டுமா?
அந்த செடியை மிதிக்க
உங்களுக்கு
எனக்கு
என்ன உரிமை?
நாம் சந்தித்த வேளை
நன்றாக இல்லை.
பேச்சும் தொடர்கிறது
ஒரு சமாதிக்குள்
சுகமாக இருக்கும் நாள்வரை
வழி நடப்போம்,
காற்றும் செடியும்
நன்றாக இருக்கட்டும்.!

– ஞானி

(தொலைவிலிருந்து கவிதை தொகுப்பு-பக்2)

**2007** நவம்பர் திங்கள் இரண்டாவது வாரமாக அது இருக்கக்கூடும். ஒரு காலைப்பொழுதில் கோவை வெள்ளங் கிணற்றிலுள்ள ஞானியின் வீட்டில் அவரை சந்தித்தது நன்றாக நினைவிருக்கிறது.

அதற்கு முன்னர் மணிக்கணக்கில் அவருடன் தொலைபேசியில் உரையாடியிருந்தாலும் நேரில் சந்திப்பது அதுதான் முதன்முறையாக இருந்தது. நண்பர்கள் சண்முகசுந்தரம், சுவாமிநாதன் ஆகியோருடன் அவரை சந்தித்து மாலை வரை அவருடன் உரையாடியது மறக்கமுடியாத தருணங்களாகும்.

அன்றைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் சிங்கள வான்படைகளால் குண்டுவீசிக் கொல்லப்பட்டதைக் கண்டித்து அன்று நடக்கவிருந்த அரங்க நிகழ்வையும் ஒத்திவைத்துவிட்டு எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மென்மையும், கனிவும், பரிவும், கரிசனமுமாக உரையாடலை அவர் எடுத்துரைக்கும் விதம் அந்த இதமான சூழலை இனிமையானதாக மாற்றியிருந்தது. அரசியல், சமூகம், மார்க்சியம், ஈழம், இலக்கியம் என்று விரிவடைந்த பேச்சுக்கள் வழியாக ஞானியைப் பற்றி நாம் வந்தடையுமிடம் பேரன்பு மட்டுமே. இலக்கியம், தத்துவம், ஆன்மிகம், அரசியல் யாவும் மானிடவிடுதலையின் வழி மனிதன் தனது பேரன்பை கண்டடைவதற்கான ஒரு வழி என்று புரிந்து கொள்வதாக இருக்கும்.

ஞானியின் எழுத்து, இயக்கம், வாசிப்பு என்பன இவற்றை விரிவு படுத்திப் புரிந்து கொள்ள முயல்வதாகவே இருக்கிறது எனவேதான் அவர் தான் பேசுவதைவிட பிறரைப் பேசவிட்டு கேட்கிறார். கேட்பார்.

பிறகு தஞ்சை, 'தமிழ்வெளி' நடத்திய எஸ்.என்.நாகராசனின் கீழை மார்க்சியம் நூலுக்கான முழு அமர்வில் அவருடன் கலந்து கொண்டதுடன், அன்றிரவு எஸ்.என்.நாகராசன் அவர்களை காணொலி பதிவு வொன்றின் நேர்காணலுக்காகக் கேள்விகளைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது, அருகே வந்த அவர் அதைவாங்கிப் பார்த்துவிட்டுச் சில பல திருத்தங்களைச் செய்ததுடன், அந்த நேர்காணல் முடியும் வரை அருகிலேயே அமர்ந்து நிறைவாக வரவேண்டும் என்பதில் வெகுகரிசனமாக இருந்தார். தனது கருத்துக்களைவிட எஸ்.என்.என். கருத்துக்களை அவர் கொண்டாடுபவராக இருந்தார்.

கீழை மார்க்சியம் கருத்தரங்கில் அனல் பறக்கும் விவாதங்களிடையே தஞ்சை மகஇக காளியப்பன் பேசும்போது பார்வையாளர்களிடையே எழுந்த சலசலப்பு கைகலப்பில் முடியாதவகையில் அதை தடுத்து நிறுத்தியதுடன், எல்லாவகையான பார்வையையும், விமர்சனங்களையும், திறனாய்வுகளையும் மதிக்க வேண்டும் என்று தனது மென்மையான குரலில் அழுத்தமாக உறுதிபடக் கூறியதுடன், காளியப்பன் போன்றோரின் மதிப்புரைகளை நாம் எந்த வகையிலும் மறுக்கக்கூடாது. இன்னும் சொல்லப் போனால் அவையே மெய்யான மதிப்புரை அவரை பேசவிடுங்கள் என்று கண்டிப்புடன் கூறினார். எதிர்கருத்துக்களை வரவேற்று ஏற்றுக் கொள்ளும் பக்குவமே ஞானியை எப்பொழுதும் எழுத்திலும், சொல்லிலும் 'நாம்' என்று அரவணைத்துப் பேசவைத்தது.

கோவை ஞானி அவர்கள் நாம், நம் என்று விளித்துப் பேசுவதெல்லாம் நம்மைப்பற்றியதாகவே இருக்கிறது. நமது உலகு, நமது மண், நமது மொழி நமது இலக்கியம், நமது பண்பாடு பற்றியதாகவே இருக்கும் இருக்கிறது. நமக்கு மீட்சியில்லை. நமக்கு வாழ்வில்லை. நம்மை திரட்டிக் கொள்ளவேண்டும். நம்மை மீட்டுக் கொள்ள வேண்டும் என்று அவர் சொல்வதெல்லாம் நமக்கானவையாகவே இருக்கின்றன.

ஞானி தனியன் அல்ல. எனவேதான் அவரது எழுத்து, சிந்தனை, வாசிப்பு, படைப்பு யாவையும் நமக்கானதாகவே இருக்கிறது.

குடும்ப வறுமை காரணமாக இடம்பெயர்ந்து தறி நெய்யும் தொழிலாளர் இடையே வாழ்ந்து நசிந்து, துயர்ந்து பின் வறுமைக்கும், சிறுமைக்கும் என்ன காரணம் இருக்க முடியும் என்று தமது சிறுவயது கடவுள் நம்பிக்கையின் மீதே கேள்விகள் எழுப்பி அதற்கான தேடல் அவரை பழனி, திருப்பதி என்று அலையவைக்காமல் மார்க்சிடமும், மார்க்சியத்திடமும் சரணடைய வைக்கிறது.

ஆதி சமூகத்தை மீட்டுடெக்கும் அறிவியல் வழிமுறையாக மார்க்சியத்தை கண்டடைகிறார் ஞானி. அக உலகிலிருந்து புற உலகை மீட்கும் புத்தரைப் போலன்றி புற உலகிலிருந்து அக உலகை மீட்கும் மார்க்சின், மார்க்சியத்தின் வெளிச்சத்தில் கடவுளின் புதிய தரிசனத்தைக் காண்கிறார் ஞானி.

தாம் கட்சி மார்க்சியர் அல்லன் என்று வரையறுத்துக் கொண்டு பேசும் அவர், கட்சி மார்க்சியர் இப்படி பேச முடியாது என்பார். அதிகாரமே மனிதனின், சூழலின் அழிவுக்கு முதன்மையான காரணம் என்கிறார். அதிகாரத்தைக் களைந்து கொண்ட மனிதன், அதிகாரத்தைக் களைந்து கொண்ட மதம், அரசியல், சமூகம், பண்பாடு என போகிறது அவரது பண்பாட்டுத்தளத்திலான அதிகாரம் களைந்து கொள்ளும், அதிகாரத்தை நிராகரிக்கும் பண்பாட்டு அரசியல்.

ரசிய பொதுஉடைமைத் தவிர்த்து, மாவோவின் மக்கள் பண்பாட்டு அரசியலை, சீன பொதுவுடைமையை அவர் ஏற்கிறார். மார்க்சியத்தை ஏற்கும்போதும் அதன் அந்நியமாதல், மார்க்சியமெய்யியல் என்ற அதிகம் பேசப்படாத ஆனால் பேசப்பட வேண்டிய ஒன்றெனை அவற்றை முதன்மைபடுத்துகிறார். அவரது கருத்தியல் தோழரான எஸ்.என்.நாகராசனுடன் இணைந்து மார்க்சிய மெய்யியலை தமிழ் நிலம், வாழ்வியல் மற்றும் இலக்கியச் சூழலுக்குள் பொருத்தி வளர்த்தெடுப்பதை ஒரு இலக்காகவே கொண்டிருந்தார். அதன் இடையறா தொடர்பாடலுக்காகவே தீவிரமாக எழுத்திலும், இலக்கியத்திலும் இயங்கத் தொடங்கினார்.

தமிழின் தொன்மை இலக்கியங்களுக்குள் ஆழச் சென்று பயின்ற ஞானி அதே அளவிற்கு தமிழின் நவீன இலக்கியத்துடனும் இடையறாத் தொடர்புடன் இயங்கினார். தமிழர் மெய்யியலையும், மார்க்சிய மெய்யியலையும் இணைக்கும் புள்ளியாக அவரது இயக்கமிருந்தது. மார்க்சியத்தின் சகல திசைக்குள்ளும் பயணித்து வந்தார்.

மார்க்சியமே மார்க்சியருக்கு அந்நியமாக இருக்கும் போது, மார்க்சிய மெய்யிலை அவர்கள் எந்தளவு வரவேற்பார்கள் என்று அவருக்கிருந்த அய்யமே கட்சி மார்க்சியத்திலிருந்து விலகி நிற்க வைத்திருந்தது. இலக்கியத்தின் சுதந்திர வெளியை கட்சி அரசியல் கட்டுப்படுத்துவதை அவர் ஒரு போதும் ஏற்பவராக இருக்கவில்லை.

மார்க்சின் அந்நியமாதல் நிலையிலிருந்தே பிறிதெல்லாம் தோற்றம் கொள்கின்றன என்பதை அவர் முழுமையாக நம்பினார். அதிகாரமே மனிதனை சீரழிக்கிறது அதிகாரத்தைக் களைந்து கொண்ட மனிதனாலேயே ஆக்கச் செயல்கள் நடைபெற முடியும் என்பதை உறுதியாக ஏற்கிறார். அரசு என்பது அதிகாரம் குவிக்கப்பட்ட ஓர் ஒடுக்கும் கருவி. அரசு உதிர வேண்டும் என்பது மார்க்சு முன்வைக்கும் கோட்பாடு. பொதுமைச் சமூகத்தின், ஆதிச் சமூகத்தின் கூறுகளை மீட்க வேண்டும் என்பது மார்க்சியத்தின் ஆதார விருப்பம்.



பிந்தய சுரண்டல், அரசதிகாரத்திலிருந்து விடுபட்டு ஆதிச் சமூகத்தின் பண்பாட்டு, அரசியல், அற வாழ்வை மீட்டெடுக்க முயன்ற ஒருவர் புத்தர். பிறிதொருவர் மார்க்சு இருவரின் வழிகளும், செயற்பாடுகளும் வெவ்வேறாக இருந்தாலும், மார்க்சியத்தின் வேர் அங்கிருந்தே நிலை கொள்கிறது. மேலும் புத்தரிலும், மார்க்சிலும் ஊற்றெடுத்த, பெருக்கெடுத்த மாறா பேரன்பிலிருந்தே அவர்களின் பொதுவுடைமைச் சமூகத்தின் காலத் திரும்புதலை விழைபவர்களாக இருந்தனர். ஏற்றத் தாழ்வற்ற சமூகம் என்பது ஏற்றதாழ்வற்ற அன்பு. ஏற்றதாழ்வற்ற அறமாகக் கண்டனர். அதைத்தான் தமிழ் சூழலில் தமது எழுத்திலும், செயற்பாட்டிலுமாக ஞானி வலியுறுத்துபவராக இருந்தார்.

மார்க்சியத்தை ஓர் அந்நியச் சரக்காக கருதவில்லை. மாறாக மார்க்சியமே தமிழருக்கு விடிவு; மார்க்சியம் இல்லாமல் தமிழர் வாழ்வை இலக்கியத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்கிறார். மார்க்சியத்தின் ஒளியிலேயே தமிழ் இலக்கியத்தை பயின்றதாக அவர் கூறிக் கொள்கிறார்.

கடவுள் குறித்த தனது பார்வை எதுவும் மார்க்சியத்திற்கு புறம்பாக வைத்துப் பேசவில்லை. மாறாக மார்க்சியத்துக்குள் வைத்து பேசுகிறேன் என்பார். கடவுள் மனிதனைப் படைக்கவில்லை மனிதனே கடவுளைப் படைத்துக் கொண்டான். கடவுள் என்பது ஓர் அறச் செயற்பாடு, கடவுள் என்பது ஒரு பேருணர்வு, கடவுள் என்பது ஓர்

கருத்தாக்கம் என்று என்னால் சொல்ல முடியும் என்பார் ஞானி.

ஆதிச் சமூகத்தின் பொதுவுடைமையை மீட்கும்போது ஆதிச் சமூகத்தின் கடவுளையும் மீட்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் ஆதி சமூகத்தின் கடவுளும், பொதுவுடைமையாளராகவே இருப்பார். நவீன காலத்தின் கடவுள் தன்னளவில் அதிகாரத்தையும், சுரண்டலையும், ஏற்பவராக நீதிப்படுத்துபவராக இருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.



அப்படியான கடவுளுக்கு , அதிகாரத்துக்கு எதிரான இயக்கமாக, போராட்டமாகவே பெரியாரையும், அவரது இயக்கத்தையும் ஞானி ஏற்கிறார். சித்தர்களின் தொடர்ச்சியாக அப்படித்தான் பார்க்கிறார். சித்தர்களை அப்படித்தான் ஏற்கிறார். பெரியாரையும் அவ்வாறே அவர் பொருள்படுத்துகிறார்.

அரசு, அதிகாரம், சுரண்டல் ஆணாதிக்கம் போன்றவை தனக்குத் தொடர்பே இல்லாமல் தன்னை நெருக்கடிக்கு உள்ளாக்கும் போது, மனிதர்களை நெருக்கும் போது சமூகத்திலிருந்து தன்னை அந்நியமாக்கிக் கொள்ளும் மனிதனுக்கு தனது இருத்தல் பற்றிய கேள்வி எழவே செய்யும். பொதுமை உலகத்தில் அந்நியமாதல் நிகழ்வ தில்லை எனவே கடவுள், இலக்கியம், சிற்பம், ஓவியம் என்று மனிதன் படைத்துக் கொள்கிறான். அதே சமயம் அந்நியமாதலின் கடவுளும், சுரண்டல் அரசதிகாரத்தின் கடவுளும், வெவ்வேறான பொருள், தன்மைகளைக் கொண்டவர்கள் ஆனால் இந்த இரண்டு சமூகத்திற்கும் பொதுவில் கடவுள் என்பது தேவைப்படுவதாக இருக் கிறது. அது அழிபடாதது என்பது ஞானியின் கருத்து. ஏனெனில் அது மனிதனின் சத்தியமான கலைப் படைப்பு.

கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை, நானும் கடவுளும் நாற்பது வருடங்கள் போன்ற நூல்களில் கடவுளின் தோற்றம், தன்னனுபவம், தேவை என விரிவாக மார்க்சிய நோக்கில் ஆய்வு செய்திருப்பதை பொருத்தமாக நினைவு கூரிக் கொள்ள முடியும்.

கடவுள் என்பது மாபெரும் கருத்தாக்கம், வரலாறு, அறிவியல், உளவியல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆழமாகப் பயிலும்போது இந்த அடிப்படைகளில் கடவுள் என்ற கருத்தாக்கத்தைப் புரிந்து கொள்கிறேன் என்கிறார் ஞானி. கடவுள் பொருள் முதல்வாத படைப்பேயன்றி, கருத்து முதல்வாத படைப்பல்ல என்பது அவரது முடிவு.

கடவுள் இவ்வுலகுக்கான படைப்பேயன்றி அக உலகிற்கானது அல்ல என்ற அவரது இந்த முடிபு, பார்ப்பனிய அக உலக கருத்தியலுக்கு அதிர்ச்சி தரத்தக்க தாகத்தான் இருக்கும். அகஉலகத்தின் பெயரிலான புறஉலக அதிகாரத்திற்கு, அரசியலுக்கு, அக உலக ஆன்மிகப் புரட்டிற்கு எதிரான ஞானியின் கலகக்குரல் இது என்பதை அறியத்தான் வேண்டும். ஞானி கருவறை யிலிருந்து, வழிபாட்டுத்தளத்திலிருந்து, மத நிறுவனங் களிலிருந்து பாப்பனியத்தை, அதிகாரத்தை, அதிகாரத்தின், பாா்ப்பனியத்தின் கடவுளை வெளியேற்றுமிடம் இதுதான். இது கடவுளை, ஞானியைப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய இடம்.

அரசுக்குள்ளும், மதத்திற்குள்ளும், கடவுளுக்குள்ளும், மொழிக்குள்ளும், பண்பாட்டுக்குள்ளும் உள்ள பார்ப்பனி யத்தைக் களைவதே ஞானியின் மெய்யான மார்க்சிய மெய்யியல் உணர்வு என்று சொல்லலாம். பார்ப்பனியம் என்பது அதிகாரம், பார்ப் பனியம் என்பது பிளவு, பார்ப்பனியம் என்பது ஏற்றதாழ்வு. பார்ப்பனியம் என்பது அடுக்கு முறை ஏற்பு. பார்ப்பனியம் என்பது அசமத்துவம். இப்படித்தான் ஞானிக்குள் பார்ப்பனியம் பற்றிய பார்வை இயங்குவதைக் காணலாம்.

ஞானி தான் முன்வைக்கும் இப்படியான கருத்துக்களை கட்சி மார்க்சியர்களும், கறார் மார்க்சியர்களும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறித்து அவர் கவலைப்படவில்லை. அதிகாரம் மதத்தில் இருந்தாலும், மார்க்சியத்தில் இருந்தாலும் அது அழிபட நேரும் என்பது ஞானியின் எழுத்திலும், பேச்சிலும் வெளிப்படும் பொதுவான பதில்.

பண்பாட்டு அரசியல் அசைவியக்கத்தில் மார்க்சியத்தின் பொருள் முதல்வாதம், மெய்யியல். அந்நியமாதல் என்பதை வைத்து விரிவாக ஆய்வு செய்வதையே அவரது எழுத்தில் பெரும்பகுதி வெளிப்படுவதாக இருக்கிறது. “தொல்காப்பியம், கரு உரி பொருள் என படைப்பின் மூன்று தளங்கள் பற்றி பேசுகிறார். நிலமும் பொருளும் முதல் தளம் இடத்திலிருந்து காலத்திலிருந்து இடத்தோடும், காலத்தோடும் இயங்கும் மனித நாகரீகம், அரசியல் பொருளியல் என்ற ஆக்கங்கள் இவற்றின் பரிமாணங்கள், இயக்கங்கள், முரண்பாடுகள் இவற்றுக்கு எதிரானப் போராட்டங்கள் இவை அனைத்தும் இரண்டாம் தளம்!”.

“மனித வாழ்வுக்கு பொருளென்ன? என்பதுதான் மூன்றாம் தளமாக இருக்க முடியும். சமத்துவம், சமதர்மம், பேரிலக்கியத்திற்கு இந்தத் தளம் இல்லாமல் முடியாது. எல்லாருக்கும் இது பொருந்தும். டால்ஸ்டாய், தாஸ்தாவெஸ்கி, சேக்சுபியர், பாரதி எல்லோரும் இப்படித்தான் சிந்தித்தார்கள்!”.

“பெரியாரை இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும்!” என்கிறார் ஞானி. பெரியாரளவு மக்களை நேசித்துப் புரிந்து கொண்டவர் என்று இன்னொருவரைச் சொல்ல முடியாது இன்னொரு புத்தர் என்று சொல்வதில் தவறில்லை என்று அவர் சொல்வது கூட இப்படித்தான்.

எனவேதான் முதலாளியத்தையும், ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் களைந்து கொண்ட மார்க்சியரும், பெரியாரியரும், அம்பேத்கரியரும் ஒரு புள்ளியில் இணைய முடியும் என்று ஆகப்பெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தார். தமது வாழ்வின் பெரும்பகுதியை அவர், இந்தியர், தமிழர் பண்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் குறித்துப் பேசுபவராக இருந்தார்.

அரசு என்பது ஒடுக்குமுறையின் ஓர் கருவி. மார்க்சியம் அரசு உதிரும் என்கிறது. அரசு உதிர்ந்த அதிகாரம் பரவலாக்கப்பட்ட ஓர் ஆதி பொதுச் சமூகம் அவரது எதிர்பார்ப்பாக இருந்தது. அரசு உதிர வேண்டுமென்றால் அதிகாரம், ஆணாதிக்கம், உள்ளிட்ட மனிதனைப் பிளவுபடுத்தும் ஏற்றத்தாழ்வுகள் உதிர வேண்டும். மதம், அதிகாரம், தனி உடைமை போன்றனவும் மனிதனை, சமூகத்தைப் பிளவுபடுத்தக்கூடியவை. பிளவுபடாத சமூகத்திற்கு சமதர்மம் தேவை. சமத்துவம். சமதர்மம் தேவை. சமூகம், பண்பாடு, மதம், சாதி ஆகியவற்றில் உள்ள அதிகாரம், ஆதிக்கம் களைதல் வேண்டும்.

அதிகாரமற்ற இடத்தில் பேரன்பு குடிகொள்ளும் அதிகாரமற்ற மனிதன், சமூகம், பண்பாடு, மதம் அல்லது ஆன்மிகம், கடவுள் என்பனவே மனிதனை இவ்வுலகுடன் இணைக்கக்கூடியது. இயற்கையுடன் இணைய வைப்பது. தன்னை கரைத்துக் கொள்ள வைப்பது. இயற்கை வேறு, தாம் வேறு என்று எண்ண வைக்காதது. இயற்கையின் பகுதியாகவோ முழுமையாகவோ தம்மை உணர வைப்பது. இறுதியில் அன்பே, பேரன்பே எல்லாம். எனவே தான் பேரன்பு மட்டுமே ஞானி விரும்பிய புற உலகின் முன் நிபந்தனையாக இருந்தது. தமது அகத்திலும் புறத்திலும் சதா பேரன்பு நிறைந்த உலகையே தமிழுணர்வு ததும்பிய மார்க்சியஞானி தரிசித்தபடியிருந்தார் என்று சொல்ல முடியும்.

ஒரு வகையில் புத்தர் ஏசு, மார்க்சு பெரியார், அம்பேத்கர் இவர்கள் வேண்டிப் போராடிய உலகும் அப்படியானதுதான். எனவேதான் ஞானி இவர்களது இணைவு இயல்பானதாகத்தான் இருக்க முடியும் என்கிறார்.

சங்ககாலத்திலிருந்து நடைபெறுவது வர்க்கப் போராட்டம்தான். கபிலர், அவ்வை, சாத்தனார், முதலிய படைப்பாளிகள், தமிழ்ச்சான்றோர் நெஞ்சில் தங்கியிருந்தது முந்தய இனக்குழுச் சமூகத்தின் பொதுமை உணர்வு. அற உணர்வு.

“பெரியாரை வியத்தலும் இலமே! சிறியாரை இகழ்தல் அதனினும் இலமே!” யாதொருவரையும் சிறுமை படுத்தா வாழ்வு. யாதும் ஊரே யாவரும் கேளிர். என்ற சங்கக் குரல்களை, பொதுமைக் குரல்களை நெடுங்காலத் தமிழ் இலக்கியத்தை, மார்க்சியத்திற்குள் வைத்து இப்படித்தான் புரிந்து கொள்கிறார் அவர். ஒப்புரவு என்பதும், பொதுவுடைமை என்பதும் வேறு வேறல்ல என்பதே ஞானியின் மார்க்சியத் தமிழியப் பார்வை.

**ஒப்புரவு என்பதும், பொதுவுடைமை என்பதும் வேறு வேறல்ல என்பதே ஞானியின் மார்க்சியத் தமிழியப் பார்வை.**

இராமன் அரசனாகிறான். அவனுக்குள் அரசதிகாரமும், ஆணாதிக்கமும் எஞ்சியிருக்கும் நிலையில் சீதை தீக்குளிக்கிறாள். அவளைக் காட்டுக்கு அனுப்புகிறான். அதிகாரம் கொடியது. மனிதர் தரத்தைத் தாழ்த்துவது. அதிகாரம் என்பது ராமனையே ராவணனாக மாற்றக் கூடியது. மார்க்சிய நோக்கில் கம்பரை இப்படி வாசிக்கிறார். அவர்.

கண்ணகி அரசதிகாரத்தை எதிர்த்தவள். இளங்கோவின் நீதி உணர்வே கண்ணகி. சாத்தனாரின் மணிமேகலை, அவரது அறஉணர்வு. அதுவே இலக்கியமாகிறது என்கிறார். அட்சயப் பாத்திரம் தீரா அரசதிகாரத்தின் பசி கொடுமையில் எழுந்த சாத்தனாரின் தீரா அமுதசுரபி, தீரா அறத்தின் வெளிப்பாடு. என்று நாம் புரிந்து கொள்கிறோம். அதுவே வள்ளலாரின் அணையா தீபமாகிறது. ஞானி சமயத்தையும், மதத்தையும், ஆன்மிகத்தையும் இலக்கியத் தையும் வேறுபடுத்திப் பார்ப்பதும், இணைத்துப்பார்ப்பதும் இப்படித்தான்.

பேரரசுகளும், கொடிய போர்களும் நில ஆக்கிரமிப்புக் களும் தொடங்கிய சங்ககாலத்துக்குபிறகாக மக்களின் அந்நியமாதல் கடவுளை, மதத்தை ஏற்க செய்கிறது. பார்ப்பனர்கள் வருகிறார்கள் வேள்வி, மேலுலகு என்று பேசுகிறார்கள். கொடிய சமூக அரசியல் நெருக்கடி மக்களை அவற்றை நோக்கித் தள்ளுகிறது.

“சங்க காலத்து தமிழ் சான்றோர் அரசதிகாரத்துடன் ஒத்துச் செல்லவில்லை. சாதியையும், மதப்பற்றையும் தமிழ் சான்றோர் போற்றவில்லை. அதிகாரத்துடன் அவர்கள் ஒருபோதும் ஒத்துழைக்கவில்லை. இந்த வகையில் சித்தர்கள் தமிழிலக்கியத்தின் மையமாக அவர் கருதுகிறார். வள்ளுவர் முதல் வள்ளலார் வரை இயக்கியது இந்தநெறி. இந்த இயக்கத்தின் வீச்சில்தான் பெரியாரைப் புரிந்து கொள்கிறேன்!” என்கிறார் ஞானி.

மார்க்சியத்தின் வேர்கள் தமிழ் இலக்கியத்தினுள் ஆதியிலேயே உண்டு என்ற புரிதலோடுதான் மார்க்சியம் தன்னுள் நிலைபெற்றதாக அவர் கூறுகிறார். “மார்க்சியத்துடன் எனக்கு உறவு ஏற்படவில்லையென்றால் என் வாழ்வு பொருளற்றதாக இருந்திருக்கும் என்று உறுதிபட கூறுகிறார். மார்க்சியத்தை நம் மரபிலிருந்து தான் செரித்துக் கொள்ள முடியும். நம் மண்ணுக்கு மார்க்சியம் இல்லாமல் முடியாது. மார்க்சியம் இல்லாமல் நம் வாழ்வில் மேம்பாடு சாத்தியம் இல்லை!”.

“ஆதிக்கம் எவ்வடிவில் இருந்தாலும் மனித வாழ்வு பொருளிழக்கும். அரசதிகாரம், மத அதிகாரம், பொருளியல் அதிகாரம் ஆணாதிக்கம் என்பனவெல்லாம் மனித வாழ்வை சிதைக்கும். வரலாற்றிலிருந்து சமுகத்திலிருந்து எவ்வகை ஆதிக்கத்தையும் அறவே களைந்து ஆதிக்கமற்ற சமத்துவமான எல்லோருக்கும் எல்லாம் என்பதான வாழ்வை ஏற்படுத்துவதுதான் மார்க்சியத்தின் இறுதி இலக்கு. தற்பெருமை தன் அகங்காரம், காமம், வெகுளி, முதலியனவும் மனித வாழ்வின் தரத்தை நாசமாக்கும். அதிகாரத்தை களைந்து கொண்ட மனிதன் இயற்கையை காப்பான், உயிரினங்களைக் காப்பான், இயற்கை யோடு ஒத்து வாழ்வான். இத்தகைய பேருணர்வு மார்க்சியனுக்கு இருக்க வேண்டிய உணர்வு. மனித வாழ்வுக்கு ஆதாரமான கலாச்சாரம், மெய்யியல் என்றெல்லாம் இதனைத்தான் கூற முடியும். வர்க்கங்கள் இருக்கும் வரை அரசு இருக்கும் மதம் இருக்கும் என்று மார்க்ஸ் கூறியதை இப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும். வரலாறு, சமூகம் முதலியவை பற்றிய சரியான பார்வை தருவது மார்க்சியம் தவிர வேறில்லை!”.

ஒளிப்புலம் இழந்த ஞானி மார்க்சிய ஒளியில் தன்னையும், சமூகத்தையும், இலக்கியத்தையும் இப்படித்தான் பார்க்கிறார். வாசிக்கிறார். நம்முன் வைக் கிறார். மார்க்சிய வழியில் அவர் வந்தடைந்த தமிழ் தேசம் என்பது ஆதி பொது சமூகத்தின் நவீன நிலமாகும் அதை மீட்டெடுக்கும் எழுத்தாக அவரது எழுத்து இருந்தது. அந்த வகையில்தான் அவரது இயக்கத்தை புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. புதிய தலைமுறை, வேள்வி, பரிமாணம், நிகழ், தமிழ்நேயம் என்ற அவரது இலக்கியத் தடம் இறுதியில் தமிழ்நேயத்தை இப்படித்தான் வந்தடைகிறது.

ஏறக்குறைய அறுபதுகள் தொடங்கி ஈராயிரத்து பதினாறு வரையிலும் அவரது தேடலும், திரட்டலும் இருந்தது. இன்றைக்கு எழுதும் பல நவீன முன்னணி படைப்பாளிகள் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்களே. சிறு பத்திரிகை உலகின் அவருக்கென தனித்த இடத்தை யாதொருவராலும் மறுக்க முடியாது.

அர்ப்பணிப்பும், சமரசமின்மையும் சதா தேடலுமான

அவரது சிற்றிதழ் பணி தமிழகத்தில் யாதொருவரும் தொடாத இடம் எனலாம். தனது வாழ்வின் இறுதிவரை இலக்கியம் என்று மட்டுமில்லாமல் சமூகம், பண்பாடு, அரசியல் என சகல துறைகள் பற்றியும் பதிவுகளை, விமர்சனங்களை விட்டுச் சென்றிருக்கிறார். ஒரு காலத்தின் விமர்சனமாக, தொலை நோக்காக, அனுபவமாக, எதிர்க்கூறலாக அவை இருக்கின்றன.

பெரும் நிதிச் சுமையுடன் இதழ் பணியினை அவர் செய்து வந்ததை அவரை நெருங்கியவர்கள் அறிவர். தமக்கு வரும் ஓய்வூதியத் தொகை தொடங்கி தமக்கு தரும் விருதுத் தொகை வரையிலும் இதழுக்கென செலவிட்டுவிடுவது அவரது இயல்பாகவே இருந்துள்ளது.

“முற்றுப் பெற்றதாக எதையும் கருதவில்லை. எதுவும் முற்றுபெறுவதில்லை. அப்படி கருதினால் முடிந்து போவது. செத்துப்போவது. வள்ளுவரும், ஏசுநாதரும், இன்னும் வரலாற்றுக்குள், நமக்குள் புதிய பொருளில் தொடர்கிறார்கள். இப்படி வரலாற்றின் இயக்கத்தோடு இருப்பதுதான் உயிர்த்துடிப்போடு இருப்பது ஆகும்!”. என்று தமது இயக்கம், எழுத்துப் பற்றி ஞானி சொல்வதாகும்.

தமிழ்நேயம் இதழை தமிழ் சமூகத்தின் மேன்மைக்கென தமது உடல் மற்றும் பொருள் நலனைக் கருதாமல் வெளியிட்டுவந்ததை யாதொருவரும் அறிவர். பெண்கள், சமூகம், சூழல் என தமிழ் நிலத்தின் மீதான அனைத்து ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் எதிராகப் பல விவாதங்களைத் தொடங்கி வைக்கும் விதமாக அவ்விதழை நடத்திக் கொண்டிருந்தார்.

எப்போது தொலைபேசியில் பேசினாலும் என்ன வாசித்தீர்கள் என்று கேட்டுவிட்டு இந்த நூலை வாசியுங்கள் என்று ஏதாவது ஒரு நூல் குறித்து பேசுவார்.

தமிழ்நேயத்தில் எழுதுவதற்காக ஏதாவது ஒரு குறிப்பினைக் கொடுத்து இது பற்றி எழுதுங்களேன் என்பார். என் எழுத்தின் மீது அவருக்கு பெரும் நம்பிக்கை இருந்ததைச் சொல்லத்தான் வேண்டும். ஒரு முறை தமிழன் நாகரீகத்திற்கு என்ன எதிர்காலம் இருக்கிறது? என்று எதிர் கேள்வியொன்றை தொடுத்துவிட்டு, எழுதுங்களேன் என்றார்.

தமிழ் ஆசிரியர்கள், பேராசியரியர்கள் எல்லாம் இருக்கும் போது என்னை கேட்கிறீர்களே அய்யா என்றேன். நீங்கள்தான் எழுத வேண்டும். எழுத முடியும். தமிழ் ஆசிரியர்கள், பேராசிரியர்களை நான் ஒருபோதும் நம்புவது கிடையாது. அவர்களில் மதிப்புக்குரியவர்களும் இருக்கவே செய்கிறார்கள். பேராசிரியர்கள் தமிழ் என்பது அவர்களுக்கு ஒரு பதவி மொழி. பிழைப்பிற்கான வழி. சம்பளம் பெறுவதற்கான ஊடகம் என்று சொன்னார். மேலும் தமக்குத் தெரிந்த தமிழாசிரியர்களிடம் கட்டுரைகள் கேட்டு, அதை ஒரு தொகுப்பாக கொண்டுவர விரும்பினார். வந்து சேர்ந்த கட்டுரைகளில் அவருக்கு அவ்வளவாக நிறைவளிக்கவில்லை. எனக்கொரு தொகுப்பினை அனுப்பி வைத்திருந்தார். வாசித்துவிட்டேன் என்றதும் எப்படி இருக்கிறது என்று கேட்டார். நான் தடுமாறிக் கொண்டிருந்தபோது. இப்படித்தான் இருக்கிறார்கள். இதுவே இப்படி என்றால் வந்திருந்த கட்டுரைகள் எப்படியானவையாக இருக்கக்கூடும் என்று நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். இவர்கள்தாம் நமது மாணவர்களுக்கு தமிழழையும், தமிழறிவையும் தரப்போகிறவர்கள் என்ற அவரது குரலில் என்றுமில்லாத வருத்தமிருந்தது.

தமிழ்நேயம் இதழ் இறுதியாக, ‘நானும் என் தமிழும்’ என்ற தலைப்பில் தமிழறிஞர்கள் பலரும் தமது தமிழுடனான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் சில இதழ்களேனும் வந்து கொண்டிருந்தது. மால. தங்கப்பா உள்ளிட்ட பலரும் தொகுப்பை செய்திருந்தனர். இதழ் நடத்துவதன் சுமை கூடிக் கொண்டே போன நிலையில் ஞானியிடமிருந்து தமிழ்நேயத்தை வாசிக்கும் ஆண்டு தொகை கட்டியவர்கள், கட்டாதவர்கள் ஆகியோருக்கு இப்படியொரு கடிதம் வந்திருந்தது,

சென்ற இருமுறை தமிழ்நேயம் அச்சிட்ட வகையில் செலவு ரூ 16,000 சந்தா, நன்கொடை என வந்து சேர்ந்தவை ரூ 3,000 மட்டும். பெரும்பாலான வாசகர்கள் தொகை அனுப்புவதைத் தவிர்க்கின்றனர். இந்த அளவில்தான் தமிழுணர்வு செயல்படுகிறது.

என் மனைவியின் மருத்துவச் செலவிற்காக ரூ. 30,000 கடன் வாங்கினேன். என் ஓய்வூதிய தொகையில் ஒவ்வொரு முறையும் ரூ 4,000 செலவிட்டேன்

தமிழ்நேயம் உங்களுக்குத் தேவையில்லையெனில் ஒருவரி எழுதுங்கள். உங்கள் தமிழுணர்வை நம்பி தமிழ்நேயம் நடத்துவது இயலாது போலத் தோன்றுகிறது. தமிழின் அழிவுக்கு நீங்களும் காரணம் ஆகிவிடக்கூடாது. அடுத்த இதழ் வருவதற்குள் வசதியுள்ளவர்கள் ரூ1000 அனுப்பலாம். அல்லது சந்தாவையாவது அனுப்புங்கள் நன்றி, ஞானி.

இப்படியான அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை சிற்றிதழ்களிலேயே காண முடியும் என்றாலும் பார்வைப் புலனுக்கு அப்பால் தமிழறத்தின் மீதான நம்பிக்கையில் ஞானி நடத்திய இதழுக்கு நமது தமிழுலகு அளித்த மரியாதை இப்படியாகத்தான் இருந்தது. இருக்கிறது.

ஞானியோடு உரையாடிக்கொண்டே நடந்து போவது ஓர் இனிமையான அனுபவம். நடைபயணம் சென்றுவரவேண்டும் என்று சொன்னார் ஞானி. அது வழமையாக போவதா அல்லது கொஞ்சம் பேசிக் கொண்டு தனிமையாக செல்வதற்காகவா என்று தெரியவில்லை. எனினும் அவருடன் நடக்கத் தொடங்கினோம். தஞ்சையின் பரபரப்பான சாலைகளில் வாகனங்களுக்கு இயல்பாக ஒதுங்கியவாறு ஞானி வேக வேகமாக நடந்து கொண்டிருந்தார். அவருக்கு இணையாக அவரைப் பிடித்துக் கொண்டு நடப்பதென்பது சற்றே சிரமமானதாகத்தான் இருந்தது.

அவரது வலது கையை தோளுக்குச் சற்றே கீழே பிடித்திருந்தேன். அவரது கை எலும்புகள் தோலைக் கடந்து கைகளில் உணரக்கூடியதாக இருந்தது. நடக்கும்போது அது இன்னும் உறுதியாக அசைந்தது. பலவற்றை பேசியபடியே வந்தார். இலக்கியம், சமூகம், அரசியல் என்று. டாவின்சிகோட் நாவல் பற்றியும் அதை சுருக்கமாக தமிழ் நேயத்தில் வெளியிடப்போவது குறித்தும் விவாதித்தபடியே வந்தார். நீண்ட தொலைவு வந்ததும் சிறிது நின்றார். களைத்துவிட்டார் போல என்று நினைத்து கைகளை எடுக்க நினைத்தேன்.. சட்டென்று திரும்பி மீண்டும் நடக்கத் தொடங்கினார். கட்டுரையின் முகப்பிலிருக்கும் கவிதையை நினைத்துக் கொண்டேன். அதுதான் ஞானி.

## மடல் திறப்பு

**ஆ**கஸ்ட்2020 காக்கை இதழ் வாசித்தேன். தலையங்கம் எழுதும் இடத்தில் இடம் பெற்ற கருத்துப்படம் ஒன்றே போதும் என்பதால்தான் தலையங்கம் எழுதப்படவில்லை என்பதை உணர் கிறேன். பல பக்கங்களில் எழுதப்பட வேண்டிய ஒன்றை அந்த கருத்துப்படம் கால் பக்கத்தில் எழுதிச்செல்கிறது. 'கருத்து வரை" கலைஞனுக்கு பாராட்டும், அன்பும்.

அமெரிக்க பழைமவாதக் கட்சியின் மெர்க் கார்த்தியின் இசம் பாசிசம் கோலோச்சும் இடங்களிலெல்லாம் பரவக்கூடிய கொடிய தொற்று நோய். குறிப்பாக அது பொதுவுடைமைக்கு எதிராகப் பரவும் நோய்மை என்பதை பாசெ. தனது காத்திரமான கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார். ஊடக அறத்தை ஊடக அரசியல் தின்று செரித்துவிட்டது.

கோட்டோவியத்தின் எதிர்கால நகர்வு குறித்துப் பேசும் வரைகலைஞன் மருதுவின் இம்மாதக் கட்டுரை மெய்ய திர்வுகளைக் கொண்டிருக்கிறது. வடிவேலு பொதுச் சித்திரமாகி விட்டார் என்பது அதிலொன்று. வடிவேலு பேசப்போவதில்லை. பேசவேண்டும் என்பதில்லை. அது எள்ளலின், பகடியின் உருவம். அரசியல், சமூகம், பண்பாட்டு எள்ளலுக்கான வடிவம். ஒரு பின்நவீனத்துவப் பிரதி போன்று இன்றைக்கு கோட்டோவியத்தின் வரைகோடுகள் வாசிப்பைப்போன்று வரைதலின் பிறிதொரு பக்கத்திற்கு செல்கின்றன.

இணைய நாளேடுகளின் கருத்துப்படங்களின் இடங்களில் அவை ஒளிப்படங்களாக மாறிக் கொண்டுள்ளதன் சவாலை வரைகலைஞன் சந்தித்துத்தான் ஆக வேண்டும் நல்ல மொழியில் மருதுவின் கட்டுரை சித்திரம் பெறுகிறது. (கலைத்துறை - இனி எதைப்பேசும்? எப்படிப் பேசும்?)

இதழியல் துறையின் நெடிய அனுபவம் மிக்க வேணு மாதவனின் பத்தி (எழுத்து,சொல், பொருள்) கடந்த கால பதிவுகளின் மறைந்திருக்கும் பக்கங்களை வெளியில் கொண்டு வருகிறது. எழுதப்படாதவை எல்லாம் அவரது எழுத்தில் வாசிக்க மேலும் காத்திருக்கிறேன். பாவேந்தரின், மகன் மன்னர் மன்னனுக்கும், ஞானிக்குமான நினைவேந்தலாகவும் அமைந்தது இவ்விதழ் பத்தி.

ஞானி குறித்த அவரது குறிப்புகள் ஒன்று போதும் அவரது இயல்பு குறித்து பல பக்கங்களில் எழுதுவதற்கான செய்திகள் அவற்றில் உள்ளன. சி.சு.விடம் அவரது எழுத்து இதழ் படிகளுக்கான தொகையைக் குறைத்துக் கொள்ள சொன்ன ஞானி, பின்னாளில் தமது இதழ்களுக்கானத் தொகையைப் பெறுவதில் பட்டபாடுகள் மிகக் கொடுமையானதாகும். அதே சமயம் "இருப்பதைக் கொடுங்கள் இல்லையென்றால் பரவாயில்லை வாசித்துவிட்டு ஒருவரியாவது எழுதுங்கள் தமிழ் பிழைத்துப்போகட்டும்!" என்று சொல்வார். அது வேதனையா, எள்ளலா வருத்தமா என்று அறிவது சிரமம்.

இன்குலாப் என்ற ஆளுமையின் பேருருவம் வேணுமாதவன் பத்தியின் சிறு சிறு குறிப்புகளில் பிருமாண்டமாக எழுகிறது. இனியும் அவர் பற்றி எழுத வேண்டும்.

காக்கை இணைய இதழ் என்றாலும் ஓர் அச்சு இதழுக்கான நேர்த்தி மிக்க வடிவமைப்பில் வருவது மகிழ்வளிக்கிறது. சோர்வளிக்காத பெருஞ்சுமையென ஆகாத, வாசிக்க உற்சாக மூட்டும் வகையில் வடிவமைத்துத் தரும் பக்க வடிவமைப்புக் கலைஞனுக்கு எனது பாராட்டும், அன்பும்.

இதழ் பொறுப்பாசிரியர் திரு க.சந்திரசேகரன் அவர்கள் தமது கண் அறுவைச் சிகிச்சைக்கு முன்பும், பின்புமாக இதழுக்காக செய்திருக்கும் அர்ப்பணிப்பான உழைப்பு, இவ்விதழை நமக்கு ஓர் சமூக, இலக்கிய, அரசியல் சாசனமாக மாற்றித் தந்திருக்கிறது. அவர் நலம் பெறவும் எனது வாழ்த்தும், அன்பும். என்றென்றும்.

**– இரா.மோகன்ராஜன், முத்துப்பேட்டை**

**"கா**க்கை" ஆகஸ்ட் 2020 இதழை இணைய வழி படித்தேன். புதுவை மன்னர் மன்னன் அவர்களது மறைவு குறித்து, திரு. க. பஞ்சாங்கம், தனது கட்டுரைக்கு, "ஒரு நூலகம் மறைந்து போனது" என்று தலைப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தம்.

திரு. மன்னர் மன்னன் அவர்களுடன் சில காலம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. 1980லிருந்து, இருபத்தி மூன்று ஆண்டுகள், எனது இணையர் குடந்தை அரசு மகளிர் கல்லூரியில் தமிழ்த் துறைத்தலை வராகப் பணியாற்றினார். கல்லூரி முத்தமிழ் விழாவிற்குத் தலைமை தாங்க யாரை அழைப்பது என்பதை அவர் தான் முடிவு செய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில், திரு. மன்னர் மன்னன் அவர்களை அழைப்பது என்று முடிவாகியது. தமிழ்த்துறையின் சார்பில் நான் புதுவை சென்று, திரு. மன்னர் மன்னன் அவர்களைச் சந்தித்து அழைப்பிதழை அளித்தேன். விழாவில் அவர் தலைமையேற்று, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, அவரது தந்தை பாவேந்தர் பாரதிதாசனின் நினைவுகள் பற்றி பேசினார். அவரது ஆழ்ந்த பிரளய நடையில் ஈர்க்கப்பட்ட மாணவியர் அனைவரும் சிறிதும் சலன மின்றி, அமர்ந்திருந்து அவரது உரைக்குச் செவி மடுத்தது, எனக்கு இன்றும் நினைவில் இருக்கிறது. இந்நிகழ்வைத் தொடர்ந்து, அவரை அடிக்கடி சந்தித்து அளவளாவும் வாய்ப்புக்களை நானே ஏற்படுத்திக் கொண்டேன். தமிழ் மொழியின் இலக்கிய வளம் குறித்து மட்டுமல்ல, புதுவை மாநில விடுதலை இயக்கத்திலும் அவர் எப்படியெல்லாம் செயல்பட்டார் என்பதையெல்லாம் உணர்ச்சி பொங்கக் கூறுவார். விடுதலை இயக்கத்தின் முன்னணி தலைவர்கள், அஞ்சல் உறைகளின் வெளியே சங்கேத மொழியில் சில சொற்களை எழுதி, தங்கள் திட்டங்களைப் பரிமாறிக் கொள்வார்களாம்! தணிக்கை அதிகாரிகள் மடல்களின் உள்ளே என்ன எழுதப்பட்டிருக் கின்றது என்பதில் மட்டும்தான் கவனமாக இருப் பார்களாம்.

எனது இணையரின் ஆய்வு ஏடான "குடிஅரசு இதழ்க் கவிதைகள்" என்ற நூலுக்கு அவர் அணிந்துரை தந்து சிறப்பித்தார். அதில் அவர் கூறுகிறார், "என் தந்தையார் தம் சொற்பொழிவுகளைத் தொடங்கு முன்னே "தாயின் மேல் ஆணை" என்று தாம் இயற்றிய பாடலை மாபெரும் மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும் உணர்ச்சிப் பொங்கப் பாடுவார். அவரைப் பின்பற்றி நானும் அந்தப் பாடலையும் வேறுசில பாடல்களையும் பாடியிருக்கிறேன். மழலைப் பருவம் முதற்கொண்டு, சுயமரியாதை இயக்க நெறியில் நடக்கத் தொடங்கியவன் நான். இந்த வழியில் என்னை ஆற்றுப்படுத்திய எந்தையார் பாரதிதாசனார், என் அறிவுக்குத் தீனியும், அய்யங்கட்குத் தெளிவும் வழங்கியவர். இயக்கத்தின் செயல்பாடுகளில் ஈடு பட்டவன், தொடர்ந்தவன் என்பதால், அதன் ஆழம், அகலம் எல்லாவற்றையும் கண்டறிந்துள்ளேன்".

திரு. வேணுமாதவன் அவர்கள் தமது "எழுத்து, சொல், பொருள்" கட்டுரையில், மன்னர் மன்னன், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரைப் பற்றி பதிவிட்டிருந்தது மிகவும் பொருத்தம். திரு. மன்னர் மன்னனின் மூத்த புதல்வர் திரு. செல்வம் அவர்களது திருமணம், புதுவையில் நாவலரின் தலைமையில் தான் நடந்தது. அன்றைய முதல்வர் திரு. பரூக் மரைக்காயர் கலந்து கொண்ட அந்நிகழ்வு இன்னும் நினைவில் இருக்கின்றது.

**– எம்.எப்.ஐ. ஜோசப் குமார், திருச்சி.**



வெங்கடகிருஷ்ணன் ஸ்ரீராம்

# தேவதாசியும் மகானும்

தமிழில் : பத்மா நாராயணன்

● வெளி ரங்கராஜன்

இசை நடனக் கலைஞர் பெங்களூர் நாகரத்தினம்மாவின் (1878-1952) கலையும் வாழ்க்கையும் குறித்த இந்த வாழ்க்கைச் சரிதம் இந்திய சுதந்திரத்துக்கு முந்தைய ஒரு நூற்றாண்டுகால இசை நடனம் சார்ந்த கலாச்சார சூழலின் பல்வேறு நினைவுச் சித்திரங்களை மீட்டெடுப்பதாக உள்ளது. முக்கியமாக தேவதாசி பாரம்பரியத்தில் வந்த நாகரத்தினம்மா இசை சார்ந்த தன்னுடைய கலைப்பயணத்தில் ஒரு தேவதாசியாகவும், ஒரு பெண்ணாகவும் எதிர்கொள்ள நேர்ந்த பிரச்சினைகள் குறித்த ஒரு வரலாற்றுப் பார்வையை இப்பதிவுகள் முன்வைக்கின்றன. முக்கியமாக நாகரத்தினம்மா வாழ்ந்த 19ஆம் நூற்றாண்டின் இக்காலகட்டம் பிரிட்டிஷ் ஆட்சி மேற்கொண்ட பல்வேறு கலாச்சார குறுக்கீடுகளால் இந்தியச் சூழல் கொதிப்படைந்திருந்த ஒரு காலகட்டம். முக்கியமாக கோவில்களில் பாரம்பரியமாக இசை நடனத்தை போஷித்து வாழ்ந்த தேவதாசி மரபினர் குறித்த அவர்களுடைய வறட்டுத்தனமான இழிவுப்பார்வை அவர்களால் தேவதாசி என்ற அடைமொழி கலைப்பெண்கள் அனைவருக்குமான பொதுச் சொல்லாக மாறியது. பிற்காலங்களில் தேவதாசி என்று இழிவாகச் சித்தரிக்கப் பட்ட இந்த அடைமொழியை எதிர்த்து கல்வியும், கலை மேதமையும் தொண்டுணர்வும் கொண்ட நாகரத்தினம்மா தன் வாழ்நாள் இறுதிவரை போராட நேர்ந்தது. ஆனால் அவர் தேவதாசி என்பதை பெருமைக்குரிய ஒரு சின்னமாகவே பிரகடனப்படுத்தினார். இலக்கிய அறிவும், கலைகளில் தேர்ச்சியும் இடைவிடாத உழைப்பும் அவருடைய 5 ஆண்டுகால இசைப் பயணத்தை வடிவமைத்திருந்தாலும் அவர் ஒரு தெளிவான உறுதிப்பாட்டுடன், தைரியமான ஒரு போராட்டக்கார பெண்ணாக இச்சூழலை எதிர்கொண்டார்.



நாகரத்தினம்மா மிகவும் நேசித்த 18ஆம் நூற்றாண்டு அரசவைக் கவிஞரும் கணிகையுமான முத்துப்பழனியின் தடைசெய்யப்பட்ட காதல் பிரபந்தமான ராதிகா சாந்தவனம் நூலை பதிப்பிக்க சீர்திருத்தவாதியும் தேவதாசி எதிர்ப்பாளருமான வீரேசலிங்கத்துடன் அவர் மேற்கொண்ட போராட்டங்களும், கலைமரபு கொண்டவர்களை விபச்சாரிகளாக இழிவுபடுத்தும் தேவதாசி தடைச்சட்டத்தை எதிர்த்து அவர் மேற்கொண்ட இடைவிடாத சட்டரீதியான முயற்சிகளும், தான் மனம் உருகி ரசித்துப் போற்றிய தியாகராஜரின் கிருதிகளை பிரபலப்படுத்தியதும், கைவிடப்பட்ட அவர் சமாதியை புதுப்பித்து அதன்மேல் நிரந்தரமாகக் கோவில் எழுப்பியதும், கோஷ்டிகளாகப் பிரிந்த தியாகராஜர் ஆராதனைக் குழுக்களை ஒருங்கிணைத்து வருடந்தோறும் கூட்டு ஆராதனை தடையின்றி நடைபெற வழிவகுத்ததும், புறக்கணிக்கப்பட்ட நாதஸ்வரக் கலைஞர்களும், பெண்கலைஞர்களும் உரிய கௌரவம் பெறப் போராடியதும் வரலாற்றில் நாகரத்தினம்மாவின் பெயரை என்றும் நிலைநிறுத்தக் கூடியவை.

அவருடைய இசைப்பயணமும் மதிப்பு வாய்ந்தது. அவர் சிறப்பாகச் செயல்பட்ட 26 வருடங்களில் 146 நகரங்களில் 1235 கச்சேரிகள் நிகழ்த்தியிருக்கிறார். அதில் சென்னையில் மட்டும் 849 கச்சேரிகள். இலங்கை சென்று யாழ்ப்பாணத்திலும் கச்சேரி செய்திருக்கிறார். திருமணங்களிலும், வீட்டு நிகழ்ச்சிகளிலும், தான் லட்சியமாகக் கருதிய மைசூர் அரண்மனையிலும் தன்னுடைய வீட்டிலிருந்தும்கூட தேர்ந்த கச்சேரிகள் செய்து விருதுகளும் பரிசுகளும் பெற்றிருக்கிறார். அவருடைய சங்கீதம் மரபு தவறாத சாஸ்திரீய சங்கீதமாக இருந்தது. பரதநாட்டியத்திலும் அவருக்கு தேர்ச்சி இருந்ததால் அவருடைய சங்கீதம் பாவபூர்வமாக இருந்தது. பாண்டித்யத்துடன் தாராள மனப்போக்கு கொண்டவராக ஏழைகளுக்கு அன்னதானம், கல்விக்கட்டணம் செலுத்துதல், திருமணம் செய்துவைத்தல் ஆகிய காரியங்களில் ஈடுபட்டதுடன் பாரம்பரிய ஞானத்தை பலருக்கும் பகிர்ந்தளித்திருக்கிறார். தியாகராஜருக்கு கோவில் கட்டும் முயற்சியில் தன்னுடைய வீடுகள் சொத்துகள் அனைத்தையும் இழந்தபோதும் விடாமுயற்சியுடன் கோவில் எழுப்பி பேதமின்றி அனைவரும் இணைந்து ஆராதனை செய்ய சநாதனிகளுடன் இறுதிவரை போராடினர். இறுதியில் அவர் தியாகம் வென்று திருவையாறில் மக்கள் வசீகரங்களில் ஒன்றாக மாறினார்.

தன்னுடைய உயிலில் கூட தேவதாசிகள் உட்பட எந்த பெண் கலைஞருக்கும் சமாதியில் உள்ள ஆராதனை மேடையில் ஏறிப்பாட அனுமதி மறுக்கக்கூடாது என்றும், பொதுமக்கள் இசை வழிபாடுகள் நடத்த சமாதி எப்போதும் திறந்திருக்கவேண்டும் என்றும், தன்னுடைய சொத்துக்கள் அனைத்தும் சமாதியை மேற்பார்வை செய்யும் அறக்கட்டளைக்கே உரியவை என்றும் நிபந்தனைகள் செய்தார். அவருடைய இறுதிக்கணங்கள் திருவையாறில் தியாகராஜருடன் மானசீக இணைவிலும், தியானத்திலுமாக தன்னை கரைத்துக்கொண்டன. புனித இடத்தில் பெண் புதைக்கப்படுவதை சநாதனிகள் எதிர்த்தாலும், சமாதியை ஒட்டிய காவிரிக்கரை சோலையில் அவருடைய சமாதி உருவாக்கப்பட்டு சிலை எழுப்பப்பட்டது. திருவையாறு இடுகாட்டின் சரித்திரத்திலேயே முதலாவதாகவும், இறுதியாகவும் ஒரு பெண்ணின் பூதஉடலை அந்த பூமி ஏற்றது.

கடைசி தேவதாசிப் பெண்ணின் போர்க்குரலாக ஒலித்த நாகரத்தினம்மா பின்வரும் தலைமுறையினருக்கு விட்டுச் சென்றவையாக ஆசிரியர் குறிப்பிடும் விஷயங்கள் அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கையின் சாரமாக அமைந்துள்ளன. தடை செய்யப்பட்ட காதல் பிரபந்தமான ‘ராதிகா சாந்தவனம்’ சார்பில் அவர் போர்க்கொடி தூக்கியது, தேவதாசி ஒழிப்பு சட்டத்துக்கு எதிரான உரிமைப் போராட்டம், கைவிடப்பட்ட தியாகராஜர் சமாதிமேல் கோவில் எழுப்பி நிரந்தரக் கூட்டு ஆராதனைக்கு வழிவகுத்தது, சுற்றுப்புறங்களை வளமாக்கியது, இறுதிவரை தியாகராஜரின் கிருதிகளை பரப்பப் பாடுபட்டது சங்கீத உலகில் பெண்கள் ஆண்களுக்கு சமம் என்று நிலை நாட்டியது, ஒதுக்கப்பட்ட நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் பெண் கலைஞர்களுக்கும் கௌரவம் சேர்த்தது, தூற்றப்பட்ட தேவதாசி என்ற நிலையிலிருந்து இறுதியில் புனிதரின் நிலையை எட்டியது என ஏன் அவர் கடந்து வந்த பாதை மீது நூல் வெளிச்சம் பாய்ச்சுகிறது. நாகரத்னம்மாவின் வளர்ப்பு மகளும், ஹரிகதை பாடகருமான பன்னிபாய் நாகரத்தினம்மாவின் வாழ்க்கையை மையமாக வைத்து தியாகராஜர் தம்மை காலம் மறவாமல் இருக்க இப்பெண்மணியை தேர்வு செய்ததாக கதை அமைத்துள்ளார்.

**அரசர்கள் இவனைப் போற்றினார்கள்**
**வித்வான்கள் இவனை விற்றுப் பிழைத்தார்கள்**
**ஆனால் ஒரு தாசி அல்லவோ**
**இவனுக்கு கோவில் கட்டினாள்**

என்ற எழுத்தாளர் மாலனின் கவிதைவரிகள் தியாகராஜருக்கு இணையாக நாகரத்தினம்மாவின் பெயரை வரலாற்றில் நிலைநிறுத்துபவை.

**நூல் வெளியீடு: காலச்சுவடு**



பார்வை

# ராஜீவ் அன்று சிங்களவரால் கொல்லப்பட்டிருந்தால்...

(இந்தியாவுக்கு இன்றும் சவால் விடும் ராஜீவைத் தாக்கிய விஜேமுனி)

● என்.சரவணன்

> நான் முன்நகர்ந்து ராஜீவை கடுமையாகத் தாக்கினேன். அது பலமான தாக்குதல். ஆனால் அத்தாக்குதல் விலகிச் சென்றுவிட்டது. நான் ராஜீவ் காந்தியின் தலைக்குத்தான் இலக்கு வைத்தேன். ராஜீவை கொல்வதே எனது இலக்கு. ஆனால் அவர் மற்றொரு பக்கம் திரும்பியதால் மயிரிழையில் உயிர்தப்பிவிட்டார்.

*“ராஜீவ் காந்தியை அன்றே கொலை செய்யும் இலக்கில் தான் தாக்கினேன். தப்பிவிட்டார்” இப்படி சமீபத்தில் நேர்காணல் கொடுத்திருப்பவர் ரோஹன விஜேமுனி.*

யார் இந்த விஜேமுனி. 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக ராஜீவ் காந்தி இலங்கை வந்திருந்த போது இராணுவ அணிவகுப்பில் வைத்து தாக்கிய கடற்படையினன் தான் இந்த விஜேமுனி.

இன்று வரை இலங்கையில் பெரிய ஹீரோவாக சிங்கள மக்கள் மத்தியில் அடையாளப்படுத்தப்படும் பிரமுகர். அதுமட்டுமன்றி இன்றுவரை ராஜீவ் காந்தியைத் தாக்கியதை பெருமையாக ஊடகங்களிலும், கூட்டங்களிலும் பகிரங்கமாக பேசித் திரிபவர்.

அன்றைய தாக்குதல் வெறும் காயப்படுத்தும் நோக்கில் அல்ல என்றும் கொன்றுபோடுவதற்காகவே தாக்கினேன் என்றும், ஆனால் தப்பிவிட்டான் என்றும் கடந்த மாதம் கொடுத்த நேர்காணலில் கூட உறுதியாகக் கூறியிருக்கிறார்.

அப்படி சிங்களவராலேயே கொலையாகும் நிலை அன்று ஏற்பட்டிருந்தால் இலங்கையில் தமிழர் பிரச்சினையின் திசைவழியே வேறாக ஆகியிருக்கும் என்பதை சொல்லித்தெரியத் தேவையில்லை. பிற்காலத்தில் ராஜீவ் கொலையானது அதன் பின் தமிழர் விடுதலைப் போராட்டம் சர்வதேச அளவில் தனிமைப்பட பிரதான காரணமாக ஆனதும் அதன் தொடக்கத்தை இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம் ஏற்படுத்தியது என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

**சரி விஜேமுனி இலங்கையின் கள அரசியலில் மீண்டும் பேசுபொருளானது ஏன்?**

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாணசபைகள் முறையை முற்றிலும் நீக்கப்போவதாக மகிந்த ராஜபக்ச அணியினர் தேர்தல் நடப்பதற்கு முன்னரும்

நடந்தபின்னரும் தொடர்ந்தும் பேசி வருகின்றனர். தமிழர்களுக்கு இருந்த ஆக குறைந்த பட்ச நலன்களை இந்த மாகாணசபைகள் வழங்கி வந்திருக்கிறது. மாகாண சபையானது ஒரு அரசியல் தீர்வல்ல ஆனால் அது ஒரு அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான ஒரு அதிகார அலகு. அதையும் பறித்தெடுப்பது தொடர்பாகவே தற்போது முடிவுக்கு வந்துள்ளது ராஜபக்ச தரப்பு.

நடந்துமுடிந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கையிலேயே அதிகப்படியான விருப்பு வாக்குகளை பெற்றவர் மகிந்த ராஜபக்ச. மகிந்த பெற்ற வாக்குகள் 5,27,364. இதுவே இலங்கையின் பொதுத்தேர்தல் வரலாற்றில் தனியொருவர் பெற்ற அதிகப்படியான வாக்குகள். அவருக்கு அடுத்தபடியாக இந்தமுறை இலங்கையிலேயே அதிக விருப்புவாக்குகளைப் பெற்றவர் சரத் வீரசேகர. இலங்கையின் முன்னணி இனவாதிகளில் ஒருவராக நாம் குறிப்பிடமுடியும். மாகாணசபை முறையை ஒழித்துக் காட்டுவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு தேர்தல் களத்தில் குதித்த சரத் வீரசேகரவை இம்முறை வெற்றிபெறச்செய்வதற்கு அருகிலிருந்து பிரச்சாரம் செய்து சகல ஒத்தாசைகளையும் செய்தவர் விஜேமுனி.

சரத் வீரசேகர வெற்றி பெற்றதும் அவருக்கு மாகாணசபைகள் அமைச்சை ராஜபக்ச அரசு இப்போது கொடுத்துவிட்டது. எந்த மாகாண சபைகளை அழிப்பேன் என்று சத்தியம் செய்தாரோ அதே சரத் வீரசேகரவிடம் அந்த மாகாணசபைகளை ஒப்படைத்திருப்பதன் இனவாத கைங்கரியத்தை இங்கு கவனிக்கவேண்டும். சரத் வீரசேகர மாகாணசபை அமைச்சரானதும் எந்த அதிகாரங்களையும் இதற்கு வழங்கப்போவதில்லை என்று வெளிப்படையாகவே கூறி வருவதை ஊடகங்கள் அனைத்தும் பதிவு செய்து வருகின்றன. நாளாந்தம் மாகாணசபை முறையை அளித்தே தீருவேன் என்று அதற்குப் பொறுப்பான ஒரு அமைச்சரே கூறுகிறார் என்றால் அந்த இனவாத தெனாவெட்டுக்கு உகந்த காலம் இனவாத தரப்புக்கு தற்போது எட்டியிருக்கிறது என்பதைத் தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



விஜேமுனி

மாகாண சபைகள் விடயத்தில் விஜேமுனி பற்றி சற்று விரிவான பதிவைச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**"விஜேமுனி என்கிற இந்திய எதிர்ப்புக் குறியீடு"**

வருடாந்தம் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட அந்த நாளின் நினைவாக ஊடகங்கள் வெளியிடும் செய்திகள், கட்டுரைகளின் போது விஜேமுனி பல ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுவிடுவார். அல்லது இலங்கை இந்தியா பற்றி ஏதும் சர்ச்சைக்குரிய சலசலப்புகள் இலங்கையின் அரசியலில் தோன்றும் போதும், மோடி போன்றவர்கள் இந்தியாவிலிருந்து விஜயம் செய்யும் வேளைகளிலும் ஊடகங்களுக்கு விஜேமுனி தீனியாகிவிடுவார். விஜேமுனி மீண்டும் மீண்டும் ஒரு ஹீரோவாக நிறுவப்பட்டுக்கொண்டிருப்பார்.

இந்தியாவுக்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திய அந்த தீர்க்கப்படாத களங்கம் ஏற்பட்டு 27 வருடங்களுக்குப் பின்னர் 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தார் இந்தியப் பிரதமர் மோடி. மோடியின் விஜயம் குறித்து விஜேமுனி ஊடகங்களிடம் இப்படி குறிப்பிட்டார்.

"மோடியின் வருகையை விரும்புகிறேன். அவர் ஒரு நல்ல மனிதர். விருச்சிக நட்சத்திரத்தை சேர்ந்தவர். அப்படியானவர்கள் நேர்பட பேசுபவர்கள். மோடி பதவிக்கு வருவார் என்பதை எனது சோதிட அறிவின் மூலம் எப்போதோ கூறிவிட்டேன். ஆனால் எங்களது இறைமையைப் பாதிக்கும் எந்த ஒப்பந்தமும் செய்துகொள்வதை ஏற்றுக்கொள்ளமாட்டேன். எங்கள் நாடு சுதந்திர நாடு. எமது நாட்டுக்கு நெருக்கடி கொடுக்கும் அதிகாரம் எந்த நாட்டுத் தலைவருக்கும் கிடையாது." என்றார்.

### இந்திய எதிர்ப்புணர்வின் நீட்சி

தமிழ் மக்களின் மீதான இனவாத உணர்வின் ஒரு அங்கமாக இந்திய எதிர்ப்புணர்வு நெடுங்காலமாக நிலவி வருகிறது. வரலாற்றில் பல தடவைகள் நிகழ்ந்த தென்னிந்திய படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகள், ஆட்சிகள் அனைத்தும் சிங்களவர்கள் மத்தியில் ஆழ்ந்த பகையுணர்வை விதைத்துள்ளது. தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசாகவும், சண்டியனாகவும் இந்தியா வளர்ந்து நிற்பதானது அவர்கள் மத்தியில் சதா பீதியை விதைத்து வந்துள்ளது. இந்திய ஆக்கிரமிப்புகள் பற்றிய கதைகளை பாடப்புத்தகங்களின் மூலம் தலைமுறை தலைமுறையாக கடத்தி வந்திருக்கிறது. பௌத்த அறநெறிப் பாடங்களிலும், இலங்கையின் புனித வரலாற்று நூலான மகாவம்சத்தின் வாயிலாகவும் அந்த ஆக்கிரமிப்புக் கருத்துக்கு வலு சேர்க்கப் பட்டிருக்கிறது.

இத்தகைய சூழலில் தமிழகத்தையும் ஈழத் தையும் இணைத்த அகண்ட தமிழ்நாடு கருத் தாக்கம், தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு இந்தியாவில் அளிக்கப்பட்டு வந்த பயிற்சிகள், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அவ்வப்போது இந்தியாவின் தலையீடுகள் என்பன எப்போதும் ஆத்திரத்தையும் அரசியல் கையாலாகாத்தனத்தின் வெறுமையையும் இந்தியாவின் மீதான பகைமையுணர்வை ஆழப்படுத்தி வந்தன. இத்தகைய சூழலில் தான் சோவியத் – அமெரிக்க முகாம்களின் பனிப்போர் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. அமெரிக்கா, தென்னாசியாவில் செல்வாக்கு செலுத்த திருகோணமலையில் நிலைகொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து இலங்கையுடன் உறவாடி வந்தது. சோவியத் யூனியன் சார்பு நாடாக இருந்த இந்தியாவுக்கு அமெரிக்காவின் இந்த நகர்வு எதிர்கால அச்சத்தை ஏற்படுத்தியது. இலங்கையை தமக்கு கீழ் அடிபணிய வைப்பதற்கு அன்று ஈழப்பிரச்சினையை பயன்படுத்திக் கொண்டது. இதன் விளைவாக 1987 யூன் 4ஆம் திகதி இந்திய விமானப்படையின் விமானங்களின் மூலம் யாழ்ப்பாண நகரங்களில் உணவுப் பொட்டலங்களைப் போட்டு தமிழ் மக்களின் மீது கரிசனைகொண்ட ஆபத்பாந்தவனாக காட்டிக்கொண்டது. இலங்கையின் வான் பரப்பில் அத்துமீறி மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு "ஆப்பரேசன் பூமாலை" (Operation Poomalai) என்று இந்தியா பெயரிட்டி ருந்தது. இந்த அத்துமீறல் நடவடிக்கையின் மூலம் இந்தியா ஒரு வன்மமான ராஜதந்திர எச்சரிக்கையை இலங்கைக்கு விடுத்திருந்தது.

இதே காலப்பகுதியில் இலங்கையின் தென் பகுதிகளில் ஜே.வி.பியும் வட கிழக்குப் பகுதிகளில் தமிழ் இயக்கங்களும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் இந்தியாவின் பலத்த எச்சரிக்கை இந்தியாவுடனான பேச்சுவார்த்தைக்குத் தள்ளியது. நேருக்குப் பின்னர் இலங்கை மீதான இந்தியாவின் தலையீடுகள் இந்திய நலனுக்கு மட்டுமே அதிக முன்னுரிமை கொடுக்கும் வெளிவிவகாரக் கொள்கையாக மாறிய கதையை தனியாக கவனியுங்கள்.

1971 ஜேவிபி கிளர்ச்சியின் போது கிளர்ச்சி யாளர்களுக்கு அளிக்கப்பட ஐந்து வகுப்புகளில் ஒன்று "இந்திய விஸ்தரிப்புவாதம்" என்கிற தலைப்பு. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி யினரைக் கூட இந்தியாவின் ஐந்தாம் படையாக சித்திரித்தது ஜேவிபி. இந்தியா மீது அதே வெறுப்புணர்வை தொடர்ந்து வந்த ஜே.வி.பி இயக்கம் இந்தியாவின் மீது மேலும் ஆத்திரமுற்றது. இலங்கை முழுவதும் இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்களை தீவிரப்படுத்தியது. ஜே.வி.பி தலை மறைவாக ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுத்து வந்திருந்த அதேவேளை அன்றைய எதிர்க்கட்சி யான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும், இன்னும் பல சிங்களப் பேரினவாத இயக்கங் களையும் சேர்த்து "தாய் நாட்டை மீட்பதற்கான இயக்கம்" என்கிற இயக்கத்தை ஜே.வி.பி கட்டியெழுப்பியது. இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க இந்த முன்னணி இயக்கத்தை தனது வெகுஜன அமைப்பாக இயக்கி வந்தது ஜே.வி.பி.

இந்திய விஸ்தரிப்பு வாத பிரச்சாரத்துடன், "நாட்டைப் பிளவுபடுத்த இதோ இந்தியா வருகிறது..., தமிழீழத்தை தமிழ்ப் போராளிகளுக்கு கொடுக்கப்போகிறது இந்தியா..., இந்தியா எமது இறைமையில் அடாவடித்தனமாக தலையிட்டுவிட்டது" என்கின்ற பிரச்சாரங்களால் உந்தப்பட்ட பல இளைஞர்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக மட்டுமன்றி, தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவும் இருந்தார்கள். சிங்கள இனவாத சக்திகளுக்கு ஜே.வி.பி கொடுத்த காலகட்டம் அது. இப்பேர்பட்ட சூழலில் இந்தியாவுக்கு எதிரான மனநிலைக்கு ஆட்பட்டிருந்தவர் தான் ரோஹன விஜேமுனி.

### ராஜீவை தாக்குவதற்கான தயாரிப்பு

ராஜீவ் - ஜே.ஆர். ஆகியோருக்கு இடையில் 1987 யூலை 29ஆம் திகதி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. ஜே.ஆர். அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை நாடு முழுவதும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தித்தான் மேற் கொண்டிருந்தது. மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற முடியாதபடி தொலைக்காட்சிகளில் தான் இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் 30ஆம் திகதியன்று ராஜீவ் காந்தி இந்தியா திரும்புமுன்னர் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் (இராணி மாளிகை) முப்படைகளின் அணிவகுப்பு (The Guard of Honour) மரியாதையில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் ரோஹன விஜேமுனிக்கு கிட்டியது. அணிவகுப்பில்

உயரமானவர்கள் இரு வரிசையின் ஆரம்பத்திலும், இறுதியிலும் நிறுத்தப்பட்டார்கள். நடுவில் கட்டையானவர்கள் நிறுத்தப்பட்டார்கள். அதன்படி முதலாவது வரிசையின் இறுதியிலிருந்து நான்காவது நபராக விஜேமுனி நிறுத்தப்பட்டு ஒத்திகை பார்க்கப்பட்டிருந்தது. விஜேமுனிக்கு தனது இடம் எது ராஜீவை தாக்குவதற்கான சந்தர்ப்பம் எது என்பது தொடர்பில் திட்டமிட்டு அச்சந்தர்ப்பத்துக்காக காத்திருக்க முடிந்தது.

அந்த அணிவகுப்பின் போது படையணிக்கும் ராஜீவுக்கும் இடையில் 2 அடி தூரமே இருந்தது. இலங்கைப் படையைச் சேர்ந்த அட்மிரல் சில்வா அருகில் செல்ல பின்னால் ராஜீவின் மெய்ப்பாதுகாவலர்களுடன் ராஜீவ் காந்தி மெதுவாக இராணுவமரியாதையை ஏற்று பார்வையிட்டுகொண்டே சென்றார். சரியாக விஜேமுனியைத் தாண்டி இரு அடி வைக்கும்போது தூரத்தைக் கணித்து தான் பிடித்திருந்த சீன ரக (Chinese SLR) துப்பாக்கியை மேலே எடுத்து கனமான அதன் பின்பகுதியால் ஓங்கித் தாக்கினார் விஜேமுனி.

ராஜீவோ தற்செயலாக குனிந்துகொள்ள ராஜீவின் தோள்பட்டையில் பலத்த அடி விழுந்தது. ராஜீவின் மெய்ப்பாதுகாவலர்களை விட அதிகமாக சுதாரித்துக்கொண்டவர் அட்மிரல் சில்வா. ராஜீவ் காந்தி தாக்கப்படும் காட்சியை அப்படத்தில் உற்று நோக்கினால் பின்னால் வரும் இந்திய மெய்ப்பாதுகாவலர்கள் அதுவரை அந்தளவு சுதாரிப்பைக் கொண்டிராத தையும் காணலாம். ராஜீவ் காந்தி சற்று முன்னே ஓடி தப்பினார்.அவரை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கவனமாக அழைத்துச் சென்றனர். உலகம் முழுவதும் தொலைக் காட்சிகளில் திரும்பத் திரும்ப இந்த சம்பவம் காண்பிக்கப்பட்டது. இந்தியாவைக் கடும் அதிர்ச்சியில் உறைய வைத்தது மட்டுமன்றி இந்திய மக்களின் கடும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணியது இந்த நிகழ்வு.

**வாக்குமூலம்**

தென்னிலங்கையில் சிங்களத் தேசியவாத உணர்வு முனைப்பாக இருக்கின்ற காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். தனது 20 வது வயதில் 1985 இல் படையில் இணைந்துகொண்ட விஜேமுனி வடமராட்சி போரில் கலந்து கொண்ட நபர். குடும்பத்தில் இரு சகோதரர்களும் இராணுவத்தை சேர்ந்தவர்கள். ஒரு சகோதரன் யுத்தத்தில் கையை இழந்தவர். சமீபத்தில் விஜேமுனி லக்பிம (23.07.2006) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இப்படி குறிப்பிடுகிறார்.

“இந்தியாவின் 26 ஆவது மாநிலமாக சிறிலங்காவை இணைத்துவிட்டார்கள் என்று நினைத்தேன். எமது போரை நிர்மூலமாக்கி எங்களை எளிதில் வெற்றி கொண்டுவிட்டார் ராஜீவ். அவருக்கு வரவேற்பளிக்கப்பட்ட சம் பவத்தை தொலைக்காட்சிகளில் பார்த்து இரத்தம் கொதித்தது. என்னால் அந்த தொலைக்காட்சிப் பதிவுகளை தொடர்ச்சியாகப் பார்க்க சகிக்கமுடியவில்லை. யூலை 30 அன்று நான் விரைவாக தயாராகி பேருந்தில் ஏறி அரச தலைவர் மாளிகைக்குச் சென்றேன். அணிவகுப்பு மரியாதைக் குழுவில் இணைந்து கொண்டேன்.

நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அப்போது ராஜீவ் மட்டும் அந்த ஒப்பந்தத்தை செய்யாது இருந்திருந்தால் இந்தத் தீவிலிருந்து பயங்கரவாதத்தை அப்போதே நாம் அழித்திருப் போம். ராஜீவ் காந்திக்கு வணக்கம் செலுத்தி அந்தப் பாவச் செயலில் என்னையும் இணைத்துக் கொள்ள வேண்டுமா என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

கடற்படை தளபதி ஆனந்த டி சில்வா ராஜீவுக்கு பின்னால் இருந்தார். நான் இடதுபுறத்திலிருந்து 4 ஆம் நபராக நின்றிருந்தேன். என்னால் நீண்ட நேரம் பொறுமை காத்திருக்க முடியவில்லை. ராஜீவ் காந்தியை கொன்று விட்டால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிடும்.



நான் முன்நகர்ந்து ராஜீவை கடுமையாகத் தாக்கினேன். அது பலமான தாக்குதல். ஆனால் அத்தாக்குதல் விலகிச் சென்றுவிட்டது. நான் ராஜீவ் காந்தியின் தலைக்குத்தான் இலக்கு வைத்தேன். ராஜீவை கொல்வதே எனது இலக்கு. ஆனால் அவர் மற்றொரு பக்கம் திரும்பியதால் மயிரிழையில் உயிர்தப்பிவிட்டார்.

ராஜீவின் பாதுகாவலர்கள் என்னை அங்கேயே தாக்கினர். மைதானத்தில் விழுந்துவிட்டேன். அதன் பின்னர் என்னை கைது செய்து விசாரணை நடத்தினார்கள். தாக்கினார்கள்.

அதேபோல் இந்திய உள்துறை அமைச்சகத்தின் அதிகாரிகள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த என்னை சந்தித்து கேள்வி கேட்டனர். ஆனால் அவர்களுக்கு நான் பதில் அளிக்க முடியாது என்று மறுத்துவிட்டேன். அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டேன். 1987ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் இராணுவச் சட்டத்தின்படி 6 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. வெலிக்கடை சிறையில் எனக்கு

உற்சாகமான வரவேற்பு கிடைத்தது. அந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தை வெளியேற்றக் கோரி போராட்டம் நடத்தினோம். எம்மீது துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டு காயப்பட்டேன்."

### சிங்கள தேசத்தின் கதாநாயகன்

இன்றும் விஜேமுனி சிங்கள பௌத்தர்களின் கதாநாயகன். ஒரு முன்னுதாரணத்துக்காக ராஜீவை தாக்கிய அந்த துப்பாக்கி எதிர்காலத்தில் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டும் என்று கூட கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. மாகாண சபைக்கு எதிரான முதலாவது கலகம் ரோஹன விஜேமுனியின் துப்பாக்கியிலிருந்து தொடங்குகிறது என்று சிங்கள தரப்பில் கூறப்படுவதுண்டு. ரோஹன விஜேமுனியின் மீதான முதற்கட்ட விசாரணையை ஜே.வி.பி.யின் சதி என்கிற கோணத்திலேயே மேற்கொண்டிருந்தது அரசாங்கம்.

6 ஆண்டுகள் தண்டனை அளிக்கப்பட்டபோதும் இரண்டரை வருடங்களில் அதாவது 04.04.1990 அன்று ஜனாதிபதி பிரேமதாசவினால் "ஜனாதிபதி மன்னிப்பின்"பேரில் விடுவிக்கப் பட்டார் விஜேமுனி. "நான் பதவிக்கு வந்ததும் விஜிதவுக்கு மன்னிப்பு வழங்குவேன் என்று கூறியிருந்தார் ஜனாதிபதி பிரேமதாச. அதன்படி அவர் செய்தார்" என்று ரிவிர (05.12.2011) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் விஜேமுனி தெரிவித்திருந்தார்.

இந்தியாவுக்கு விஜேமுனியால் மட்டும் அவமானம் ஏற்படவில்லை அதன் பின்னர் பிரேமதாசவாலும் மேற்கொள்ளப்பட்ட மோசமான அவமானம் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டது. அந்த வகையில் பிரேமதாசவால் விஜேமுனிக்கு அளிக்கப்பட ஜனாதிபதி மன்னிப்பு இந்தியாவுக்கு மேலும் ஆத்திரத்தையே ஊட்டியிருந்தது.

சிறைமீண்ட விஜேமுனிக்கு சிங்கள பௌத்த இனவாத சக்திகள் பெரும் வரவேற்பு கொடுத்தனர். 1994இல் அப்போதைய பேரினவாத கட்சியான "சிங்களயே மகா சமமத்த பூமி புத்திர பக்ஷய" எனப்படும் சிங்கள மண்ணின் மைந்தர்களின் கட்சியின் சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட விஜேமுனி அதன் பின்னர் சிஹல உறுமய கட்சியில் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். அதன் பின்னர் ஐ.தே.க கட்சியில் இணைந்தார். மீண்டும் இனவாத சக்திகளின் பெரும் கூடாரமான ராஜபக்ச அணிக்குத் தாவினார். 2020 தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் வேட்பாளராக நிறுத்துவதாக பசில் ராஜபக்ச (மகிந்த ராஜபக்சவின் சகோதரன், ராஜபக்சவினரின் தேர்ந்த திட்டமிடல் நிபுணராக இருப்பவர்) ஒப்புக்கொண்டதாகவும். ஆனால் இறுதியில் தனக்கு தரவில்லை என்றும், தான் களுத்துறை மாவட்டத்தில் இரண்டு லட்சத்துக்கும் மேல் வாக்குகளை எடுப்பேன் என்றும் இவர்களுக்கு தகவல்கள் கிடைத்ததாலேயே தன்னை போட்டியிட அனுமதிக்கவில்லை என்று youtube சேனல் ஒன்றுக்கு ஆத்திரத்துடன் பேட்டியளித்திருந்தார். அதே நேர்காணலில் தற்போதைய அரசாங்கம் ஒரு வருடத்துக்குள் பிளவுபட்டு பலர் எதிர்க்கட்சியில் வந்து சேருவார்கள் என்று தனது சோதிட ஆரூடத்தையும் கூறத் தவறவில்லை.

இன்றுவரை 13வது திருத்தச் சட்டத்திற்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருபவர்களில் விஜேமுனி முக்கியமானவர் என்பதால் மாகாணசபை முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்று அணிதிரளும் இனவாத சக்திகள் விஜேமுனியை தமது மேடைகளில் இணைத்துக் கொள்கின்றனர். 2013ஆம் ஆண்டு வடக்கு கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்றும் மாகாண சபை முறையை நீக்குமாறு கோரியும் பல சிங்கள பேரினவாத இயக்கங்கள் சேர்ந்து "தேசிய இயக்கங்களின் ஒன்றிணைவு" என்கிற அமைப்பை ஏற்படுத்தி போராட்டங்களை நடத்தின. அந்த மேடைகளில் விஜேமுனி முக்கிய பேச்சாளர்.

"நான் அன்று ராஜீவைத் தாக்கவில்லை அந்த ஒப்பந்தத்தையே தாக்கினேன்" என்று பிறிதொருமுறை விஜேமுனியால் தெரிவிக்கப் பட்டிருந்தது.

சிறையிலிருந்து விஜேமுனி தனது தாய்க்கு எழுதிய ஒரு கடிதத்தில் இப்படி இருக்கிறது..

**"இந்த நாசகார ஒப்பந்தத்தில் நானும் ஒரு பங்காளியாக இருக்க விரும்பவில்லை அம்மா. நாளை பிரபாகரன் வடக்கு கிழக்கின் முதலமைச்சரானால்'; எங்கள் பொடியன்களைக் கொன்ற பிரபாகரனுக்கு இது போலவே இராணுவ மரியாதையை அளிக்க நேரிடும் என்று பயந்தேன். இலங்கை இந்தியாவின் 26 வது மாநிலமாக ஆகிவிடும் என்று சிலர் எச்சரித்தார்கள். நான் சிறைச்சாலை சாப்பாட்டை உண்ணுவதற்காக கவலைப்படவில்லை. எனது இலக்கு தவறி விட்டதற்காவே வருந்துகிறேன்."**

(லங்காதீப பத்திரிகையில் ராஜீவ் தாக்கப்பட்ட 25ஆவது வருட நினைவு சிறப்பிதழில் வெளியான நேர்காணல் 30.07.2012)

ராஜீவ் காந்தி தாக்கப்பட்டு 25வருட நினைவை சிங்கள ஊடகங்கள் பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்து பல ஆக்கங்களை 2012 இல் வெளியிட்டிருந்தன. அந்த ஆக்கங்களையும் முன்னர் வெளியிடப்பட்ட பல செய்திக்கட்டுரைகளையும் தொகுத்து அதே 2012 ஆண்டு விஜேமுனியால் "தாய்மண்ணே வணக்கம்" என்கிற நூல் வெளியிடப்பட்டது. அந்த நூலில் விஜேமுனியின் மீதான வழக்கு விசாரணை குறித்த வாதங்களும் அதற்கு அளிக்கப்பட்ட பதில்களும் உள்ளன. அவற்றில் சில குறிப்புகள்:



- "ஜோர்ஜ் புஷ்ஷுக்கு சப்பாத்தினால் தாக்கியவர்கள் என்னிடம் இருந்துதான் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்" *(சியத்த - 28.12.2008)*
- "நான் அரசுக்கு துரோகமிழைத்திருக்கலாம். ஆனால் என் இனத்துக்கு துரோகமிழைக்கவில்லை." *(ரன்திவ - 01.04.2012)*

விஜேமுனி தற்போது புறக்கோட்டையில் ஒரு கடையை நடத்தி வருகிறார். சிறையில் கற்றுக்கொண்ட சோதிடமே விஜேமுனியின் தற்போதைய தொழில். இலங்கையில் பிரபல சோதிடராக ஆகியிருக்கும் விஜேமுனியின் சோதிட நிகழ்ச்சிகளை பிரபல தொலைக்காட்சிகள் காண்பித்து வருகின்றன. சோதிடத்தின் மூலம் விஜேமுனி கூறும் அரசியல் எதிர்வுகூறலுக்கு ஒரு கிராக்கி ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் தோல்வி, மைதிரிபாலாவின் வெற்றி குறித்து தொலைக்காட்சியில் வெளியான விரிவான சோதிட விளக்கங்கள் யூடியூப் எங்கிலும் காணக்கிடைக்கின்றன. தனது புறக்கோட்டையில் உள்ள கடையில் நீண்ட காலமாக பாட்டு கேசட், சீடிக்களை விற்பனை செய்துவருகிறார் விஜேமுனி. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் கடும் இந்திய எதிர்ப்பாளரான விஜேமுனியின் சீடி கடையில் அதிகம் விற்பனையாவது இந்திய இந்திப் பாடல்களே.

ராஜீவ் காந்திகொலைக்கு தமிழர்களுடன் கணக்கு தீர்த்துக்கொண்ட இந்தியா, ராஜீவ் மீதான தாக்குதல் அவமானத்தை இன்னமும் சுமந்தபடி தான் பேரினவாத முகாமுடன் கைகோர்த்து வருகிறது. அந்த அவமானக் கறையை துடைக்காமல் தான் மோடியும் வந்து போகிறார். ராஜதந்திர உறவுகளும் நீளுகின்றன.

ராஜீவை தாக்கிய நபர் மிகவும் சுதந்திரமாகவும் இறுமாப்போடும் சிங்கள பௌத்தர்களின் வீரனாக கொண்டாடப்படுகிறார். இலங்கை அரசோ குறுகிய காலத்தில் மன்னிப்பு வழங்கி விடுவித்துவிட்டதுடன் ஆசியையும் வழங்கியிருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாகாண சபை கூட கொடுக்கக்கூடாது என்பதில் விஜேமுனி உறுதியாக இருப்பதுடன் அதற்காக தன்னை முழு அளவில் ஈடுபடுத்தியும் வருகிறார்.

இணையத்தளமொன்றில் வெளியான விஜேமுனியின் நேர்காணல் ஒன்றுக்கு சிங்கள வாசகர் ஒருவர் இப்படி பின்னூட்டமொன்றை இட்டிருந்தார்.

"நல்லவேளை ராஜீவ் விஜேமுனி கையால் சாகவில்லை. அப்படி செய்திருந்தால் இன்றைய வரலாறு தலைகீழாக மாறியிருக்கும். தமிழ்நாட்டில் வைத்து தமிழரால் கொல்லப்பட்டதால் தான் இந்தியா தமிழருக்கு எதிராகவும் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும் இருந்து யுத்தம் நமக்கு சாதகமாக முடிக்கப்பட்டிருக்கிறது."

விடுதலைப் புலிகளால் கொலைசெய்யப் பட்டதாக கூறப்படும் இரு நாட்டுத் தலைவர்களின் பிள்ளைகளும் இப்போது அந்தந்த நாடுகளில் ஒரே காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களாக

ஆகியிருக்கிறார்கள். இந்தியாவில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகன் ராகுல் காந்தியும், இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாசவுமே அவர்கள். இவர்கள் இருவரும் வடக்கு கிழக்கு தமிழர் நலன்களில் அக்கறையற்றவர்கள். இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது அன்றைய பிரதமராக இருந்த பிரேமதாச அன்றைய ஜனாதிபதி ஜே.ஆருடன் இது விடயத்தில் கடும் ஆட்சேபனை செய்தவராகவும், அதிருப்தியுற்றவராகவும் இருந்தார். ஒரு பிரதமராகக் கூட அன்றைய பிரதான அரச நிகழ்வுகளில் பிரேமதாச கலந்து கொள்ளவில்லை.

அவ்வொப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு இரண்டு வருடங்களில் 1989இல் ஜனாதிபதியாக தெரிவான பிரேமதாச இந்தியாவை அவமானப்படுத்தும் வகையில் இந்திய அமைதி காக்கும் படையை வெளியேறுமாறு கால அவகாச எச்சரிக்கை விடுத்தார். இந்தியப்



படையை "ஆக்கிரமிப்புப் படை" என்று அறிவித்ததுடன், இந்திய அமைதி காக்கும் படையோடு போரிடத் தொடங்கிய விடுதலைப் புலிகளுடன் நேச உறவை ஏற்படுத்திக்கொண்டார். இந்திய இராணுவத்துடன் சண்டை பிடிப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், பண உதவிகளையும் வழங்கினார். தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் தயவில் உருவாக்கப் பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையையும் கலைத்தார். ராஜீவ் கொல்லப்பட்டு (21.05.1991) இரண்டு ஆண்டுகளில் பிரேமதாச கொல்லப் பட்டார் (01.05.1993). இந்த இரு வருட இடைக் காலத்தில் ராஜீவ் கொலை தொடர்பில் பிரபா கரனை இந்தியா கேட்டபோது, இது அண்ணன் தம்பிகளுக்கு இடையில் உள்ள பிரச்சினை அப்படியெல்லாம் தர முடியாது என்று கூறிக் கொண்டே விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தார். 2020 தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தரப்புக்கு வடக்கு கிழக்கில் இருந்து ஒரு தமிழர் கூட தெரிவாகவில்லை என்பதையும் இங்கு பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

இப்பேர்பட்ட நிலையில் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு அழுத்தக்குழுவாக இந்த இரு சக்திகளும் இருக்கப் போவதில்லை. இதன் அர்த்தம் தமது தகப்பன்மாரின் கொலைகளுக்கு பழிவாங்குவதாக அர்த்தம் இல்லை. ஆனால் இந்த இரு தரப்புமே ஈழத்தமிழர் விடயத்தில் எந்தவித அக்கறையுமற்றவர்கள். அதற்கு அவர்களின் தந்தையரின் கொலைகளுக்கும் வகிபாகம் உண்டு என்பதை எளிமையாக மறுத்துவிடமுடியாது.

1987 யூலை 29 அன்று ராஜீவ் ஜே.ஆர் ஆகியோருக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட "இந்திய-இலங்கை உடன்படிக்கை"யின் விளை வாக இலங்கையின் அரசியலமைப்புக்கு 13வது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. அவ்வாறு இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட மாகாணசபை தமிழீழ பிரதேசமாக கொள்ளப்பட்ட வடக்கு கிழக்குக்கு மாத்திரம் அது நடைமுறைப்படுத்தப் படவில்லை. அந்த மாகாண சபைகள் இலங்கை முழுவதும் 9 மாகாணங்களுக்கும் சபைகள் உருவாக்கப்பட்டதன் மூலம் அது ஒரு கேலிப் பொருளானது. வடக்கு கிழக்கு என்பன ஒரே மாகாணமாக கொள்ளப்பட்டபோதும் பின்னர் அதை பிரிக்கவேண்டும் என்று அன்று இனவாத கட்சியாக இருந்த ஜே.வி.பி உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மூலம் 2007 ஆம் ஆண்டு அந்த இரு மாகாணங்களையும் தனித்தனியாக பிரித்தார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 இல் செய்துகொள்ளப்பட்டபோதும் மாகாண சபைகள் 1988 இல் தான் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்தியாவின் பகைவராக ஆகியிருந்த பிரேமதாச இந்தியப்படைகளை 29.07.1989 க்குள் வெளியேறவேண்டும் என்று காலம் கொடுத்தார். ஆனால் இந்தியப் படைகள் பகுதிபகுதியாக வெளியேறி முற்றாக வெளியேறும் போது ஏழு மாதங்கள் கடந்தது. 24.03.1990 அன்று இறுதி இந்தியப் படை வெளியேறியது. இந்தியப் படை வெளியேறுமுன் பிரேமதாசவை பதிலுக்கு பழிவாங்க வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் தலைவர் வரதராஜப் பெருமாளை மார்ச் 1ஆம் திகதி "தமிழீழப் பிரகடனத்தை" செய்யவைத்து இந்தியப் படை தம்முடனேயே வரதராஜப் பெருமாளை அழைத்துச் சென்றது. அத்தோடு பதிலுக்கு பிரேமதாச வடக்கு கிழக்கு மாகாண சபைகளை அன்றே கலைத்தார்.

ஆக எந்த வடக்கு-கிழக்குக்காக மாகாண சபைகள் கொண்டுவரப்பட்டதோ அங்கு அந்த மாகாணசபை வெறும் இரு ஆண்டுகளில் கலைக்கப்பட்டது. ஆனால் எங்கு இந்த

## யார் இந்த விஜித ரோகன விஜேமுனி?



*17.08.2020 சமுதித்த என்பவருக்கு வழங்கிய youtube நேர்காணல் இது*

**ராஜீவ் காந்தி மீது நீங்கள் தாக்குதலை நடத்திய போது உங்கள் வயதென்ன?**

எனக்கு அப்போது 21 வயது. கடற்படையில் தொலைத்தொடர்பு தொழிநுட்பத்துறையில்தான் பணியாற்றினேன்.

**அணிவகுப்பில் கலந்துகொள்ள உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென எப்படி எதிர்பார்த்தீர்கள்.?**

ஒரு வாரத்துக்கு முன்னரே எங்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நாள் வரை இந்த அணிவகுப்பு சந்தர்ப்பம் இராணுவத்துக்கு கிடைக்குமா கடற்படைக்கு கிடைக்குமா என்பதை அறிந்திருக்கவில்லை. ஒப்பந்தம் நடந்தது யூலை 29. யூலை 30 அன்று தான் இந்த அணிவகுப்பு நிகழ்ந்தது.

**எப்போது கடற்படையில் இணைந்தீர்கள்?**

1985 ஏப்ரல் மாதம்.

**ராஜீவைத் தாக்குவதற்கான எண்ணம் எப்போது உங்களுக்குத் தோன்றியது?**

இராணுவ மரியாதைக்கான ஒத்திகை தொடங்கியவுடனேயே அந்த எண்ணம் உதித்துவிட்டது. இராணுவ மரியாதை ஒப்பந்தத்துக்கு முதலும் பின்னரும் நிகழ்வதாக திட்டமிடப்பட்டிருந்தது. ராஜீவைக் கொன்றாவது ஒப்பந்தத்தைத் தடுத்து நிறுத்துவேன் என்று முடிவெடுத்துவிட்டேன். ஆனால் ஒப்பந்தம் செய்ததன் பின்னர் தான் எனக்கு அதில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

**ராஜீவை காயப்படுத்தினால் போதும் என்று நீங்கள் இருக்கவில்லை? கொல்வதுதான் உங்கள் திட்டமாக இருந்திருக்கிறது. சரியா?**

கொன்றாவது இதனை நிறுத்தலாம் என்பது தான் எனது முடிவாக இருந்தது. நான் மிகுந்த ஆத்திரம் அடைந்திருந்தேன். வடமாராச்சி நடவடிக்கையின் போது இராணுவத்தில் பிடிக்கப்பட்ட புலிகளை காலியில் உள்ள முகாமுக்கு கடற்படைக் கப்பலில் நானும் சேர்ந்துதான் கொண்டு போய் சேர்த்தோம். ஆனால் அப்படிப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி ஒப்பந்தமாகிவிட்டது. இவையெல்லாம் எனக்குள் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

**இப்படியொரு காரியத்தை செய்யப் போகிறீர்கள் என்பதை உங்களுக்கு நெருக்கமான எவரும் அறிந்திருக்கவில்லையா?**

இல்லை. அப்படிப்பட்ட ஒரு இரகசியத்தை ஒருவர் அறிந்திருந்தாலும் அந்த திட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியாது. எனவே என்னைத் தவிர வேறெவருக்கும் தெரியாது.

**உங்களுக்கு அன்றைய தினம் இறுதிநிமிடம் வரை இந்தத் திட்டத்தைக் கைவிடலாம் என்று சற்றும் தோன்றவில்லையா?**

இல்லை. நாட்டின் இறைமைக்காகவும், சுயாதீனத்துக்காகவும் எனது உயிரே போனாலும் இதை செய்தே ஆவேன் என்று உறுதியாகவே இருந்தேன்.

**தாக்குதலில் ராஜீவ் காயப்பட்டாரா?**

அந்த வீடியோ காட்சியில் நீங்களே பார்க்கலாம். நான் தலையில் தாக்குவது பின் மண்டையில் படுகிறது. ஏழடி உயரமுள்ள மனிதர். அவர் குனிந்து விடுகிறார். மூன்றடியாவது குனிந்துதான் அவர் தப்புகிறார். இல்லையென்றால் அன்றே அவர் அதே இடத்தில் செத்திருப்பார். அவரின் பிணத்தைத் தான் அங்கிருந்து தூக்கிச் சென்றிருப்பார்கள்.... ஜே.வி.பி இயக்கம் போல பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வேலையை நான் மேற்கொள்ளவில்லை. நேரடியாக சம்பந்தப்பட்டவனுடன் கணக்குத் தீர்க்கத்தான் சென்றேன்.

https://youtu.be/ZmVYXfg4Se8

*மாகாணசபைகள் அவசியப்படவில்லையோ அந்த வடக்கு கிழக்கு தவிர்த்த எஞ்சிய ஏழு மாகாணங்களிலும் மாகாணசபைகள் இயங்கியது. 2007இல் அந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதன் பின்னர் தான் 2008 ஆம் ஆண்டு அதாவது 8 வருடங்களின் பின்னர் மீண்டும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு இயங்கத் தொடங்கியது. அதுவும் கிழக்குக்கு மட்டும் தான். வடக்குக்கான மாகாண சபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு தான் நடத்தப்பட்டது. அதாவது மாகாணசபைகள் கலைக்கப்பட்டு 13 ஆண்டுகளின் பின்னர்.*

*தமிழர்களைப் பொறுத்தவரை மாகாண சபைகள் வெறும் கண்துடைப்பு அம்சமாக மட்டுமே இருந்தது. விடுதலைப் புலிகள் பிரேமதாசாவுடனும், சந்திரிகாவுடனும், ரணிலுடனும், மகிந்தவுடனும் பேச்சுவார்த்தை நடத்திய போதெல்லாம் மாகாண சபை முறையை முற்றிலும் நிராகரித்திருந்தார்கள். அதற்கான காரணம் அதில் இருந்த இந்த கண்துடைப்பு*

அதிகாரங்கள்தான். இலங்கை அரசு விட்டுக்கொடுப்புக்கு வராது என்கிற முடிவில் தான் ஆயுதப்போராட்ட வழியில் தமிழீழத்தை அடையும் போராட்டம் தொடர்ந்தது. இந்த இடைக்காலத்தில் தமிழீழத்துக்கும் மாகாண சபைக்கும் இடைப்பட்ட ஒரு தீர்வை எட்டும் நோக்கில் தான் பேச்சுவார்த்தைகளும் மேற்படி தலைவர்களுடன் நடந்தன. ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பெரும் மக்கள் அழிவின் மூலம் நசுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் போர், தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு என்கிற சுலோகத்தைத் தான் போரை நியாயப்படுத்தப் பயன்படுத்தினார்கள். ஆனால் போர் முடிந்ததும் போரே முடிந்தது இனி எதையும் தரத் தேவையில்லை என்று பகிரங்கமாகவே கர்ஜித்தார்கள். போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளில் இருந்தும், நிபந்தனைகளில் இருந்தும் தப்புவதற்காக 13 ப்ளஸ் தருவதாக ராஜபக்ச அரசு ஆரம்பத்தில் கூறி வந்தது. ஆனால் சர்வதேசத்தை இழுத்தடித்து, களைப் படையைச் செய்து, சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலில் இருந்து மெதுவாக இலங்கை பிரச்சினை அகலத் தொடங்கியதும் 13ஐயும் தரமாட்டோம் என்று நிறைவில் வந்தடைந்து விட்டார்கள்.

மாகாண சபைகளை இல்லாமல் செய்வது தென்னிலங்கை சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலில் உள்ள அம்சம் தான். அதை செய்வதற்கு மூன்று விடயங்கள் தேவைப்பட்டது.

- தமிழர்களில் தங்கியிராத பாராளுமன்ற பெரும்பான்மை பலம்
- அரசியலமைப்பைத் திருத்துவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை
- இலக்கை நிறைவேற்றுவதற்கு தடையில்லாத சிங்கள பௌத்த சக்திகளின் பெரும்பான்மை அரசாங்கம்

வரலாற்றில் அது முதற்தடவையாக கைகூடியிருக்கிறது. எனவே இனி தாராளமாக மாகாணசபை முறையை முற்றாக களைவதற்கான இடத்தை எட்டிவிட்டார்கள்.

13வது திருத்தச் சட்டம் சம்பந்தமாக தன்னுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டை பேண வேண்டும் என்று இனி இந்திய அரசியல் அழுத்தத்தைக் கொடுக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது. அப்படி செய்தாலும் அது ஒரு கண்துடைப்பு அளவில் மாத்திரம் நின்றுவிடும். தமிழர்களை வேண்டுமென்றால் தமது நலன்களை அடைய பேரம்பேசுவதற்கு பயன்படுத்திவிட்டு தேவையை அடைந்தவுடன் கைவிட்டுவிடும். தமிழர் நிலை அந்த பகடைக்காய் அளவுக்கு மட்டும் தான் பெறுமதி.



கடந்த ஆகஸ்ட் 21 அன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இந்தியத் தூதுவராலயத்தில் இடம்பெற்றபோது 13வது திருத்தச் சட்டத்தை நீக்க இடமளிக்கமாட்டோம் என்று இந்தியத் தூதுவர்கள் கூறியது பற்றிய செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் அதேவேளை அதற்கு பதிலளித்த சரத் வீரசேகர...

நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக அரச தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் தூதரக அதிகாரிகளுக்கு அது தொடர்பாக அழுத்தங்களை கொடுக்க முடியாது என்றும் இலங்கை இறையாண்மையுள்ள நாடு. மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாட்டின் அரச தலைவர்களுக்கே வழங்கினார்களே தவிர வெளியில் உள்ள தரப்பினருக்கு வழங்கவில்லை என்றும் மாகாண சபைகள் அமைச்சர் சரத் வீரசேகர இந்தியாவுக்கு பதிலடி கொடுத் திருப்பதையும் கவனிக்கவேண்டும்

தமிழ்நாடு நிர்ப்பந்திக்கும், மத்திக்கு அழுத்தம் கொடுக்கும் என்கிற கதையெல்லாம் செல்லுபடியற்றவை என்பது ஈழத் தமிழர்களுக்கும் தெரியும். தமிழ் நாட்டு மக்களின் நேர்மையும், அக்கறையுமான நிர்ப்பந்தத்தில் ஈழத்தமிழர்கள் மரியாதை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த நிர்ப்பந்தத்தால் மத்தியில் எந்த வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்கிற தெளிவையும் கொண்டிருக்கிறார்கள். 2009 இனப்படுகொலைகளின்போது ஏற்படுத்தாத நிர்ப்பந்தத்தையா இந்தியா மாகாண சபைகள் விடயத்தில் மேற்கொள்ளப்போகிறது.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக ஈழக் கோரிக்கையிலிருந்து வெற்று சில்லறை நிவாரணங்களைக் கூட போராடிப் பெறும் இடத்துக்கு ஈழத் தமிழர் வாழ்வு வந்தடைந் திருக்கிறது என்பதை தமிழகத் தமிழ் நேசங்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

மொத்தத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழர்களை திருப்திபடுத்தவில்லை, சிங்களவர்களையும் திருப்திபடுத்தவில்லை. ஆனால் தமிழர்களுக்கு இறுதியில் மிஞ்சியிருக்கும் சொற்ப அபிவிருத்திக்கான அலகு அது தான்.

விஜேமுனி போன்றோர் இலங்கை முழுவதும் உருவாக்கப்பட்டுவிட்டார்கள். இந்தியாவும் செல்லாக்காசாக ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் மட்டும் நாளாந்தம் கேள்விக்குறியாக ஆகிக் கொண்டிருக்கிறது.

எழுத்தாளர் மா.அரங்கநாதன் கதைகளை வாசித்தல்

# சாவும் கணத்திலும் சுட்டுப் பொசுக்கும் ஒரு நட்புத் துரோகமும் கணியன் பூங்குன்றன்மேல் ஒரு மறுவாசிப்பும்

● க. பஞ்சாங்கம்
drpanju49@yahoo.co.in

அச்சாபீஸில் முத்துக்கறுப்பன் அச்சுக்கோக்கும் வேலை செய்து கொண்டிருக்கிறார். முதலாளி கோவிந்த சாமி நாயுடு சினிமா பத்திரிகை ஒன்றைத் தொடங்கி விடவே, எழுத்திலும் முத்துக்கறுப்பனுக்கு நல்ல பரிச்சயம் உண்டு என்று முதலாளி அறிந்து வைத் திருந்ததால் முத்துக்கறுப்பனுக்கு இரட்டிப்பு வேலை. அறுபது ரூபாய் சம்பளம். தன் வீட்டு மாடியிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்தார்; கூடவே அச்சாபீஸில் வேலை பார்த்த சுந்தரமூர்த்தி, அச்சு இயந்திரத்தைக் கவனித்துக்கொண்ட நடராசன் இருவரையும் அங்கேயே தங்க வைத்தார்.

முத்துக்கறுப்பனின் சினிமா குறித்த கட்டுரைக்கு நல்ல வரவேற்பு. நாயுடு எதிர்பார்த்ததற்கும் அதிகமாகப் பத்திரிகை விறுவிறுப்பாக விற்றது. மகிழ்ச்சி அடைந்து மூவருக்குமே ஒரேயடியாய் பத்துரூபாய் சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தார். ஆனால் மூன்றாம் இதழில் அப்பொழுது வெளிவந்த சினிமா குறித்து ஒரு கட்டுரை வெளிவந்தது. "அபிப்பிராயங்களை மட்டுமே கூறி விமர்சனங்களை ஒப்பேற்றுகிற காலகட்டத்தில் இப்படி ஒரு நல்ல கட்டுரையா?" என்று பலரும் பாராட்டினார்கள். கட்டுரையை எழுதியவர் முத்துக்கறுப்பன். இயக்குநரின் ஒரு தவறைச் சுட்டிக்காட்டி இருந்தார். அவையில் அரசன் முன் ஆடும் நடனமங்கையைக் காட்சிப் படுத்தும்போது "கடைசிவரை தனது பின்பக்கத்தையே அரசனுக்குக் காட்டி நடனமாடி முடிக்கிறார்" என்று எழுதியிருந்தார்.

வேலை போய்விட்டது; வீட்டையும் காலி பண்ணச் சொல்லிவிட்டார் முதலாளி; அந்தப் படத்தை இயக்கிய இயக்குநரின் உபயத்தில்தான் பத்திரிகையே வெளி வருகிறதாம். "பத்திரிகைக்குக் கொள்ளி வைத்துவிட்டாயே" என்பது அவர் குற்றச்சாட்டு. வேலை போய்விட்ட இக்கட்டான சூழலில், தலையில் மற்றொரு இடியும் விழுந்தது; இரண்டு ஆண்டுகளாக அரும்பாடுபட்டுச் சேமித்து வைத்திருந்த ஆயிரம் ரூபாய், பெட்டியில் இருந்து காணவில்லை. தவித்துப்போனார் முத்துக்கறுப்பன். உடனிருந்த இருவரில் இப்பொழுது சுந்தரமூர்த்தியையும் காணவில்லை; நடராசனின் இரண்டு சட்டைகளையும் காணவில்லை. "நடராசன் முண்டா பனியனோடு நின்றார்" என்று எழுதுகிறார் கதைசொல்லி. எனவே பணத்தை யார் திருடியிருப்பார் என்பது உறுதியாயிற்று என நம்பினார்.

வேலை பார்த்த நாட்களுக்குச் சம்பளம் தரவும் நாயுடு மறுத்துவிட்டார். மூன்று நாள் பட்டினியில் கழிந்தது. நல்லவேளை வேலைபோகாத நடராசன் உதவ முன் வந்தார். அவருக்கும் தங்குவதற்கு அறை இல்லை என்று ஆனபிறகு பத்துரூபாய் வாடகையில் அறை ஒன்றை எடுத்துக்கொண்டு இருவரும் தங்கினர். முத்துக்கறுப்பனுக்குப் பஞ்சாங்கம், ஜோதிடப் புத்தகமென அச்சடிக்கும் மற்றொரு அச்சகத்தில் வேலை கிடைத்துவிட்டது. கூடுதலாக அங்கே கிடக்கும் ஜோதிடப் புத்தகங்களை அசிரத்தையாகப் படிக்கத் தொடங்கியவர், அவற்றில் ஒரு பிரமிப்பு ஏற்பட்டு அதிலேயே மூழ்கிவிட்டார். இதனால் வெற்றுச் செலவுகள் குறையவே சேமிப்புப் பெருகிக் கொண்டே போனது; பத்தாண்டு இப்படிச் சேமித்ததால் அவர் வேலைபார்த்த அந்த அச்சகத்தையே வாங்கிவிட்டார்; இப்பொழுது நடராசன் இவருடைய அச்சாபீஸில் அதே வேலைக்குச் சேர்ந்துகொண்டார். முத்துக்கறுப்பன் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருந்துவிட்டார். நடராசன் திருமணம் முடித்திருந்தாலும் விவாகரத்து நடக்காமலேயே நிரந்தரமாகப் பிரிந்து வாழ்ந்தார்.

தனித்திருக்கும் போதெல்லாம் முத்துக்கறுப்பனின் மனதில் எழும் ஒரு கேள்வி "அந்த ஆயிரம் ரூபாய் மட்டும் திருடு போகாமல் இருந்திருந்தால் இப்போது எத்தனை சேமித்திருக்கலாம்" என்பதுதான். "பாவி சுந்தரம்" என்ற சொல் அடிக்கடி அவர் வாயில் வந்து கொண்டே இருக்குமாம். முப்பது ஆண்டுகள் இது தொடர்கிறது.

■

இப்பொழுது நடராசன் முத்துக்கறுப்பனை மருத்துவ மனையில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். அறுபது ஆண்டுகள் ஓடிவிட்டன. அவர் நம்பும் சோதிடக் கணிப்புப்படி, அவர் வாழ்க்கை முடியப்போகிறது. நோயாளிக்குத் தெரியக்கூடாதென்று மருத்துவரும்

இதைத்தான் சொல்லியிருக்கிறார்.

உயிர்போகப்போகும் இந்த நேரத்திலும் நடராசனிடம், "என் ஜாதகப்படிதான் எனக்கு எல்லாம் நடக்கிறது. ஆனால் ஒரு விசயம் மட்டும் இடிக்கிறது; அதாவது ஜாதகப்படி சுந்தரம், அந்தத் திருட்டுப்பயல், நான் போறதுக்குள்ள என் முன்னாலே வரணும்; அது எப்படி நடக்கும்" என்று கேட்கிறார். "நடராசன் பேசாமல் இருந்தார்" என்கிறார் கதைசொல்லி. மாலையில் அச்சக ஊழியர்கள் அனைவரும் பிழைக்க மாட்டார் என்ற செய்தி தெரிந்து வந்து பார்த்துச் சென்றனர். அவர் ஜாதகக் கணிப்புப்படி "அந்த ஆயில்ய நட்சத்திரம் முடிவுறும் வரை நினைவுடன் இருந்தார்; கடைசியாய் நடராசனைப் பெயர் சொல்லி அழைத்தார் என்கிறார் கதைசொல்லி.

அவர் படுத்திருந்த மருத்துவமனையின் படுக்கையைச் சுருட்டியபோது 'நாடி சோதிடப் புத்தகநோட்டு ஒன்று கிடைக்கிறது. அதை எடுத்து நடராசன் புரட்டிப் பார்த்தார்; இதைக் கொண்டுதான் அந்த சுந்தரம் திரும்பி வருவான்; கட்டாயம் வருவான்" என்று இதையே திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார் போலும் என்று நடராசன் நினைத்துக்கொண்டார். தொடர்ந்து படித்தார்:

"சேதாரம் செய்துவிட்ட கள்வன் திருந்தி சாதகன் முன்பு நிற்பான். சாதகனின் கடைசி நாளில் அவனும் கூட இருப்பான். தொடர்ந்து நடராசன் கடைசிப் பாராவைப் பார்த்தார்; அது இப்படி இருந்தது: "அந்தக் கள்வனைப் பெயர் சொல்லி அழைக்க, சாதகன் ஆயுள் நீங்கும். அந்தப் பெயர் தில்லைவாழ் அந்தணனின் இயற்பெயராக இருக்கும்"

தில்லைவாழ் அந்தணரின் இயற்பெயராகிய நடராசன் என்ற பெயரைத்தான் அவர் கடைசியாகச் சொல்லி அழைத்தார் என்று கதையில் ஏற்கெனவே பதிவு செய்துள்ளார். எனவே முத்துக்கறுப்பனின் ஜாதகக் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியாகிவிட்டது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்கூடவே இருந்து தன்னைக் கவனித்துக்கொண்ட நடராசன் என்கிற இந்த நண்பன்தான். தான் அரும்பாடு பட்டுச் சேமித்த ஆயிரம் ரூபாயைத் திருடியது என்பதை அறிந்தே அவனோடு முத்துக்கறுப்பன் வாழ்ந்திருக்கிறார். ஆனாலும் அந்த "நட்புத் துரோகத்தை" அவரால் சாகும் வேளையிலும் மறக்க முடியவில்லை. அதனால்தான் இறப்பு, மருத்துவராலும் உறுதிசெய்யப்பட்ட இறுதிக் கனத்திலும் கூட, நடராசனை நோக்கி "அந்தத் திருட்டுப்பயல், நான் போறதுக்குள்ள என் முன்னாலே வரணும். அது எப்படி நடக்கும். இது ஒன்றுதான் இருக்கிறது" என்று அறியாதவர் போலக் கேட்கிறார். அப்பொழுதாவது "சுந்தரம் அல்ல, நான்தான் எடுத்தேன், உங்கள் ஜாதகப்படி நான் முன்னால்தான் நிற்கிறேன்" என்று சொல்ல மாட்டாரா நடராசன் எனத் தவிக்கிறார். ஆனால் அவரோ பேசாமல் நிற்கிறார். சாகும் தறுவாயிலும் இந்த நட்புத் துரோகத்தை நினைக்க நினைக்க உள்ளம் சுட்டுப் பொசுங்குகிறது. இப்பொழுது கதைசொல்லி மா. அரங்கநாதன் தான் போற்றிக் கொண்டாடும் திருவள்ளுவரின்

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை

உள்ளினும் உள்ளம் சுடும்" (799)

என்ற குறளுக்கு ஒரு கதை வடிவம் காட்சி வடிவம் கொடுத்துவிட்டார். சாகும் வேளையிலும் உள்ளம் சுடக்கூடிய ஒன்று இருக்குமா? என்ற ஐய வினாவிற்கு இந்தக் கதைமூலம் பதில் கூறிவிட்டார் மா.அரங்கநாதன்.

இந்தக் கதையை, தான் பெரிதும் நம்புகிற சோதிடக் கலைக்கு ஒரு மதிப்பைக் கூட்டுவதற்காக எழுதியுள்ளார் என்று சாதாரண ஒரு தளத்தில் பொருள்கொள்ள முடியவில்லை. அதைவிட மிகவும் நுட்பமான ஒரு கணத்தில் அதாவது இறக்கும் கணத்தில் நிகழ்கிற ஒரு மன அவஸ்தையை வள்ளுவர் கண்டடைந்து காணுகிற ஒரு கூற்றுக்குக் கதைவடிவம் கொடுப்பதற்காக இந்தக் கதையைச் சோதிடக்கலையுடன் சேர்த்துத் தந்துள்ளார் என்று கொள்வதே பொருத்தமாக இருக்குமெனப்படுகிறது. பெரிதும் சவாலான ஒரு படைப்பு இது. மாபெரும் கலைஞர்களால் மட்டுமே சாத்தியப்படக்கூடியது.

இவ்வாறு ஒரு கூர்மையான கூற்றை முன்வைத்துக் கதையைக் கட்டுவதென்பது படைப்பாளிகள் பலரும் கையாளுகிற ஓர் உத்திதான். திருவள்ளுவரின்

"கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல" (குறள் 1100)

என்ற குறளில் வரும் "வாய்ச்சொற்கள்" என்ற சொற்கூட்டை வைத்து ஜெயகாந்தன் "வாய்ச்சொற்கள்" என்றொரு சிறுகதையை எழுதியிருப்பார். "காதலில் கண்ணும் கண்ணும் கலந்துவிட்டால் வாய்ச்சொற்களுக்கு அங்கே வேலை இல்லை" என்ற வள்ளுவரின் கூற்றை மறுப்பவர்போல, கண்ணில்லாத ஒரு பெண்ணும் ஓர் ஆணும் பொதுமடத்தில் இரவில் படுக்க வரும்வேளையில் வாயாலேயே பேசிப்பேசி நட்பாகிக் காதலாகி இணைந்து வாழும் ஒரு வாழ்வைப் புணைந்துகாட்டி இங்கே "கண்களுக்கு என்ன பயனும் இல" என்று விவரித்திருப்பார்.

மா. அரங்கநாதன் 'பூங்குன்றனே சரணம்' என்ற மற்றொரு கதையிலும் இதே மாதிரி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் உலகப் புகழ்பெற்ற கூற்றை முன்வைத்து ஒரு புனைவை உருவாக்கித் தந்துள்ளார்.

முத்துக்கறுப்பன் பட்டணத்தில் நல்ல வேலையில் இருக்கிறான். கைநிறைய சம்பாதிக்கிறான். பணத்தை ஒரு பொருட்டாகக் கருதாத அவனை, "நாம அவனைப் பாக்கப் போனா விடமாட்டான்; என்ன வேணுமோ செய்து தருவான்" இப்படித் தன் ஊர்க்காரங்க எல்லாம் புகழும்படி உறவுமுறைப் பெயர் சொல்லி ஓடிஓடி உதவி செய்து கொண்டிருக்கிறான்.

ஊரிலிருந்து நெருங்கிய 'பந்து' என்று உறவு கொண்டாடிக்கொண்டு தன் பையனோடு அறைக்குள் வந்து, 'மருமகனே!' என்று அழைக்கிறார். அவர் தன் மகனை உன் மச்சினன்' என்று சொல்லுகிறார். முத்துக்கறுப்பனின் அம்மாதான் அந்த மச்சினனை இவன் அறையில் கொண்டுபோய் விடச் சொன்னாராம். 'நேரா டேசனில் இருந்து இங்கதாம் வாறோம்' என்று சொல்லிவிட்டுச் செல்லுகிறார்; இந்த உறவுக்காரர் இங்கே வருவதே அம்மாவுக்குத் தெரியாது என்பதுதான் உண்மை.

இப்படி வந்து தங்கிய அந்த உறவுக்காரப் பையன் பெட்டியிலுள்ள பணத்தைத் தெரியாமல் திருடி வைத்துக்கொள்கிறான்; வேலையில் சேர்ந்து அதிக நாள் ஆகாத காலம்; எனவே அலுவலகத்தில் கடன் வாங்குவதும் கடினம். வந்த கோபச் சலனத்தால் "நாயே" என்று திட்டிக் கோபத்தைத் தணித்துக்கொண்டான்.

ஊரிலிருந்து வயல், தோட்டம் என்று வசதியான முத்துப்பிள்ளை ஒருநாள் வந்து சேர்கிறார். 'மக்கா' என்று அழைத்துக்கொண்டே கையில் கொண்டுவந்த துணி மூட்டையில் 'சிரட்டை' ஒன்று இருக்கிறது. ரயிலில் பயன்படுத்த டம்ளர் எடுத்து வந்தால் திருடு போய் விடுமாம்; அப்படிப்பட்ட கஞ்சப்பிரபு. உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்காக இரண்டுநாள் தங்கியிருந்தாராம். பொதுவாக இந்த 'ஓசி' மனிதர்கள் 'லச்சாதிபதி ஆனாலும் பிச்சைக்காரப் புத்திப் போகாது' என்கிறார் கதைசொல்லி.

இதேமாதிரியான ஒரு கஞ்சப்பிரபுவைத் தன் அலுவலகத்திலும் சந்திக்க நேர்கிறது; பெயர் நாமதேவன்; இந்த மனிதர் விசேட நாள் வந்தால் போதும்; ஒரு பையை எடுத்துக்கொண்டு எல்லா நண்பர்கள் வீட்டிற்கும் புறப்பட்டுவிடுவார்; அதே விசேட பண்டிகைக்குரிய பலகார வகைகளைப் பைநிறையப் பெற்றுத் திரும்புவார். தான் ஒருபோதும் பண்டிகை கொண்டாடுவதும் இல்லை; நண்பர்களைத் தப்பித்தவறி வீட்டுக்கு அழைப்பதும் இல்லை.

■

இப்பொழுது இந்தக் கஞ்சர்களால் முத்துக்கறுப்பன் பாடம் கற்றுக்கொண்டான். ஊர் பூராவும் கஞ்சர்களாகவோ, திருடர்களாகவோ இருந்துவிட்டால் நாம் எப்படி 'ஊருடன் ஒத்துவாழ்' என்கிற பழமொழிப்படி வாழமுடியும்? இப்பொழுது சில தந்திரங்களைக் கடைப்பிடிக்கத் தொடங்கினான். ஊரிலிருந்து யார் வந்தாலும்; திருவல்லிக் கேணியில் ஒரு அறை எடுத்துத் தருகிறேன் என்று சொல்லி அனுப்பிவிடுகிறான். நெருங்கிய உறவினர் வருவதாகத் தெரியவந்தால், குறிப்பிட்ட அந்த நாளில் அலுவலக நண்பன் வீட்டிற்குச் சென்றுவிடுவதோடு, "ஊரில் இல்லை, எப்போது வருவேன் என்பதும் தெரியாது" என்ற தகவலும் அவருக்குக் கிடைக்கும்படிச் செய்துவிடுகிறான்.

இந்தத் தந்திரமும் பலிக்காதபடிச் சில உறவுக்காரர்கள் இரண்டுநாள் மட்டும் அறை எடுத்துத் தங்கிவிட்டு மூன்றாவது நாள் வந்து எதிர்பார்க்காதபடி வாசலில் வந்துநிற்கிறார்கள்; இன்னும் சிலர் அலுவலக முகவரி தெரிந்து அங்கேயே வந்துவிடுகிறார்கள்; மேலும் அலுவலக நண்பர்கள் வீட்டிற்கும் போகமுடியாதபடி, அவர்களும் இவன் கையாளும் அதே தந்திரத்தைக் கையாண்டு "வீட்டில் இல்லை; வெளியூர் போயிருக்கிறார்" என்று பக்கத்து வீட்டுக்காரர் சொல்லும்படிச் செய்து விடுகிறார்கள்.

■

இவ்வாறு ஊர்க்காரர்கள், உறவினர்கள், அலுவலக நண்பர்கள் எல்லாம் "ஓசியைத்"தேடி அலைகிறார்கள் என்றால், முத்துக்கறுப்பன் கடைசியாகப் பெரும் நம்பிக் கையோடு வந்து சேர்ந்த பத்திரிகைத் துறையும் அப்படித்தான் இருக்கிறது. அங்கு வாய்த்த நண்பர் பண்டிகை நாட்களில் குடும்பத்தோடு வீட்டிற்கு வந்து விடுவார்; "எங்களுக்கு இந்த வருஷம் தீபாவளி இல்லை; தூரத்து உறவினர் ஒருவர் காலமாகிவிட்டார்" என்று கூறிப் பண்டிகையை முத்துக்கறுப்பன் வீட்டிலேயே கொண்டாடி விட்டுச் செல்வாராம். இத்தனைக்கும் ஒரு தடவைகூட வீட்டிற்கு அழைத்ததில்லை அந்த நண்பர். முத்துக்கறுப்பன் இப்பொழுதுதான் விழித்துக்கொண்டாரே. எனவே "பொங்கலுக்கும்" இதேமாதிரி அந்த நண்பர் வந்துவிட்டால் என்ன செய்வதென்று யோசித்து, முன்னமே அவர் வீட்டிற்குப் போய் "உறவுக்காரர் ஒருவர் இறந்துவிட்டார்; ஊருக்குப் போகிறோம்;" என்று அறிவித்துவிட்டு வந்தாராம்.

■

இதேபோல் பணக்கார எழுத்தாளர் ஒருவர், தன் வசதி காரணமாக விருந்துகொடுத்தே பிரபலமானாராம்; தான் நினைத்தபடிப் பிரபலமானவுடன் விருந்து, கடன் கொடுப்பது, வேலை வாங்கித்தருவது எல்லாவற்றையும் நிறுத்திக்கொண்டாராம்.

இவ்வாறு மனிதர்களிடையே நிலவும் உறவுகளை குறித்துக் கதைசொல்லி சித்தரித்துக்கொண்டு போகும் போது, ஒரு ஊர், ஒரு அலுவலகம், ஒரு பத்திரிகைத் துறை என்று எல்லைக்கு உட்பட்ட மனிதஉறவுகளே இப்படிப் படுத்தும்போது, "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற எல்லையில்லா மனித உறவுகள் என்ன பாடு படுத்தும் பூங்குன்றனாரே என்று கதை சொல்லி கேட்பது போல் இருக்கிறது.

இந்த மனித உறவுகளில் சலிப்படைந்த முத்துக் கறுப்பன் "பேசாமலிருந்து விடுவது நல்லது" என உணர்ந்து கொண்டான் என்கிறார் கதைசொல்லி. "இதெல்லாம் முன்பே தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! எத்தனை முறை அறிவுச் சூடுபட்டாலும், ஒவ்வொன்றும் புதியபுதிய வெப்ப அலையைக் கொண்டிருப்பதால் அனுபவத்தைக்கொண்டு சமாளிக்க இயலாததாகவே இருக்கிறது" என்றும் முத்துக் கறுப்பன் எண்ணிக்கொள்ளுகிறார்.

மேலும் விசாரணை தொடர்கிறது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்கிறாரே பூங்குன்றனார்; "யார் நல்லவர் என்ற ஐயப்பாடு எப்போதும் இருந்துகொண்டிருக்கிற படியால், யார் கெட்டவர் என்ற கேள்வியும் நீங்கிய பாடில்லையே" இதைப்போலத்தானே யார் அறிவுடையார்? யார் அறிவற்றவர்? எது மேல்? எது கீழ்? "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்கிறாரே பூங்குன்றனார். யார் பெரியோர்? யார் சிறியோர்? பூங்குன்றன் மேல் கேள்விகளை வீசுகிறார் கதைசொல்லி.

இத்தகைய விசாரணைக்கெல்லாம் முடிவு, எல்லா வற்றையும் விட்டுவிட்டுப் போய்விடும் போதுதானா? அல்லது பூங்குன்றனார் சொல்வதுபோல மேகமானது மின்னலோடும் இடியோடும் மலைமேல் மோதிக்கொட்டும் மழையினால் பெருக்கெடுத்தோடும் பெரு வெள்ளத்தில் விடப்பட்ட மிதவைக் கட்டைபோல ஆகிவிடும் போது தானா? மிதவைக் கட்டைக்கு ஏது மேல்கீழ், இன்பம் துன்பம், சிறியவர் பெரியவர், நன்மை தீமை?

இதைத்தான் "கணியன் பூங்குன்றனே சரணம்" என்று கதையை முடிப்பதன்மூலம் சொல்ல வருகிறாரா, கதை சொல்லி!

மனித உறவுகள் இருக்கும் லட்சணத்தைக் கேலியும் கிண்டலுமாகச் சொல்லிக்கொண்டு மேலும் இந்தக் கதை, இறுதியில் வாழ்வின் நிச்சயமற்ற தன்மையை முடிவு காணமுடியாப் பெருவெளியைச் சுட்டிக்காட்டிவிடுகிறது. தமிழில் பூங்குன்றனாரை இப்படி நுட்பமாக வாசித்தவர் வேறுயாரும் இல்லை.

ஆரவாரமில்லாமல் மௌனமாய் வாழ்வின் போக்கை அணுஅணுவாய் அசைபோட்டு அனுபவித்த ஓர் உள்ளத்தில் இருந்தே இத்தகைய கதையாய் புறப்பட்டு வெளிவரமுடியும்.

# காலத்தின் குரல்கள்

● ஆங்கிலத்திலிருந்து தமிழில்: **பொன். தனசேகரன்**

*அவசரநிலை காலத்தில் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, 'வாய்சஸ் ஆஃப் எமர்ஜென்ஸி' (தொகுப்பாசிரியர்: ஜான் ஆலிவர் பெரி) என்ற தலைப்பில் 1983ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அன்றைக்கு எழுதப்பட்ட இந்தக் கவிதைகள் கருத்துரிமைக்கு நெருக்கடிகள் உருவாகிவரும் இன்றைய காலகட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.*



## சூரியனின் ஊரடங்கு

வீட்டை விட்டு வெளியேறாதே
ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது சூரியன்

ரயில்கள் விசில் சப்தமிடவோ காற்று வீசவோ கூடாது.
முன்ஜாக்கிரதையாக, மௌனமாக இருக்க
தங்களது கழுத்தைத் திருகிக் கொண்டன மரங்கள்.
தனக்கு ஊரடங்கை விதித்துக் கொண்டது சூரியன்

இருந்தாலும், அவர்களது சேதியை
ஏணிப்படிகளிடம் தெரிவித்தது காற்று
வியர்வை ரத்தமாக மாறும் வரை காத்திரு.
இது வெளியே செல்வதற்கான நேரமில்லை.
இருளைப் பரவ விடுவோம்.
தனக்கு ஊரடங்கை விதித்துக் கொண்டது சூரியன்.

நேற்று நான்கு பேர் இறந்திருக்கலாம்,
எழுத்துப் பிறழ்வுடன் பத்திரிகைகளில் வெளியானபடி.
அதற்குப் பதிலாக அவர்கள் காணாமல் போயிருக்கலாம்,
யாருக்குத் தெரியும்
எப்படி இருந்தாலும், சூரியனே தனக்கு ஊரடங்கை விதித்துக் கொண்டது.

- ரமேஷ் ரஞ்சக் (இந்தி)

## மலைப்பாம்பு

மந்திரவாதியின் பையிலிருந்து வெளியே வந்தது
கறுப்பு மலைப்பாம்பு
நம்ப முடியாத அளவுக்குப் பருத்து
இரண்டு பக்கங்களும் விரிந்து கொண்டே இருந்தது

சில நிமிடங்களில்,
ஒவ்வொரு அங்குல இடத்தையும் மூடி மறைத்தது

அதற்குக் கால்கள் தேவை என்ற பிரச்சினை இல்லை
ஓர் அடிகூட எடுத்து வைக்காமலேயே விரிந்து கொண்டே போனது

எனவே, ஒருவர் யூகிக்க முடியும்
அது தனது காலடியை மாற்றி
அனைத்தையும் அது முழுங்கும் என்று.
எங்கோ அதன் காலடியில் இருப்பவர்களில்
மந்திரவாதியும் இருக்கக்கூடும்.

- ரகுவீர் சௌத்ரி (குஜராத்தி)



## கிறீச்...

நாங்கள் வசந்தத்துக்காக காத்திருந்தோம்
ஒரு பாடலைப் பாடுவதற்காக.
வசந்தம் வந்தது. அறிவிப்பு:
“பாடுவது தடை செய்யப்பட்டுள்ளது”

பூக்கள் திகைத்தன:
கிளைகளிலேயே இருப்பதா
அல்லது ஒருவரின் கைகளால் பறிக்கப்படுவதா
அல்லது இரும்புக் காலால் நசுக்கப்படும் சூழ்நிலையில் இருப்பதா
அவற்றால் முடிவு செய்ய முடியவில்லை.

மிதந்து வந்த காற்று
அடுத்து இருந்ததைக் குறுக்கிட்டுக் கேட்டது:
“இந்தத் தோட்டத்தில் சறுக்கி விளையாடுவதற்கு
யாருடைய அனுமதியும் நமக்குத் தேவையா?”

அனைத்தும் தற்செயலாகச் சொல்லின:
“காற்று இன்னும் இருக்கிறது.”

பறவைகள் ஒரு கதையை
தங்களது குஞ்சுகளுக்குச் சொல்லின:
“நமக்குக் குரல் இருக்கிறது”

துரிதமாக விளக்கியது:
“தேவையானால் உரத்த குரலில் நாம் பாடலாம்”
“பாடுவதா?”

புராணக்கதையைக் கேட்டது போல
பறவைக் குஞ்சு கிறீச்சிட்டது:
“எப்படிப் பாடுவது?”

இசைக் குறியீடுகளுக்கு
தொண்டையில் வழிவிடக்கூடாது.

ஏனெனில்,
வேட்டைக்காரன் குறிபார்க்கும் அம்பிலேயே
லயித்து இருக்கிறது அனைத்துக் கண்களும்.

‘இல்லை’ என்று சொல்ல யார் விரும்புகிறார்கள்?

இன்னும், ஒருவர் ‘ஆம்’ என்று சொல்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டால்
அவன் பேச்சிழந்து போவான்
அல்லது ‘இல்லை, இல்லை, இல்லை!’ என்று கத்துவான்

மகிழ்ச்சியில்லாமல் இருப்பதற்குகூட
ஒருவருக்குச் சுதந்திரம் இல்லாவிட்டால்
மற்றவர்கள் வழங்கும் மகிழ்ச்சியை அவர் எப்படி ஏற்றுக்கொள்வார்?

இது இரங்கல் கூட்டமல்ல:
எனினும், ஏன் இங்கே கைதட்டல் இல்லை?
கண்ணுக்குத் தெரியாத சங்கிலியை
நமது இரண்டு கைகளிலும் பூட்டியது யார்?

– **ஹரீந்தர் தவே (குஜராத்தி)**

## இந்த நாட்டில்

இந்த நாட்டில்
அனைத்தும் மாற வேண்டும்
மேலிருந்து கீழ்வரை.
ஆனால்
நான் அமர்ந்திருக்கும் நாற்காலியும்
அந்த நாற்காலிக்குக் கீழ் உள்ள சிறிய இடமும்
அப்படியே இருக்க வேண்டும்.

அனைத்து சாதிகளும் மதங்களும் நம்பிக்கைகளும்
என்றைக்கும் மறைய வேண்டும்
இந்த நாட்டிலிருந்து.
ஆனால்
உயர்ந்த வகுப்பினருக்கு சில இடங்கள்
ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

கதாநாயக வழிபாடு, வாரிசு ஆட்சி
இந்த நாட்டில்
வேரறுக்கப்பட வேண்டும்.
ஆனால்
நமது குடும்ப தெய்வங்களின் மீது
கை வைக்கக்கூடாது. உங்களுக்கு நன்றி.

இந்த நாட்டில்
நீங்கள் அனைவரும் பேசுவதை நிறுத்துங்கள்
அமைதியாக இருங்கள்.
ஆனால்
நான் சொல்வதையெல்லாம் கேட்பதற்கு
உங்களது காதுகளைத் திறந்து வைத்திருங்கள்.

– **ஜி.எஸ். சிவருத்ரப்பா (கன்னடம்)**



## அவசரநிலை : செய்தித்தாள்கள்

ஒரு நாள் பாஜ்நாத் பாபு முடிவு செய்தார்.
இனிமேல் செய்தித்தாளைப் படிப்பதில்லை என்று.

பத்திரிகைகளில் வேலை செய்பவர்களும்
பத்திரிகைகளைப் படிப்பதை நிறுத்தினார்கள்.

கொத்தடிமை தொழிலாளி மங்ரு
எப்போதும் செய்தித்தாளைப் படித்ததே கிடையாது.

மரக்கடையை சொந்தமாக வைத்திருக்கும் மித்தலால்
செய்தித்தாள்களில் திரைப்பட விளம்பரங்களை படிப்பது வழக்கம்.
அதை அவர் தொடர்ந்து செய்கிறார்.

ஆனால்
நகராட்சி தொடக்கப் பள்ளி ஆசிரியரான பாஜ்நாத் பாபுவுக்கு
செய்தித்தாளைப் படிப்பது தினசரி வழக்கம்
தினசரி உணவைச் சாப்பிடுவது போல

அவர் இப்போது மூச்சுத்திணறுவது போல உணர்கிறார்.

கோரக்பூரிலிருந்து ஒரு செய்தி.
இரண்டு பக்க உள்ளூர் வார இதழ் ஆசிரியர் தற்கொலை.

மீதமுள்ள பத்திரிகையாளர்கள் மௌனிகளாகவோ
அல்லது தாங்களே பார்த்து ரசிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.
அல்லது அரண்மனைப் புலவர்களைப்போல
துதிபாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பாஜ்நாத் பாபுவுக்கு என்ன வந்தது?
செய்தித்தாள் இல்லாமல் அவரால் வாழ முடியாது;
செய்தித்தாள் இல்லாமல் அவர் வாழ்கிறார்.

**– பிரணவ் குமார் பண்டோபாத்யாய (பெங்காலி)**

## வெள்ளைக் காகிதம்

ஒரு பேரறிஞர் ஒரு சமயத்தில் சொன்னார்:
நீ விரும்பிய என்ன வேண்டுமானாலும் எழுது
ஆனால் ஒரு நிபந்தனை.
வெள்ளைக் காகிதத்தை
அது மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்.

வெள்ளைக் காகிதம் மேலும் முக்கியமானது
நான் என்ன எழுதுகிறேன் என்பதைவிட.
எனது கவிதை
வார்த்தைகளுக்கு இடையே தலைவணங்குகிறது.

விடியலுக்கு முன்னதாக காணாமல்போன
மக்களைப் பற்றிய செய்திகளைப் போல
மண்ணில் புதைக்கப்பட்ட விதைகளைப் போல
உண்மை மறைக்கப்படுவது போல
பெரிய தலைப்புச் செய்திகளுக்குப் பின்னால்
மணம் வீசும் பசுமையான பூக்களைப் போல
மேலும் நான் எழுதுவேன், மேலும் கவிதைகளை
வார்த்தைகளுக்கிடையே உள்ள வெள்ளை வெளிகளில்.

**– நாரா (தெலுங்கு)**



## அன்றும் இன்றும்

அதே குடிசை
அங்கு எனது தாத்தாவுக்கு அப்பா பிறந்தார்
அதே குடிசை
அங்கு எனது தாத்தா பிறந்தார்
அங்கு அப்பா பிறந்தார்
எனது மகனும்...
பேரனும்...

அதே குடிசை
அதே சாக்கடை
அதை நாற்றம்
அதே இருட்டு

கோஷமும் அதேதான்
ஒரு காலத்தில் நாங்கள் அடிமைகள்
இப்போது நாங்கள் சுதந்திரமானவர்கள்

**– சந்திரகாந்த் பண்டரிநாத் இசை (மராத்தி)**

## பிரார்த்தனை

உனது எழுத்தா அல்லது வாழ்க்கையா?
அவர்கள் வருவதற்கு முன்
நான் தேர்ந்தெடுக்க.
ஓ கடவுளே!
நீதான் தொலைதூரத்துக்கு அனுப்ப வேண்டும்
அது நரகமாக இருந்தாலும்கூட.

**– எம். கோவிந்தன் (மலையாளம்)**



சிறுகதை

# நார்க்கட்டில்

● குமாரசெல்வா

வீட்டுக்குள்ளே சுவரில் தொங்கிய ஓவியத்தை ஜன்னல் வழியாகப் பார்த்தான் திருப்பதி. அப்படி என்னதான் கண்டானோ தெரியவில்லை, பார்த்தான்; பார்த்துக்கொண்டே இருந்தான். வெளிமுற்றத்து மாமர நிழலில் குத்தவைத்திருந்தவாறு கைகள் பனைநாரை ஊசியில் கொருத்து இழுத்தன. திருவிழா காணப்போகிற வனின் வேகம் போலவும், மகப்பேறுற்ற மனைவிக்கு உதவுபவன் அவசரம் போலவும் அது இருந்தது. தேக்கில் வழவழக்கும் தலைவாசலில் கொடிகள் சுற்றிய திராட்சைக் குலைக்கு நடுவில் சிலுவை பதிக்கப்பட்டு மேலே இரண்டு புறாக்கள் சிறகடித்தபடி நிற்கும் கைவேலைப் பாடுகளுடன் கூடிய, நவீன வெண்கலத் தாழ்ப்பாழால் இறுக்கி அடைக்கப்பட்ட கதவுக்கு வெளியே அவனொரு இழிசினனைப் போல அமர்ந்து கட்டில் கட்டிக் கொண்டிருந்தான்.

அந்தப் பார்வை அவன் ஒருவனாக அங்கு இருந்த போதிலும் தனியனாக இல்லை என்பதைப் பறைசாற்றியது.

இதற்கு முன்பும் அந்தப் படத்தை பலதடவை பார்த்திருக்கிறான். இதுபோல கட்டில் கட்டச் சென்ற வீடுகளில் மட்டுமல்ல, கடைகள், அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், தேவாலயங்கள் போன்ற பல இடங்களில் கவனித்திருக்கிறான். கேரளத்தில் கள்ளுக்கடையில் கூடக் கண்ட ஓர்மையுண்டு. மேகங்களுக்கிடையே புரளும் முழுநிலவுக்கு மேலாக விண்ணை நோக்கி இறைஞ்சும் அந்த மனிதஉருவத்தின் கண்களில்தான் எத்தனை சாந்தமும், அருளும். இடதுகண்ணை மட்டும் வரைந்து வலதுபுறத்தை அறியக்காட்டும் ஓவியனின் திறமை, அதே தூரிகையால் இன்னதென்று உணர்த்த கண்ணின் பார்வையைத் திறந்தபோது அடிபட்டுப் போனது. தன்னைத்தானே மீறி, தன்னைத் தானே அழித்து முன்னேறுகிறவன் கர்த்தன் மட்டுமல்ல, கலைஞனும் தான் என்பதைத் தனது தொழில்வாழ்க்கையில் உணர்ந்த திருப்பதியை, யாரையோ பார்த்து எதையோ கேட்கும் முகபாவனைதான் மிகவும் பாதித்தது. என்னவொரு ஆழமான அர்த்தம் தொனிக்கிறது அந்தப் பார்வையில்.

நேற்று காலையில் இதேநேரம் திருப்பதி இங்கு வந்தபோது தலைவாசல் முழுமையாகத் திறந்திருந்தது. பக்கவாதத்தின் உபாதை வருத்த முன்னறையில் ஞானம்மை ஆசிரியை மரக்கட்டிலில் படுத்திருந்தார். அவனுக்கும் அவன் சகோதரி லெச்சுமி என்ற ஹெலன் ஷீபாவுக்கும் அவர்கள் ஐந்தாம் வகுப்பு வரை பாடம் நடத்தி இருக்கிறார்கள். அந்த அருகாமை இந்த வயதிலும் சிறுபயத்தை மனதில் ஏற்படுத்தியது. ஞானம்மை ஆசிரியைத் தனது கையால் பிரம்பை ஒரு நாள் கூடத் தொட்டவர் இல்லை. மாணாக்கரின் பிரமிப்பு அந்தப் பொம்பிள.

முதுகுக்குக் காற்றோட்டமாகப் புண்களிலிருந்து காப்பாற்ற அவர்களுக்காகத் தான் அந்தக் கட்டிலை அவன் அதிகம் சிரத்தை எடுத்துப் பின்னுகிறான்.

திருப்பதிக்கு ஏனோ மனம் நிலைகொள்ளவில்லை. பேசும் போதும், மற்ற நேரங்களிலும் சுவருக்கு நேரே உயரத்தில் பார்த்துக் கொண்டிருந்தான். அதனைக் கவனித்த ஆசிரியைக்கு சற்று வேறுபாடாகத் தோன்றியது. ஒரு கட்டத்தில் அது குறித்துக் கேட்கவும் செய்தார்கள்.

“எதுக்கு சும்மா மேலேப் பாத்துட்டே இருக்கிய?”

“அந்தப் படத்தப் பாத்தேன்.”

“இதுக்கு மின்ன பாத்ததில்லியா?”

“பாத்திருக்கேன், ஆனா நெருக்கமா இப்பத்தான் பாக்கியேன்”

“இண்ணு மட்டும் என்ன வித்தியாசம்?”

“தெரியேல.”

“ஒனக்குத் தெரியாத காரியங்களில தான் நிறைய விஷயங்கள் இருக்கு.”

“வாஸ்தவம் தான். நீங்க சொன்னா தப்பாகுமா? நாடுகளும், நகரங்களும் ஒதுங்கின காட்டுப்பகுதியில ஒண்ணு மேல ஒண்ணு தூக்கி வச்சது போல இரண்டடுக்குப் பாறை. அதுக்குப் பக்கத்தில வெள்ளை அங்கியும், நீலநிற மேல்வஸ்திரமும் அணிந்து முழங் காலிட்டு மண்தரையில் அமர்ந்து, கைகளை

ஒன்றோடொன்று சாய்வாகக் கூப்பியவாறு இரங்கத்தக்க நிலையில் நீண்ட தலைமயிரும், தாடி வைத்த முகமுமாக யாரையோ தேடுவது மாதிரியான அந்த மனுஷனிடம் என்னதோ ஒரு விஷயம் இருக்கியதுபோலத் தெரியுது. பெறவு என்னத்துக்கு ஒருத்தன் இத்தனை தூரம் மெனக்கெட்டிருந்து இப்பிடி படம் வரையணும்?"

"அது எந்த இடம் தெரியுமா?"

"சிதறால் பவுதியம்மன் பொற்றை தானே?"

''ஹ... ஹ... ஹ..., கொள்ளாம்! கெத்சமனே பூந்தோட்டமாக்கும்."

"அதெங்க இருக்கு?"

"பாலஸ்தீனா தேசத்தில்"

"கள்ளம்! நான் நம்ப மாட்டேன்."

"ஏன் நம்ப மாட்டே?"

"கள்ளியோ, கற்றாளையோ போல மூணு செத்தைய. பக்கத்தில கல்லறத் தோட்டத்தில முளைக்கிய பீநரிச் செடி! இதுக்க பேரா தோட்டம்?"

"பீநரியா? பெண்ணுவள இல்லாத்த வேளம் செல்லியது போலப் பேசப்புடாது, எனக்கு கோவம் வரும்.

அது நித்தியகல்யாணி செடியாக்கும். எத்தனையோ நோய் நொடிகளைத் தீர்க்கும் மாமருந்து."

''நித்திய கல்யாணி ஒங்களப் போல ஒரு பெண்ணுண்ணே வச்சிருவோம். அது எப்பிடியாக்கும் வெளிநாட்டில பெய் பூத்துது? சொல்லுங்க தாயே..."

"சொல்லட்டா? 'ஆறு வயதினில் ஆரம்பப் பள்ளியில் கல்வி பயின்றாரே...'ண்ணு ஒரு பாட்டு பாடுமே, கேட்டிருக்கியா நீ?"

"கேட்டிருக்கேனே, 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்'ண்ணு தொடங்கிய பாட்டு"

"ஏசுநாதர் அப்ப ஆரம்பப் பள்ளியில படிச்சாரா?"

"இல்ல."

"அது புலவன் கற்பனை, புரியுதா? இண்ணைக்கு அவன் பாட்டு எழுதுனா, 'ரெண்டு வயசில புத்தக மூட்டையுடன் பிரீகேஜி போனாரே...'ண்ணு பாடி இருப்பான். சரியா?"

"செரி தான்."

"அதுபோலத்தான் இந்தப் படத்த வரைஞ்சவன் நம்மநாட்டு சாயல்ல வறண்ட பூமியையும், இங்குள்ள செடிகளையும், ஏசுவுக்க உருவத்தையும் உண்டாக்கி இருக்கான்."

"அப்படா!"

''ஆனா பைபிள்ல கெத்சமனே பூந்தோட்டம் செழிப்பான இடமாக்கும். அது கெத்ரோன் என்னும் ஆற்றுக்கு அப்பால் உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இப்ப புதுசா மொழிபெயர்க்கப்பட்ட திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்பு நூல் கெத்ரோன் என்பதை நீரோடை என்று சொல்கிறது. எப்பிடீண்ணாலும் வளமான பூமி என்பதற்கு சந்தேகம் வேண்டாம். ஏசுவும், சீடர்களும் அங்கபெய் அடிக்கடி தங்கி இருப்பதாக பைபிள் சொல்லுது."

"சீடர்கள் எங்க? படத்தில ஒருத்தரையும் காணல்லியே?"

"அவங்க அவரு கூடத்தான் வந்தினும். சிலுவையில கொல்லப்போறத முன்கூட்டியே அறிஞ்சதினால ஏசுவுக்கு கொஞ்சம் மனகலக்கம். என் ஆத்மா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருப்பதால் என்னோடு தங்கி விழித்திருங்கள்ணு சொல்லிப்பார்த்தார். அவங்க எல்லாருமே தூக்கக்கலக்கத்தில இருந்தாங்க. தனக்க நேரம் வந்ததும் தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்தவர் சீடர்கள கல்லெறி தூரத்தில இருத்தீட்டு ஏசு மட்டும் தனியா இங்க வந்தாரு."

"கடவுளுக்கும் துக்கமா?"

"இருக்காதா பின்ன? நம்மள விட அவருக்குத்தான் பாரம் அதிகம்."

"பாரமா?"

"பெறவு? அவரக் கொல்லப்போவது நிச்சயமாச்சி. யாருக்குத்தான் பயம் வராது? ஒன்ன யாராவது கொல்ல வந்தா ஒனக்குப் பயம் தோணாதா?"

"தோணும்! சுண்டோதரனுக்குப் பயந்து சிவனும் ஓடினாரே..."

"அதுபோலத்தான் அவரும் திகிலுடன் வானத்தைப் பார்த்து, 'அப்பா! இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்க உமக்குச் சித்தமானால் நீக்குமே...'ண்ணு ஜெபம் பண்ணினாரு. அந்தப் படமாக்கும் இது."

"பாத்திரம்ணா கதாபாத்திரமா? ஒருவேள இந்தப் பாத்திரத்தில நடிக்கியது அவருக்குப் பிடிக்கல்லியோ?"

"எந்தக் கதாபாத்திரம்?"

"ஏசுவா நடிச்சாஅடி, உதை விழுமேண்ணு பயந்து வேற பாத்திரம் கேட்டிருப்பாரோ?"

"ஒன்னச் சொல்லி குத்தமில்ல. அது மொழிபெயர்ப்புக்க தப்பு. திருவிவிலியம் தெளிவா சொல்லுது பாரு,

'இந்தத் துன்பக்கிண்ணம் நான் குடித்தாலன்றி என்னை விட்டு நீங்காது என ஏசு சொல்கிறார்'. இதுக்க அர்த்தம் என்ன?"

"இப்பிடி சொன்னாத் தானே புரியும். எனக்க துன்பத்த நான் தான் சுமக்கணும். அதில மனந்தளரப்புடாது. செரியா?"

"ரொம்ப செரி!"

அதற்கு மேல் திருப்பதிக்கு அந்தப் படத்தைப் பார்க்கத் தோன்றாமல் இல்லை. ஆனால் நேரில் பார்ப்பதை நிறுத்தி விட்டான். அவன் மனசில் பொருள் குடிகொண்ட பின்னால் உருவமும், பார்வையும் எதற்கு என்று தோன்றியிருக்கலாம். நீண்ட நேரம் எதுவும் பேசாமல் பணியைத் தொடர்ந்தான்.

திருப்பதி மூன்றாம் வகுப்பு படிக்கும் போது அவன் தகப்பனார் ஓலைவெட்ட ஏறிய வடலிமரத்திலிருந்து விழுந்து செத்துப்போனார். இத்தனை உயரங்குறைந்த மரத்திலிருந்து ஒருவன் விழுந்து இறக்க முடியுமா என்று ஊர் வேடிக்கை பேச, முடியும் என்று அடித்துக்கூறியது மரணம். முட்டளவு நீரில் மூழ்கிச் செத்த குஞ்சிராமனை உலகம் கண்டதில்லையா? அதுபோலத்தான் தனது தகப்பனாரின் இறப்பும் என்று திருப்பதி நினைத்துக் கொண்டான்.

இவ்வாறு தனது தகப்பனாரிடமிருந்து கற்ற தொழிலை பிழைப்பதற்கு ஏழாம் வயதிலிருந்தே செய்யத் தொடங்கினான்.

இன்றும் கூட அவனைப் போல ஒரு கட்டில் கட்டியை சுற்று வட்டாரத்தில் எங்கும் பார்க்க முடியாது.

கண்ணிகளை ஒழுங்காக நாரில் இழைத்து வரிசையாக்கி அவன் கட்டி முடித்த கட்டில் புதுமணப்பெண்ணின் வாசத்தோடு கண்கண்டிஷனில் நிற்கும். அதன்மீது செறங்கை நிறைய சிறுபயறை வாரி வீசி எறிவான். 'ஒரு பயறு கீழ விழுந்தா எனக்கு நயாபைசா தரண்டாம்' என்று கூலி மறுப்பான். குனிந்து பார்ப்பவர்களுக்கு வெறுந்தரைதான் மிஞ்சும்.

லெச்சுமி படிப்பில் கெட்டிக்காரி. வகுப்பில் முதல் மாணவியாக விளங்கினாள். ஞானம்மை ஆசிரியைக்கு அவளை மிகவும் பிடித்துப்போனது. அவர்கள் வீட்டிலிருந்து கொண்டுவரும் ஆகாரம்தான் பலநாட்கள் அவள் பசியை ஆற்றி இருக்கிறது. தள்ளியும், உந்தியும் ஐந்தாம் வகுப்பு வரை வந்த திருப்பதியால் பாதிக்கிணறைத் தாண்ட முடியவில்லை. இடையிலேயே படிப்பை நிறுத்தி விட்டான்.

படிப்பை நிறுத்தியது கூட அவனை வருத்தவில்லை. ஆசிரியையின் முகத்தை எதிர்கொள்வது தான் கஷ்டமாக இருந்தது. நாடகத்தில் நடிப்பதற்கு, பள்ளி வளாகத்தைப் பசுமையால் போலீத்துவதற்கு அவர்களின் முன்னணி தளபதியாய் இருந்தான். அவர்களிடம் அகப்படாமல் தலைமறைவாகத் திரிந்தவன் ஒருநாள் வசமாக வந்து மாட்டிக் கொண்டான். அந்திமழைக்கு ஒதுங்கிய சாயைக்கடையில் அவர்களை அவன் எதிர்பார்க்கவில்லை.

''அம்மையும் அப்பனும் இல்லாத்த வீட்டில நீ வேலை செய்துதான் ஜீவிச்ச முடியும்னு உள்ளத நான் அறியாத்தவ இல்ல. ஆனா பலமுறை தங்கச்சிட்டெ செல்லி விட்டேன் இல்லியா, நீ ஒருதடவ கூட என்னை ஏன் வந்து பாக்கல்ல?"

''வெளுப்பாங்காலமே எழும்பி வேலைக்குப் போயிடுவேன், அதாக்கும் வரப்பற்றேல"

"சாக்குப்போக்கு செல்லாத டேய், நானும் இந்த ஊரிலதான் இருக்கியேன். வெளிநாட்டில ஒண்ணும் இல்லியே."

''நீங்க அவளுட்டெ சி.எம்.எஸ்.சில கொண்டு விடுகேன், அங்கெ நிண்ணு படிக்கியா?ண்ணு கேட்டதா சென்னா. அது எனக்கு இஷ்டப்படல்ல."

"ஏனாம்?"

"அவா அனாதசாலைல படிக்கண்டாம்"

"அவளப் படிக்கவச்சி உனக்க வாழ்க்கைய நீ இழந்து போவியேடா? அதாக்கும் அப்பிடி சென்னது, கேட்டியா?"

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியை கூறியதன் பொருள் இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

இன்னும் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு தனது அறுபது வயசுக்கு மேல், மேலும் விளங்குவதாக நினைத்துக் கொண்டான்.

கட்டிலை விட்டு எழும்பியவன் கால்அனுங்க வீட்டுவளாகம் விட்டு வெளியே ரோட்டுக்கு வந்து ஒரு பீடியைப் பற்றவைத்தான். நேற்று ஆசிரியை உடனிருந்ததால் அணைத்து வைக்கப்பட்டிருந்த உணர்வு இன்று தீயால் உயிர்ப்பிக்கப்பட்டது.

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் டி.டி.சி முடித்த கையோடு லெச்சுமியை அழைத்துக் கொண்டு இதே வாசலில் தான் திருப்பதி வந்து நின்றான். அவனது நெஞ்சு நிமிர்ந்தது போல ஞானம்மை ஆசிரியைக்குத் தெரிந்தது.

"நீ மிடுக்கன் தான் டேய், தொங்கச்சியப் படிச்சவச்சி முன்னுக்கு கொண்டு வந்திட்டே..."

"எல்லாம் ஒங்க தயவும், வழிகாட்டுதலுந்தான்."

"இன்னும் வழி இருக்கு, சொன்னா கேப்பியா?"



"செல்லணும்."

"எனக்கு மின்ன போல களியேல. இந்த வருசம் வி.ஆர்.எஸ். வாங்கப்போறேன்."

"அப்பிடீண்ணா என்னா?"

"வேலைய விடப்போறேன். ஆனா ஆருட்டெயும் இதுவரைக்கும் ஒரு வார்த்தை போலும் சொல்லல. நீ ஒண்ணு பொற்றையில இருக்கிய வேதக்கோயிலுக்குப் பெய் பெரிய நாட்டையர ஒடனே பாக்கணும்."

"எதுக்கு?"

“தொங்கச்சிக்கு வேல வேண்டியதுக்கு.”

“எங்களுக்கு எப்பிடி தருவினும்? நாங்க ஒண்ணும் ஒங்களப்போல வேதக்கார இல்லியே?”

“அதுக்குள்ள வழியத்தான் சொல்லியேன். கேக்க மாட்டியா?”

அவர்கள் சொன்ன வழியை அவன் அப்பிடியே கேட்டான். லெச்சுமி ஒரு வாரத்தில் ஹெலன்ஷீபா ஆனால். திருப்பதி ஜோசப் ஆனான். ஹெலன் ஷீபா தொடக்கப்பள்ளி ஆசிரியை ஆனாள். ஆனால், திருப்பதி ஜோசப் ஆன பிறகும் பழைய கட்டில் கட்டியாகத் தான் இருந்தான்.

ஒருநாள் சந்தையிலிருந்து குறுக்குவழியாக வீட்டுக்கு கடக்கையில் மரிச்சினிவிளையில் குத்தவைத்திருந்து வாற்றுச்சாராயம் குடிப்பவர் வரிசையில் திருப்பதியைக் கண்டார் ஆசிரியை. அவர்கள் தன்னைக் கண்டதை அவனும் கண்டான் என்பதைக் காணாதது போல அவர்கள் கடந்து சென்றார்கள்.

திருப்பதி மனசில் ஏதோவொன்று அவனைச் சும்மா இருக்க விடவில்லை. எழும்பி அவர்கள் பின்னால் ஓடி வந்தான். ஒன்றும் தெரியாதது போன்ற சகஜபாவத்தில் அவனை ஏறெடுத்துப் பார்த்தார் ஆசிரியை.

“யாரு, திருப்பதியா?”

“ஆமா அம்மா, பைய இஞ்செ தாருங்க!”

இடுப்பிலும், இன்னொரு கையிலுமாக அவர்கள் சுமந்து சென்ற பைகளில் ஒன்றை வாங்கித் தனது தோளிலும், இன்னொன்றை மறுகையிலுமாக வைத்துக் கொண்டான் திருப்பதி. அவர்கள் ஒரு பையைத் தான் வைத்திருப்பதாகச் சொன்ன பிறகும் அவன் கொடுக்கவில்லை.

“என்னை மன்னிச்சிடுங்க.”

“எதுக்கு மன்னிக்கணும்?”

“ ..................... ”

“ஒனக்கிட்டெ நான் என்னதெங்கிலும் கேட்டனா? இப்பிடி சம்மன் வராம எங்கெயும் ஆஜராகப்பிடாது,

தெரியுதா?”

“ம்...”

“ஆமா தொங்கச்சிக்கு நல்ல வேலையும் கெடச்சாச்சி, அவளெக் கெட்டி அனுப்பணும்னு யோசனை ஒண்ணும் ஒனக்க மனசிலத் தோணல்லியா?”

“தோணினா மட்டும் போருமா? நாலுசென்ட் தறையும் ஒரு ஓலைச்சாய்ப்பும் தவிர வேற என்ன எங்களுட்டெ இருக்கு!”

“நகையும், பணமும் கொண்டுபோட்டு கெட்டக்கூடிய படிப்பும், வேலையும் உள்ள தகுதியான தங்கச்சி இருக்காடா ஒனக்கு! சங்கடப்படாதே, நீயும் செல்வந்தன் தான்.”

“அன்றாடம் வேலைசெய்து வயிறுகழுவும் இந்தப் பிழைப்பில தங்கச்சி வேலைக்கு நீங்க குடுத்த அம்பதினாயிரம் ரூவா பணத்த மொதல்ல நாங்க தீக்கண்டாமா? செறிய வட்டி போட்டாலும் மாசம் ஆயிரத்தஞ்நூறு ரூவா வரும் இல்லா?”

நடையை நிறுத்தி விட்டு அப்படியே நின்ற ஞானம்மை ஆசிரியை திருப்பதியை நோக்கி முகத்தைத் திருப்பினார். அதில் இப்படியொரு அனல் பறந்த வெயிலை அவன் ஒருநாளும் பார்த்ததில்லை.

“பேச்சை நிறுத்துவிலே! பள்ளீல பாடம் நடத்திய நேரத்தில வட்டி பிரிச்சிட்டும், யாவாரம் செய்திட்டும் திரியிற அலவலாதி வாத்தியானுவளப் போலயாடா என்னெயும் நெனச்சே? இல்லாட்டு இப்பிடி நீ வேளம் பறைய மாட்டே. எனக்க பெத்தமொவளப் போலக் கருதியாக்கும் லெச்சுமிக்கு நான் பைசா குடுத்தேன். இரக்கப்பட்டு ஒதவி செஞ்சா தொரை வட்டி இல்லா தருவாராம் வட்டி? ஒனக்க வட்டிப் பைசாயில தான் நான் கஞ்சி குடிச்சிக் கழியேனாக்கும்?”

அவன் கையிலிருந்து பைகளை வெடுக்கென பறித்து விட்டு வேகமாக நடந்தார் ஆசிரியை.

மறுநாள் ஆசிரியரை சமாதானப்படுத்த தங்கச்சியோடு அவர்கள் வீடுதேடிச் சென்றான் திருப்பதி. எதுவுமே நடக்காதது போல சிரித்துப் பேசி வரவேற்றதோடு மட்டுமல்லாமல் லெச்சுமியை வாஞ்சையோடு தடவிக்கொடுத்துத் தன் பக்கத்திலும் அமர்த்தினார்கள். அப்போதுதான் அந்த ஆலோசனையைத் திருப்பதியிடம் தெரிவித்தார்கள்.

“எனக்க மூத்தமகன் விக்டருக்கு சம்மந்தம் பாக்கியோம். நெறைய ஆலோசனைகள் வருது. திருப்பதிக்கு அவனத் தெரியும் இல்லியா?”

“நல்லா தெரியும். நெல்சனுக்க அண்ணன் தானே?”

“நெல்சனப் போல யாருட்டெயும் முகங்குடுத்துப் பேச மாட்டானா?, அதினால பல பேருக்கு எனக்க மோனாக்கும்னு தெரியாது”

“எனக்கும் இடைக்காலம்வரை அவரைத் தெரியாது. ஒருக்கா நெல்சனுக்க ஒர்க் ஷாப்பில பேப்பர் படிச்சிட்டு இருந்தாக்கில இதாக்கும் எனக்க அண்ணன்னு காட்டித் தந்தான்.”

“திருப்பதி! எனக்க மனசில விக்டருக்கு பெரூசா கல்யாணம் எடுத்து ஊரக் கூட்டிப் பாக்கணும்னு ஒரு வலிய ஆசை உண்டு டேய். அண்ணன் இருக்கும் போதே நெல்சன் கேரளத்தில இருந்து ஒருத்தியக் கொண்டு வந்து குடும்பம் நடத்தினானா, கல்யாணம் கங்காச்சயள ஒண்ணும் காண முடியல்ல.”

“அதுக்கென்ன, எல்லாம் நல்லபடியா நடக்கும்”

“விக்டர் பாக்கியம் செய்தவனாக்கும். பாலிடெக்னிக் தான் படிச்சான். இண்ணு பெரிய எஞ்சினியருக்க சம்பளம் வேண்டுதான். பெருஞ்சாணி அணையிலெயாக்கும் வேல.”

“நல்லா இருக்கட்டு.”

“இதையெல்லாம் ஏன் ஒனக்கிட்ட செல்லியேன்னு தெரியுமா? எனக்க மனசில லெச்சுமிய அவனுக்கு சம்மந்தம் கேட்டுப்பாக்கலாமாண்ணு ஒரு ஆலோசன தோணிச்சி. அதுகொண்டாக்கும்.”

“ஆலோசன எல்லாம் செரிதான், எங்களுட்டெ அதுக்குள்ள எந்த சேச்சியும் இல்லெ. நாங்க கெட்டுப்போனோம்னு சொந்தக்காரங்க யாருமே எங்களுட்டெ பேசியது கூட இல்லெ.”

“ஒங்களப் பற்றி புதுசா செல்லியா நாங்க தெரியணும்? எல்லாம் அறிஞ்சுவச்சிட்டுத் தானே பேசியோம்.

விக்டருட்டெ மெள்ள கேட்டுப் பாத்தேன், பய நலமோ, நட்டமோ பேசல்ல. ஒருக்கா கூட கேட்டுப்

பாத்திட்டு ஒனக்கு ஆளுசொல்லி விடலாம்னு நெனச்சா, நீங்க ரெண்டுவேரும் திடுதிப்புண்ணு வந்துநிக்கிதிய."

"இதில எங்க தரப்பில என்ன செல்லியதுண்ணு எங்களுக்கே தெரியல்ல பாருங்க."

"திருப்பதி! இங்கபாரு, ஒங்கள குறைவா நெனச்சி நான் இத பேசல்ல. எங்களுக்குப் பணமோ, நகையோ அவசியமில்ல. யோசிச்சி மெதுவா சொன்னா போதும்."

வாசலுக்கு வெளியே காலெடுத்து வைத்திருக்க மாட்டார்கள், லெச்சுமி சாமி வந்தவளைப் போல ரோட்டில் நின்று ஆடத் தொடங்கினாள்.

"பணமும் வேண்டாமாம், நகையும் வேண்டாமாம். நாம பிச்சக்காரர்களாகிப் போனோம். வாத்திச்சிக்க கணக்குக்கூட்டல் நல்ல சேலாத்தான் இருக்கு. எனக்கு வேலைமட்டும் இல்லேண்ணு வச்சிக்க, திலிஞ்சி பாத்திருப்பினுமா? சதையுள்ள இடம் பாத்துதான் கத்தியும் எறங்குது."

''அப்பிடி எல்லாம் பேசாத தங்கச்சி. ஒனக்க வேலைகூட அவங்க தந்தது தான். ஆசிரியை ஒருக்காலும் கேடுபாடு உண்டாக்கியவிய இல்ல. நமக்கொரு அம்மையப் போல. ஒருவாடு உதவி எல்லாம் செஞ் சிருக்கினும்.



அத மறக்கப்பிடாது. எனக்கிந்த ஆலோசனையில இஷ்டந்தான். நடந்தா நடக்கட்டும்."

அடுத்த சில நாட்களில் விக்டரும் தனது சம்மதத்தைத் தெரிவித்தான். நாலுசென்ட் நிலத்தை லெச்சுமி பேரில் எழுதிவைக்க வேண்டும் என்றொரு நிபந்தனை மட்டும் விதித்தான்.

''அண்ணா இதுக்கு நீ ஒருநாளும் சம்மதிக்கப்பிடாது. இரைபோட்டு மீன்பிடிக்கும் வேலையாக்கும் செய்யினும். நாலு சென்டா இருந்தாலும் ரோட்டங்கரை. அதுக்க மதிப்பு வேற. ஒனக்குப் பெறவு கெடந்துறங்க இடமில்லாமப் போயிடும்."

தங்கையின் கண்ணீரைத் துடைத்தெறிந்தவன் அவர்கள் கூறிய எதற்கும் குறைவைக்காமல் விக்டரின் கரத்தோடு அவளை சேர்த்துவைத்தான்.

ஒரு வருடம் இன்னா என்று ஓடிப்போனது.

பிறந்த வீட்டுக்கு வந்த லெச்சுமி வழக்கத்திற்கு மாறாக அன்று அண்ணனுக்குப் பண்டம், பலகாரம் துணிமணிகளெல்லாம் வாங்கிக்கொண்டு அமர்க்களமாக வந்தாள்.

"உள்ள வா!"

"நீ கொஞ்சம் வெளிய வா அண்ணா, இன்னா பாரு நம்ம வீட்டடியச் சுற்றி மொத்தம் இருவது சென்ட்

நிலம் நாங்க எடவாடு செய்தாச்சி"

"அது நடந்து ஆறு மாசம் கழியுமே?"

"ஓ... நீயும் அறிஞ்சியா?"

"நீ சொல்லாட்டாலும் நான் அறிஞ்சிட்டுத்தான் இருக்கியேன்."

"செல்ல அண்ணா, டீச்சர் எனக்கு போட்டுக் கெட்டின நகையெல்லாம் அடவுல ஆச்சி."

அவள் சிணுங்கினாள்.

"இனி வெக்கியதுக்கு பொடிப்பவுன் இல்லாமப் போச்சி. எனக்குத் தந்தது போல எளையமவன் பெண்டாட்டிக்கும் நல்லாக்கிப் போட்டினுமாம் டீச்சர். நான் பெய் அடவுவச்ச கேட்டாக்கில என்னா வித்தாரம் பேசியா அந்தக் கேரளத்துக்காரி!"

''வாழப்போன வீட்டில பெய் இருந்துட்டு நீ வழக்குண்டாக்கப்பிடாது, கேட்டியா?"

"நான் எங்கெ வழக்குண்டாக்கினேன்? வச்சிற்று இல்லேண்ணு சொல்லீட்டா பாரு."

"நெல்சன் சின்னதா ஒர்க்ஷாப் நடத்தி ரெண்டு வண்டியள வேலப்பாத்து தொடச்சி பறக்கி பெழப்பு நடத்தியவன். ஒங்க ரெண்டுவேரையும் போல மாசச் சம்பளக்காரன் இல்ல, அத மொதல்ல அறியணும் நீ"

''நாங்க என்ன, திருப்பித்தரமாட்டோம்ணா கேட்டம்? கண்ண அடச்சி வச்சிற்றா எனக்க அனந்தரத்தி."

''தர விருப்பம் இல்லாத எடத்தில பெய் பின்னெயும் பின்னெயும் கேக்கியது தப்பு. அத மறந்திடணும்."

"எக்க பொன்னு அண்ணா, நீ தெற்று திலிச்சப்பிடாது. ஒனக்கிட்ட ஒரு காரியம் செல்லப் போறேன்."

மகள் தகப்பனிடம் கேட்பதைப் போல நினைத்துக் கொண்டு அவள் என்ன கேட்கப் போகிறாள் என்பதை மனதில் அறிந்தவனாக மெலிதாய்ப் புன்னகையை முகத்தில் படர விட்டான் திருப்பதி.

"பேங்கில லோன் சேங்ஷன் ஆயிருக்கு. இதிலெ ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கெட்டப் போறோம்..."

''வீட்டை நான் ஒளிஞ்சு தரணும், அதானே கேக்கப்போறெ?"

உள்ளே சென்றவன் பூட்டையும், சாவியையும் எடுத்து அவள் கையில் ஒப்படைத்து விட்டு வெளியே இறங்கினான். அவன் முதுகுக்குப் பின்னால் நின்று ஏசுவின் வசனத்தைக் கூறி அவள் எதுவோ பேசுவதுபோலத் தெரிந்தது. அவன் காதில் எதையும் வாங்காமல் நடந்தான்.

அன்று மாலை நெல்சன் வந்து விக்டரை சந்தித்தான்.

"நீ செய்தது ஒனக்கே நல்லா இருக்குதா அண்ணா?"

''நீ குடிச்சிருக்கே, ஒனக்கிட்டெ நான் பேசத் தயாரில்ல."

"சொந்த மச்சினன தெருவுந் திண்ணையுமா ஆக்கிப்

போட்டியேடா!”

“அண்ணன் இஷ்டப்பட்டுத்தான் சாவிய கையில தந்தான். இவியளா ஏறங்கிப்போ எண்ணு வெரட்டிச்சினும்?”

“அண்ணி, ஒங்களுட்டெ நான் பேச வரல்ல. லேய் அண்ணா! தட்டுல இடம் காலியாத்தானே இருக்குது, ஒரு முறி ஒதுக்கிக்குடுத்து கெடந்துறங்கவாவது ஏற்பாடு செய்.”

“அண்ணனுக்கு எங்களோட வந்து தங்க விருப்பம் இருக்காது. அவனுக்கு வேற என்னெங்கிலும் செய்யிலாம்.”

“என்னெங்கிலும்ணா?”

“மாசம் அம்பதோ, நூறோ குடுக்கலாம்.”

“ஒங்க அம்பதிலும் நூறிலும் ஒண்ணும் அவன் வாழல்ல. தெனம் அஞ்ஞூறு ரூவா வேலசெய்து சம்பாதிக்கிய திராணி திருப்பதிக்கு உண்டு. எனக்க ஒர்க்ஷாப்பில கெடந்துறங்க எடம் கேட்டான். ஒங்க ஒடம்பில ஓடிய ரெத்தம் தான் அவனுக்கும் ஓடுதுண்ணு நீங்க நெனச்சிருந்தா சொந்த அண்ணன இப்பிடி கைவிட்டிருக்க மாட்டிய.”

கையில் சுட்ட பீடியைத் தூக்கி எறிந்துவிட்டுத் தொண்டையில் கசந்த காறலைத் துப்பினான் திருப்பதி.

திரும்பவும் வந்தமர்ந்து கட்டில்கட்டத் தொடங்கினான்.

எஸ்தர் காம்ப்ளெக்ஸ்!

அவன் வீடு இருந்த இடம் தற்போது தூக்கம் கலைந்து எழுந்து நிற்கும் யானைபோல உயர்ந்து நின்றது.

அதன் உச்சியில் ஒரு சிலுவை நாட்டப்பட்டிருந்தது. அது குன்றிலிட்ட விளக்காய்ப் பிரகாசித்தது.

கட்டில்கட்ட ஞானம்மை ஆசிரியை ஆள்சொல்லி விட்டபோது எல்லாவற்றையும் விட திருப்பதி மனதில் எஸ்தரைக் காணும் ஆவல்தான் மிகுந்திருந்தது. பிறந்தவீடு என ஒன்று இல்லாத நிலையில் லெச்சுமியை எப்படி பிரசவத்திற்கு அழைக்க முடியும்? வீடிருந்தாலும் திருப்பதியால் ஒற்றைக்கு என்ன செய்திருக்க இயலும்?

என்றாலும் அவன்மனதில் ஏதோ குறையொன்று படர்வதை உணர்ந்தான். அவர்கள் அவனை எதற்கும் அணுகவில்லை என்பதில் அக்கறையை விட பொருட்படுத்தாமையே காரணமாக இருந்தது. தங்கைக்குக் குழந்தை பிறந்த தகவல் கூட அவனாய்க் கேட்டு அறிந்தது தான். நெய்யூர் ஆஸ்பத்திரி சென்று எஸ்தரைக் கைக்குழந்தையாகக் கண்டு வருடம் நான்கு அதற்குள் ஓடிவிட்டது.

திருப்பதியின் உணர்வைப் புரிந்துகொண்ட ஒரே ஜீவன் ஞானம்மை ஆசிரியை என்பதால் நேற்று மதியம் தாண்டியது முதல் அவர்களை நச்சரிக்கத் தொடங்கினான். அவன் ஆவல் அவர்களிடம் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

இரத்தபாசத்தின் துடிப்பை உணர்ந்து நாலுமணிக்குப் போல எஸ்தர் படிக்கும் பள்ளி சென்று அவளை அழைத்து வருவதற்கு அனுமதித்தார்கள்.

பள்ளியில் அவன் தோற்றத்தைக் கண்டு முதலில் யாரும் நம்பவில்லை. லெச்சுமியுடன் படித்த ஆசிரியைக்குத் திருப்பதியைத் தெரிந்ததால் எஸ்தரை அவனுடன் அனுப்பி வைத்தார்கள்.

“அங்கிள்! ஒங்கள பூச்சாண்டிண்ணு என் பிரெண்ட்ஸ் எல்லாம் சொன்னாங்க. எனக்குப் பூச்சாண்டீண்ணா ரொம்...பப் பிடிக்கும்.”

அவள் கன்னத்தைக் கிள்ளியவன் ஸ்கூல்பேக்கை வலதுகையில் தூக்கியவாறு இடது கையால் வாரியெடுத்துக் கொண்டு நடந்தான்.

“மக்கா, நான் உனக்கு அங்கிள் இல்ல, மாமாவாக்கும்.”

“அங்கிள்ணு தானே மம்மி சொன்னாங்க?”

“அது கள்ளம் பாரு.”

“அங்கிளுக்கும், மாமாவுக்கும் என்ன வித்தியாசம்?”

“அம்மைக்கு அங்கிள், எஸ்தர்குட்டிக்கு மாமா!”

“நல்ல மாமா!”

அவன் அழுக்குத் தலைமயிரை பற்றிப்பிடித்த குழந்தை திருப்பதியின் கன்னத்தில் முத்தம் பதித்தது.

“மாமா எங்க பிரின்சிபல் ஆன்டிகிட்டெ நீங்க ஏன் திருப்பதிண்ணு சொன்னீங்க? அதனாலத்தானே ஒங்கள சந்தேகப்பட்டாங்க.”

“அப்ப எனக்க பேரு என்ன செல்லம்?”

“அய்யே ஒங்க பேரு ஒங்களுக்குத் தெரியாதாக்கும்? எனக்குத் தெரியுமே...”

“சொல்லு.”

“ஜோசப்.”

அடக்கமான குரலில் சொல்லி விட்டுக் கைகொட்டிச் சிரித்தது குழந்தை.

“இப்ப ஏன் நீங்க கள்ளம்ணு சொல்லல்லே?”

“வாஸ்தவம்தான்.”

“ஜோசப்புக்கும், திருப்பதிக்கும் என்ன வித்தியாசம்?”

“ஆகா! இது லேசுப்பட்டதல்ல, ஹெலன்ஷீபா பெரிச்ச குஞ்சாக்கும்.”

“சொல்லுங்க மாமா.”

‘‘திருப்பதிண்ணாலும் அடியோலப்பாடு தான், ஜோசப்புண்ணாலும் அடியோலப்பாடு தான் மக்கா.”

குழந்தை புரியாமல் விழித்தது.

வீட்டை அடைந்ததும் யாரையும் எதிர்பார்க்காத குழந்தை தானாகவே ஸ்கூல்பேக்கைத் திறந்து புத்தகங்களைப் பிரித்து அடுக்கியது. மதியம் சாப்பிட்ட பாத்திரங்களைக் கவனமாக அடுக்களையில் கொண்டுபோய் வைத்தது.

துணிகளைக் கழற்றிக் கூடையில் போட்டது. தானே மேல்குளித்து தானே புதியஉடை அணிந்து தொலைகாட்சிப் பெட்டியை உயிர்ப்பித்து அதன் முன்னால் வந்து உட்கார்ந்தது. அவளது ஒவ்வொரு அசைவுகளையும் திருப்பதி வியப்புடன் பார்த்து ரசித்துக்கொண்டே இருந்தான்.

“என்ன திருப்பதி, வச்ச கண்ணு மாறாம மருமகளப் பாத்துக்கிட்டே இருக்கிய?”

“இல்ல டீச்சர், அம்மைக்க சாயல் இவளுட்டெ அப்பிடியே தெரியுது”

“ஒனக்க அம்மைக்க பேரு என்ன டேய்?”

“சொனையப்பு!”

“அடப்பாவி! அழகான பெயரை மாங்காயிலிருந்து வழியும் சொனையா மாற்றிப்போட்டியே? அது சொனையப்பு இல்ல, சினேகப்பூ!”

குழந்தைக்குப் புரிந்ததோ இல்லையோ, கைகொட்டி

அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டது.

"பண்டு இந்தப் பேரில நெறைய பொம்பிளைக இருப்பினும்."

டி.வி.யில் சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி ஓடிக் கொண்டிருந்தது. குழந்தை அதனை வெகுவாக ரசித்துப் பார்த்தது.

"மாமா இந்த விளையாட்டு ஒங்களுக்குத் தெரியுமா?"

"நல்லா தெரியுமே, குட்பால் தானே?"

"குட்பால் இல்ல மாமா, அது ஃபுட்பால்!"

குழந்தை தனது காலைத் தொட்டுக் காட்டியவாறு பேசியது.

"ஒனக்கு இந்த விளையாட்டு பிடிக்குமா அம்மா?"

"நல்...லா பிடிக்கும் மாமா! ஆனா மம்மிதான் திட்டுவாங்க."

"ஏன்?"

"பையங்களுக்க விளையாட்டாம் இது."

"அப்பிடியெல்லாம் இல்ல மக்கா! அம்மா தெரியாமப் பேசியா. எந்த வெளயாட்டையும் யாரும் வெளையாடுலாம் பாரு."

"மாமா தான் நல்லவரு"

"ஒனக்கு இஷ்டம்ணா நீயும் வெளயாட வேண்டியது தானே மக்கா? யாரு உன்னத் தடுக்கப் போறாங்கண்ணு நானும் பார்க்கிறேன்."

குழந்தை நாற்காலியிலிருந்து இறங்கி வந்து திருப்பதியின் மடியில் ஏறி உட்கார்ந்தது. அவன் நாடியைத் தடவியவாறு பேசியது.

"அப்பாட்டெ பந்து வாங்கித்தர கேட்டேன் மாமா, அப்பிடியே என்னச் செறஞ்சிப் பாத்துட்டு, நீ செஸ் விளையாட்டோ, கேரம்போடோ விளையாட வேண்டியது தானேண்ணு திட்டிச்சி."

"அப்படியா தங்கம்? ஒனக்கு அம்மையும் சரியில்ல, அப்பனும் சரியில்ல."

ஞானம்மை ஆசிரியை சத்தம் போட்டு சிரித்தார்.

"அன்னைக்கு நீ படிப்ப நெறுத்தாம இருந்தா, எங்கேயோ இருந்திருப்பே. தங்கச்சி நாலெழுத்துப் படிச்சாளே தவிர, அதுக்குள்ள மதி அவளுட்டெ இல்ல. அறிவுக்கும், வாழ்க்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்ல திருப்பதி."

ஸ்கூட்டரின் சத்தம் கேட்டதும் திருப்பதியின் மடியிலிருந்து எழுந்த குழந்தை வாசலுக்கு நேராக ஓடியது.

கால்களை நெளித்தவாறு வந்து வளாகத்தில் ஊன்றி இறங்கிய லெச்சுமி ஹெல்மெட்டைக் கையிலெடுத்துக் கொண்டு வருவதை திருப்பதி ஆச்சரியத்துடன் பார்த்தான். முழுச்சேலையிலிருந்து அதிகம் கிழியாத பகுதியாகப் பார்த்துக் கிழித்தெடுத்த தாவணியில் விளைகளில் உதிர்ந்து கிடக்கும் பனம்பழம் பொறுக்கிச் சுட்டுத்தின்று வயிற்றுப் பசியாற்றிய லெச்சுமிதானா இவளென்று சிரமப்பட்டே நம்பினான்.

"எஸ்தர் இங்க வா! நீ ஏன் இண்ணைக்கு ஸ்கூல் வேன்ல வரல்ல?"

"மாமா கூட வந்தேன்"

"ஒன்னக் காணாம அவங்க எங்க ஸ்கூலுக்குப் போன் பண்ணினாங்க. ஏன் இப்பிடி தொந்தரவு பண்றே?"

"பிரின்சிபல் ஆன்டிக்கிட்ட பர்மிஷன் வாங்கித் தானே மாமா கூட்டிக்கிட்டு வந்தார். அவங்களுக்குத் தெரியுமே."

"என்னத் திமிர் உனக்கு? அப்ப நானா பொய் சொல்றேன்? மம்மிக்குப் பொய் பேசுவது பிடிக்காதுண்ணு தெரியாதா உனக்கு?"

மிரட்சியுடன் நின்ற குழந்தையின் கையைப் பிடித்து இழுக்கவே திடுக்கிட்டது.

"திருப்பதிக்கிட்ட நான்தான் அவள நேரமே கூட்டிற்று வரச் சொல்லி விட்டேன் பாரு. அதுக்கு குழந்தையப் போட்டு இப்பிடியெல்லாம் மிரட்டாதே. அது பயந்து நடுங்குது."

ஆசிரியை குறுக்கிட்டார்.

"எப்படியும் போங்க! அவா ஸ்கூல்ல எனக்க மானம்தான் போவுது. ஒங்களுக்கு அதில எந்தக் கவலையும் இல்லெ."

அறைக்குள் சென்று கதவை அடைக்கும் சத்தமும் அதன் பிறகு பாத்ரூமில் நீர்விழும் ஓசையும் வழக்கத்துக்கு மாறாக சடசடவென்று ஒலித்தது.

"மானம் போவுதா ஒனக்கு? அண்ணனாரு தான்செத்து மீனுபிடிச்சியதில ஒனக்குப் போவாத மானமா அவன் ஒனக்க அண்ணன்னு ஊருக்குத் தெரிஞ்சதில பெய்ற்றுது? கொஞ்சம் விட்டா இவன் எனக்க அண்ணன் இல்லேண்ணு கூட வாய்கூசாம சத்தியம் அடிச்சு சொல்லுவியேடி!"

லெச்சுமி அருகில் இல்லையென்ற வீதரியத்தாலோ என்னவோ, ஆசிரியையின் குரல் வெளிப்படையாகவே வருத்தம் தோய்ந்து ஆதங்கப்பட்டது.

"லெச்சுமி இந்த நெல நிக்கியாளே, உங்களுட்டெயும் இப்பிடித்தான் பெருமாறுவாளா?"

"இங்கெ இப்ப நீ ஒங்கண்ணாலக் கண்ட இல்லியா? அதுபோலத்தான் எப்பளும். கல்யாணம் கழிஞ்ச ஆரம்பத்தில கொஞ்சநாளு என்னெ அம்மாண்ணு விளிச்சா பாரு. ஒருமாசம் கழியல்ல, எனக்க மகனுட்டெ கொம்மேண்ணு பேசி என்னப்பற்றிக் கோளு சொல்லத் தொடங்கினா. நான் பின்ன எதையும் வகை வைக்காததுனால சண்ட சச்சரவு இல்லாமக் கழியுது."

"சாப்பாடாவது ஒங்களுக்கு சமயத்துக்கு கெடைக்குதா?"

"அதிலயும் யாலிப்பு தான். நாளைக்கு முதல் ஒருவாரம் இனிநான் நெல்சனுக்க வீட்டிலெயாக்கும். எல்லாம் பங்குவச்சி தான் செய்யினும். நெல்சன் காலமே வண்டி கொண்டு வந்து ஏற்றீட்டுப் போவான். விக்டருட்டெ பணம் இருக்கு. அது இல்லாத்த நெல்சன் குடும்பத்தில பாசம் இருக்கு. அதுகளுக்க கூட கழியதில எனக்கு இன்னும் இஷ்டம். நான் இங்க இல்லாத்த நேரத்தில நாளை ஒருநாள நீ எப்பிடி கடத்தப் போறேண்ணு உள்ளது தான் எனக்கு இப்ப உள்ள வருத்தம்."

ஆடை மாற்றி விட்டு வெளியே வந்த லெச்சுமி குழந்தையைப் பிடித்திருத்தி பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

இருள் பரவத் தொடங்கியதும் பாட்டுப்போட்டு கிறிஸ்தவமணம் பரப்பினாள். அந்த இடைவெளியில் அடுக்களைக்குச் சென்று எதையெல்லாமோ உருட்டினாள். ஆனாலும் சமையல்மணம் வராததால் உள்ளே நடப்பதை

அறிய முடியாமல் கட்டில் வேலையில் கவனம் செலுத்தினான் திருப்பதி.

“எஸ்தர் பைபிள எடுத்திட்டு வா!”

“விக்டர் வர பிந்துமா?”

ஆசிரியை வினவினாள்.

“இன்று வெள்ளிக்கிழமை இல்லியா?”

“ஓ...அத நான் மறந்துட்டேன், வீட்டுக்கூட்டம் உண்டே?”

“அது முடிஞ்சி மலைநாட்டு ஊழியம் பற்றி கமிற்றி ஏதோ அங்க உண்டு. வரக் கொஞ்சம் பிந்தும்.”

லெச்சுமி நைட்டியில் இருந்ததால் தலையில் முக்காடு போட சேலைத்தலைப்புக்குப் பதிலாக தொவர்த்து எடுத்து மறைத்தாள். அவளருகில் சென்று ஒட்டி அமர்ந்த எஸ்தர்குட்டி தொவர்த்தின் ஒருபக்க நுனியை இழுத்து தனது தலையையும் அதில் சேர்த்துக்கொண்டது. மாடு வியாபாரத்தில் கயிறு மாற்றிக்கொடுக்கும் போது தலையில் தொவர்த்து போடும் காட்சிபோல தாயையும் மகளையும் பார்த்த திருப்பதி, தனக்குள் பீறிட்டுக் கிளம்பிய சிரிப்பை சிரமப்பட்டு அடக்கினான். லெச்சுமி முதலில் பாடினாள்.

“ஏசு போதுமே... போதுமே.. எந்த நாளிலுமே, எந்நிலையிலுமே, எந்தன் வாழ்வினிலே...”

ஞானம்மை ஆசிரியை படுத்தநிலையில் கைகள் இரண்டையும் கூப்பினார்கள். அவர்களின் கண்கள் மூடியிருந்தன.

“துன்மார்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்...”

வேதம் படித்தாள்.

தொடர்ந்து ஜெபிக்கத் தொடங்கியவள், ஆண்டவரே! சத்துருக்களின் கோட்டையை நிர்மூலமாக்கும் என்று உரத்த குரலில் சத்தம் போட்டாள். அப்படி செய்ததற்காக ஏசுவுக்கு நன்றி சொன்னாள். திருப்பதியின் மனத்திரையில் நாலுசென்ட் பூமியில் இருந்த தங்கள் பழையவீடு கட்டமண் திட்டையாகிக் கிடந்த காட்சி விரிந்தது.

அவள் செய்வது ஜெபம் தானா என்ற சந்தேகம் ஏற்படவே கூர்ந்து கவனித்தான். ஒருவேளை சத்துரு என்று தன்னைக் குறிப்பிடுகிறாளோ என்றுகூட யோசித்தான். இருக்காது, கோட்டையை அல்லவா தகர்க்கச் சொல்கிறாள். ஜெபத்தின் இடையிலும் சில வரிகளை மீண்டும் அவள் பாடினாள்.

“எரிகோ மதிலுன் முன்னே வந்தாலும், ஏசு உந்தன் முன்னே செல்கிறார்....”

இப்போது எல்லாம் புரிந்து விட்டது அவனுக்கு. எஸ்தர் காம்ப்ளெக்ஸ் கட்டும்போது விக்டருக்கு பக்கத்து கட்டிடக்காரருடன் மதில் பிரச்சினை ஏற்பட்டது. அதைத்தான் குறிப்பிடுகிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

திருப்பதியின் கைகள் கட்டிலில் ஓடிக் கொண்டி ருந்தாலும் கண்களும், மனமும் அங்குள்ள சூழல் மீது தான் கவனம் கொண்டன. திடீரென எங்கிருந்தோ பாம்பு சீறுவது போல புஸ்!புஸ்! என்ற சத்தம் வந்தது. அவன் அங்குமிங்குமாகப் பார்வையை செலுத்தினான். எஸ்தர் ஜெபத்துக்கிடையே ஸ்தோத்திரம் சொல்வதுதான் அந்த சத்தம் என்பதைக் கண்டுகொண்டான். மனதில் கன்வென்ஷன் கூட்டம் ஒன்றில் கனத்த சரீரத்தை சுமக்க முடியாமல் நின்ற குண்டுபிரசங்கி, மைக்கில் ஸ்தோத்திரம் வாயில் எழவராமல் சோஸ்றாம்! சோஸ்றாம்! என சத்தம் போட்டது ஞாபகத்திற்கு வந்ததா, அவனையும் அறியாமல் பொட்டிச் சிரித்துவிட்டான்.

அந்த சிரிப்பைக் கேட்டு லெச்சுமியின் முகபாவனையில் மாற்றம் ஏற்பட்டது. வாய் வேகம் வேகமாக ஜெபத்தில் வார்த்தைகளை தள்ளிக் கொண்டே இருக்க, ஒரு கண்ணைத் திறந்து அவனைப் பார்த்துவிட்டு அடைத்தாள். அதன்பிறகு ஏனோ ஜெபத்தை அதிகமாக அவள் நீட்டவில்லை. ஆமென்! என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அடங்கினாள்.

“நாங்க ஜெபிக்கும் போதுதான் ஒனக்கு தத்திரவேலை இல்லியா? அந்த நேரத்தில கட்டில் கட்டியத ஒண்ணு நெறுத்தி வச்சிட்டு எங்ககூட ஜெபத்துல கலந்து கொண்டா ஒனக்கு அது எவ்வளவு ஆசீர்வாதமா இருந்திருக்கும்? நீ ஆண்டவருக்க கூடயாக்கும் விளையாடுக. அது ஒனக்கு சாபக்கேடா மாறப்போகுது. விசுவாசிகள் உனக்காக ஜெபிக்க வந்தால் அவங்களக் கெட்டவார்த்தையாலத் திட்டுக. அதுனாலத்தான் இப்பிடி எழுந்தேற்றம் இல்லாமக் கெடக்கியெ.”

அவள் பொரிந்து தள்ளினாள். விசுவாசிகளை அவன் கெட்டவார்த்தை பேசியதான குற்றச்சாட்டை அவள் இரண்டாவது தடவையாகக் கூறுவதைக் கவனித்தவன் அதுகுறித்து ஏற்கெனவே தனது தரப்பிலான நியாயத்தை டீச்சரிடம் விளக்கியதாலும், ஜெபத்திற்கிடையில் தான் அப்படி சிரித்தது தவறு என்று உணர்ந்ததாலும் பதில்எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

மேசை மேலிருந்த கைப்பையைத் திறந்த லெச்சுமி, ஐம்பதுரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

“இந்தா, வெளியப்போய் சாப்பிடு, மீதி ரூபாயை நாளத்திக்கும் வச்சிக்க.”

நள்ளிரவு நெருங்கும் சமயத்தில் விக்டர் வீட்டுக்கு வந்தான். வரும்போதே திருப்பதி குறித்த புகார் மனுவையும் கூடவே கொண்டுவந்து சமர்ப்பித்தான்.

“கொண்ணனாரு கொஞ்சம் அலவலாதிகளுடன் சாராயக்கடை வாசல்ல நிக்கிறதப் பாத்தேன். என்னக் கண்டதும் ஓடி வந்து மடிச்சிக்கட்டையும் அவிழ்த்துப் போட்டுட்டு, ‘மச்சான் இப்பளா போறீரு?’ண்ணு கேட்டான். எனக்கு ஆள்கூட்டத்தில ஒருமாதிரி வந்தது. ஒண்ணும் சொல்லாம வந்துட்டேன்.”

“நம்ம குடும்பமானத்த கெடுக்கத்தான் எனக்கு இப்பிடி ஒரு அண்ணன ஆண்டவர் தந்திருக்கிறார்.”

“வேற எங்கெயோ ஒரு வீட்டிலெயும் சாயங்காலம் பெய் கட்டில் கட்டியதாட்டு நெல்சன் வழியா அறிஞ்ச துரைராஜ் வாத்தியார் சொன்னார். அதுதான் ஆள நேத்து ராத்திரி காணல்ல. இண்ணைக்கும் வரமாட்டான்.”

“அவன் வராமப் போட்டு!”

மறுநாள் காலை ஒன்பது மணிக்குப் போல திருப்பதி அங்கு வந்தபோது விக்டரைத் தவிர வீட்டில் யாரும் இல்லை. சட்டைக்கு உள்ளே சாரத்திற்கு பெல்ட் போல கட்டிஇருந்த சிவப்புநிறக் குற்றாலம் தொவர்த்தை அவிழ்த்து மாமரத்தில் காயப் போட்டான். வீட்டுக்குள் நுழைந்து கட்டில்கட்டத் தொடங்கினான்.

அங்கு மரண பீதியைப் போன்றதொரு அமைதி நிலவியது. அது ஏற்படுத்திய தனிமையைக் கலைக்க

விக்டருடன் பேச்சுக் கொடுத்தான்.

“டீச்சர் நெல்சனுக்க வீட்டுக்குப் போச்சினுமா?”

“ம்...”

“லெச்சுமிக்கு சனிக்கிழமையும் பள்ளி உண்டா?”

“உண்டு.”

“எஸ்தர் குட்டி?”

“பேசி முடிப்பதற்குள் வேகம் வேகமாக மாடிப்படியில் எத்திச்சாடி தட்டுக்குச் சென்ற விக்டர், அதே வேகத்தில் உடை மாற்றிக்கொண்டு தடதடவென கீழே இறங்கி வந்தான்.

ஆசிரியை படுத்துக்கிடக்கும் கட்டிலில் அமர்ந்தவன் தலைமாட்டுப் பக்கம் இருந்த பைபிளைக் கையில் எடுத்துக் கொஞ்சநேரம் படித்தான். பிறகு அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக குட்டிபோட்ட பூனை போல நடந்தான். எதையோ சொல்வதற்கோ, அல்லது செய்வதற்கோ உரிய ஆயத்தமாக அது இருந்தது.

“ஓய் இந்தக் கட்டிலெப் பிடியும்.”

“எனக்கிட்டெயா?”

“பின்ன வேற யாரு இங்க இருக்கியா?”

“ஏன்?”

“தூக்கும், சொல்லியேன்.”

அவன் கட்டிக்கொண்டிருந்த கட்டிலையும், நார் உட்பட எல்லா பொருட்களையும் தூக்கி வெளியே மாமர நிழலில் போட்டுவிட்டு மூலையிலிருந்த பைப்பில் போய் விக்டர் கையைக் கழுவினான்.

“ஒம்ம பொருட்கள் ஏதாவது உள்ள இருக்கா?”

“இல்ல.”

தலைவாசற்கதவை இழுத்து இரண்டு கொழுத்துப் போட்டு இறுக்கிப் பூட்டியவன், சாவியை காற்சட்டைப் பையில் நுழைத்தவாறு காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஸ்டியறிங்கில் கையையும், தலையையும் சாய்த்து ஜெபம் செய்தான்.

**ஞா**னம்மை ஆசிரியையின் முகத்தைப் பார்க்க கூச்சப்பட்டு நின்ற தருணம் ஒன்றும் திருப்பதி வாழ்க்கையில் நிகழ்ந்தது. அவர்கள் தனக்கு உறவு முறையில் என்னதான் சொந்தம் என்ற போதிலும் ஆசிரிய நிலையைத் தாண்டிச்செல்ல ஒருநாளும் அவன் யோசித்தது இல்லை. தான் படிக்காதவனாக இருந்தாலும் தனக்குப் படிப்பித்த ஆசிரியை என்னும் பிம்பமே அவன் மனதில் முழுமுதற் தோற்றமாகப் பதிந்து நின்றது. லெச்சுமி தானொரு ஆசிரியையாக இருந்த போதிலும் என்றோ அதனை மீறியதால்தான் அவளுக்கு ஒருநாளும் அதனால் வருத்தம் ஏற்பட்டதில்லை என்றும் நினைத்தான்.

“சொல்லு திருப்பதி, நீ தானகெடு பேசினியா?”

“யாரை?”

“அதுதான் ஒனக்காக ஜெபிக்க வந்த விசுவாசிகளை நீ ஜெபிக்க விடாமல் கெட்டவார்த்தைகள் பேசி வெரட்டியதாக லெச்சுமி சொன்னாளே, உள்ளதா?”

“ ........... ”

“சுவரைப் பாக்காம எனக்க மொகத்தப் பாரு.”

அவனுக்கு என்னவோ போல இருந்தது.

“இங்க பாரு, சந்தர்ப்பங்களில அப்பிடிப் பேசவாறது இயல்புதான். நான்கூட பேசி இருக்கேன். வீதரியமா சொல்லு.”

“பேசினது உண்மைதான்.”

“காரணம்?”

“அப்ப எனக்கு உடம்பில சின்னதா ஒரு பிரச்சினை. டாக்டா உடனே ஆப்ரேஷன் செய்யணும்னு சொன்னதால பள்ளி விட்டு வரும்போது காத்து நிண்ணு லெச்சுமியக் கண்டேன். அண்ணன் வீதரியமாப் போ, நான் எல்லா ஒதவியும் செய்யேண்ணு சொன்னா. மணலியில ஏழு நாளு தங்கி இருந்து ஆப்ரேஷன் முடிச்சேன்.”

“எனக்கிட்ட நீயோ, அவளோ இதுபற்றி ஒரு வார்த்தை சொன்னியளா?”

“அதுக்குள்ள நேரமும் இல்ல, சந்தர்ப்பமும் வாய்க்கல்ல. லெச்சுமிதான் டாக்டருக்குப் போன் பண்ணி எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தா. ஆஸ்பத்திரி டாப்புல எனக்க பேரை அவா ஜோசப்புண்ணு பதிவு செஞ்சதினால பேரு விளிக்கம்ப எல்லாம் எனக்குப் பெரிய குழப்பம். நான் இருந்த முறியில வில்லுக்குறி பக்கம் இருந்து ஒரு மனுஷன் இதுபோல ஆப்ரேஷன் செய்திட்டுக் கிடந்தான். அவன் பெண்டாட்டி எப்பயாவது வந்து கஞ்சி குடுப்பா. எனக்கிட்ட வந்து ஏன்னு கேக்கக் கூட யாரும் இல்ல, தனட்டம் தான்.”

“வில்லுக்குறிகாரன் பேசமாட்டானாக்கும்?”

“ரெண்டு நாளுவரெ அவன் எனக்க மொகத்தில பாக்கல்ல. நான் சிரிச்சா தூரப்பாக்கியதும், என்னதெங்கிலும் கேட்டா குண்டிமரிக் கெடக்கியதுமா இருந்தான்.”

“ஏன் அப்பிடி?”

“தெரியேல. வில்லுக்குறி பக்கம் உள்ளவங்களுக்கும், நம்ம ஆட்களுக்கும் பாரம்பரியமா உள்ள சாதிப்பகை காரணமா இருக்கிலாம்னு நெனச்சேன்.”

“நோயிலெயும் பகையா?”

“பகை நோயையும் விட்டு வைக்கல்லெ.”

“கஷ்டம் தான்.”

“ஆனா அவன் பாவமாக்கும்ணு கூடிய சீக்கரத்தில கண்டுபிடிச்சேன். ராத்திரி நான் கண்ணடச்சதும் எழும்பி இருந்து குலுங்கிக் குலுங்கி அழுவான். இதை யாருட்டெ எனக்கு சொல்ல முடியும்? இப்பிடி இருக்கம்ப மூணாவது

## திருத்தம்

காக்கை ஆகஸ்டு 2020 இதழில் பக்கம் 11ல் பத்தி 2ல் உள்ள ‘கெடல் செய்க’ என்பதை நீக்கிவிட்டு, “கெடல் எங்கே தமிழர் நலம் அங்கெல்லாம் தலையிட்டு கிளர்ச்சி செய்க” என வாசிக்க வேண்டும்.

அதேபக்கம் பத்தி 6ல் உள்ள நாலாவது வரியில் ‘எழுதியுள்ள பாட்டுப்பறவைகள் என்ற நூலும் சரி’ தன் தந்தையைப் பற்றி எழுதியுள்ள கருப்புக் குயிலின் நெருப்புக் குரல் என வாசிக்க வேண்டும்.

நாளு அவன் அழுதாக்கில வெட்டும் வெறயலும் வந்தது. நான் அவனுக்க கட்டில்ல பெய் இருந்து, 'எனக்க பொன்னு அண்ணா! ஒனக்கு ஒண்ணும் இல்ல, எதைக் கண்டும் பேடிச்சாத, நான் இருக்கியேன்'னு கெட்டிப்பிடிச்சி வச்சி அவன் தேகத்தில சூடுண்டாக்கினேன். பெறவு சத்தம்போட்டு நேள்ச விளிச்சேன். அவா வந்து ஊசி அறைஞ்ச பெறவுதான் அடங்கிக்கெடந்து உறங்கினான்."

"நோயினாலெயா?"

"நோய்தான். ஒடம்பில இல்ல, மனசில. தோட்டியோடு பக்கம் கொஞ்சம் போல நிலத்தில வாழைக்கிருஷி செய்து பெழைப்பு. ரெண்டு கொமருக. கெட்டிக்குடுக்க வழி யில்லெ. இந்தச் சீரிலெ நோயும் வந்து ஆசுத்திரியிலெயும் ஆப்பிட்டானா, இதுதான் சமயம்ணு கருதிய அண்ணனாரு எல்லைக்கல்ல நவுட்டித் தள்ளீட்டு கொலச்சி நிண்ண வாழையனையும் வெட்டிசாய்ச்சி, அவனுக்க கண்டத்தோட ஒருவாடு பூமிய வெட்டிப்பிடிச்சிப் போட்டான். அதை அறிஞ்சதினால உண்டான வெப்புறாளமாக்கும் அது."

"இந்தக் கொள்ள நம்ம ஆளுகளுட்டெதாண்ணு நெனச்சேன். மற்ற சாதிகளிலும் உண்டுமா?"

"அது உலகளாவியது தாயே... மறுநாளு பெஞ் சாதிக்காரி காலமெ பதினொருமணிக்குப் போல வந்தா.

அவன் நல்ல ஒறக்கம். நான் அவளுட்டெ ராத்திரி நடந்ததை எல்லாம் சொல்லீட்டு வெளிய என்ன நடந்தாலும் சோக்கேடு தீரும் வரைக்கும் அவனுக்கு ஒண்ணும் தெரியண்டாம்ணு வெலக்கினேன்."

"அது புத்தி."

"அவனுக்கு கஞ்சி குடுத்தாக்கில நான் சும்மா இருக்கியதப் பாத்துட்டு, 'தோசை வேண்டித் தரட்டா'ண்ணு கேட்டா அந்தப் பொம்பிள, 'தோசை எல்லாம் வேண்டாம், அந்தக் கஞ்சியில சூடா கொஞ்சம் தெளுவு தருவி யளா'ண்ணு கேட்டேன். ஒரு ஏனத்தில கஞ்சியும், பற்றுமா போட்டுக் கையில வச்சிட்டு, 'இது எங்க வீட்டில வச்ச கஞ்சியாக்கும்'னு சொன்னா அந்தப் பாக்கியாட்டி. 'ஒங்க வீட்டில வச்சாலும், எங்க வீட்டில வச்சாலும் கஞ்சி, கஞ்சிதானே'ண்ணு சொல்லீட்டு சந்தோசமா வேண்டிக் குடிச்சேன்."

சற்று நேரம் மௌனமாய் இருந்த திருப்பதி மீண்டும் தொடர்ந்தான்.

"அந்தப் பொம்பிள என்னைப் பாத்து, 'ஒங்களுக்கு கூடப்பெறந்தவங்க யாரும் கிடையாதா?'ண்ணு கேட்டா, 'யாரு சொன்னது கிடையாதுண்ணு? அதுதான் அண்ண னாகவும், தங்கச்சியாகவும் நீங்க ரெண்டு பேரும் இருக்கியளே, போராதா?' என்றேன். அதைக் கேட்டதும் அந்த மனிதனின் கண்களிலிருந்து கறகறவென கண்ணீர் பாய்ந்தது."

திருப்பதியும் தனது கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"அண்ணு சாயந்தரமே ஒண்ணாய் வெளியவந்து சாயை குடிக்கிற அளவுக்கு நண்பர்கள் ஆயிட்டோம்.

அஞ்சாவது நாளு அப்பிடி வரும்ப திடீர்னு அவன் பேயைக்கண்டது போல நடுங்கினான். நான் ரோடு கடந்து வந்தபிறகும் வராம தூரத்தில ஒரு மரத்துக்கப் பின்னால பதுங்கியதக் கண்டு கிட்டெ போனேன். சாயக் கடையை கைசூண்டிக் காட்டி, 'அதோ நிக்கி றானே, அதுதான் எனக்க அண்ணன்'னு சொன்னான். அவன எனக்கு நல்லா தெரியும்."

"தெரிஞ்சவனா?"

"ஆமா, குமாரகோயில்ல அவன் பர்னிச்சர்கடை போட்டிருந்த சமயம் அங்கெ நான் கட்டில்கட்டப் போயிருக்கேன். சம்பளம் எல்லாம் ஒழுங்கா தருவான். பேரு கிருஷ்ணன். ஆளுகளுட்டெ மரியாதியா பெருமாறு வான்.

தம்பியாருட்ட மட்டும் இவனுக்கு என்ன ராகாதி வந்துட்டுண்ணு யோசிச்சேன். இவனுட்ட ஆஸ்பத்திரி பெய் படுக்கச்சொல்லீட்டு கிருஷ்ணனுட்டெ நான்மட்டும் வந்தேன். 'மொதலாளி எப்படி இருக்கிய?'ண்ணு கேட்டனா,

எனக்க இடதுகையப் பிடிச்சிற்று என்னவோ சொன்னான். எனக்கு அது ஒண்ணும் காதில விழல்ல. மொத்த பெலத்தையும் பிரயோகிச்சி அவனுக்க வலது கையைப் பற்றி இழுத்து ஆசுபத்திரி முறிக்குள்ள கொண்டுவந்து தம்பியாருக்க மின்ன நிறுத்தீட்டு, அப்பிடியே அவன் கால்லெ விழுந்தேன்."

"பெறவு?"

"மொத்த ஆசுத்திரியும் கூடி நிண்ணு வேடிக்கை பாக்குது. குடுக்கல் வாங்கல் தகராறிலெ பெரிய அடி நடக்கப்போவுதுண்ணு நெனச்சி எல்லாரும் முண்டியடிச்சி உள்ளவரப் பாக்கினும். நான் அவன் காலப்பிடிச்சி வச்சிட்டு, 'மொதலாளி! ஒங்க கூடப்பெறந்தவனுக்க மொகத்த ஒண்ணு பாருங்க. அதில ஒழுகிய கண்ணீரை ஒங்களால மட்டும்தான் நிறுத்த முடியும். அதச் செஞ் சிட்டு வெளியபோனா மதி. இல்லேண்ணா, ஒங்க காலெ இந்தக் கழுத்தில தூக்கி வச்சி என்ன நயக்கி கொன்னுட்டு பெறவு வெளிய போங்க'ண்ணு கதறி அழுதேன்.

"அய்யோ..."

"அவன் நல்லவனாக்கும் பாருங்க, குனிஞ்சி என்னத் தூக்கி நிறுத்தீட்டு தம்பியாருக்க கிட்டெ பெய் கட்டில்ல இருந்தான். யாரும் ஒண்ணும் பேசல்ல. திடீர்னு எனக்க வயித்தில ஓங்கி குத்தியது போல நடிச்சிட்டு ஒரு சிரிசிரிச்சான். 'இவன் எமகாதகப் பயலாக்கும். கையில எடுத்த சாயையக் குடிச்சவிடாம இழுத்திட்டு வந்தான். புறத்தெ பெய் ஒரு சாயை குடிச்சிற்று வரலாம்'னு தம்பி யாரப் பிடிச்சி எழுப்பினான்."

"கொள்ளாமே."

"மூணுபேரும் சிரிச்சிப் பேசி தோளில கையும் போட்டுட்டுப் போறதப் பாத்து ஒண்ணுமே புரியாத ஜனங்க அப்பிடி அப்பிடியே நிண்ணினும். அண்ணைக்கு சாயந்தரம் அண்ணனாரு வீட்டுக்குப்பெய் அவனுக்க மக்க ரெண்டு வளந்த பயலுவளெயும் கூட்டிக்கிட்டு அதுகளுக்க தள்ளையோட வந்து பாத்தினும். பெறவு என்ன, அவியளுக்குள்ள ஒரே கும்மாளமும், கொலவையும் தான்."

"நான் கேட்டது என்ன, நீ பேசியது என்ன, விசுவாசியள எதுக்கு நீ அநாவசியம் பேசினே?"

"அதத்தானே சொல்லீட்டு இருக்கியேன், பொறுமையாக் கேளுங்க. நான் ஆசுத்திரியில பெய்க்கெடந்து அஞ் சிநாளாச்சி. லெச்சுமியோ, மாப்பிள்ளையோ ஒருநாளு கூட வந்து என்ன பாக்கல்ல. ஆறாவது நாளு உச்சைக்குப் போல ரெண்டு விசுவாசிய வந்து ஹெலன்டீச்சர் அனுப்பினதா சொல்லிச்சினும். நானும் எழும்பி நிண்ணு மரியாதை குடுத்தேன். என்ன, யாது, எப்பிடி இருக்கே,

செத்தியா பெழச்சியாண்ணு ஒரு வார்த்தை எனக்கிட்டெ விசாரிச்சாம எடுத்த வாயுடன் ஒருத்தி, ‘இப்ப குடிப்பீரா ஓய்’ணு கேட்டாளா, எனக்கு அப்பிடியொரு பரிவேகம் வந்தது. எண்ணாலும் பல்லக் கடிச்சி, சுண்டக் கடிச்சி அடக்கி வச்சிட்டு நிண்ணேன். ‘இது யாரு?’ண்ணு கூட இருந்த அந்த மனுஷனக் காட்டிக் கேட்டதும், ‘நீங்க எனக்கு ஜெபிக்க வேண்டாம். இந்தப் பாவப்பட்ட எனக்க சகோதரனுக்காகவும், அவன் மனைவிக்காகவும், ரெண்டு பெண்மக்களுக்காகவும் ஜெபியுங்கள்’ணு சொல்லீட்டு ஒதுங்கி நிண்ணேன். இதக் கேட்டதும் அந்த மனுஷன் கைகள் ரெண்டையும் ஒண்ணோட சேத்து வச்சிட்டு நிண்ணான்.”

“கள்ளம் செல்லாதெ!”

“என்னாண, ஒங்களாண கள்ளம் இல்லியே. அந்த சகோதரன் அப்பிடி செஞ்சான். கிட்டெ போன விசுவாசி, ‘ஒமக்க பேரு என்னா?’ண்ணு கேட்டாள். ‘முருகன்’ணு அவன் சொன்னதும், ‘இப்பிடி பிசாசுக்க பேரை வச்சா ஏன் ஒமக்கு சோக்கேடு வராது?’ ண்ணு பேசினாளா, எனக்கு வந்த ஆவேசத்தில, ‘எறங்கிப் போடி வெளியே’ண்ணு திட்டினேன். அவா இதை எதிர்பார்த் திருக்க மாட்டாள். ‘இத இவன் பேசல்ல, இவனுக்குள்ள இருந்துட்டு பிசாசு பேசுது’ண்ணு சொன்னாளா, குடுத் தேன் தானகெடு. யாரெல்லாமோ வந்து என்னப் பிடிச்சி வாயப் பொத்தியும் நான் அடங்கல்ல. அந்தாக்கில ரெண்டு வேரும் போச்சினும். நான் செஞ்சது தப்பா, சொல்லுங்க.”

“தப்புதான்!”

அவன் ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

“கால்ல கெடந்தத கழற்றி ரெண்டு சாத்து சாத்தி இருந்திருந்தா ‘செரி’ண்ணு சொல்லி இருப்பேன்.”

“இதத்தான் திரும்பத்திரும்பச் சொல்லி லெச்சுமி என்ன சாபம் போடுகா.”

“நீ அதையெல்லாம் வகை வைக்காமத் தூரத்தள்ளு வியா? ஆனாலும் இந்த விசுவாசியளுக்க தொந்தரவு அதியழிஞ்சிட்டு தான் வருது. ஒருக்கா நான் திருவனந்த புரத்திலிருந்து ரெயில்ல வரும்ப பய ஒருத்தன் கூடப் படிச்சியதோ என்னவோ, ஒரு பெண்ண ஒதுக்கி வச்சு பேசீட்டிருந்தான். நீ சொன்னது போல ஒரு விசுவாசி கிட்ட பெய் இருந்திட்டு ஏசுவப் பற்றி போதனை செய்யத் தொடங்கினா. பய வெளஞ்ச குருத்து, அவளுக்கு குறுக்கு காட்டி மரிஇருந்து பெண்ண பிடிச்சி மடியில கெடத்தினான். இவா அப்பமும் நிறுத்தாம பொழிஞ்சி தள்ளிட்டே இருந்தாளா, எனக்குப் பொறுக்க முடியாம அவள கிட்டெ விளிச்சி, ‘சுவிசேஷ பிரசங்கம் செய்யும் இடமா இது?’ண்ணு கேட்டேன். என்ன நெனச்சாளோ, வேற இடத்தில பெய் ஒக்காந்துட்டா.”

“பெறவு ஆஸ்பத்திரி கதைய நீங்க எனக்கிட்டெ கேக்கலையே?”

“ஆமா, மறந்து போயிட்டேன். லெச்சுமி ஆபரேஷன் செலவுக்குள்ள பணம் கட்டினாளா?”

“பணமும் கட்டல்ல, பாக்கவும் வரல்ல. எனக்க மேல உள்ள தேச்சியத்தில பேசாம இருந்திட்டா.

ஆசுத்திரியில ஒரு முறிக்குள்ள கட்டிலும் கசேரியுமா நெறைய மரச்சாமான்கள் கெடக்கியதக் கண்டேன்.

சொகமானதும் வந்து வயர் பின்னித் தரலாம்ணு சொன்னனா, டாக்டர் அந்தக் கணக்கில எல்லாத்தையும் கழிச்சிட்டாரு.”

“மிடுக்கன்.”

**ஜெ**பத்தை முடித்த விக்டர் ஸ்டியரிங்கிலிருந்து தலையை நிமிர்த்தினான். தொடர்ந்து வண்டியை இயக்கிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டான். கேட் சாத்தப்படாமல் அப்படியே திறந்து கிடந்தது.

வண்டியிலிருந்து புறப்பட்ட புகை முற்றத்திலிருந்த திருப்பதியையும், அவன் கட்டிக்கொண்டிருந்த கட்டி லையும் மூடி இரவாக்கியது. அஸ்தமனத்தின் ஓர்மையில் ஞானம்மை ஆசிரியை கூறிய வியாழக்கிழமை இரவின் நிகழ்வுகள் அவனுக்குள்ளாகப் படர்ந்தன. தொடர்ந்து வியாகுலப்பட்ட மனிதனின் சரீர மனப்பாடுகளும், வேதனைகளும் நினைவுக்கு வந்தன.

தலைவாசலை ஒருகணம் பார்த்தான் திருப்பதி. மூடப்பட்ட கல்லறையை அவனுக்கு நினைவூட்டியது.

முதல்நாள் முழுவதுமாகத் திறந்திருந்த நிலையிலிருந்து மாறுபட்ட தன்மைக்கு நகர்ந்த நிகழ்வை எண்ணினான்.

கொஞ்சநேரம் ஜன்னல் வழியாகத் தெரிந்த அந்த ஓவியத்தை வெறித்தான்.

அதிலிருக்கும் மனிதனும் திருடனைப் போல நடத்தப்பட்ட செய்தியை நேற்றுதான் ஆசிரியை அவனிடம் எடுத்துரைத்தாள். எத்தனைத்தான் அன்பு பாராட்டினாலும் உலகம் தன்னை நம்பாததன் காரணத்தை அந்த ஓவியத்தின் செய்தியிலிருந்து மனதில் உணர்ந்தான். எனவே தன்னையும் அவர்கள் ஒருவேளை திருடனாகக் கருதினாலும் அதற்காகத் தான் வருந்தக்கூடாது என்று மனஉறுதி கொண்டான்.

விக்டர் ஒருவேளை தனது வீட்டை இன்னொரு மனிதனிடம் ஒப்படைத்துச்செல்வதில் விருப்பம் கொள்ளாதவனாக இருக்கலாம். ஆனால் தனது உடைமைகளை மட்டுமல்ல, உடம்பிலிருந்த ஆடை களைக் கூட கழற்றித் தனக்குமுன்னால் பிறர் பங்கிட்ட போது அமைதிகாத்ததையும், உடலைக்கூட உலகிற்காக அர்ப்பணித்ததையும் நினைத்து உத்வேகம் கொண்டான்.

அந்த வெறியில் ஒரே மூச்சில் கட்டிலைக் கட்டி முடித்துவிட்டு எழுந்தான். இடையே ரோட்டில் காலாற நடந்து சற்றுநேரம் எங்கோ சென்று வந்தான். கட்டிலைத் துடைத்து முழுமையாக வைத்துவிட்டு வெளியேறினான்.

மதியம் தாண்டி குடும்பத்தோடு காரிலிருந்து இறங்கிய விக்டர்தான் கட்டிலை முதலில் பார்த்தான். பிறகு லெச்சுமி பார்த்தாள். குழந்தை எஸ்தரின் கண்கள் மட்டும் யாரையோ தேடிப்பார்த்து ஏமாந்தது.

கட்டிலில் அமர்ந்த குழந்தை அப்படியே படுத்தது. பின்னர் புரண்டது. அதிலிருந்து புறப்பட்ட வாசனை திருப்பதியின் உடலிலிருந்து வீசுவதை உணர்ந்து கொண்டது. அந்த உணர்வில் கட்டிலுக்கு அடியில் கனமாக ஏதோ ஒரு பொருள் பொதிந்து வைக்கப்பட்டி ருந்ததைக் கண்டது.

கீழே இறங்கிய குழந்தை அதனைத் தனது கையில் எடுத்துப் பார்த்தது. ‘ஐ... மாமா எனக்கு வாங்கித் தந்த குட்பால்!’ என்று காலால் உதைத்தது.

மேலே எழும்பிய பந்து படிப்படியாகக் கீழே விழுந்து அடங்குவதை லெச்சுமியும், விக்டரும் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றார்கள்.

கோடுகளின் நடுவில்

# 170 ஆண்டுகால ஓவியக் கல்லூரியின் வரலாறு மறைக்கப்படுகிறது

● ஓவியர் டிராட்ஸ்கி மருது

'மத்திய அரசின் கல்விக்கொள்கை பிற்போக்குத்தனமாக உள்ளது' என்று அறிவார்ந்த சமூகம் ஏற்கனவே எதிர்த்து வருகிறது. இந்த நிலையில் அனைத்து மக்கள் சமூகமும் புரிந்துகொண்டு எதிர்வினையை ஒருமித்துச் செய்வதும் பல்வேறு முனைகளில் இருந்து செயலாற்ற வேண்டியதும் முக்கிய மாகிறது! தமிழ் அடையாளத்தை சிதைக்கும் வேலையில் மத்திய அரசு பல்வேறு சூழ்ச்சியுடன் இயங்குவதையும் மாநில அரசு கண்டும் காணாமல் தூங்குவதையும் எப்படி எதிர்கொள்வது என்று பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது தமிழ்ச் சமூகம். இதற்கிடையில் எமக்குக் கிடைத்த காண்பியல் கல்விசார் மாணவர்களுக்கான தமிழக ஓவியக்கல்லூரியின் வரைவுத் திட்டத்திலும் துறைசார்ந்த ஆலோசனைக் குழு இல்லாமல், எந்த துறைசார் புரிந் துணர்வும் இல்லாமல் வரலாற்றை மறைக்க, அழிக்க முற்படும் செயலாக பாடத்திட்டத்தை வடிவமைத்திருக்கிறார்கள்.



ஏற்கனவே "இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்" என்பதே ஆட்சேபத்திற் குரியது என்று நான் கடந்த காலங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட உயர் நிலையில் உள்ளவர் களிடமும், அதிகாரிகளிடமும் தெரியப் படுத்தியும், கடிதங்கள் மூலம் கோரிக்கை வைத்தும் அது கண்டுகொள்ளப்படவில்லை. பார்ப்பனிய மேலாண்மை மத்திய அரசை வைத்துக்கொண்டு இசைக்கான முக்கியத் துவம் வழி மற்ற கலைகளை நிராகரித்து அரசு அளிக்கும் மானியங்களை வசதிகளைத் தின்று செரிக்கவும், ஒரு குறிப்பிட்ட சாரார் நலம்பேணவும் வழி அமைத்திருக்கிறது.

இப்போது ஓவியக்கல்லூரி படிப்பிற்குக் காலாவதியான பகுதிகளைப் பாடத் திட்டத்திற்குள் கொண்டுவந்து 'ஆகமவிதி'யைப் படிக்க வைக்கிறது. பின்பக்க வாசல் வழியாக வந்து பார்ப்பனியம் செயல்படுகிறது. 170 ஆண்டு கால ஓவியக்கல்லூரி வரலாற்றை மறைக்க நினைத்து செயல்படுகிறார்கள். பத்திரிகைகளில் தீபாவளி மலரில் மட்டுமே வரைந்தவர்களை முன்நிறுத்தி வெறும் பார்ப்பன எழுத்துக்கு துணைநின்ற, அப்போது அவர்களாலேயே மதிக்கப்படாத ஓவியர்களை இன்று முன் நிறுத்துகிறார்கள்.

அவர்களது பாடத்திட்டத்திலேயே பல மாநிலங்களின் ஓவியர்களை நவீன ஓவியர்களை முன்னிறுத்திவிட்டு (இதுவே அவர்களுக்கு தெரியாததுடன் எங்கிருந்தோ எடுத்து சேர்த்திருக்கிறார்கள்) இங்கு உள்ள வரலாற்றை நமது வளர்ச்சியை நமது பங்களிப்பை மறைக்க முற்படுகிறார்கள். இந்த பெயர்ப் பட்டியல்களை முன்நிறுத்தினால் உலகம் சிரிக்கும். ஓவிய உலகச் செயல்பாடுகளில் விளக்கப் படம் ஒரு பகுதிதான். அதையே முழுச் செயல்பாடாக ஒரு பல்கலைக் கழகம் முன் நிறுத்துமா?

தமிழ்நாட்டின் மீதான அக்கறையில் செயற்படுகிறவர் செய்கிற செயலா இது? கடந்த காலங்களில் இந்தியா முழுவதும் அறியப்பட்ட ஓவியர்கள், இன்றும் பொது வெளியில் இயங்குகிற கலைஞர்கள், தொடர்ந்து பல்வேறு மாபெரும் கலைஞர்களைத் தந்த, இயங்கிய

தமிழ்க் காண்பியல் வெளியை அவமதிப்பதேயாகும். இதை சிந்திக்காமல் பற்றுகொள்கிற மாநிலமும் தமிழர் நலன், உயர்வு சார்ந்து சிந்திக்கவில்லை என்றுதானே அர்த்தம்.

ஏற்கனவே தமிழர்கள் காண்பியல் சார்பு சிந்தனையில் தாமதமாக நடப்ப வர்கள் என்று திரும்பத் திரும்ப சொல்லி வருகிறேன். இப்போது இப்படி ஒரு பாடத்திட்டத்தை தயார்செய்து மேலும் குழியில் தள்ளுகிறார்கள். டெல்லி ஆதரவுடன் பலகாலமாக இப்படியான செயல்பாடுகள் தொடர்ந்து நிகழ்த்தப்படுகிறது தமிழகத்தில். தமிழக அறிஞர் பெரு மக்கள் அறியாதது இல்லை. நன்கு ஊன்றிக் கவனித்தவர்கள் அறியலாம்.

தமிழகத்தில் கலாப்பூர்வமானவற்றை சொல்லும் ஆர்வலர்களை அழைத்துச் சென்று வரலாற்றைப் பேசாமல் 'HERITAGE WALK' நடத்துபவர்களைக் கொண்டு புராணக் கதைகளைச் சொல்லி அவற்றைப் பழைய சேத்ராடானம் ஆக்குகிறார்கள்.

நாட்டைவிட்டு திருட்டுப்போன கலைப் பொருட்களை மீட்கும் சில சாதியை மறக்காமல், மறைத்து செயல்படும் 'ஜேம்ஸ் பாண்டு' களையும் தமிழகம் கவனித்து வருகிறது. முற்றாக அறநிலையத்துறையை அழிக்க விரும்பி திருட்டே அவர்களால்தான் என்றும் செய்தி பரப்புகிறது. "கடவுள்களைத் திரும்பக் கொண்டுவருவது" என்ற தலைப்போடு இயங்கும் அந்த ஜேம்ஸ் பாண்டிடம், "திருடர்களோடு கடவுள் போனால் அது பொருள். நீங்கள் "நமது கலைச் செல்வங்களைத் திருப்பிக் கொண்டுவருவது" என்றுதான் சொல்ல வேண்டும் என்று சொன்னவுடன் மழுப்பினார்.

கலாப்பூர்வமான செயல் என்று சொல்லிக்கொண்டு குற்றவாளிகளுக்குள் பதுங்கி இருக்கும் தன் சாதியினரைக் காப்பாற்றவும் செய்கிறார்கள். தமிழகம் எப்போதும் இல்லாத வகையில் கல்வி நிலையில், கலைச்செயல்பாடுகளில் என்று எல்லாவற்றின் மூலமும் தங்களது அடையாளத்தை இழக்கவேண்டும் என்று ஒரு கூட்டம் செயல்படுகிறது என்பதை உணர்ந்து தமிழ்ச் சமூகம் விழிப்புடன் செயல்பட வேண்டிய காலம் இது.

இந்த இதழில், சமகாலத்து புகைப்படம் திரைப்படம் குறித்துப் பேசலாம் என்றே இருந்தேன். இடையில் காலம் கருதி இதை எழுத முன்வந்தேன். இன்னும் பேசுவோம்.

## தெரிந்துகொள்ளுங்கள் மக்களே... இதுதான் புதிய கல்விக் கொள்கை



மணியன்

நான் மதுரைக்குப் போனா வழக்கமா ஒரு இடத்துல தங்குவேன். பங்கூர் தர்மசாலான்னு அந்த இடத்துக்குப் பேரு. அந்த இடத்துல மதுரை வீரன்னு ஒருத்தன் துணி வெளுப்பான். அப்ப அவனோட மகன் ஒருத்தன் பி.ஏ., படிச்சிட்டிருந்தான். அவனுக்கு எப்படியாவது ஒரு வேலை வாங்கிக் கொடுங்கன்னு எங்கிட்ட கேட்டான். அங்க வந்து தங்கறவங்க எல்லாரும் வடக்க இருந்து வருவாங்க. வசதியானவங்க. வந்தா ஒருநாள் தங்குவான்; ரெண்டுநாள் தங்குவான். மறுநாள் போயிடுவான். ஒரு துணி வெளுத்துக் குடுத்தா 10 ரூபா கேட்டாலும் குடுப்பான். 15 ரூபா கேட்டாலும் குடுப்பான். நல்ல வருமானம். அப்ப நான் சொன்னேன், உம் புள்ளையும் இதுல விட்டுறவேண்டியதுதானே!

நாட்ல நல்லா கவனிச்சுக்கங்க. இங்கிலீஷ்காரர்கள் எந்த இடத்தில் சதி செய்தார்கள் தெரியுமா? ஏற்கனவே பாரம்பரியமான ஒரு இந்து பிறக்கிறபோதே ஒரு தொழிலோடு பிறக்கிறான். இங்கிலீஷ்காரன் வர்றதுக்கு முன்னாடி தொழிலுக்காக எந்த இந்துவாவது இன்னொருத்தன்கிட்ட கையேந்தி நிக்கிறத நீங்க பாத்து இருக்கீங்களாடா? உங்க தாத்தாவுக்குத் தாத்தா எவங்கிட்ட யாவது போயி வேலை கேட்டாராடா? ஏன்?

ஒரு ஆசாரிபுள்ள ஆசாரிதான்.

ஒரு தச்சன் புள்ள தச்சன்தான்.

ஒரு வண்ணான் புள்ள வண்ணான்தான்.

ஒரு சவரக்கட நடத்துறவன் புள்ள சவரக்கடை நடத்துறவன்தான்.

■ ■

சத்துவக் குணம் உள்ளவன்தான்டா வாத்தியாரா இருக்க முடியும். ரஜோகுணம் உள்ளவன் வாத்தியாரா இருக்க முடியுமா? தம்ம குணம் உள்ளவன் வாத்தியாரா இருக்க முடியுமா? அதனாலதான்டா சத்துவக் குணம் உள்ள பிராமணனுக்கு வாத்தியார் வேலை கொடுத்தாங்க.

■ ■

அதத்தான் அன்னைக்கு ராஜாஜி ரொம்ப நல்லெண்ணத்தோடு கொண்டுவந்தார். எல்லோரும் பி.ஏ., பட்டத்தை வாங்கிக்கொண்டு என்னடா பண்ணப்போறீங்க. உன் பி.ஏ., உனக்கு சோறுபோடுமா? உன் எம்.ஏ., உனக்கு சோறுபோடுமா? சோறு போடுற தொழில கைவிட்டுட்டு ஏன்டா இந்த பி.ஏ., எம்.ஏ., பின்னாலே அலையுறீங்க?

■ ■

இன்னைக்கு நல்லது பண்ணக்கூடிய ஒரு கல்வித் திட்டத்தை மத்திய அரசு முன்னெடுத்து வைத்திருக்கிறது. இதை தயவுசெய்து சமஸ்கிருத வெறுப்பு என்ற பெயரிலோ அல்லது வடக்கத்தி வெறுப்பு என்கிற பெயரிலோ அல்லது யாரோ கொண்டுவந்து திணிக்கிறார்கள் என்றோ தயவுசெய்து இதை விட்டுவிடக்கூடாது.

**ஆர்.எஸ்.எஸ் மணியனின் காணொளி உரையிலிருந்து**

**– கசன்**

# குற்றமும் நீதியும் முதலாளித்துவமும்

● பவானி சங்கர் நாயக்
தமிழில்: **நிழல்வண்ணன்**

**கா**லனியக் கொள்ளைகள் மூலமும், ஏகாதிபத்தியப் போர்களின் மூலமும் நீதிக்குப் புறம்பாகச் செய்யப்படும் கொலைகளுக்கு வலதுசாரி ஆதரவாளர்களும் அவர்களுடைய தாராளவாத சகோதரர்களும் நியாயங்களைக் கற்பிக்கிறார்கள். ஈராக் போரிலிருந்து ஒசாமா பின்லேடன் கொலை செய்யப்பட்டது வரையிலும், ஆணவக் கொலைகளிலிருந்து குடும்ப வன்முறை, காவல்துறையின் மோதல் கொலைகள், காவல்நிலைய மரணங்கள் வரை, உலகெங்கும் வன்முறையை நியாயப்படுத்துகிற அதே மரபுவழியின் பகுதியாக இந்த நியாயங்கள் இருக்கின்றன. காலனியம் நாகரிகமயமாக்குவதை இலட்சியமாகக் கொண்டது என்றும் ஏகாதிபத்தியப் போர்கள் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கானவை என்றும் ஆதார மற்ற வகையில் ஆளும் வர்க்கத்தால் நியாயமானவை என்று பிரச்சாரம் செய்யப் படுகின்றன. வன்முறையை நிறுவனமயமாக்கு வதற்கும், தேசியவாதம், மதம், சமூகம் மற்றும் சாதிப் பெருமை ஆகியவற்றின் பெயரில் வன்முறைக்கு ஆதரவளிப்பதற்கும் இந்தவாதங்கள் தொடர்ந்து நியாயத்தை அளித்துவருகின்றன.

மக்கள்திரளினர் இத்தகைய பொய்யான அறிவுசார் கதையாடலுக்கு இரையாகி, அத்தகைய நீதிக்குப் புறம்பான, கட்டமைப்பு மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட வன்முறையை நியாயமானதாகக் கொண்டாடுகிறார்கள். இது ஆர்வெல்லியப் பழமொழியான, “கத்தியெடுத்த வனுக்குக் கத்தியால்தான் சாவு. கத்தியால் சாகாதவர்கள் துர்நாற்றமெடுக்கும் நோயால் சாகிறார்கள்” என்பதில் வெளிப்படுகிறது. அத்தகைய வன்முறைச் சமூக உருவாக்கம் அதன் கலாச்சார சட்டபூர்வத் தன்மையை கிறித்தவ இறையியலிலிருந்து பெறுகிறது. மாத்யூவின் போதனையான “வாள் வாளால்தான் அழியக் கடவது” என்ற கூற்று இதை எதிரொலிக்கிறது. வன்முறைக்கு ஆதரவளிப்பது என்பது உலகில் பெரும்பாலான மதங்களின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது. நீதியின் பெயரால் வன்முறை மற்றும் அச்சம் பற்றிய கருத்தியல் களைப் பின்பற்றாமல் போனால் கடவுள் மற்றும் மதங்கள் பற்றிய கருத்து அழிந்துவிடும். இந்த வழியில், மதரீதியான, மற்றும் ஒழுக்கரீதியான உரையாடல்கள் மூலம் வன்முறை நீதியானதாக, இயல்பானதாக, இயற்கையானதாக சட்ட பூர்வமானதாக ஆக்கப்படுகிறது. இது நீதியின் இலட்சியங்களுக்கு நேர் எதிரிடையானதாகும்.

நீதிக்குப் புறம்பான கொலைக்கு நீதி என்று நியாயம் கற்பிப்பது உலகிற்கு ஒன்றும் புதிதல்ல. ஹம்முராபிய சட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமும் ஆங்கிலோ சாக்சன் குற்றம், சாட்சியம், தண்டனை மற்றும் நீதிக் கலாச்சாரமும் 21 ஆம் நூற்றாண்டிலும் நீதித்துறை வழக்கமாக எதிரொலிப்பது தொடர்கிறது. குற்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் நியாய அடித்தளமும் நிலப்பிரபுத்துவத்திலிருந்து நிதிமூலதனம் வரை தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியுடன் உள்ளார்ந்த வகையில் இணைந் துள்ளது. முதலாளித்துவத்திற்கு ஆதரவான அதன் பழைய மற்றும் புதிய வடிவங்களில் தனிநபரை உற்பத்தியாளராகவும் நுகர்வோராகவும் சித்தரிக்கும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டுமானம் குற்றம் அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றது. நுகர்வோரியக் கலாச்சாரம் ஒரு போட்டிக் கலாச்சாரத்தை பரப்பியிருக்கிறது, அதில் ஒருவர் சுயநலமாகத் தனது சொந்த



விருப்பத்தை அடைவதே உச்சபட்ச இலக்காக இருக்கிறது. தேவை அடிப்படையிலான கலாச் சாரத்தை விளம்பரத் தொழில்துறை உதவியுடன் ஆசை அடிப்படையிலான கலாச்சாரமாக முதலாளித்துவம் மாற்றியிருக்கிறது, இது சமுதாயத்தின் கூட்டு அடித்தளங்களை அழித்து விட்டுள்ளது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி துயரங்களைக் குறைக்காமல் செல்வத்தை அதிகரித்துள்ளது; செல்வத்தை ஒரு சிலரின் கரங்களில் குவிப்பதற்கும் சமுதாயத்தில் பெரும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரிப்பதற்கும் இட்டுச் சென்றுள்ளது.

அழுகிப்போன முதலாளித்துவ அமைப்பு பலருக்குத் துயரங்களையும் ஒரு சிலருக்குச் செல்வத்தையும் தொடர்ந்து உருவாக்கித்தந்து வருகிறது. சட்டங்கள், முதலாளித்துவ வர்க்கங்களால் அவற்றின் சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே கொண்டு வரப் படுகின்றன. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில், நில உடமை மேட்டுக்குடியினர், வணிக வர்க்கங்கள், தொழில்துறை முதலாளிகள் ஆகியோரின் நலன்களை உயர்த்திப்பிடிக்கும் வகையில் சோளச் சட்டங்கள் (Corn Laws) கொண்டு வரப்பட்டன. அத்தகைய சட்டங்களின் மரபு உலகின் பல பாகங்களில் இன்றும் நிலவுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தொழில் துறை மண்டலங்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மண்டலங்கள் ஆகியவை முதலாளித்துவ வர்க்கங்களுக்கு அதிகாரமளிக்கக் கூடியவையாக இருக்கின்றன; தொழிலாளர் கொள்கைகள், தொழிலாளர் வேலை நிலைமைகள், தொழிலாளர் சட்டங்கள் தொழிலாளர் வர்க்க மக்கள்திரளை அதிகாரமிழக்கச் செய்கின்றன. இவை அந்த மரபுக்கு மிகவும் முக்கியமான எடுத்துக் காட்டுகளாகும். வலிமையான பாதுகாப்பு அரசு, முதலாளித்துவத்துக்கு இணக்கமான நீதித்துறை ஆகியவை முதலாளித்துவ வர்க்கங்களின் தனிச் சொத்துரிமைகளுக்கு பாதுகாப்புத் தருவதற்கு முக்கியமானதாகும். முதலாளித்துவ அமைப்பு குற்றங்களை உருவாக்குவது மட்டுமின்றி, அது முதலாளித்துவ இலாபக் குவிப்பின் அதிகாரத் தைப் பரப்புவதற்கு அமைப்பாக்கப்பட்ட குற்றவாளிக் கும்பல்களைப் பயன்படுத்துகிறது.

வரலாற்றுரீதியாக, அன்னியமாக்கும் முதலாளித்துவ அமைப்பு குற்றங்களையும் குற்றவாளிகளையும் பிறப்பிக்கும் அமைப்பாக இருக்கிறது. முதலாளித்துவத்தின் குற்றவியல் பண்பில் புதிது எதுவும் இல்லை. சட்டமானது மக்களின் பல்வேறு வர்க்கங்களுக்கு ஏற்ப பல்வேறு விளக்கமளிக்கும் வகையில் பயன் படுத்தப்படுகிறது. அதன் விளைவாகத்தான் அமெரிக்கச் சிறைகள் கறுப்பர், பழங்குடிச் சிறு பான்மையினர், உழைக்கும் மக்கள் ஆகியோரால் நிரம்பி வழிகின்றன, அதேபோலத்தான் இந்தியச் சிறைகளில் தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிமக்கள், மற்றும் ஏழை மக்கள் நிரம்பி வழிகின்றனர். குற்றவாளிகளுக்கு அவர்களுடைய வர்க்கங்கள் இருக்கின்றன. தண்டனைகளும் சிறைக் கொட்டடிகளும் குற்றவாளிகளின் வர்க்க இருப்பிடங்களுக்கேற்ப வேறுபடுகின்றன. குற்றவாளிகள் பணக்காரர்களாகவும் சக்திவாய்ந்த வர்களாகவும் இருந்தால், சட்டம் வேறுவழியில் செயல்படுகிறது, ஆனால் ஏழைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் விடயங்களில் அதன்

சொந்த வழியில் செயல்படுகிறது. காவல்துறை, சட்டம், மற்றும் நீதித்துறையை அணுகுவது அனைவருக்கும் சமமாகக் கிடைப்பதில்லை, இது சமுதாயம் சமத்துவப் பாதையில் வளர்வதற்கு உதவாமல் போகிறது. காவல்துறையும் சட்ட நிறுவனங்களும், வழக்கறிஞர்களும், நீதித்துறையும் சிறைகளும் நீதியை வழங்குவதில்லை சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான இந்த நீதித்துறை நிறுவனங்கள் நமது காலத்தின் சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதில்லை. அதற்குப் பதிலாக, அவை முதலாளித்துவ மேட்டுக்குடியினரின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கு உதவியுள்ளன, அதே நேரத்தில் மக்கள்திரளினர் பல்வேறு வடிவங்களில் துயரங்களை அனுபவிப்பதுமட்டும் தொடர்கிறது.

சமகால முதலாளித்துவம் சமுதாயத்தை குறுகிய மனப்பான்மையுடன் ஜனநாயகமற்ற வகையில் ஆளுகை செய்கிறது, இதில் குடிமக்கள் சுதந்திரமான நுகர்வோர்களாகவும் கூலி உழைப்பாளர்களாகவும் இருக்கிறார்கள். தனிநபர் சுதந்திரம், விடுதலை மற்றும் உரிமைகள் குறித்த கருத்தியல்கள் முதலாளித்துவத்தின் குற்றவியல் முகத்தை மறைக்கும் அலங்காரச் சொற்களாக இருக்கின்றன. முதலாளித்துவ சமுதாயங்கள் குற்றப் பிரச்சனையைத் தீர்ப்பதில்லை மாறாக அதன் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் அன்றாடம் குற்றத்தின் எல்லைகளைத் திறந்து விடுகிறது. குற்றம் மற்றும் தண்டனைக் கலாச்சாரம் முதலாளித்துவ உணர்வுடன் குற்றத்திற்கேற்பத் தண்டனை வழங்கும் நீதி அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது, குற்றத்தையும் குற்றவாளிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களை வடிவமைப்பதில் பரவலான மேட்டுக்குடி உணர்வு நிலையும் பழிவாங்குவதற்கான விருப்பத்தின் ஓர் அம்சமும் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. முதலாளித்துவ நீதி அமைப்பு 'நல்லது' மற்றும் 'கெட்டது' என்ற அறிந்துணர்வின் அடிப்படையில் அமைந்துள்ளது. அத்தகைய ஓர் அமைப்புமுறை குடிமக்களை ஒழுங்குக்குள் கொண்டுவருகிறது, ஆனால் குற்றத்தையும் குற்றவாளிகளையும் ஒழிப்பதில்லை. அது குற்றவாளிகளைச் சீர்திருத்துவதில்லை அல்லது குற்றவாளிகள் தங்களைச் சீர்திருத்திக் கொள்வதற்கான திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தருவதில்லை. முதலாளித்துவத்திற்குத் துணை புரியும் தண்டனை அளிக்கும் நீதி முறைக்குள் குற்றக் கலாச்சாரத்தை இயல்பானதாகவும் இயற்கையானதாகவும் ஆக்குகிறது. தண்டனை வழங்கும் நீதி அமைப்பின் நியாய அடித்தளங்கள் அதன் சட்டபூர்வத் தன்மையை உலகின் முக்கிய மதங்களிடமிருந்து பெறுகிறது. இது எந்த வகையிலும் நவீன காலத்துக்கானதாக இல்லை. அது எழுத்திலும் உணர்விலும் நிலப்பிரபுத்துவ, மத்தியகால, அநாகரிக காலத்துக்கானதாக இருக்கிறது. முதலாளித்துவத்தின் ஆதரவுடன் குற்றங்களை உருவாக்குகிற, குற்றவாளிகளை உயர்த்திப்பிடிக்கிற சமூக, பொருளாதார, மத, கலாச்சார நிலைமைகள் தொடர்ந்து தழைத்தோங்கி வருகின்றன. இத்தகைய ஓர் அமைப்புமுறை சமுதாயத்தை அநீதியின் முடிவற்ற இருளுக்குள் தள்ளிக்கொண்டு செல்கிறது.

இது மனித இனத்தவரிடம் உள்ளார்ந்த வகையில் அமைந்துள்ள நல்லெண்ணங்களையும் மனித விழுமியங்களையும் புரிந்துகொண்டு, வெளிக்கொணர வேண்டிய நேரமாகும் குற்றங்களும் முதலாளித்துவமும் இயற்கைக்கு முரணானவை, அதேநேரத்தில் அன்பும் அமைதியும் அனைத்து மனித இனத்தவர்க்கும் அனைத்துச் சமுதாயங்களுக்கும் இயற்கையானவை. முதலாளித்துவத்தின் ஒப்பனைத் தோற்றங்களும் அதன் நிதிசார் நீதியும் குற்றப் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது. குற்றத்தையும் குற்றவாளிகளையும் உருவாக்கி, ஆதரித்து நிலைமைகளை அந்நியமாக்குகிறது முதலாளித்துவம். இந்த நிலைமைகளை மாற்றுகிற, ஒரு புதிய தண்டனை மொழியே உலகத்துக்குத் தேவைப்படுகிறது. குற்றமில்லா ஒரு சமுதாயத்தை நிறுவுவது சாத்தியமானதும் இன்றியமையாததும் ஆகும். குற்றங்கள் ஒழிக்கப்பட்ட அப்படிப்பட்ட மாற்றங்கள் நிகழவேண்டும். அந்த மாற்றங்களுக்கு அமைதி மற்றும் வளமைக்குமான முற்போக்கு அரசியல் அடிப்படையாக இருக்க வேண்டும்; அந்த அடிப்படையில் சமத்துவப் பொருளாதாரத்துக்கும் ஜனநாயக சமுதாயத்துக்கும் பாகுபாடு காட்டாத நிர்வாகத்துக்கும் நாம் போராட வேண்டும்; அப்படிப்பட்ட போராட்டத்துக்கான நமது திறன்களைச் சார்ந்தே நாம் விரும்பும் மாற்றங்கள் நிகழும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மற்றும் அனைவருக்குமான நீதி ஆகிய இலட்சியங்களுக்கான ஊசலாட்டமற்ற போராட்டத்திற்கு ஒப்படைவு செய்துகொண்ட மக்கள் போராட்டங்கள் மூலமே அத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர முடியும். ஒருவருக்கொருவர் ஒத்திசைவுடன் இருப்பதையும் அன்புகாட்டுவதையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு குற்றமில்லா, தண்டனையில்லா, சிறைகளில்லா சமுதாயத்தை நிறுவுவதற்கு இந்த இலட்சியங்களும் அவற்றுக்கான போராட்டங்களும் இன்றியமையாதவை ஆகும்.

**முனைவர் பவானி சங்கர் நாயக்,**
கவன்ட்ரி தொழில்வணிகப் பள்ளி,
கவன்ட்ரி பல்கலைக்கழகம், ஐக்கிய அரசியம் (UK).

***நன்றி: பிராண்டியர் இதழ்***



Printed by **H. Dhanasekaran** and Owned, published by **V.Muthaiah** and Printed at **Sekar Offset Printers,** New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: V. Muthaiah



காக்கைச் சிறகினிலே மாத இதழ் முன்னெடுக்கும் ஆறாவது ஆண்டு

# கவிஞர் கி பி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு
# உலகத்தமிழ் அறிவியல் புனைவு சிறுகதைப் போட்டி 2021

வள்ளுவராண்டு 2052



- 2050களில் புவியில் தமிழர் வாழ்வு என்பது சிறுகதையின் மையக்கருவாக இருக்க வேண்டும்.
- போட்டிக்கான கால எல்லை: 03.01.2021
- போட்டி முடிவு: மார்ச்சு 2021இல் வெளிவரும்
- காக்கைச் சிறகினிலே இதழின் தொடக்க நெறியாளராகப் பணியாற்றி மறைந்த இலக்கியவாதி 'கி பி அரவிந்தன்' கனவின் மீதியில் எழும் புதிய தடமாக அமைகிறது இந்தப் போட்டி.
- பாரதி கண்ட "சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!" என்ற கனவை நனவாக்கும் முயற்சிகளில் ஒன்று. உலகெங்கும் வியாபித்தவர்களாகி தொடரும் வாழ்வில் அடுத்தடுத்த தலைமுறையினர் எண்ணங்களைக் கொண்ட எழுத்துகளையும் படைப்புகளையும் ஊக்குவிக்கும் முகமாக இப் போட்டி அமைகிறது.
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழும் தமிழ் மக்களின் பூர்வீகம் – புலப்பெயர்வு அதன் நீட்சியென வாழத் தலைப்பட்ட வாழ்வினரது எதிர்காலக் கதைகளை பரவலாக எதிர்பார்க்கிறோம்.

---

நெறியாளர் **மதிப்புக்குரிய பத்மநாப ஐயர்** (இங்கிலாந்து)

நடுவர் குழு **மதிப்புக்குரிய பேராசிரியர் சு. இராமசுப்பிரமணியன்** (இந்தியா)

**மதிப்புக்குரிய பேராசிரியர் ச. சுகிர்தராஜா** (இங்கிலாந்து)

**மதிப்புக்குரிய எழுத்தாளர் திரு ரஞ்சகுமார்** (ஆஸ்திரேலியா)

**மதிப்புக்குரிய பேராசிரியர் சு. ஸ்ரீதரன்** (அமெரிக்கா)

**மதிப்புக்குரிய எழுத்தாளர் திருமதி கீதா மதி** (ஆஸ்திரேலியா)

---

படைப்பு அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: *kipian2021kaakkaicirakinile@gmail.com*

படைப்பு அனுப்பவேண்டிய கடைசி நாள்: 03.01.2021

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 / 43921
Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month



- **முதல் பரிசு :**
  **10000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **இரண்டாவது பரிசு :**
  **7500**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **மூன்றாவது பரிசு :**
  **5000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **நான்கு ஆறுதல் பரிசுகள் :**
  **தலா 2000**
  **இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்**
- **ஊக்கப் பரிசு :**
  **சான்றிதழ்**

## போட்டியின் விதிமுறைகள் :

1. அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர் தனது மின்னஞ்சலூடாக மட்டும் தனியாக இணைக்கப்பட்ட தனது சுயவிபரக் கோவையுடன் முழுப் பெயர், புனைவுப் பெயர், முகவரி, தொலைபேசி, செல்பேசி உள்ளிட்ட விவரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்கும் சிறுகதைகள் எழுத்தாளரின் சொந்தக் கற்பனை என்றும் இந்தப் போட்டிக்காகவே எழுதப்பட்டது என்றும் மின்னஞ்சலில் உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. போட்டியில் இடம்பெறும் சிறுகதை ஊடகங்களிலோ போட்டிகளிலோ பங்கேற்கவில்லை எனும் உறுதிமொழியை மின்னஞ்சலில் வழங்க வேண்டும். போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும் வரையில் எந்த ஊடகங்களிலோ இணைய தொலைத் தொடர்பு சாதன வலைகளிலோ வெளியிடக் கூடாது.
3. ஒருவர் ஒரு படைப்பு மட்டுமே அனுப்ப வேண்டும்.
4. கதைக் கரு மற்றும் களம்–காலம் அறிவியல் தகுநல் தகைமையுடன் அமைதல். சிறுகதைக்கான தலைப்பு எழுத்தாளரது தெரிவு.
5. வார்த்தைகள் 1200 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் (காக்கை இதழில் 5 பக்கங்கள்). யூனிகோட் எழுத்துருவில் ஆக்கங்கள் அமைதல். சிறுகதை இணைக்கப்படும் மின்னஞ்சல் தலைப்பில் கவிஞர் கிபி அரவிந்தன் நினைவு இலக்கியப் பரிசு 2021–‘உலகத் தமிழ் அறிவியல் புனைவுச் சிறுகதைப் போட்டி’ எனக் குறிப்பிடல்.
6. பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
7. பங்கேற்கும் போட்டியாளர்களுடன் அஞ்சல், தொலைபேசி, மின்னஞ்சல் விசாரிப்புகள் நடைபெறாது. முடிவுகள் அறிவிக்கபட்ட பிறகே உரிய தொடர்பாடல்கள் நடைபெறும்.
8. போட்டி முடிவு 2021 மார்ச்சு மாத இறுதியில் காக்கை குழுமத்தினால் முறைப்படி அறிவிக்கப்படும்.
9. போட்டி நிறைவு நாள்– 2021 சனவரி 03.
10. பரிசுக்குத் தெரிவாகும் சிறுகதைகளை காக்கை இதழ்க் குழுமம் உரிய முறைமையில் வெளியிடும்
11. இந்தப் போட்டிக்கான மின்னஞ்சல் முகவரி kipian2021kaakkaicirakinile@gmail.com

**காக்கைச் சிறகினிலே**
இதழ்க் குழுமம்

kaakkaicirakinile@gmail.com www.facebook.com/kakkai.cirakinile kaakkai.in

(நன்றி : இப்போட்டிக்கான பணப் பரிசினை வழங்கும் கிபி அரவிந்தன் குடும்பம் சார்பாக திருமதி சுமதி மற்றும் இலண்டன் துளிர் நண்பர்கள்)